வெளியீடு 5-2-85 [Issued 5-2-85

ஆணையர்
தமிழ்நாடு ஆவணக்காப்பகம் மற்றும்
வரலாற்று ஆராய்ச்சி
14 MAY 1985

# தமிழ் நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

சனிக்கிழமை, மார்ச் 24, 1984 - தொகுதி LXIII எண் 2

Saturday the 24th March 1984 - Volume LXIII No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009
Legislative Assembly Secretariat, Fort St. George.
Madras - 600 009

விலை: ரூ. 3-50 காசுகள்] [Price Rs. 3-50 paise

D
211,31'N84
N84·63-231
தமிழ்நாடு ... 136243 ... 600 009

உள்ளடக்கம்.

24-3-1984


| | | பக்கங்கள் |
|---|---|---|
| 1. | வினாக்கள்—விடைகள் : உடுக்குறியிட்ட வினாக்கள் | 281—324 |
| 2. | தகவல் கோரல் : உள்ளாட்சி மன்றத் தேர்தல்களை நடத்துவது பற்றி | 324—330 |
| 3. | ஒத்திவைப்புத் தீர்மானம் : வடாற்காடு மாவட்டம் வந்தவாசி ஆணைபோகி சுகாதார செவிலியர் ஒருத்தியின் மரணம் | 330—335 |
| 4. | அறிக்கை அளித்தல் : விதி 107-ன்கீழ் போக்குவரத்துத் துறை அமைச்சரின் திருத்த அறிக்கை. | 335—336 |
| 5. | கவன ஈர்ப்புகள் : (அ) வேதாரணியம் விம்கோ உப்புத் தொழிற் சாலைத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம். | 336—341 |
| | (ஆ) மதுரைக்கும் மானாமதுரைக்கும் இடைப் பட்டுள்ள கண்மாய்களுக்கு வைகை அணையி லிருந்து தண்ணீர் விடுதல். | 341—343 |
| 6. | வரவு-செலவுத் திட்டம் 1984-85 வாக்கெடுப்பு (தொடர்ச்சி) : | 343 |
| | (அ) கோரிக்கை எண் 24—தொழில்கள் | 343—441 |

(ஆ) கோரிக்கை எண் 50—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு : 344—441

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் 343—345

திரு. எஸ். சிவராமன் 405—440
திரு. எஸ். டி. உகம்சந்த் 346—351
திரு. ப. நெடுமாறன் 351—356
திரு. ஆர். ரங்கசாமி 356—364
திரு. ஜே. ஹேமச்சந்திரன் 364—369
திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் 369—375
திரு. மு. அப்பாத்துரை 375—380
திரு. துரைமுருகன் 380—386
திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரீப் 387—395
396—404

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் 442—443


## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1984, மார்ச் 24, சனிக்கிழமை.

பங்குனி 11, ருத்ரோத்காரி—திருவள்ளுவர் ஆண்டு 2015

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

இதனை இதனால் இவன்முடிக்கும் என்றுஆய்ந்து
அதனை அவன்கண் விடல்.

இந்தத் தொழிலை இக் கருவியால் இன்னவன் முடிப்பான் என்று ஆராய்ந்து பிறகு அத் தொழிலை அவனிடம் ஒப்படைக்க வேண்டும்.

### தமிழ்நாடு பால்வள நிறுவனத்தின் மூலம் விற்பனை செய்யப்படும் பால்.

427—*வினா எண் 19755)—திரு இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பால் வளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு பால்வள நிறுவனத்தின் பால் கலப்படம் இல்லாமல் விற்பனை செய்யப்படுவதற்கு அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையம் விற்பனை செய்யும் பாலின் தரத்தை சோதனையிட பல்வேறு அதிகாரிகளால் திடீர் சோதனைகள் நடத்தப்படுகின்றன. இதற்காக இந்நிறுவனத்தில் காவல் துறை கண்காணிப்பாளர் தலைமையில் கண்காணிப்பு பிரிவு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. கண்காணிப்பு பிரிவு அல்லாமல் விற்பனை பிரிவு அதிகாரிகளாலும், தரக்கட்டுப்பாடு குழு மூலமாகவும் திடீர் சோதனைகள் நடத்தப்பட்டு பாலில் கலப்படம் செய்த நபர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கலப்படம் செய்வதைத் தடுப்பதற்கு அதிகாரிகள் நியமிக்கப்பட்டு கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்று சொன்னார்கள். இந்தப் பால்வள நிறுவனத்தின் மூலம் விநியோகம் செய்யப்

படும் பாலில் பால் பவுடரின் ஒரு பகுதியைக் கரைத்து அதோடு சேர்த்து விநியோகிக்கப்படுகிறது என்ற பேச்சு மக்களிடையே பரவலாக வந்துள்ளது. அது உண்மையா ? அப்படியானால் எந்த அளவு பால் பவுடரை அதில் சேர்க்கிறார்கள் என்பதை அறிவிப்பாரா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னது உண்மை. பாலில் பால் பவுடர் கலக்கப்படுகின்றது. இன்றைக்கு விநியோகம் செய்யப்படுகின்ற பாலில் 4.5 சதவீதம் ஃபாட்fat மட்டுமே இருக்கிறது. மற்றவை எல்லாம் பால் பவுடர்.

திரு. என். ஏ. பூங்காவனம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால்வளத் துறை அமைச்சர் அவர்கள் பாலில் எவ்வளவு பவுடர் கலக்கப்படுகிறது என்ற விவரத்தைக் கொடுத்திருக்கிறார்கள். இன்னொரு தகவலையும் அவரிடமிருந்து நான் அறிய விரும்புகிறேன். பாலில் பவுடர் கலக்கிறபொழுது பால் குளிரூட்டும் இடங்களில் பால் சப்ளை செய்கிற சிறு விவசாயிகளுக்குத் தராதரம் பிரித்து எடையினுடைய அடிப்படையில் காசு கொடுக்கப்படுகிறதே, அதை மாற்றி, ஒரே நிலையில் பணம் கொடுக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் கொள்முதல் செய்கிற பொழுது பாலினுடைய கொழுப்புச் சத்தின் அடிப்படையில் விலை கொடுக்கப்படுகிறது. விற்கின்ற பொழுது 4.5 சதவீதம் கொழுப்பு என்று அதற்குரிய வகையில் விலை நிர்ணயிக்கப் படுகிறது.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாலில் கலப்படம் செய்வது பெரிய பாவம். ஆனால் பாலில் கலப்படம் செய்பவர்களை நாம் வளர்த்துக் கொண்டிருந்தாலும், ரூ. 1,000 சம்பாதித்தால் ரூ. 25 கோர்ட்டிலே பைன் கட்டிவிட்டு தப்பித்து விடுகிறார்கள். ஆகவே, பாலில் கலப்படம் செய்பவர்கள் எந்தவித விசாரணையும் இல்லாமல் தேசிய பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்படுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாலில் வேறு எதுவும் கலக்க முடியாது. தண்ணீர்தான் கலக்க முடியும். அதற்கு ஏன் இவ்வளவு பெரிய தண்டனை ?

திரு. இரா. தாமரைக்கனி : பாலில் தண்ணீர் கலந்து விற்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது தப்பில்லை. அதற்கு இவ்வளவு பெரிய தண்டனை கொடுக்க முடியாது.





திரு. இரா. தாமரைக்கனி : சென்னை, திருச்சி, மதுரை போன்ற இடங்களில் பாதுகாக்கப்பட்ட பால் கிடைக்கிறது. ஆனால், கிராமப் புறங்களில் பாதுகாக்கப்பட்ட பால் கிடைக்கவில்லை. அதற்கு அரசு ஆவன செய்யுமா? என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் திட்டம் மெள்ள, மெள்ள இப்பொழுது விரிவு படுத்தப்பட்டு வருகிறது.

டாக்டர் கே. சமரசம்: பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் நமது புரட்சித் தலைவர் அரசு மிக அதிக அளவில் ஆங்காங்கு பால் பவுடர் உற்பத்தி தொழிற்சாலைகளை நிறுவுகிற காரணத்தால், அவற்றிற்கே தேவையான பால் கிடைக்காத காரணத்தால், தனியார் மிக அதிக அளவில் தண்ணீர் கலந்து விற்பனை செய்கிறார்கள். ஆகவே, அப்படிப்பட்டவர்களைக் கொஞ்சம், கொஞ்சமாகத் தடைசெய்து, அந்த நிறுவனமே தேவையான பால் தயாரிக்கும் வாய்ப்பை உருவாக்க ஏதேனும் வழிவகை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையின் மூலமாகவே அதிக அளவு பால் உற்பத்தி செய்ய போதிய அளவுக்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

கால்நடைத் தீவனங்களை நியாயவிலைக் கடைகளின் மூலம் விற்பனை செய்யும் திட்டம்.

428—(* வினா எண் 20512)—திரு. கி. கணேசன் : மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கால்நடைத் தீவனங்களை நியாய விலைக் கடைகளின் மூலம் வழங்கும் திட்டம் அரசிடம் உண்டா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. கி. கணேசன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கால்நடை தீவனங்களை நியாய விலைக்கடைகளின் மூலம் கொடுப்பதில்லையென்று சொன்னார்கள். இப்போது கொடுக்கப்படுகிற தீவனங்கள் வாரந்தோறும் கொடுக்கப்படுகிறதா ? அல்லது மாதந்தோறும் கொடுக்கப் படுகிறதா ? அப்படி கொடுக்கிற நேரத்தில் நம்முடைய அரசு சலுகை விலையில் கொடுக்கிறார்கள். அப்படி கொடுப்பதால் அரசிற்கு ஏற்படுகிற நஷ்டம் எவ்வளவு என்ற விவரங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்போது தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையம் தன்னுடைய ஆவின் தீவனத்தை ஏற்கனவே மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் மற்றும் பால் உற்பத்தி ஒன்றியங்கள் மற்றும் சங்கங்கள் மூலம் விநியோகித்து வருகிறது. இரண்டாவது கேள்விக்கு என்னிடத்தில் விவரங்கள் இல்லை. ஆகவே தனிக்கேள்வி போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. சி. கணேசன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அப்படி விநியோகிக்கப்படும்போது வாங்குகிற நபர்களுக்கு ஒரு கால்நடைக்கு இவ்வளவுக்கு மேலே தீவனம் கொடுக்கக் கூடாது என்ற சட்டத் திட்டங்கள் அனுசரிக்கப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு தலைவரவர்களே, பெரியார் மாவட்டத்திலே தீவனத் தொழிற்சாலை ஒன்று இருக்கிறது. அங்கேயிருந்து உற்பத்தி செய்யப்படுகிற கால் நடை தீவனங்களை நியாய விலையில் கொடுப்பதற்கும் அதே சமயத்தில் அந்தக் குறிப்பிட்ட பகுதியில் வறட்சி இருக்கிற காரணத்தால் அவர்களுக்கு உதவியாக அதாவது மானிய விலையில் தீவனம் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஈரோடு கால்நடை தீவனத் தொழிற்சாலையில் உற்பத்தியாகிற தீவனங்கள் பெரியார் மாவட்டத்தில் இருக்கிற கூட்டுறவுச் சங்கங்களுக்கு கொடுக்கப்பட்டு அதன் உறுப்பினர்களுக்கு அவர்கள் மூலமாக நியாயவிலையில் விநியோகிக்கப்படுகிறது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தத் தீவனங்களை விலையில் கொடுக்கிற நிலைமை இப்போது இருக்கிறது. அந்த நிலைமை கிராமப்புறங்களில் இல்லை. ஆகவே கிராமங்களில் இருக்கிற கூட்டுறவு முறையில் பால் உற்பத்தி செய்கிற சங்கங்களுக்கெல்லாம், புறம்போக்கு நிலத்தை எடுத்து தட்டைப்புல் போன்றவற்றை அதில் உற்பத்தி செய்து, விநியோகம் செய்ய அரசு வழிவகை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஏற்கனவே ஈரோடு, ஆம்பூர், மாதவரம் ஆகிய மூன்று இடங்களிலும் இந்தத் தொழிற்சாலைகள் இருக்கின்றன. மதுரை மாவட்டம் போன்று தென் மாவட்டங்களுடைய தேவைகளை பூர்த்தி செய்யவேண்டுமென்று தான் கடந்த ஆறு மாதங்கள் முன்பாக மதுரையில் ஒரு தொழிற்சாலை துவங்கப்பட்டுள்ளது. அது விரைவில் உற்பத்தியை துவங்கும். அப்போது அந்தப் பகுதியினுடைய பால் உற்பத்தியாளர்களுடைய தேவை அதன்மூலம் நிறைவேற்றப்படும்.

திரு. டி. மணி : மாண்புமிகு தலைவர் அவர்களே, கடந்த இரண்டு ஆண்டு காலமாக கடுமையான வறட்சி இருந்தது. அதற்கு பின்னாலே இப்போது கடுமையான மழை பெய்திருக்கிறது. இதன் காரணமாக கால்நடை தீவனங்கள், குறிப்பாக வைக்கோல் கிடைப்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளது. ஆகவே நியாயவிலை கடைகள் மூலமாக மானிய விலையில் இந்தத் தீவனங்கள் கொடுக்க துரிதமான நடவடிக்கையை அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, கடந்த காலத்தில் வறட்சி ஏற்பட்ட நேரத்தில், சென்ற ஆண்டு, அதற்கு முந்தைய ஆண்டிலும்—ஆந்திர மாநிலத்திலிருந்து வைக்கோல் கொள்முதல் செய்து நம்முடைய பால் உற்பத்தியாளர் சங்கங்களுக்கு விநியோகம் செய்யப்பட்டதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. சு. பாலன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூன்று இடங்களில் கால்நடை தீவனங்கள் உற்பத்தி செய்யப்படுவதாகச் சொன்னார்கள். எந்தவிதமான கால்நடை தீவனங்கள் அவற்றில் உற்பத்தி செய்யப்படுகின்றன? எந்தெந்த பொருள்களின் மூலம் அந்தத் தீவனங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன என்ற விவரங்களை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, அதுபற்றி தகவல் தற்போது என்னிடத்தில் இல்லை. தயவுசெய்து தனிக் கேள்வி போடவும்.

## மதுரை மாவட்டத்தில் பதிவாகியுள்ள பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள்.

429—(* வினா எண். 21800)—திரு இரா. முத்தையா : மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டத்தில் பதிவாகியுள்ள பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் பால் விற்பனைச் சங்கங்கள் எத்தனை ?

(ஆ) அவற்றில் எவ்வளவு சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன ?

(இ) எல்லாச் சங்கங்களும் செயல்பட என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன ?

மாண்புமிகு திரு கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) மதுரை மாவட்டத்தில் பதிவாகியுள்ள பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள்—946 பால் வழங்கும் கூட்டுறவு சங்கங்கள்—297.

(ஆ) இதில் 507 பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களும் 91 பால் வழங்கும் சங்கங்களும் செயல்பட்டு வருகின்றன.

செயலற்ற பால் வழங்கும் கூட்டுறவு சங்கங்களைப் புதுப்பித்து அவற்றைப் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களாக மாற்றுவதற்கு சரகத் துறைப் பதிவாளருக்கு குறியீடு நிர்ணயிக்கப்பட்டு அதில் அடையும் முன்னேற்றம் குறித்து பால்வளத்துறை ஆணையாளரால் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. 1983-84-ம் நிதியாண்டிற்கு மதுரை மாவட்டத்திற்கு 49, செயலற்ற பால் வழங்கும் கூட்டுறவு சங்கங்களைப் புதுப்பிக்கவும் அவற்றை உற்பத்தியாளர்கள் சங்கமாக மாற்றவும் குறியீடு நிர்ணயிக்கப்பட்டு, இவற்றில் 31-1-84 முடிய 31 செயலற்ற பால் வழங்கும் கூட்டுறவு சங்கங்கள் புதுப்பிக்கப்பட்டு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களாக மாற்றப்பட்டுள்ளன. மேலும் செயலற்ற பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்க உறுப்பினர்களை சம்பந்தப்பட்ட சரக முதுநிலை ஆய்வாளர்கள் மூலம் ஊக்குவித்து, தேசியமயமாக்கப்பட்ட வங்கி மூலம் கறவை மாட்டுக் கடன் பெற்று மீண்டும் சங்கத்தைப் புதுப்பிக்க உரிய நடவடிக்கை அரசு மேற்கொண்டு வருகிறது.

(முற்பகல் 9-10)

திரு எஸ். ஆண்டித் தேவர் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிக்கிற நேரத்தில் மதுரை மாவட்டத்தில் 946 பால் கூட்டுறவு சங்கங்கள் பதிவாகி உள்ளன என்றும், 297 பால் வழங்கும் கூட்டுறவு சங்கங்கள் பதிவாகியுள்ளன என்றும், அவற்றில் 507 பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களும், 91 பால் வழங்கும் சங்கங்களும்



செயல்பட்டு வருகின்றன என்றும், செயல் அற்ற பால் வழங்கு சங்கங்களில் 31 சங்கங்கள்தான் புதுப்பிக்கப்பட்டுள்ளன என்றும் சொன்னார்கள். பல சங்கங்கள் இயங்காமல் இருப்பதற்கான காரணம் என்ன என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். அந்தச் சங்கங்களைப் பதிவு செய்கிறபோது ஏ.சி. எஸ். சொசைடி மூலமாகத்தான் பதிவு செய்ய வேண்டும் என்றும், ஒரு ஏரியா ஆப் ஆபரேஷன் என்று சொல்லி பல்வேறு கிராமங்களில் உள்ள சொசைடிகளைச் சேர்த்து அந்த ஏ.சி.எஸ். சொசைடி இருப்பதால், பல்வேறு கிராமங்களைச் சேர்த்து அந்த ஏ.சி.எஸ். சொசைடி இயங்குவதால், ஒரு சொசைடி இயங்காமல் போய்விட்டால், பல்வேறு கிராமங்களில் உள்ள சங்கங்கள் இயங்கமுடியவில்லை. ஆகவே, இந்த ஏ.சி.எஸ். மூலமாக பதிவு செய்யவேண்டும் என்ற முறையினை நீக்கிவிட்டு ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு சங்கத்தைப் பதிவு செய்ய அரசு வழிவகை செய்யுமா ? அப்படிச் செய்வதன் மூலமாகத்தான் அந்தக் கிராமப்புற மக்களுக்கு வங்கிகள் மூலமாகக் கடன் கிடைக்க வழியேற்படும். ஆகவே, அவைகளை நேரடியாகவே பதிவு செய்ய அரசு வழிவகை செய்யுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தை ஒரு கிராமத்திலே உருவாக்குவதற்காக இந்த அரசு ஒரு அடிப்படை விதியை வைத்து இருக்கிறது. அதாவது அந்தச் சங்கம் 'வயபிலிடியாக' இயங்குவதற்கு ஏற்ற வகையில், அந்தக் கிராமத்தில் தினசரி 100 லிட்டர் பால் உற்பத்தி செய்யப்பட்டு, அந்த மாவட்டத்தில் உள்ள ஒன்றியத்திற்கு தொடர்ந்து 3 மாதத்திற்கு பால் வழங்க வேண்டும். இந்த மாதிரி அந்த உத்தேச சங்கம் செயல்பட்ட பிறகுதான் பதிவு செய்யப்படவேண்டும் என்ற நடைமுறையை வைத்து இருக்கிறோம். இதை எதற்காக வைத்து இருக்கிறோம் என்றால் ஆரம்பத்தில் பதிவு செய்து துவங்கிவிட்ட பிறகு, இடையில் அவைகள் நின்று விடக்கூடாது என்பதற்காகத்தான் 100 லிட்டர் பால் உற்பத்தி செய்து, தொடர்ந்து அந்த மாவட்ட பால் ஒன்றியத்திற்கு அவைகள் வழங்கவேண்டும் என்ற நடைமுறையை வைத்து இருக்கிறோம். ஆகவே, அந்த அடிப்படையில் தான் அரசு அந்தக் காரியங்களை மேற்கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பால் வழங்கு கூட்டுறவு சங்கங்கள் பல்வேறு இடங்களில் துவக்கப்பட்டு, பதிவு செய்யப்பட்டாலும், தொடர்ந்து அவைகள் இயங்கமுடியாமல் இருப்பதற்குக் காரணம், அவர்களுக்குக் கொடுக்கப்படும் விலை கட்டுப்படியாகவில்லை என்பதுதான் என்று சொல்கிறார்கள். 4.5 கொழுப்புச் சத்தை வைத்துக்கொண்டு

மீதி 4 சதவிகிதம் எடுக்கிறார்கள். அப்படி எடுத்த பிறகு, அரசு ரூ. 4.50க்கு விற்கிறார்கள். ஆனால் இவர்களுக்குக் கொடுக்கிறபோது 2.50 அல்லது 3 ரூ. தான் கொடுக்கிறார்கள். ஆகவே, இந்த விலையை அதிகரித்துத் தர அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, விலையைப் பொறுத்தவரையில் இன்றையதினம் பால் உற்பத்தியாளர்களிடையே எந்தவிதமான பிரச்னையும் இல்லை. பொருத்தமான, நியாயமான விலை இப்போது அவர்களுக்குக் கிடைக்கிற காரணத்தால், அதிக அளவிற்கு பால் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கிடைப்பதால், அதைக் கொள்முதல் செய்ய முடியாத சங்கடங்கள் கூட கடந்த 6 மாதகாலமாக ஏற்பட்டு இருக்கிறது. அதன் காரணமாக புதிய இன்ப்ரா-ஸ்ட்ரக்சர் உருவாக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை நான் மாண்புமிகு உறுப்பினரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. என். வரதராஜன் : தலைவரவர்களே, மதுரை மாவட்டத்திலுள்ள பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களில் மூன்றில் ஒரு பகுதி இயங்காமல் இருக்கிறது என்பது மாண்புமிகு அமைச்சரவர்களின் பதிலிலிருந்து தெரியவருகிறது. அதற்கு முக்கிய காரணம் பால் கறவை வற்றிய மாடுகளுக்குப் பதிலாக மறுமாடு வாங்குவதற்கான பணத்தை தேசிய வங்கிகளில் கொடுப்பதில்லை. கூட்டுறவுச் சங்க அலுவலர்களிடம் போனால் வங்கிக்குப் போகச் சொல்கிறார்கள் வங்கியில் சென்று கேட்டால் அவர்கள் அலுவலர்களிடம் அனுப்புகிறார்கள். ஆகையால்தான் பெரும்பான்மையான சங்கங்கள் இயங்க முடியாமல் போகின்றன. இதற்கு ஒரு மாற்று ஏற்பாடு செய்து, மறு மாடு வாங்க அரசு பணம் வழங்க ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல இப்படிப்பட்ட ஒரு சங்கடம் இருந்தது, தேக்கம் இருந்தது, அதைப் போக்குகின்ற வகையில் கடந்த 23—5—1983 முதல் ஒரு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அந்த நடவடிக்கையின்படி தமிழ்நாட்டில் இந்த ஆண்டில் ஏறத்தாழ 350 செயலற்ற சங்கங்களை உயிர்ப்பிக்க தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதில் 250 செயலிழந்த கூட்டுறவு பால் வழங்கு சங்கங்கள், 100 செயல்படும் கூட்டுறவு பால் வழங்கு சங்கங்கள். இந்தச் சங்கங்களுக்கு உதவி செய்கின்ற வகையில், பால் உபகரணங்கள், பால் பரிசோதனை கருவிகள், கேன்கள் பதி



வேடுகள் வாங்க சங்கம் ஒன்றுக்கு 1,500 ரூபாய் வீதம் அரசு மானியம் வழங்கப்படுகிறது. அந்த வகையில் மதுரை மாவட்டத் தில் 49 சங்கங்களைப் புதுப்பிக்க குறியீடு நிர்ணயிக்கப்பட்டு அவற்றில் 31 புதுப்பிக்கப்பட்டுவிட்டன. மற்றும் 18 சங்கங் களைப் புதுப்பிக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு எல். இளையபெருமாள் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்லும்போது, 'வயபிலிட்டி' (Viability) என்று சொன்னார்கள். இந்த வகையில் அரசாங்கம் இப்போதுதான் உதவி செய்ய வேண்டுமென்று, குறிப்பாக மலைவாழ் மக்கள், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சொசைட்டி களை ரெஜிஸ்டர் செய்திருக்கிறது. வயபிலிட்டி என்ற பெய ரால் அதிகாரிகள் மூன்று மாதங்களுக்கு மாதந்தோறும் 100 லிட்டருக்குக் குறையாமல் பால் கொடுத்தால்தான் உங்களுடைய சங்கத்திற்கு ரெக்கமெண்ட் செய்து, பாங்க் மூலம் கடன் கொடுக்க ஏற்பாடு செய்வோம் என்று சொல்கிறார்கள். இப்போதுதான் அந்த மக்களுக்கு அரசாங்கம் இப்படிப்பட்ட உதவிகளைச் செய்யத் தொடங்கியிருக்கிறது. அதிலும் மாடு வாங்க உதவி செய்யாமல், மாடு வாங்காமல் மூன்று மாதங் களுக்கு 100 லிட்டர் பால் வீதம் கொடுங்கள் என்றால் எப்படி கொடுக்க முடியும்? கடன் கொடுக்கப்பட்டு, மாடு வாங்கப்பட்டு அதன் பிறகு இந்த கட்டுப்பாட்டை வைத்தால் பரவாயில்லை. உதவியே செய்யாமல் ஆரம்பத்தில் 100 லிட்டர் பால் வீதம் மூன்று மாதங்களுக்கு கொடுக்கவேண்டுமென்று சொன்னால் இது உதவி செய்வதாக இருக்காது. எனவே முதலில் உதவி செய்து, அதன் பிறகு பால் கொடுக்கின்ற முறையில் மாற்றியமைக்க அரசு உத்திரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வுகள் பரிசீலிக்கப் படும்.

### நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் பணிபுரியும் தற்காலிக சுகாதார ஊழியர்களுக்கு அளிக்கப்படும் கூலி.

(*430 வினா 17459)—திரு. என். ஏ. பூங்காவனம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழ்நாட்டில் நகராட்சி, பேரூராட்சிகளில் பணியாற்றும் தற்காலிக சுகாதார ஊழியர்களுக்கு அளிக்கப்படும் கூலி, நகராட்சிக்கு நகராட்சி வித்தியாசமாக இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதை ஒரே விகிதத்தில் வழங்கும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) நகராட்சிகளைப் பொறுத்தவரை சுகாதார ஊழியர்களுக்கு அளிக்கப்படும் கூலி நகராட்சிக்கு நகராட்சி வித்தியாசப்படுவதில்லை.

பேரூராட்சிகளைப் பொறுத்தவரையில் சுகாதாரத் துறையில் பணிபுரியும் தினசரிக் கூலியை அந்தந்த மாவட்டங்களின் பல்வேறு சூழ்நிலைகளை அனுசரித்து அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களால் நிர்ணயிக்கப்பட்டு வருகிறது. எனவே மாவட்டத்திற்கு மாவட்டம் இத் தினசரிக் கூலி வித்தியாசப்படுவதாக உள்ளது.

(ஆ) இல்லை.

திரு. என். ஏ. பூங்காவனம் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் தினசரி வேலை செய்கின்ற சுகாதாரத் தொழிலாளர்களுக்கு நகராட்சிக்கு நகராட்சி கூலி வித்தியாசம் இல்லை என்று சொன்னார்கள். அது உண்மையான தகவல் என்று நான் நினைக்கவில்லை. எங்களுடைய மாவட்டத்திலேயே கூட வேலூரில் ஒருவித கூலியும். ஆற்காட்டில் ஒருவித கூலியும், ஆரணியில் ஒருவித கூலியும், திருவண்ணாமலையில் ஒருவித கூலியும், திருப்பத்தூரில் ஒருவித கூலியும், வாணியம்பாடியில் ஒருவித கூலியும், குடியாத்தத்தில் ஒருவித கூலியும் கொடுக்கப்பட்டு வருகிறது. இப்படி எங்கள் மாவட்டத்திலேயே நகராட்சிக்கு நகராட்சி கூலி வித்தியாசம் இருக்கிறது. இந்த கூலியை ஒருமுகப் படுத்தி மாநிலம் முழுவதற்கும் எல்லா நகராட்சிகளுக்கும் இந்தமாதிரியான தொழிலாளர்களுக்கு ஒரேவிதமான கூலி கொடுக்க ஆணை பிறப்பிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, நகராட்சிகளைப் பொறுத்தவரையில் ஒரேவிதமான கூலிதான் கொடுக்கப்படுகிறது. அதுமட்டுமல்ல, தினசரி கூலியாக இருப்பவர்களுக்கு நிரந்தரமாக 200-5-300 என்ற விகிதத்தில் சம்பளம் கொடுக்கப்படுகிறது, நகர ஈட்டுப்படி கொடுக்கப்படுகிறது, வீட்டு வாடகைப்படி கொடுக்கப்படுகிறது. ஆனால் எந்த எந்த இடத்தில் வேலை காலி இருக்கிறதோ. அங்கே சப்ஸ்டிடியூட் என்ற முறையில் தினசரி கூலியாக அமர்த்தப்படுகிறார்கள்.



அவர்களுக்குத்தான் கூலி கொடுக்கப்படுகிறது. பாக்கி எல்லோருக்கும் நிரந்தரமான சம்பளம் கொடுக்கப்பட்டு வருகிறது. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போன்று எந்தெந்த நகராட்சிகளில் எவ்வளவு கூலி கொடுக்கப்படுகிறது என்றும், அதிலே எவ்வளவு வித்தியாசம் இருக்கிறது என்றும் சொன்னால் நடவடிக்கை எடுக்கப்படும்.

(முற்பகல் 9.20)

திரு. என். ஏ. பூங்காவனம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரிடம் தகவலை நான் எழுதிக் கொடுக்கிறேன். பேரூராட்சிகளில் பணியாற்றுகின்ற ஊழியர்களுக்கு ரூபாய் 60—90 சம்பளம், பகுதிநேர ஊழியர்கள் என்ற பெயரால் கொடுக்கப்படுகிறது. நகராட்சிகளில் முழு நேர ஊழியர்கள் பணியாற்றுவதுபோல், இவர்களுக்கும் மாற்றிக் கொடுக்கப்படுமா ? நகராட்சிகளில் போதிய ஊழியர்கள் இல்லாமல் இருக்கிறார்கள். அவற்றை நிரப்புவதற்காக அமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரூராட்சிகளைப் பொறுத்த வரையில், அந்தந்த மாவட்டத்திலுள்ள நிலவரத்திற்கேற்ப நிலைமைகளை அனுசரித்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூலி நிர்ணயம் செய்கிறார்கள். ஒரே மாதிரியான கூலி எல்லா பேரூராட்சிகளுக்கும் கொடுக்கப்படவில்லை என்பதை நான் ஏற்கெனவே சொன்னேன். ஆகவே, பேரூராட்சிகளைப் பொறுத்தவரையில் இருக்கக்கூடிய சுகாதாரப் பணியாளர்களை எல்லாம் நிரந்தரமாக்க வேண்டும் என்கிற கோரிக்கைகளை அவர்களே கொடுத்திருக்கின்றார்கள். அது அரசினுடைய பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே இருக்கக்கூடிய நகராட்சிகளிலும், பேரூராட்சிகளிலும், சுகாதாரப் பணியாளர்கள் போதுமானதாக இல்லை என்பதை ஏற்றுக் கொள்கிறேன். அது ஏற்கெனவே அரசினுடைய கவனத்திற்கு வந்து, அரசினுடைய பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, போதுமான பணியாளர்களை நியமிக்க வேண்டும் என்பதுதான் அரசினுடைய எண்ணமும்கூட.

திரு கு. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சொல்லியிருக்கும்படியான விவரம் மறு பரிசீலனை செய்ய வேண்டிய விஷயம் என்பதை நான் ஒத்துக் கொள்கிறேன். தற்காலிக தொழிலாளர்களுக்கு அமைச்சர் அவர்கள் சொன்ன மாதிரி சம்பள நிர்ணயம் கிடையாது. அது நிரந்தரமாக்கப்பட்ட தொழிலாளிக்குத்தான். மற்றவர்களுக்கு இல்லை. அந்தக் கூலி மாதிரி தினசரி இவ்வளவு தான் கூலி என்று இருக்கிறது. அந்த நிலை சரியாக இருக்குமா என்பதை அமைச்சர் அவர்கள்

சிந்திப்பார்களா ? அப்படிச் செய்தால்கூட, ஒரே மாதிரி வேலை செய்யக் கூடியவர்களுக்கு ஒரே மாதிரி சம்பளம் கொடுக்கப்பட வேண்டுமென்று சட்ட நிலைமையில் இருக்கும்பொழுது, நகராட்சிகள் அதை மீறி எப்படிப் போக முடியும். ஆனால் அதை மீறிப் போகிறார்கள். அதை அமைச்சரவர்கள் கவனித்து, குறைந்த பட்சம் ஒரு விவசாயத் தொழிலாளிக்குக் கிடைக்கக்கூடிய அளவிலாவது அவர்களுக்கு ஒரே மாதிரியான சம்பளத்தைக் கொடுக்க முயற்சிப்பார்களா ? தேவையான அளவிற்கு நிரந்தரப்படுத்துவதிலே, சுகாதாரத்தைப் பாதுகாக்க வேண்டுமென்ற அவசியத்தை முதன்முதலில் கணக்கில் எடுத்துக் கொண்டு, அதிகப் படியான தொழிலாளர்களை தேவைக்கேற்ப நிரந்தரமாக்க உடனடியாக நடவடிக்கைகளை எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, நகராட்சிகள் மீறிப் போவதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். அப்படிப்பட்ட நிலை இல்லை. நான் ஏற்கெனவே சொன்னது, பேரூராட்சிகளில் தான் சம்பள விகிதம் மாற்றப்படுகிறதே தவிர, மாறி மாறிக் கொண்டிருக்கிற நிலை இருக்கிறதே தவிர, நகராட்சிகளில் ஒரே சம்பள விகிதம் இருந்து வருகிறது. அதைத்தான் நான் சொன்னேன். நிரந்தரமாக இருக்கக் கூடிய சுகாதாரப் பணியாளர்களுக்கு எல்லாம் 200—5—300 என்ற அடிப்படையில் நிரந்தரமான சம்பளம் கொடுக்கப்படுகிறது. பேரூராட்சிகளில் இந்த வித்தியாசம் இருக்கிறது. இல்லை என்று நான் சொல்லவில்லை.

திரு. கு. ரமணி : நான் தற்காலிக ஊழியர்களைப் பற்றித் தான் கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : நிரந்தரமான தொழிலாளர்களுக்கு கொடுக்கப்படுகின்ற சம்பளத்தை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்கள். தற்காலிக தொழிலாளர்களைப் பற்றி, இந்த அரசு பரிசீலனை செய்துக் கொண்டிருக்கிறது என்பதனைத்தான் நான் ஏற்கெனவே சொன்னேன். பேரூராட்சிகளில் இப்படிப் பட்ட சம்பள விகிதங்களில் வித்தியாசங்கள் இருக்கக் கூடாது, ஒரே சம்பள விகிதம் இருக்கவேண்டும் என்ற அடிப்படையில் இது அரசினுடைய பரிசீலனையில் இருந்துவருகிறது.

திரு கோவைத்தம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சி, நகராட்சி அல்லது பேரூராட்சி இவைகளில் சுகாதாரப் பணியாற்றுகின்ற இந்த ஊழியர்கள் பெரும்பாலும் அதாவது நூற்றுக்கு அறுபது சதவீதம் எப்போதும் விடுமுறையில் இருப்பதாக பல இடங்களில் புகார்கள் வந்து கொண்டிருப்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா ? இந்த ஊழியர்களை அதிகப்படுத்த வேண்டுமென்று எல்லா நகராட்சி





களிலும், மாநகராட்சிகளிலும், பேரூராட்சிகளிலும் கோரிக்கைகள் வந்திருக்கின்றன. இந்த கோரிக்கைகளை ஏற்று, முன்வந்து, எத்தனை சதவீதம் ஊழியர்களை அதிகப்படுத்தப் போகிறீர்கள் ? அரசியல் சங்கங்களில் ஆக்கிரமிப்பில் இருந்துகொண்டு அதிக விழுக்காடுகள் வேலைக்கு வராமல் லீவ் போட்டுக் கொண்டிருக்கிற அந்த நிரந்தர ஊழியர்கள் மீது என்ன நடவடிக்கையை அரசு எடுக்க இருக்கிறது ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, சுகாதாரப் பணியாளர்களைப் பொறுத்தவரையிலும் அரசாங்க ஊழியர்களைப் பொறுத்தவரையிலும் எப்போதுமே அரசாங்கம் விதிமுறை வைத்திருக்கிறது. அந்த விதிமுறைக்கேற்ப அவர்கள் விடுமுறை எடுத்துக் கொள்கிறார்கள். அதை நாம் கட்டுப்படுத்த முடியாது. ஆகவே, விதிமுறைக்கேற்ப அவர்கள் விடுமுறை காலத்தில் எப்போதாவது மூன்றில் ஒரு பாகம் அவர்கள் வேலைக்கு வராமல் அல்லது விடுமுறை எடுத்துக் கொள்கிற நிலை இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, அப்படிப்பட்ட நிலைமைகளையெல்லாம் பார்த்துச் செய்யவேண்டுமென்றால் நகராட்சிகள் மாநகராட்சிகள் பொறுத்தவரையில் போதிய பணியாளர்களை நியமித்தாகவேண்டும். அதைத்தான் நான் ஏற்கனவே சொன்னேன். இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் சுகாதாரப் பணியாளர்களை மக்கள் தொகைக்கேற்ப நிதிநிலைக்கேற்ப அதிகப்படுத்த வேண்டும் என்ற முறையில் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம். சீக்கிரமாக இதில் ஒரு முடிவு எடுப்போம்.

திரு. எல். இளையபெருமாள் : தலைவர் அவர்களே, பேரூராட்சிகள், நகராட்சிகள், மாநகராட்சிகள் இவற்றின் விதிகள்படி அந்த ஊழியர்களுக்கு க்ளோத்ஸ் கொடுக்கவில்லை, செருப்பு கொடுக்கவில்லை, எண்ணெய் கொடுக்கவில்லை. அவர்கள் இறந்துபோனால், அரசாங்கம் அவர்கள் குடும்பத்திற்கு ரூபாய் 10,000 மற்ற அரசாங்க ஊழியர்களுக்குக் கொடுப்பதுபோன்று கொடுக்கவேண்டும் என்றிருந்தும் அது கொடுக்கப்படாமல் இருக்கிறது. இந்த மாதிரி சுகாதாரப் பணி புரிகிறவர்களுக்கு சாதாரண சிறு உதவிகள் கூட கொடுக்காமல் இருக்கிறார்கள். ஆகவே அப்படிக் கொடுக்காதிருப்பவர்களுக்கு, உடனடியாக தாக்கீது கொடுத்து எல்லாப் பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சி, சென்னை மாநகராட்சியில் கூட இன்னும் கொடுக்கப்படவில்லை என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா அவர்களுக்கு அவை கிடைக்கக்கூடிய வகையில் உடனடியாக ஆவன செய்வார்களா ?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, நிரந்தரப் பணியாளர் இறந்து போனால் அவருடைய குடும்பத்திற்கு ரூபாய் 10,000 கொடுக்க வேண்டும் என்ற விதிமுறை இருக்கிறது. அது கொடுக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் பொதுவான ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். ஆகவே, குறிப்பிட்ட குற்றச்சாட்டுகள் அல்லது குறைகள் அல்லது புகார்கள் ஏதாவது இருக்குமானால் அதை தயவு செய்து என்னிடத்தில் கொடுக்க வேண்டும். நிரந்தரப் பணியாளர்களுக்கு ஏற்கனவே இருக்கக்கூடிய விதிமுறை அடிப்படையில் அரசாங்க ஊழியர்கள் எப்படியெல்லாம் பெறுகிறார்களோ அதேபோன்ற நிலையில் உள்ளாட்சி மன்றங்களில் பணியாற்றுகின்றவர்களும் இருக்க வேண்டும் என்பதுதான் இந்த அரசாங்கத்தின் எண்ணம். அதைத்தான் நாம் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

திரு இரா. [illegible] : தலைவர் அவர்களே, இந்த பேரூராட்சிகள், நகராட்சிகள் ஆகியவற்றில் பணியாற்றிக் கொண்டிருக்கின்ற தற்காலிகத் தொழிலாளர்கள் பற்றி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். 480 நாட்கள் பணி புரியக்கூடிய தொழிலாளர்களை நிரந்தரத் தொழிலாளர்களாக ஆக்கவேண்டும் என்றிருக்கின்ற சட்டத்தை இந்த பேரூராட்சிகள், நகராட்சிகள் இவற்றில் அமல்படுத்தாமல் அவர்களை நிரந்தர தொழிலாளர்களாக ஆக்கவில்லை என்பது உண்மையா ? அப்படியானால் இந்தத் தற்காலிகத் தொழிலாளர்கள் அனைவரையும் இந்தச் சட்டத்திற்கு உட்பட்டு நிரந்தரமாக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு நல்ல தொழிற்சங்கவாதி. 480 நாட்கள் யார் யார் பணியாற்றுகிறார்களோ அவர்களுக்கெல்லாம் கொடுக்க வேண்டும் என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். 480 நாட்கள் அவர்கள் தொடர்ந்து வேலையில் இருக்க வேண்டும் என்ற விதிமுறை எல்லாம் இருக்கிறது. அதையெல்லாம் நாம் கருத்தில் கொள்ள வேண்டும். எப்படியெல்லாம் பணியாற்றுகிறார்கள் என்பதையும் அடிப்படையாக வைத்துக் கொண்டு நிரந்தரப்படுத்துகிற அந்தத் தன்மைகள் இந்த அரசின் மூலயாக செய்யப்படுகின்றன.

திரு என் வரதராஜன் : தலைவர் அவர்களே, இந்த நகராட்சிகள், பேரூராட்சிகள் இவற்றில் உள்ள இந்த தற்காலிக ஊழியர்கள் ஒரு துயரமான வேலையில் ஈடுபட வேண்டியிருக்கிறது. காலையில் 5.45 மணிக்கு வந்து அவர்கள் அலுவலகத்திற்கு முன்னால் நின்று கொண்டிருக்க வேண்டும். வேலை காலியாக இருக்கிறதா என்று பார்த்து யார் லீவ் எடுத்திருக்கிறார்கள் என்று பார்த்து வேலை கொடுப்பார்கள். தினம் ஆஜரானாலும்கூட மாதத்திற்கு ஐந்து நாட்கள்தான் வேலை



கிடைக்கக்கூடிய நிலை இருக்குமானால் அவர்கள் குடும்பம் எவ்வளவு சிரமப்படும் என்பதை அரசாங்கம் உணர வேண்டும். எனவே ரிலீவிங் செக்ஷன் என்ற முறையில் அமைத்து லீவ் எடுப்பவர்களுக்குப் பதிலாக அனுப்பும் விதத்தில் அவர்களை நிரந்தர தொழிலாளர்களாக்க அரசாங்கம் முயற்சி செய்யுமா ?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னதைப்போல அந்தப் பணியாளர்களை எல்லாம் நிரந்தரமாக்க வேண்டுமென்று சொன்னால் போதிய நிதி வசதி தேவை. உள்ளாட்சி மன்றங்களைப் பொறுத்த வரையில் நான் ஒன்றை மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். பெரும்பாலும் 60 சதவீதத்திற்கு மேற்பட்ட உள்ளாட்சி மன்றங்களின் நிதி நிலை போதாத, வசதியற்ற நிலையில்தான் இருந்துகொண்டிருக்கிறது. உள்ளாட்சி மன்றம் என்று சொன்னால் வரக்கூடிய வரி வருவாயை வைத்துக் கொண்டு நடத்த வேண்டியிருக்கிற ஸ்தாபனம். இந்த மன்றங்கள் எப்போது பார்த்தாலும் அரசாங்கத்தை கையேந்திக் கொண்டிருக்கிற மன்றங்களாக இருந்தால் மன்றங்கள் என்ற தத்துவத்தையே முறித்துவிடுவதாக இருக்கக்கூடிய சூழ்நிலைதான் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. ஆகவே இவற்றையெல்லாம் கவனத்தில்கொண்டு அரசாங்கத்தின் மூலம் அதிகப்படியான பணியாளர்கள் தேவை என்பதை எடுத்துச் சொல்லியிருக்கிறோம். அதற்கேற்ற முறையில் அரசாங்கம் என்ன முடிவு எடுக்கிறதோ அதற்கேற்ற முறையில் அவர்கள் பணியில் அமர்த்தப்படுவார்கள்.

**ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கும் குடிநீர் ஆழ் குழாய்க் கிணறுகள்.**

31 (* வினா எண் 18412)—திரு. செ. செம்மலை திரு. கு. பாரமலை : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கும் குடிநீர் ஆழ்குழாய் கிணறுகளைப் பராமரிக்கக் கூடுதல் பணியாளர்களை நியமிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

[1984 மார்ச் 24

திரு. க. பாரமலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நம்முடைய திட்டத்திலே போடப்பட்டிருக்கின்ற குடிநீர் குழாய்களின் அடி பைப்புகள் எல்லாம் பெருமளவில் ரிப்பேராகி இருக்கின்றன. அதைச் சரிசெய்வதற்கு ஏற்கனவே ஒரு பஞ்சாயத்துக்கு ஒருவர் வீதம் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆனால், அவர்களாலே இதுவரையில் அந்த ரிப்பேர்களைச் செய்ய முடியவில்லை. இரண்டாவது, அதிலே பல மேஜர் ரிப்பேர்கள் இருக்கின்றன. ஆகவே, ஒரு டிவிஷனுக்கு ஒருவர் என்ற முறையில் இதை ரிப்பேர் செய்வதற்கு என்று ஒரு தனியான இயக்கத்தை ஆரம்பிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-30.)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஆழ்குழாய் கிணறுகளைப் பொறுத்தவரையில், பராமரிப்பதற்கு இன்று தமிழகம் முழுவதும் 366 பொருத்துனர்கள் இருக்கிறார்கள். நீலகிரி மாவட்டத்தைப் தவிர, பிற எல்லா மாவட்டங்களிலும் இந்தப் பொருத்துனர்கள் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், இருக்கின்ற நிலைமையில் அவர்களால் அந்தப் பணியை வரைமுறைப்படுத்த முடியாத நிலைமை இருக்கிறது. எல்லா ஆழ்குழாய் கிணறுகளையும் ஒரேயடியாக அவர்களால் பார்வையிட முடியாத நிலைமை இருக்கின்ற காரணத்தினால், மீண்டும் அதிகமான பொருத்துனர்கள் தேவை என்ற இந்த கருத்துருவை அரசுக்கு அனுப்பி வைத்திருக்கிறோம். அரசு இதை பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. இன்னும் எத்தனை பொருத்துனர்கள், தேவைப்படுகிறார்களோ, அதற்கேற்ற முறையில் அரசு முடிவெடுக்கும்.

திரு. க. பாரமலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆழ்குழாய் கிணறுகளைப் பொறுத்தவரையில், இன்றைக்கு பல்வேறு நிலைகளில், அதாவது டுவாட் போர்டு செய்கிறார்கள், நாமே சில இடங்களில் செய்கிறோம். சில திட்டங்களை அமுல்படுத்துகின்றபோது, இப்படிப்பட்ட நிலை பல இடங்களில் இருப்பதன் காரணமாக, யார் செய்வது என்றுகூட தெரியாமல் ஒரு நிலையிருக்கிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், என்னுடைய தொகுதியில் மேல்வள்ளூரில் ஒரு ஆழ்குழாய் கிணறு இருக்கிறது. அதற்கு ரிப்பேர் ஏற்பட்டபோது, டுவாட் போர்டிமிடருந்து இன்னும் எங்களுக்கு வரவில்லை என்று அங்குள்ள ஆணையாளர் சொல்லுகிறார், ஆனால் டுவாட் போர்டிடம் கேட்டால், அது பஞ்சாயத்திடம் ஒப்படைத்தாகி விட்டது என்று சொல்லுகிறார்கள். இப்படிப் பல இடங்களில் யார் செய்வது என்ற நிலையிருப்பதினால், அங்குள்ள பஞ்சாயத்திடமே அதை ஒப்படை செய்வதற்கு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.



1984 மார்ச் 24]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஏற்கனவே ஆழ்குழாய் கிணறுகளைப் பொறுத்த வரையில் ஒரு கொள்கை முடிவை நாம் எடுத்திருக்கிறோம். அதாவது குடிநீர் வடிகால் வாரியம், உள்ளாட்சித் துறை இரண்டும் சேர்ந்து எடுத்த முடிவாகும். ஆழ்குழாய் கிணறுகளைப் பராமரிக்கின்ற பொறுப்பை, அங்கே இருக்கக்கூடிய பஞ்சாயத்து ஒன்றியங்களே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்கின்ற முடிவெடுக்கப்பட்டு, இன்று நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. அதற்கு பொருத்துனர்கள் போதவில்லை என்று குறைபாடு இருக்கிறது. அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். அதற்குரிய நடவடிக்கைகளை நாங்கள் கண்டிப்பாக எடுப்போம்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்களில் தலைவர்கள் இல்லாத நிலையில், இந்த மன்றங்களுக்கெல்லாம் எப்போது தேர்தல் வரும் என்று தெரியாத சூழ்நிலையில், அங்கே மக்கள் பிரதிநிதிகள் இல்லாததால், சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் தொகுதிக்குப் போகின்ற நேரத்தில், கிராமங்களிலே இருக்கக்கூடிய மக்களில் பெரும்பாலோர் குடி தண்ணீர் குழாய்கள் சரியாக இயங்கிக் கொண்டு வரவில்லை என்ற குறைபாட்டை சட்டமன்ற உறுப்பினர்களிடம் தெரிவிப்பதை நாம் உணர்ந்திருக்கிறோம். ஆகவே, ஆழ்குழாய்க் கிணறுகளாகட்டும், மேல்நிலைத் தொட்டிகளாகட்டும், அவைகளைப் பராமரிக்கின்ற பொறுப்பை ஊராட்சி ஒன்றியங்கள் எடுத்துக் கொண்டால் சரியாக இருக்கும். காரணம், குடிநீர் வடிகால் வாரியத்திடம் தொடர்புகொண்டும், அந்தப் பணிகள் சரிசெய்யப்படாமல் பல மாதங்கள் ஆகின்றன. என்னுடைய தொகுதியிலேயே பல மாதங்களாக பழுது பார்க்கப்படாமல், பல கிணறுகளும், மேல்நிலைத் தொட்டிகளும் இருக்கின்றன. எனவே, சபாநாயகராகிய உங்கள் மூலம் நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.—இந்த ஆழ்குழாய் கிணறுகளையும், மேல்நிலைத் தொட்டிகளையும் பராமரிக்கக்கூடிய பொறுப்பை ஊராட்சி ஒன்றியங்களே எடுத்துக் கொண்டால், விரைவாக அதிலே தீர்வு காண முடியும். அதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விருப்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே, தேர்தலை சீக்கிரமாக நடைமுறைப்படுத்த வேண்டுமென்ற முறையில் இந்த அரசு நடவடிக்கை எடுத்ததைப் பற்றி உங்களுக்கு நன்றாகத் தெரியும். ஆனால், நேற்றைக்கு உயர் நீதிமன்றத்தில்............

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வி ஆழ்க்குழாய் கிணற்றைப் பற்றியது. அதைப்பற்றி துணைக் கேள்விகளுக்கு மட்டும் மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்லலாம். மற்றவைகள் எல்லாம் மூலக்கேள்விக்கு சம்பந்தம் இல்லாதவை என்று சொல்லிவிடலாம்.

**திரு என். எஸ். வி. சித்தன் :** தலைவர் அவர்களே, என்னுடைய கேள்வியினுடைய முக்கியத்துவமே மக்கள் பிரதிநிதிகளாக நாங்கள் மட்டும்தான் இருக்கிறோம். ஆகையினாலே கிராமங்களுக்குச் செல்லும்போது எங்களுக்கு சிக்கல்கள் வருகின்றன. மக்களைச் சந்திக்க முடியவில்லை ; இது ஒரு அடிப்படைத் தேவை. எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுடைய தொகுதியில் உள்ள தேவை. இதைச் சொல்லித்தானே கேட்க வேண்டும். உங்களுக்கு விருப்பம் இல்லை என்று சொன்னால், அதற்குப் பதில் சொல்லாமல் போகட்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இதிலே என்னுடைய விருப்பம் எதுவும் இல்லை. இது ஆழ்க்குழாய் கிணற்றைப் பற்றிய கேள்வி. நானும் ஒரு சட்டமன்ற உறுப்பினர்தான். எனக்கும் இந்த நிலைமைகள் எல்லாம் தெரியும். அதை ரிப்பேர் செய்வதைப் பற்றிக் கேட்க வேண்டுமே தவிர, மக்கள் பிரதிகளிலேயிருந்து கேள்வியை ஆரம்பித்துக் கேட்டுக்கொண்டிருக்க முடியாது. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேள்விக்கு மட்டும் பதில் சொல்லலாம்.

**மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு :** பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதெல்லாம் சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதிகளுக்குப் போனால் கெட்ட பெயர் என்று சொன்னார்கள். உண்மையிலேயே என்னைப் பொறுத்த அளவிலே நான் சொல்கிறேன். இந்த அரசு வந்ததற்குப் பின்னாலே தான் தன்னிறைவுத் திட்டம் போன்ற மிகப் பெரிய திட்டங்கள் வந்ததற்குப் பின்னாலே தான் சட்டமன்ற உறுப்பினர்கள் தலை நிமிர்ந்து நடக்க முடிகிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஏன் என்றால், முன்பு அப்படிப்பட்ட நிலை இருந்தது. பல்வேறு ஆட்சிகள் வந்த நேரத்தில், முன்பு அந்த நிலை இருந்தது. ஆனால் இப்போது....

**திரு என். எஸ். வி. சித்தன் :** தலைவர் அவர்களே, இதை மட்டும் தாங்கள் எப்படி அனுமதிக்கிறீர்கள். (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் இதை ஆரம்பித்ததினாலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்குள் போக வேண்டியதாக இருக்கிறது. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குழாய் ரிப்பேர் சம்பந்தமாக மட்டும் பதில் சொல்லலாம்.



**மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு :** மாண்புமிகு தலைவர் அவர்களே, குழாய்க் கிணற்றைப் பொறுத்த அளவிலே ஏற்கனவே இங்கே உறுப்பினர் பாரமலை அவர்கள் கேட்ட கேள்விக்கும், மற்றும் இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்கள் கேட்ட கேள்விக்கும் பதில் சொன்னேன். உறுப்பினர்கள் சொல்வதுபோல் பராமரிப்பு சரியாக நடக்கவில்லை என்பது உண்மை. நானும் ஏற்றுக்கொள்கிறேன். நானும் ஒரு தொகுதிக்குச் சொந்தக்காரன்தான். ஆகவே இருக்கின்ற நிலைமைகள் கண்டிப்பாக எனக்குத் தெரியும். ஆகவேதான் அரசின் சார்பிலே வேண்டிய பொருத்துநர்களை உடனடியாக ஏற்படுத்த வேண்டும் என்ற முறையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**திரு எஸ். ஆண்டித்தேவர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது குழாய்கள் பராமரிப்புக்கு ஒருவருக்கு மேல் போடமுடியாது என்று திட்டவட்டமாக பதில் சொன்னார்கள், இப்போது அது பரிசீலனையில் இருக்கிறது என்று சொல்கிறார்கள். தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாக அதிகமான அளவில் குழாய்களைப் போட்டதால் சட்டமன்ற உறுப்பினர் போகலாம் என்று சொன்னார்கள். பாராட்டுகிறேன். தன்னிறைவுத் திட்டம் போன்ற திட்டங்களின் மூலமாக அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக ஒரு ஊராட்சி ஒன்றியத்திலே அதிகமான அளவிலே குழாய்கள் போடப்பட்டிருக்கின்றன. ஒரு ஊராட்சி ஒன்றியம் என்றால் ஒரு கிராமம் மட்டும் அடங்கியது அல்ல. 15 மைல் தூரத்திற்கும் அது போகிறது. எனவே ஒருவர் போய் பார்க்க முடியாத காரணத்தால், பல லட்சக்கணக்கான ரூபாய் செலவழித்து ஓவர் ஹெட் டாங்க்காக இருந்தாலும், சரி, ஆழ்க்குழாய்க் கிணறாக இருந்தாலும் சரி, இயங்காமல். 2, 3 ஆண்டு காலத்திற்குப் பின்னால் அவைகள், 'சில்ட்' ஆகிவிட்டது என்று சொல்கிறார்கள், அதைப் பார்க்காத காரணத்தால். ஆகவே அதை உடனடியாக பராமரிப்பதற்காக தனியாக திட்டம் அமைத்து, அப்படி இல்லை என்றால், இந்த அடிப்படை தேவையைச் செய்வதற்கு அரசு முயற்சி செய்ய வேண்டும். அப்படி இல்லை என்றால், இதை அரசு ரிப்பேர் செய்ய தவிர்க்கிறது என்ற நிலை மக்கள் மத்தியில் ஏற்படும். ஆகவே அதைத் தவிர்ப்பதற்கு, உடனடியாக பணம் செலவு செய்து அதைப் பராமரிக்கக்கூடிய நிலையை அமைச்சர் அவர்கள் உருவாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதற்குப் போட்டியாகவோ, அல்லது மற்றவர்கள் சொல்வது மாதிரியோ நான் கேட்கவில்லை. உள்ள நிலையைத்தான்..........

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எங்கள் ஊரிலே 2 வருஷமாக பம்ப் வேலை செய்யாமல் இருந்தது என்ற நிலையை நான் பார்க்கவில்லை. 2 வருஷங்கள் வரை பம்ப் வேலை செய்யாமல் இருக்காது.

[1984 மார்ச் 24

திரு எஸ். ஆண்டித் தேவர்: தலைவர் அவர்களே, 2 ஆண்டுக் காலமாக ஒருவரும் போய்ப் பார்க்காத காரணத்தாலே, இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படுகின்றன. அரசு எவ்வளவோ பணம் செலவழிக்கிறது. எனவே உடனடியாக இவைகளை ரிப்பேர் செய்வதற்கு, இந்த அடிப்படைத் தேவையை பூர்த்தி செய்வதற்கு இந்த அரசு ஆவன செய்யுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-40)

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு தலைவர் அவர்களே, ஒரு சில குறைபாடுகளை மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதைப் போல அரசும் தன்னுடைய கவனத்தில் கொண்டிருக்கிறது. அதைத்தான் ஏற்கெனவே நான் அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னேன். அவைகளை உடனடியாக நடவடிக்கை எடுத்து பாரமரிப்புச் செய்தாக வேண்டும் என்பது உண்மை. இல்லை என்று சொன்னால் எந்த திட்டம் போட்டாலும் ஒன்றும் நிறைவேறாது. ஏனென்று சொன்னால், அதற்குப் பின்னால் பாலோ அப் ஆக்ஷன் என்னும் தொடர் நடவடிக்கை இல்லாவிட்டால், கண்டிப்பாக எல்லாத் திட்டங்களுமே பாழ் அடைந்து போகும் ஆகையினால்தான் நாம் அதற்குரிய நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

## N.R.E.P. திட்டத்தின் கீழ் கட்டப்படும் மாதிரி காலனி வீடுகள்

*432—(வினா எண் 18837)—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) N.R.E.P. திட்டத்தின் கீழ் ஒவ்வொரு யூனியனுக்கும் மாதிரி காலனி வீடுகள் (25 இரட்டை வீடுகள்) அமைக்கும் திட்டம் அமல் நடத்தப்படுகின்றதா?

(ஆ) ஆம் எனில், மதுரை மாவட்டத்திலுள்ள 34 யூனியன்களிலும் எங்கெங்கு வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:—(அ) மற்றும் (ஆ): இல்லை எனினும் நடப்பு ஆண்டு (1983—84)ல் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 9000 (ஒற்றை) வீடுகளும், மலைவாழ் மக்களுக்கு 1000 (ஒற்றை) வீடுகளும் கட்டுவதற்கு அரசு ஆணையிட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, பெரியார் மற்றும் சேலம் மாவட்டங்களில் 31—12—1983 வரை ஏறத்தாழ 300 வீடுகள் கட்டப்பட்டுள்ளன.



1934 மார்ச் 24]

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இத் திட்டம் அமல் படுத்தப் பட்டு, இடையிலே நிறுத்தப்பட்ட நேரத்திலேதான் கொடுக் கப்பட்ட கேள்வி இது. இப்போது இது மறுபடியும் செயலாக் கத்தில் வந்து, என்னுடைய தொகுதியில் 2 யூனியன்களில் இருபது இருபது வீடுகளாக கட்டிக் கொண்டிருக்கிறார்கள். மதுரை மாவட் டத்தில் 34 யூனியன்களிலும் இது அமல் நடத்தப்படுகிறதா என்ற கேள்விக்கு அமைச்சரிடமிருந்து பதில் இல்லை. அப்படி 34 யூனியன்களிலும் அமல்நடத்தப்படுவது உண்மையானால், கிராமப் பஞ்சாயத்து, டவுன் பஞ்சாயத்துக்களில் இருக்கக்கூடிய நகரசுத்தி தொழிலாளர்களுக்கும் இத் திட்டம் அமல்படுத்தப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஒன்றியத்திலும் ஒரு கிராமம் எடுத்து ஒரு காலனி அமைப்பதற்காக எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும் என்ற திட்டத்தை நாம் அமல்படுத்திக் கொண்டிருக்கிறோம். அதன் மூலமாக இரட்டை வீடுகள் கட்டப்படுவதில்லை. ஆகவே, ஒற்றையாகத்தான் கட்டவேண்டும் என்ற அடிப்படையில் 9 ஆயிரம் வீடுகளும், தாழ்த்தப்பட்ட, மலைவாழ் மக்களுக்காக ஆயிரம் வீடுகளும், ஆக 10 ஆயிரம் வீடுகளைக் கட்டும் திட்டத்தை நாம் நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

இந்த ஒரு வீடு கட்ட ஆகும் செலவு 6 ஆயிரம் ரூபாய். 6 ஆயிரம் ரூபாயை இனமாகவே கொடுத்து, அதாவது மானியமாக கவே கொடுத்து இவ்வீடுகளை கட்டித்தர வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் அண்மையில் ஆணையிட்டிருக்கிறார்கள். முன்பெல்லாம் கடன் கொடுத்தும், அதில் கொஞ்சம் மானியமாக கொடுத்தும் கட்டப்பட்டது. அந்த நிலையை மாற்றி, அரசே முழுவதுமாக மானியமாக கொடுக் கக்கூடிய வகையில் இந்த திட்டத்தை அமல்நடத்திக் கொண் டிருக்கிறோம். ஒவ்வொரு ஒன்றியத்திலும் ஒரு கிராமம் எடுக் கப்பட்டுள்ளது. அந்த நிலையில் எல்லா மாவட்டங்களுக்குமே இது விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம்தானே நம்முடைய அரிசன நலத்துறையின் மூலமாக 10 ஆயிரம் வீடுகள் கட்டித்தரப்படும் என்று அறிவிக்கப்பட்ட திட்டம். அது பற்றி அந்தத்துறையின் அறிக்கையில் கூட இருந்தது. ஆனால் என்.ஆர்.யி.பி. வேலை திட்டத்தின் மூலமாக தனியாக அதற்கென்று ஏதாவது தொகை

ஒதுக்கப்பட்டு கொடுக்கப்படுமா என்ற அடிப்படையில்தான் என் கேள்வி அமைந்திருந்தது. ஆகவே, அரிசனநலத் துறையின் மூலமாக கட்டப்படும் வீடுகளும் என்.ஆர்.இ.பி. திட்டத்தின் மூலமாக கட்டப்படும் வீடுகளும், இரண்டுமே ஒரே திட்டத்தில்தானா அல்லது வித்தியாசம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு தலைவர் அவர்களே, என்னுடைய துறையைப் பொறுத்த வரையில் சொல்லுகிறேன். என். ஆர். இ. பி. என்கிற தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் என்னுடைய துறை மூலமாக நடத்தப்படுகிற ஒரு திட்டம். இத் திட்டத்தின் மூலமாக 10 ஆயிரம் வீடுகளைக் கட்ட நாம் நடவடிக்கைகளை எடுத்திருக்கிறோம்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த தேசிய வேலை வாய்ப்புத் திட்டம் மத்திய அரசு கொடுக்கின்ற நிதியிலிருந்து மாநில அரசு செயல்படுத்தி வருகிறது. (குறுக்கீடு) மாநில அரசு, மத்திய அரசு இரண்டும் சேர்த்து நிதி உதவி செயல்படுத்தி வருகிறது. இந்த திட்டத்திலிருந்து வீடுகள் கட்டுவதற்காக, பாலங்கள் கட்டுவதற்காக, சாக்கடைகள் கட்டுவதற்காக, திட்டங்களை தீட்டி எடுத்துக் கொண்டு வருகிறோம். என்னுடைய மதுரை மாவட்டத்தில் இந்த ஆண்டு சாக்கடையை கட்டுவதற்கான திட்டங்கள் நிறைய இருந்தாலும் அந்த நிதியிலிருந்து முதலமைச்சர் சத்துணவு திட்டத்திற்காக ஒதுக்கி மையங்களை கட்டிவிட்டு, இதை நிறுத்தி விட்டார்கள். ஆகவே இனி வருகின்ற நிதியை ஒவ்வொன்றிற்காக பிரித்து, சாக்கடைக்கு இவ்வளவு, விடுகள் கட்ட இவ்வளவு, பாலங்கள் கட்ட இவ்வளவு என்று பிரித்து வைத்து, இப்படி ஒரு துறையை முழுவதுமாக புறக்கணிக்காமல், எந்தெந்த செலவிற்கு அதைச் செய்ய வேண்டுமோ, அதற்கே செலவு செய்யும் வகையில் ஒதுக்கீடு செய்ய அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டிலே தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின் அடிப்படையில் 36 கோடி ரூபாயை நாம் செலவழித்திருக்கிறோம். அதிலே 18 கோடி ரூபாய் மத்திய அரசு கொடுத்தது. 18 கோடி ரூபாய் இந்த மாநில அரசு போட்டது. இந்தியாவிலேயே இத்திட்டத்தின் கீழ் அதிகமாக வேலை கொடுத்ததும், அதே நேரத்தில் கொடுத்த பணத்தை முழுவதுமாக செலவழித்ததும் தமிழகம் தான் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். ஆகவே அந்த அளவுக்கு தமிழ்நாடு தான் மற்ற மாநிலங்களுக்கே இதில் வழி காட்டுகிற நிலைமையில் நாம் இந்த தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தை சிறப்பாக செய்து வருகிறோம். இந்தத் திட்டத்தின் மூலமாக என்னென்ன வேலைகளை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று விதி முறைகளை அவர்கள் செய்திருக்கிறார்கள். அந்த விதி



முறைகளுக்கு ஏற்பதான் செய்து வருகிறோம். முதலமைச்சர் சத்துணவுத் திட்டத்திற்காக கட்டிடங்கள் கட்டுவது பற்றிச் சொன்னார்கள். அந்தச் சத்துணவு திட்டத்தை நம்முடைய மாண்புமிகு பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்களே பாராட்டி இருக்கிறார்கள். ஆகவே அந்தத் திட்டத்திற்காக கட்டடங்கள் கட்டக் கூடாது என்பது அல்ல. அந்தத் திட்டத்திற்கும் கட்டிடங்கள் கட்டப்பட வேண்டுமென்ற விதிமுறைகள் இருக்கின்றன. அவைகளின்படி அவைகள் எல்லாம் நிறைவேற்றப்படுகின்றன. வடிகால் வசதிகள் இல்லையென்றால் அதற்காக இந்தத் திட்டத்தின் மூலமாக அவைகள் செய்யப்படுகின்றன. ஆகவே எந்த எந்த ஊர்களிலே இல்லையென்று சொன்னால் அவைகளை எல்லாம் நடைமுறைப்படுத்த வேண்டிய நடவடிக்கைகளை கண்டிப்பாக அரசு எடுக்கும்.

திரு. பாபு ஜனார்த்தனன் : இந்தமாதிரி காலனி கட்டுகிற நேரத்திலே அந்த வீட்டுக்குரியவர் மனித உழைப்பை நல்கத் தயாராக இருக்கிறார். ஆனால் மனித உழைப்பைத் தரத் தயாராக இருக்கிற அவரிடமிருந்து 600, அல்லது 650 ரூபாய் ஷேர் அமவுண்ட் கொடுக்கச் சொல்கிறார்கள். வீடுகள் கட்டுகிற நேரத்திலே அந்த வீட்டுக்குரியவர் மனித உழைப்பைத் தருவதற்குத் தயாராக இருக்கிறார் என்கிற போது அவர் ஷேர் அமவுன்ட் கட்ட வேண்டுமென்று கட்டாயப் படுத்தாமல் இருப்பதற்கு அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, வீட்டுச் சொந்தக்காரர் அதற்கான மனித உழைப்பைக் கொடுக்க வேண்டுமென்ற வகையிலே அவர் தனக்கு வேண்டிய வீடு கட்டப்படுகிற நேரத்திலே அது நிரந்தரமான வீடாக, ஒழுகாத வீடாக இருக்க வேண்டுமென்ற முறையில் தான் இந்தத் திட்டத்தை நாம் அமல் படுத்திக் கொண்டிருக்கிறோம். அவர்கள் அதற்கு முன்வந்தால் 600 ரூபாய் கட்ட வேண்டுமென்ற விதிமுறை தளர்த்தப்படும். பணம் ஆறு ஆயிரம் ரூபாய் கொடுக்கிறோம்.

திரு. ச. சிவப்பிரகாசம் : தலைவர் அவர்களே, தேசிய கிராமப்புற வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ், கீழ்ப் பகுதிகளில் கட்டப்படும் வீடுகளுக்கு ஆறு ஆயிரம் ரூபாய் கொடுக்கப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மலைப் பகுதியிலே உள்ள ஒன்றியங்களிலே வீடுகள் கட்டப்படுகிற போது அந்த வீடுகளுடைய மதிப்பு என்ன ? அதற்காக தொகை எவ்வளவு ஒதுக்கப்படுகிறது ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, மலைப் பகுதியிலே கட்டப்படுகிற வீடுகளுக்காக 6 ஆயிரம் அல்ல, 9 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்படுகிறது. அங்கே இருக்கிற மெட்டிரியல்ஸ் காஸ்ட் அதிகமாக இருக்கிற காரணத்தால் 9 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டில் ஆயிரம் வீடுகள் கட்டுகிற திட்டத்தை நாம் நடைமுறைப்படுத்திக் கொண்டு இருக்கிறோம்.

குண்டேரிப்பள்ளம் அணைக்குப் பக்கத்திலுள்ள விநோபா ட்ரஸ்ட் என்ற அமைப்புக்கான ஜெர்மன் நிதியுதவி.

433—(*வினா எண் 19942) திரு. ஆர். ரங்கசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சத்தியமங்கலம் தொகுதி, கொங்கர்பாளையம் குண்டேரிப்பள்ளம் அணைக்குப் பக்கத்தில் விநோபா ட்ரஸ்ட் என்ற அமைப்புக்கு ஜெர்மன் நிதி கிடைத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு தொகை? அது எந்தெந்த பணிகளுக்குப் பயன்படுத்தப்பட்டது?

(இ) எத்தனை ஆதி திராவிட மக்கள் பயன்பெற்றுள்ளார்கள்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) குண்டேரிப்பள்ளம் அணைக்குப் பக்கத்தில் விநோபா ட்ரஸ்ட் என்ற அமைப்பு இல்லை. இங்கு பூமிதான இயக்கத்துக்கு கிடைத்த 304.04 ஏக்கர் நிலத்தில் அரசு ஆர்ஜிதம் செய்த 56 ஏக்கர், சாலை வசதிக்கு 18 ஏக்கர் நிலம் போக மீதி நிலம் 230.04 ஏக்கர் நிலமில்லா ஏழைகளுக்கு வழங்கப்பட்டு இந்த நிலத்தை மேம்பாடு செய்ய மேயர் அறக் கட்டளை ஈடுபட்டுள்ளது. இந்த சர்வோதய ஸ்தாபனம் மேற்கு ஜெர்மனி அக்ரோ ஆக்ஷன் நிறுவனத்திலிருந்து பண உதவி பெறுகிறது.

(ஆ) மேயர் அறக்கட்டளை மொத்தம் 21.65 இலட்சங்கள் பெற்றுள்ளது. இப் பணம் நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதி செய்து தர சமுதாய கட்டடங்கள் கட்ட, ஏழை விவசாயிகளுக்கு விவசாய தளவாட சாமான்கள், உழவு மாடுகள் வாங்க போன்ற பணிகளுக்கு உபயோகிக்கிறது.

(இ) நிலம் பெற்றவர்களில் 17 பேர் மலை வாசிகளும் ஏனையோர் பின் தங்கியவகுப்பையும் சேர்ந்தவர்கள்.





திரு. ஆர். ரங்கசாமி : தலைவர் அவர்களே, 21 இலட்சத்து 65 ஆயிரம் ரூபாய் அந்த நிலங்களை மேம்படுத்தி அந்த மக்களை மேம்படுத்துவதற்காக என்று கொடுக்கப்பட்ட தொகை. ஆனால் அதை சரிவரப் பயன்படுத்தவில்லை என்று சொல்லப்படுகிறது. ஆகவே அது சம்பந்தமாக அரசு விசாரித்து தக்க நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, இந்த ஜெர்மன் ஸ்தாபனம் கொடுத்தது 21 இலட்சத்து 65 ஆயிரம் ரூபாய். அந்தத் தொகை சரியாகப் பயன்படுத்தப் படவில்லை என்றால் அது உண்மையானால் விவரங்களை அறிந்து நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஆர். ரங்கசாமி : தலைவர் அவர்களே, அந்த நிலங்களை மேம்படுத்தி அவர்களுக்குச் சொந்தமாக பட்டா செய்து கொடுக்க வேண்டுமென்பது அரசினுடைய கொள்கையாகும். ஆகவே அந்த நிலங்களை அவர்களுக்கு மேம்படுத்தி சொந்தமாக்கி பட்டா கொடுக்க விரைவாக ஏற்பாடுகள் செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, பூமிதான வாரியத்தின் மூலம் கொடுக்கப்பட்டுள்ள நிலங்கள் உடனடியாக பட்டா செய்யப்படுவதில்லை. ஏனென்றால் வளமில்லாத நிலங்களைத் தான் நமக்கு தானமாகக் கொடுத்து இருக்கிறார்கள். அந்த நிலங்களை எல்லாம் வளமுள்ள நிலங்களாக மாற்றியதற்குப் பிறகு தான் அவைகளை எல்லாம் யோசிக்கலாம்.

ஈரோடு நகராட்சிப் பகுதியில் நடத்தப்படும் வாரச் சந்தை.

434—(*வினா எண் 21660) திரு. கு. ரமணி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு நகராட்சி வாரச் சந்தையைத் தனியார் நடத்தி வருவது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதனால் நகராட்சிக்கு வருமான இழப்பு ஏற்பட்டு வருவது உண்மையா?

(இ) நகராட்சியே வாரச்சந்தையை நடத்தும் திட்டமுள்ளதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) ஈரோடு நகராட்சி வாரச் சந்தை நடத்திய இடத்தில் விரிவுபடுத்தப்பட்ட நகராட்சி பேருந்து நிலையம் இயங்கி வருவதால் நகராட்சி அனுமதியுடன் வேறு இடத்தில் வாரச் சந்தை தனியார் நடத்தி வருகின்றார்.

(ஆ) இல்லை.

(இ) இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

(முற்பகல் 9-50)

திரு. கு. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியில் நான் கேட்டு இருப்பது வாரச் சந்தையைத் தனியாக தனியார்கள் நடத்துவதின் மூலம் நகராட்சிகளுக்கு வருமான இழப்பு ஏற்பட்டிருக்கிறது என்பது. அப்படித் தனியார்கள் நடத்திக் கொண்டு இருக்கிறார்களா ? அப்படியானால் அதன் மூலம் என்ன வருமானம் ஈரோடு நகராட்சிக்கு வருகிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இருந்த இடம் குத்தகைக்கு விடப்பட்டு இருந்தது. அதன் மூலம் குத்தகையாக ரூ. 160 கிடைத்து வந்தது. அந்த இடத்தில் தான் பேருந்து நிலைய விரிவாக்கத் திட்டத்தை மேற்கொண்டு அங்கே பேருந்து நிலையம் கட்டிவிட்டோம். ஆகவே தனியார் வேறு இடத்தில் சந்தை நடத்துகிறார்கள். ஆனாலும் கூட தனியார் சந்தைகளை எல்லாம் நகராட்சி மன்றங்கள் எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக ஒரு சட்டமுன்வடிவை நாம் கொண்டு வர இருக்கிறோம். ஆகவே கன்கரண்டு லிஸ்ட்டில் இருக்கிற காரணத்தால் அந்தச் சட்ட விதிகளுக்கு எல்லாம் ஒப்புதல் பெறவேண்டும் என்ற நிலையில் நாம் அதை மத்திய அரசுக்கு அனுப்ப வேண்டும். மத்திய அரசுக்கு இந்தச் சட்டமுன்வடிவை அனுப்பி உடனடியாக ஒப்புதல் பெறுவதற்கான நடவடிக்கைகளில் நாம் இப்போது ஈடுபட்டு இருக்கிறோம்.

திரு. கு. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தற்காலிக தொழிலாளர்களுக்கு கூலி கொடுப்பதற்குக் கூட நகராட்சிகளிடம் பணம் இல்லை என்று இப்போது தான் சொன்னார்கள். அப்படியானால் நகராட்சிகளுக்கு அதிகப்படியான வருமானம் வரக்கூடிய முறையில் நகராட்சிகளே அதை நடத்துகின்ற முறையில் அந்த சந்தைகளை அமைப்பதற்கு என்ன தடை இருக்கிறது ? சட்டத்தை மத்திய அரசுக்கு அனுப்பி கேட்கவேண்டும் என்று சொல்கிறார்கள். நகராட்சிகள் வாரச் சந்தையை வேறு இடத்தில் ஏற்பாடு செய்து நடத்துவதற்கு என்ன தடை இருக்கிறது? எந்த தடையும் இருப்ப



தாக தெரியவில்லை. அப்படிச் செய்யவேண்டும். தனியார்கள் இன்றைக்கு போட்டி போட்டுக் கொண்டு அந்த ஏலத்தில் கிடைக்கக்கூடிய தொகையை கூட குறைப்பதற்கு ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட தவறுகள் அங்கே நடைபெறுகின்றன. அதை தடுப்பதற்கு நகராட்சிகள் வேறு இடத்தில் - இந்த தனியார் சந்தைகள் இருந்தால் இருக்கட்டும் — இந்த நகராட்சி தலைநகரமாக இருக்கிறது— சந்தையை உருவாக்குவதற்கும் அதனால் வருமானம் பெறுவதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சி எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் சந்தைகள் மூலமாக ஒரு சில தனி நபர்கள் மட்டுமே வருமானத்தைப் பெற்று கொள்ளை அடிக்கின்ற நிலையைப் போக்க வேண்டும் என்ற முறையில் இந்த அரசு வந்த பிறகு தான் தனியார் சந்தைகளை பொதுச் சந்தைகளாக உள்ளாட்சி மன்றங்களுக்கு உட்பட்ட சந்தைகளாக மாற்ற வேண்டும் என்ற முறையில் நாம் நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறோம். குறிப்பாக இதை குத்தகைக்கு கொடுத்து இருப்பது அ. இ. அ. தி. மு. க. ஆட்சி வந்த பிறகு அல்ல. அதற்கு முன்னாலேயே இருந்தவர்களாலே கொடுக்கப்பட்டதால் அப்படிப்பட்ட நிலை ஏற்பட்டதே தவிர வேறு அல்ல.

பல்லவன் போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்படும் புது மாதிரியான பேருந்து.

435 —(*வினா எண் 17181) திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லவன் போக்குவரத்துக் கழகம் நூறு பேரை ஏற்றிச் செல்லும் புது மாதிரியான பஸ்களை விடுவதற்கு உத்தேசித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : (அ) பல்லவன் போக்குவரத்துக் கழகம் 18-5-1983-லிருந்து 100 பேரை ஏற்றிச் செல்லும் புதுமாதிரியான ஆர்டிக்குலேடட் (Articulated Single Deck) (நீண்ட பேருந்து) என்று புது மாதிரியான பேருந்து ஒன்றினை இயக்கி வருகிறது.

(ஆ) இந்த பேருந்தில் 59 பிரயாணிகள் உட்கார்ந்து கொண்டும் 100 பேர் நின்று கொண்டும் பயணம் செய்யலாம். பேருந்தை இயக்குவதற்கு ஒரு ஓட்டுநரும் இரண்டு நடத்துனர்களும் தேவை. இதில் 160 குதிரைத்திறன் இன்சின் பொருத்தப்பட்டுள்ளது.

பேருந்தின் அடிச்சட்டம் (Chassis) அசோக் லேலண்ட் கம்பெனியால் தயாரிக்கப்பட்டது. இந்த பேருந்தினை சோதனை ஓட்டமாக இயக்கி பொது மக்களின் விருப்பத்தை அறிந்து தேவைப்பட்டால், இம்மாதிரியான பேருந்துகள் தேவைப்படும் அளவில் விடுவதற்கு விரைவான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

படுக்கை வசதியுடன் கூடிய பேருந்துகளை அதிக அளவில் இயக்குந் திட்டம்.

436—(*வினா எண். 18709) திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை முதல் ஈரோடு வரை செல்லும் படுக்கை வசதியுடன் கூடிய பேருந்துகளைப் போல் மற்ற வழித்தடங்களிலும் விட அரசிடம் செயற் குறிப்புள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) மற்றும் (ஆ) ஆய்வில் உள்ளது.

திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூங்கும் வசதி உள்ள பேருந்தை இப்போது லாபகரமாக இயக்க அதை மாற்றி அமைக்கக்கூடிய திட்டம் அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூங்கும் வசதி உள்ள பேருந்தில் குறைவான பயணிகளை மட்டும் ஏற்றிக் கொண்டு செல்லக்கூடிய சூழ் நிலையில் அமைக்கப்பட்டு இருப்பதால் அது இப்போது லாபகரமாக இல்லை. எனவே அதிலே ஏற்கெனவே 16 படுக்கைகள் அமைக்கப்பட்டு இருக்கிறது. அதை இப்போது மாற்றி 8 படுக்கைகளாகவும் 16 இருக்கைகளாகவும் அமைக்க ஏற்பாடு செய்யப்படுகிறது. அப்படி மாற்றி அமைக்கும் போது அதில் லாபம் வரும் என்று எதிர்பார்க்கலாம்.

திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மற்ற வழித் தடங்களிலும் தூங்கும் வசதி உள்ள பேருந்துகளை விடுவதற்கு ஆலோசனை உள்ளதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். எந்த எந்த வழித் தடங்களில் அப்படி ஆலோசனையில் உள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவரவர்களே, எந்தெந்த வழித் தடங்களில் விடுவது என்பது ஆய்வில் இருக்கிறது. விடலாமா என்பதே ஆய்வில் இருக்கிறது. இந்த இருக்கைகளை மாற்றியதற்குப் பிறகு, அதைப் பார்த்த பிறகுதான் எந்தெந்த வழித்தடங்கள் என்று சொல்ல முடியும். இப்பொழுது சொல்ல முடியாது.

1981—1983 ஆகிய ஆண்டுகளில் விற்பனை செய்யப்பட்ட பேருந்துகளில் உபயோகப்படுத்தப்பட்ட பழைய சாமான்கள்.

437—(*வினா எண். 20406) திரு. வேடசந்தூர் வி. பி. பால சுப்பிரமணியன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பரா—

(அ) 1981-82, 1982-83 ஆகிய ஆண்டுகளில் பேருந்துகளில் உபயோகப்படுத்தப்பட்ட பழைய சாமான்கள் (Scrap) விற்பனை செய்யப்பட்டதா?

(ஆ) ஆம் எனில் எவ்வளவுக்கு விற்கப்பட்டது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) ஆம்.

(ஆ) 1981-82 ஆம் ஆண்டு ரூ. 2,05,96,723.34-க்கும், 1982-83 ஆம் ஆண்டு ரூ. 2,40,90,877.34-க்கும் பழைய சாமான்கள் விற்கப்பட்டிருக்கின்றன.

1983-ஆம் ஆண்டு ஜனவரி முதல் ஜூன் மாதம் வரையில் ஏற்பட்ட சாலை விபத்துக்கள்.

438—(*வினா எண். 20906) திரு. என். வரதராஜன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1983-ஆம் வருடம் ஜனவரி மாதம் முதல் ஜூன் மாதம் வரையில் ஏற்பட்ட சாலை விபத்துக்கள் எத்தனை?

(ஆ) உயிரிழந்தோர் எத்தனை பேர்?

(இ) காயமடைந்தோர் எத்தனை பேர்?

(ஈ) சாலை விபத்துக்களைத் தடுக்க, கட்டுப்படுத்த அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) 9,935.

(ஆ) 1,882 பேர்கள்.

(இ) 9,105 பேர்கள்.

(ஈ) போக்குவரத்து விதிகளை அமுல்படுத்த காவல்துறை தக்க நடவடிக்கை எடுத்துவருகிறது. சாலைகளை விரிவு படுத்தல், வேகக்கட்டுப்பாட்டு தடையைப் பொருத்துதல், வேகத் தடை அமைத்தல், சுரங்கப்பாதைகள் மேம்பாலங்கள் அமைத்தல், சாலை விதிகளை மும்முரமாக கடைபிடித்தல் ஆகிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திரு. என். சௌந்தரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர வர்களே, இந்த லாரி விபத்துக்கள் கூடுதலாகிக் கொண்டே வருகின்றன. அமைச்சரவர்கள் சொல்லியிருக்கின்ற கணக் கிலிருந்து மிக அதிகமான எண்ணிக்கையில் ஆறு மாதங்களிலே இவ்வளவு பெரிய விபத்துக்கள் நடந்திருக்கின்றன. சவ ஊர்வலம், திருமண ஊர்வலம், திருவிழா ஊர்வலம் என்றுகூட இந்த லாரி விபத்துக்கள் பார்ப்பதில்லை. சொல்லப்போனால், ஒரு குறிப்பிட்ட கட்டத்தை இது அடைந்திருக்கிறது என்றே நாம் கருத வேண்டியிருக்கிறது. மக்கள் கூட்டம் கூட்டமாகக் கொல்லப்படுகிறார்கள் என்கின்ற அளவிற்கு இந்த விபத்துக் களின் எண்ணிக்கை உயர்ந்திருக்கிறது. இதை நவீன எமன் என்று சொல்லக் கூடிய அளவிற்கு மக்கள் நினைக்கக்கூடிய வகையில் லாரி விபத்துக்கள் நடக்கின்றன. நான் அரசைக் கேட்பதெல்லாம், இந்த லாரி விபத்துக்களைப் பற்றி இப் பொழுது ஆய்வு செய்வதற்குக் குழு அமைத்து, இதைத் தடுப் பதற்கு அரசு நடவடிக்கைகளை மேற் கொள்ளுமா? அதற் கான நடவடிக்கைகளை, இன்றைக்குள்ள சூழ்நிலையைப் பார்த்து எடுக்க வேண்டும். பழைய ஆராய்ச்சி முறையில் காரியங்கள் செய்யப்பட்டிருந்தாலும், இன்றைக்கு கடுமை யான நிலைமைகள் ஏற்பட்டிருப்பதால் புதிய சிந்தனை யோடு இந்த ஆராய்ச்சியை அரசு செய்யுமா? ஏனென்றால் நான் பத்திரிகைகளைப் பார்த்தவரையில், இந்த மாதம் மட்டும் மார்ச் 1 ஆம் தேதியிலிருந்து 15 ஆம் தேதிக்குள்ளே 150 பேர் லாரி விபத்துக்களில் தமிழ்நாட்டில் இறந்திருக்கிறார்கள். எனவே, இதுபற்றிய புதிய சிந்தனையோடு ஆராய்ச்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : தலைவரவர்களே, போக்குவரத்துத் துறை சார்பாகவும், போக்குவரத்துக் கழ கத்தின் சார்பாகவும் இப்பொழுது ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அதுவே இந்தப் பொறுப்புக்களை ஏற்று நடவடிக்கை எடுக்கும் என்று என்னால் சொல்ல முடி யும். மேலும் இப்பொழுது பலயிடங்களில் இப்படிப்பட்ட விபத்துக்கள் அதிகமாக இருப்பதால், போக்குவரத்துத் துறை யில்கூட, போக்குவரத்துக் கழகத்தின் சார்பாக நாமே ஓட்டுநர்



பயிற்சிப் பள்ளி அமைத்து, தேவையானது போக, வெளியே இருப்பவர்களுக்கும் ஓட்டுநர்களைத் தயார் செய்து கொடுக்க வேண்டுமென்ற முறையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக் கிறது. இந்தக் கமிட்டியே இந்த நடவடிக்கைகளை எடுப் பார்கள் என்று நான் கருதுகிறேன்.

திரு. என். சௌந்தரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலை வரவர்களே, தூத்துக்குடி—சென்னை, அல்லது மதுரை— சென்னை அல்லது வேறு பல நகரங்களுக்கு, கிட்டத்தட்ட 400 மைல், 500 மைல் தூரமுள்ள நகரங்களுக்கு லாரிகள் செல்லுகின்றபொழுது இந்த லாரிகள் குறிப்பாக விழுப்புரம்- சென்னைக்கு இடையேதான் அதிகமான விபத்துக்கள் நடப் பதைச் சாதாரணமாகக் காண முடிகிறது. கண் விழித்துக் கொண்டு வரும் டிரைவர்கள் கடற்கரை காற்று வரும் பகுதி யில் ஒருசில நேரங்களில் அயர்ந்து தூங்குகின்ற காட்சி ஏற்படு வதால் பெரிய விபத்துக்கள் ஏற்படுகின்றன. ஆகவே, இரவு நேரங்களில் ஓட்டப்படும் லாரிகள் இரண்டு டிரைவர்கள் இருந் தால்தான் நல்லமுறையில் சமாளிக்க முடியும் என்ற நிலைமை இருக்கிறது. மேலும் அதிகமான அளவிற்கு லோடு ஏற்றிக் கொண்டு வருகிறார்கள். பத்து டன்களுக்கு மேல், இரண்டு ஆள் உயரத்திற்குக் கிட்டத்தட்ட 30 அடி, 40 அடி அளவிற்கு லாரிகளில் சரக்குகளை ஏற்றிக் கொண்டு வருவதால் இப்படிப் பட்ட விபத்துக்கள் ஏற்படுகின்றன என்பதை நாம் பார்க்க முடிகிறது. எனவே, இவைகளைப் பற்றியெல்லாம் துரிதமாக நடவடிக்கை எடுப்பதற்கு அரசு முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பெரும்பாலும் விபத்துக்களைப் பார்த்தால் எந்தப் பாதை நல்ல பாதையாக செப்பனிடப்பட்ட பாதையாக இருக்கிறதோ அந்தப் பாதையில்தான் அதிகமான விபத்துக்கள் ஏற் படுகின்றன என்பது எனது அனுபவம். காரணம், அந்த இடத் திற்கு வருகின்றபொழுது ஓட்டுநர்கள் மிக அதிகமான வேகத் தில் ஓட்டுகிறார்கள்; மேலும் தடை ஏதும் இல்லாததால் தூங்கி யும் விடுகிறார்களோ என்ற எண்ணமும் ஏற்படுகிறது. உதாரணத் திற்குச் சொல்ல வேண்டுமென்றால், கோயம்புத்தூர்-பெருந்துறை இடையிலே பார்த்தால் அந்தப் பாதையிலே அதிகமாக ஏற் பட்டிருக்கும். இந்த நடவடிக்கையைப் பற்றிச் சொல்லும் பொழுது, பயிற்சியை அளிக்கின்றபொழுது அதன்மூலம் ஓட்டு நர்களுக்கு வேறுவிதமான பயிற்சி கொடுக்க முடியுமா என்று பார்த்து, முடியுமானால், கொடுப்பதற்காகத்தான் இந்தப் பயிற்சிப் பள்ளியை அமைத்திருக்கிறோம்.

மேலும் சில துரிதமான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற உணர்வுகளைச் சொல்லி இருக்கிறார்கள். இதுபற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குச் சொல்லி அதிகமான உயரத்திலே யாராவது லோட் ஏற்றி வந்தால் அதைக் கட்டுப்படுத்தவேண்டும் என்பதற்காகவும், குறிப்பிட்ட எடைக்கு மேலே ஏற்றிக்கொண்டு வந்தாலும் அதையும் கட்டுப்படுத்தவேண்டும் என்பதற்காகவும் தான் சில நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

(முற்பகல் 10-00)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

**திரு. மி. வின்சென்ட் :** தலைவர் அவர்களே, சாலை விபத்துக்களைத் தடுக்க மாநில அரசோடு நாடு தழுவிய திட்டம் ஒன்றை அமைக்க இருக்கிறோம் என்று மத்திய கப்பல், போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. விஜயபாஸ்கரரெட்டி அவர்கள் ராஜ்ய சபையில் கூறி இருக்கிறார். அது என்ன திட்டம் என்று அறிவிக்க இயலுமா? வாகனங்கள் சரியாக சோதனையிடப்படாமல், தகுதிச் சான்றிதழ் வழங்கும் அதிகாரிகள் ஒழுங்காக ட்ரைவிங் தெரியாதவர்களுக்கும் ட்ரைவிங் லைசன்ஸ் வழங்கும் அதிகாரிகள் இவர்கள் தான் சாலை விபத்துக்களைத் தூண்டும் சமூக விரோதிகள் என்பதை அரசு உணர்ந்து அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. க. முத்துசாமி :** தலைவர் அவர்களே, தவறான உரிமங்கள் கொடுத்தாலோ அல்லது முறையாக கொடுக்காமல் விட்டாலோ நடவடிக்கை எடுக்க அரசாங்கம் தயக்கம் காட்டியது இல்லை. இப்போது அப்படிக் கொடுத்துவிடக் கூடாது என்பதற்காகத்தான் படிப்படியாக எல்லா இடங்களிலும் பயிற்சிப் பள்ளி ஏற்படுத்தி, அங்கே முறையாக யார் யார் பயிற்சி பெற்றிருக்கிறார்களோ அவர்களுக்கு மட்டுமே உரிமம் வழங்க வேண்டும் என்ற ஏற்பாடுகளைச் செயல்படுத்த நடவடிக்கை எடுத்து இருக்கிறார்கள். அடுத்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மத்திய அமைச்சர் அறிவித்த பிரச்சினை பற்றிச் சொன்னார்கள். அதைப்பற்றி எங்களுக்கு தாக்கீது வரவில்லை என்றும் வந்ததற்குப் பிறகு அதுபற்றிப் பார்த்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.



**தானிப்பாடி-வாணாபுரம், தச்சம்பட்டி ஆகிய ஊர்களில் அரிசன மாணவ-மாணவியர்கள் தங்கும் விடுதி ஏற்படுத்தும் திட்டம்.**

*439—(*வினா எண் 18030)* **திரு. கு. வேணுகோபால் :** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

தண்டராம்பட்டுத் தொகுதியில் தானிப்பாடி, வாணாபுரம், தச்சம்பட்டி ஆகிய ஊர்களில் அரிசன மாணவ, மாணவியர்கள் தங்கும் விடுதி ஏற்படுத்த அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** தண்டராம்பட்டு தொகுதியில் தானிப்பாடி, வாணாபுரம், தச்சம்பட்டி ஆகிய ஊர்களில் ஆதிதிராவிடர் மாணவ-மாணவியர்கள் தங்கும் விடுதி ஏற்படுத்த அரசிடம் செயற் குறிப்பு எதுவும் இல்லை. எனினும் வடாற்காடு மாவட்டம் ஆதிதிராவிடர் நல அலுவலரிடமிருந்து முன்மொழிவுகள் கோரப்பட்டுள்ளது. அவை கிடைத்த பின் உரிய மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

**செங்கல்பட்டில் வேலை வாய்ப்புத்துறையின் உதவி இயக்குநர் அலுவலகம் ஏற்படுத்தும் திட்டம்.**

*440—(*வினா எண் 18581)* **திரு. பு. கோ. ஆனூர் ஜெகதீசன் :** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு, மதுராந்தகம், சைதாப்பேட்டை ஆகிய வட்டங்களில் உள்ள பொதுமக்கள் நலனை உத்தேசித்து மையப்பகுதியான செங்கற்பட்டு நகரில் வேலைவாய்ப்புத் துறையின் உதவி வேலைவாய்ப்பு இயக்குநர் அலுவலகம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** (அ) செங்கற்பட்டில் உதவி இயக்குநர் தலைமையிலான வேலைவாய்ப்பு அலுவலகம் ஏற்படுத்தும் செயற் குறிப்பு எதுவும் அரசிடம் இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

**திரு. பு. கோ. ஆனூர் ஜெகதீசன் :** தலைவர் அவர்களே, செங்கற்பட்டு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் சைதாப்பேட்டையில் இருந்தது. பிறகு அது அடையாறுக்கு மாற்றப்பட்டுவிட்டது. அதற்குப் பிறகு மாவட்டத்தின் எல்லைக்குள் இருக்கவேண்டும் என்ற நல்ல எண்ணத்தின் அடிப்படையில் காஞ்சிபுரத்திற்கு மாற்றப்பட்டிருக்கின்றது. உதவி அதிகாரி அலுவலகம் திருவள்ளூரில் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. செங்கற்பட்டு மாவட்டம் என்ற பெயரைக் கொடுத்திருக்கின்ற செங்கற்பட்டு

நகர் 207 ஆண்டு காலமாக நகராட்சியாக இருக்கின்றது. அங்கே எந்தவிதமான முன்னேற்றமும் இல்லை. எனவே இதை எல்லாம் மனதில் கொண்டு செங்கற்பட்டு வட்டம், சைதாப்பேட்டை வட்டம், மதுராந்தகம் வட்டம் ஆகிய மக்களின் வேண்டுகோளுக்கிணங்கவும், இளைஞர் நலனை முன்னிட்டும் மீண்டும் அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து செங்கற்பட்டிலே உதவி அலுவலகத்தைத் திறக்க உத்தரவிடுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தலைவர் அவர்களே, செங்கற்பட்டு என்ற பெயர் இருக்கக்கூடிய காரணத்தால் மட்டும் செங்கற்பட்டிலே வேலைவாய்ப்புத் துணை அலுவலகத்தை ஏற்படுத்த வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் சொல்வதை ஏற்றுக்கொள்வதற்கில்லை. அந்தந்த மாவட்டங்களின் தலைநகரிலே அனைத்து அலுவலகங்களும் ஏற்படுத்தப்படவேண்டும் என்ற கொள்கைக்கு ஏற்ப தற்போது சைதாப்பேட்டையிலே இருந்த மாவட்ட அலுவலகம் காஞ்சிபுரத்திற்கு மாற்றப்பட்டிருக்கின்றது. காஞ்சிபுரத்திலே இருக்கக்கூடிய அந்த அலுவலகம் செங்கற்பட்டு, சைதாப்பேட்டை, மதுராந்தகம், காஞ்சிபுரம், உத்திரமேரூர் ஆகிய தாலுக்காக்களின் மக்களின் பிரச்சினைகளைப் பூர்த்திசெய்கின்ற வகையில்தான் நடந்து வருகின்றது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியாக ஒரு துணை வேலை வாய்ப்பு அலுவலகத்தைச் செங்கற்பட்டிலே ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டு அதற்கான நடவடிக்கை எடுக்க முடியுமா என்று கேட்டிருக்கிறார்கள். எதிர்காலத்தில் வேண்டுமானால் அரசு இதைத் தனியாகப் பரிசீலனை செய்து எந்த அளவுக்கு சாத்தியக்கூறு இருக்கிறதோ அதைப்பற்றி அரசு ஆராய்ந்து பார்க்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### புதுக்கோட்டை மாவட்டத்தில் புதிய அணைகள் கட்டும் திட்டம்

441—(*வினா எண் 17112) திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டத்தில் புதிய அணைகள் கட்ட அரசு திட்டம் தீட்டியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

(இ) அதன் மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு ?

(ஈ) எப்பொழுது வேலை துவங்கும் ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : (அ) ஆம்.



(ஆ) மற்றும் (இ) :

புதுக்கோட்டை மாவட்டத்தில் பின்வரும் ஐந்து திட்டங்கள் அரசால் 1982 மற்றும் 1983 ஆம் ஆண்டு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளன :—

| | மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| சிறப்பு நீர்ப்பாசனத் திட்டம்— | |
| 1. அறந்தாங்கி வட்டம், திருப்புனவாசல் மற்றும் 6 குளங்களுக்கு நீர்வழங்க பாம்பாற்றின் குறுக்கே அணை கட்டுதல் .. .. .. .. | 48.08 |
| வறட்சிப்பாங்கான பகுதிகள் திட்டம்— | |
| 2. ஆலங்குடி வட்டம், பள்ளத்துவிடுதி கிராமத்தருகே அம்புலியாற்றின் குறுக்கே அணை கட்டுதல் .. .. .. .. | 5.06 |
| 3. ஆலங்குடி வட்டம், திருநலூர் கிராமத்தில் வில்லுனியாற்றின் குறுக்கே பனங்குளம் அணைக்கு வரத்து வாய்க்கால் மற்றும் வலது பக்க தலைப்பு மதகு அமைத்தல் .. .. .. .. | 3.50 |
| 4. புலவங்காடு கிராமத்தில் சின்னதரப்பா மற்றும் பெரியதரப்பா குளத்திற்கு நீர் வழங்க மறையார் வாரியின் குறுக்கே அணை கட்டுதல் .. .. | 6.80 |
| 5. ஆலங்குடி வட்டம், சேந்தங்குடி கிராமத்தில் அம்புலியாற்றின் குறுக்கே அணை கட்டுதல் .. | 11.10 |

பின்வரும் இரு திட்டங்கள் சிறப்பு நீர்ப்பாசனத் திட்டத்தின்கீழ் ஒப்புதல் அளிக்கப்பட அரசின் பரிசீலனையில் உள்ளன.

| | |
|---|---|
| 1. அறந்தாங்கி வட்டம் கீரனூர் கிராமத்தருகே வெள்ளாற்றின் குறுக்கே அணை கட்டுதல் .. | 38.15 |
| 2. அறந்தாங்கி வட்டம், ராமசாமிபுரம் கிராமத்தருகே வில்லுனியாற்றின் குறுக்கே அணை கட்டுதல் .. .. .. .. | 10.50 |

இது தவிர 10 அணை கட்டும் திட்டங்கள் தல அதிகாரிகளின் பல்வேறு கட்ட ஆய்வில் உள்ளன.

[1984 மார்ச் 24

(ஈ) மேலே வரிசை எண் 1-ல் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள திட்டப் பணி நடைபெற்று வருகிறது. ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள மற்ற 4 திட்டங்களின் பணிகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. பரிசீலனையில் உள்ள திட்டப் பணிகள் அரசு ஒப்புதல் அளிக்கப்பட்டவுடன் மேற்கொள்ளப் படும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு பாசனத் துறை அமைச்சர் அவர்கள் புதுக்கோட்டை மாவட்டத்திலே பல்வேறு திட்டங்களை எடுத்துக் கொண்டிருப்பதாகவும் அதற்கான தொகைகளையும் இங்கே அறிவித்தார்கள். இந்த நேரத்திலே உங்கள் மூலமாக அவரிடத்திலே நான் தெரிந்துகொள்ள விரும்புவது, இந்தத் திட்டங்கள் அந்தப் பகுதி மக்களின் நலனைக் கருதி மட்டும் எடுத்துக் கொள்ளப்பட்டதா ? அல்லது, இந்தப் பேரவையிலே பலமுறை இந்த அரசாங்கம் ஒரு கொள்கை என அறிவித்தார்கள். 10 ஆண்டுக் காலம் எவ்வளவு மழை பெய்திருக்கிறது, அந்த அணையைக் கட்டினால் இலாபம் வருமா என்றெல்லாம் கணக்கிட்டு, எங்களுடையமாவட்டத்தில் பல்வேறு திட்டங்கள் ஆரம்பிப்பதாகக் கூறி நிறுத்தி விட்டார்களே, அப்படி இவை எல்லாம் கணக்கிடப் பட்டதா என்பதை நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு வந்த பிறகுதான், ஒரு திட்டம் இங்கே தெரிவிக்கப்படுவதற்கு முன்பாக, முறையாக அத்தனை விவரங்களும் பெற்று, பிறகு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு, பிறகுதான் இங்கே சமர்ப்பிக்கப்படுகின்றன. அந்த அடிப்படையில் நான் முன்பே சொன்னதுபோல், இருப்புனவாசல் மற்றும் 6 குளங்களுக்கு நீர் வழங்க பாம்பாற்றின் குறுக்கே அணை கட்டும் திட்டத்திற்காக 1983ஆம் ஆண்டு ரூ. 7 இலட்சம் செலவு செய்யப்பட்டிருக்கிறது. இந்த நடப்பாண்டு ஏப்ரல் மாதம் இறுதிக்குள் பணிகள் முடிக்கப்படுமென ஆணையும் நாம் பிறப்பித்திருக்கிறோம். ஆகவே, அப்பேர்ப்பட்ட சந்தேகம் மாண்புமிகு உறுப்பினருக்கு வரத் தேவை இல்லையென்பதை நான் மெத்த பணிவன்புடன் தெரிவித்து க்கொள்கிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்காக மதிப்பீடுகள் தயாரிப்பதிலோ, மற்ற வகைகளிலோ நாங்கள் அமைச்சரை சந்தேகிக்கவில்லை. எற்கனவே நம்முடைய மின் துறை அமைச்சர் அவர்கள் பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்தபோது, எங்கள் மாவட்டத்திலே இப்படிப்பட்ட திட்டங்களைக் கேட்கின்றபொழுது அடிக்கடி
ங்களை எல்லாம்...............



1984 மார்ச் 24]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலில் உங்கள் மாவட்
டத்தை விட்டு மூலக் கேள்வியிலுள்ள மாவட்டத்தைப் பற்றிக்
கேளுங்கள். வட ஆற்காடு மாவட்டத்தை விட்டு வெளியிலே வர
மாட்டேன் என்றால் என்ன அர்த்தம் ?

திரு. பெ. சு. திருவேங்கடம் : மூலக் கேள்வி மூலமாகத்தான்
வந்து விட்டேனே, அப்புறம் என்ன? ஏதாவது ஒரு அணை கட்ட
வேண்டும் என்றால் திட்டங்கள் தீட்டி இருப்பீர்கள், பணம் ஒதுக்கி
இருப்பீர்கள், அதற்கான எஸ்டிமேட் எல்லாம் தயாரித்திருக்க
லாம். அதை நான் மறுக்கவில்லை. 10 ஆண்டுகள் அந்தப் பகுதி
யிலே எவ்வளவு மழை பெய்கிறது? அந்தப் பகுதியிலே எவ்வளவு
பாசனத்திற்கு, எத்தனை ஏக்கருக்கு அந்தத் தண்ணீர் பாயும்
என்றெல்லாம் கணக்கிடப்பட்டதா? முறையான கணக்குகள்
எடுக்கப்பட்டுள்ளதா? அதைத்தான் இந்த நேரத்திலே அமைச்சர்
அவர்களிடம் இருந்து நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் தலைவர்
அவர்களே, நீர்ப்பிடிப்புப் பகுதியிலே எவ்வளவு மழை பெய்
கிறது, அந்தக் கண்மாய்க்கு எவ்வளவு தண்ணீர் தேவை என்பதை
எல்லாம் கணக்கிட்டுத்தான் திட்டங்கள் தீட்டப்படுகின்றன.

திரு. பெ. திருமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம் கடுமையான வறட்சியான
மாவட்டம். புதுக்கோட்டை மாவட்டம் மன்னர்களால் ஆளப்
பட்ட மாவட்டம். அந்த மாவட்டத்திலே எந்தவிதமான அணை
களும் இல்லை. இந்த நேரத்திலே இந்த அரசு வந்துதான்—புதுக்
கோட்டை மாவட்டத்திலே பல காட்டாறுகள் ஓடுகின்றன. அந்
தக் காட்டாறுகள் பூராவும் கடலுக்குப் போய் சேருகின்றன.
வீணாகிற தண்ணீரை சேமிக்க — 10 சிறுசிறு அணைகளைக்
கட்டிக் கொடுத்திருக்கிறது. இன்னும் மற்ற..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி என்ன? கேள்வி
இருந்தால் கேளுங்கள்.

(முற்பகல் 10.10)

திரு. பெ. திருமாறன் : அங்கே எல்லாம் சிறுசிறு அணைகள்
கட்டிக் கொடுக்க அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு தலைவர்
அவர்களே, வறட்சிப் பாங்கான பகுதிகள் திட்டங்களின்கீழ்
ஆலங்குடி வட்டம், பள்ளத்துவிடுதி கிராமத்தருகே அம்புலியாற்
றின் குறுக்கே அணை கட்ட திட்டமிருக்கிறது என்ற விவரத்தை
தெரிவித்திருக்கிறேன்.

[1984 மார்ச் 24

## தென்னார்க்காடு, திருச்சி மாவட்டங்களில் 1977— 1982 வரை ஆய்விலுள்ள பாசனத்திட்டங்கள்.

442—(*வினா எண் 18874) திரு. எஸ். இளையபெருமாள் : மாண்புமிகு தீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தென்னார்க்காடு, திருச்சி ஆகிய இரு மாவட்டங்களில் கடந்த 1977 முதல் 1982 வரை ஆய்விலுள்ள தீர்ப்பாசனத் திட்டங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. பா. கை. மு. யூசுப் : ஒரு விவர அறிக்கை * அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. எஸ். இளையபெருமாள் : மாண்புமிகு தலைவர் அவர்களே, விவர அறிக்கை இருப்பது உண்மைதான். ஆனால் இவைகளை நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கம் என்ன துரித நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பா. கை. மு. யூசுப் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அனைத்து விவரங்களும் விவர அறிக்கையில் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. எந்தெந்தத் திட்டம் எந்தெந்தக் கட்டத்தில் இருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதில் எந்த விளக்கத்தைக் கோருகிறார்கள் என்று சொன்னால் பதில் அளிக்க உதவியாக இருக்கும்.

திரு. எஸ். இளையபெருமாள் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் எந்தத் திட்டம் என்று கேட்கிறார்கள். ஆனால் சொல்லியிருப்பதில் மூன்றில் ஒரு பங்கு கூட நடைமுறைக்கு வரவில்லை. ஆகவே உடனடியாக நடைமுறைப்படுத்த ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பா. கை. மு. யூசுப் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மூலக்கேள்வி, தென்னார்க்காடு, திருச்சி ஆகிய இரு மாவட்டங்களில் கடந்த 1977 முதல் 1982 வரை ஆய்விலுள்ள தீர்ப்பாசனத் திட்டங்களைப் பற்றியுள்ளது. ஆகவே அறிக்கையில் ஆய்விலுள்ள திட்டங்களைப் பற்றி சொல்லி இருக்கிறேன். வேறு எந்த விவரமும் கேட்கவும் இல்லை. சொல்லப்படவும் இல்லை.

திரு. எஸ். இளையபெருமாள் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் திட்டங்கள் ஆய்விலே இருப்பதாக சொல்கிறார்கள். திருச்சி, தென்னார்க்காடு மாவட்டங்களில் வெள்ளம் வருகிறபோது அந்தத் தண்ணீர் வீணாக கடலில்போய் விழுகிறது. நான் அமைச்சர் அவர்களிடம் பேசும்போது இதைச் சொல்லி இருக்கிறேன். ஆகவே இரண்டு ஜில்லாக்களிலும் இருக்கிற அதிகாரிகளை, பொறியாளர்களை கூப்பிட்டு தண்ணீர் வீணாவதை தடுப்பதற்கு நடவடிக்கை

---

* 444-449 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப் பெற்றுள்ளது.



1984 மார்ச் 24]

எடுக்கவேண்டும். கடந்த 20 ஆண்டு காலமாக இது செய்யச் படாமல் இருக்கிறது. ஆகவே அமைச்சர் அவர்கள் இதைப் செய்வதற்கு ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. பா. கை. மு. யூசுப் : மாண்புமிகு தலைவர் அவர்களே, வெள்ளத்தை தடுப்பதை பொறுத்தவரையில், வெள்ளத்தண்ணீர் வீணாகாமல் பாசனத்திற்கு பயன்படுத்துவதைப் பொறுத்தவரையில், இந்த அரசிற்கும் அக்கறை இருப்பதால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை பரிசீலித்து, உரிய நடவடிக்கை மேற்கொண்டு, அதற்காக ஒரு ஆய்வுக் கூட்டம் நடத்தப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. தொ. கருப்பையா : மாண்புமிகு தலைவர் அவர் களே, 1977-ம் ஆண்டிலிருந்து 1982-ம் ஆண்டு வரையில் ஆய்விலுள்ள திட்டங்களை குறிப்பிட்டிருக்கிறார்கள். நாம் இப்போது 1984-ல் இருக்கிறோம். ஏழு ஆண்டுகளாக இந்தத் திட்டங்கள் ஆய்வில் உள்ளதாக அமைச்சர் அவர்கள் அறிவித் திருக்கிறார்கள். இந்த ஆய்வு முடிய இன்னும் எத்தனை ஆண்டுகள் ஆகும். அடுத்து இந்தத் திட்டத்திற்கு........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : துணை வினா ஒன்று தான் கேட்க வேண்டும். அதை நீட்டிக்கொண்டே போகக் கூடாது.

திரு. தொ. கருப்பையா : மாண்புமிகு தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் இருக்கிற குளித்தலைக்காட்டு வாரித் திட்டம்; 92 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஆய்வில் இருக்கிறது என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். கடந்த 20 ஆண்டுக்காலமாக இந்தத் திட்டம் ஆய்விலே இருப்பதாக சட்டமன்றத்தில் தொடர்ந்து கூறிக்கொண்டிருக்கிறார்கள். இந்த ஆய்வு எப்போது முடியும் என்பதை திட்டவட்டமாக அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பா. கை. மு. யூசுப் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆய்வில் உள்ள திட்டத்தைப் பற்றி இங்கே கேள்வி கேட்டு இருக்கிறார்கள். ஒரு திட்டம் ஆய்வுக்குமேற்கொள்ளப் பட வேண்டுமானால், மாண்புமிகு உறுப்பினர் திரு. திருவேங் கடம் அவர்கள், தண்ணீர் ஆய்வைப் பார்த்தீர்களா என்று கேட்டார்கள். தற்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தத் திட்டத்தை ஏன் எடுத்துக் கொள்ளவில்லை என்று சொல்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர் களே ஒருவருக்கொருவர் பதில் சொல்லி இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, ஒரு திட்டம் மேற்கொள்ளப்பட வேண்டுமானால் நீர் ஆய்வுகள் எடுக்கப்பட வேண்டும். இரண்டாவதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 20 ஆண்டுகாலமாக அந்தத் திட்டம் பரிசீலிக்கப் படும் என்று சொல்லியிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். 20 ஆண்டுகாலமாக இருந்த அத்தனை அரசுகளும் இதே

டி2 A 25—6

பதிலை வழங்கியிருக்கிறார்கள் என்றால் இந்தத் திட்டத்தில் ஏதேனும் சிக்கல் இருக்கலாம் என்று கருதுகிறேன். ஆகவே, இதைப்பார்த்து, தனிக் கேள்வி போட்டால், அதற்குரிய பதிலைத் தரத் தயாராக இருக்கிறேன் என்பதைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

காவிரி நதியின் டெல்டா பகுதியை நவீனப்படுத்தும் திட்டம்.

**443**—(*வினா எண் 21434) திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தஞ்சை மாவட்டத்தில் காவிரி நதியின் டெல்டா பகுதியை நவீனப்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், மதிப்பீடு எவ்வளவு?

(இ) மைய அரசு இந்தப் பணிக்கு நிதியுதவி செய்கிறதா.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : (அ) ஆம்.

(ஆ) இதன் மதிப்பீடு ரூ. 447.00 கோடி ஆகும்.

(இ) மைய அரசின் மூலமாக உலக வங்கியின் நிதி உதவி பெறுவதற்காக திட்ட அறிக்கை மத்திய அரசுக்கு அனுப்பப் பட்டுள்ளது.

வையாவூர் மாம்பட்டு ஏரியில் பிரிவு அணை கட்டும் திட்டம்.

**444**—*வினா எண் 21723) திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுராந்தகம் தொகுதி வையாவூர் மாம்பட்டு ஏரியில் நீர் பகிர்ந்து கொடுக்க (Dividing Dam) கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : இந்த ஏரி மதகிலிருந்து 320 அடி தூரத்தில் இரண்டு கண்கள் (V nish கொண்ட பிரிவு அணை (Dividing Dam) ஒன்று ஏற்கனவே உள்ளது.

திரு. எஸ். டி. உகம்சந்த் : தலைவர் அவர்களே, வையாவூர் ஏரியிலிருந்து ஊசிநத்தம், மாம்பட்டு, வையாவூர் ஆகிய இடங்களில் உள்ள விவசாயிகளுக்கு கால்வாய் மூலம் தண்ணீர் வருகிறது. அதிலே ஊசிநத்தத்திற்கு தனியாக டிவைடிங் டாம் கட்டி தண்ணீர் தரப்படுகிறது. தற்போது வையாவூர் விவசாயிகளின் நிலத்திற்கு மேல்மாம்பட்டு விவசாயிகளின் நிலம் இருப்பதால், அங்கே விவசாயம் செய்யும் விவசாயிகளுக்கு நீர் சரியாகக் கிடைப்பது இல்லை. ஆகவே, மாம்பட்டு விவசாயிகளுக்கு நீர் கிடைக்கும் வகையில், வையாவூர் ஏரியில் டிவைடிங் டாம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா ?



மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே,
ஊசி நத்தத்தில் உள்ள அணையில் வலது பக்கத்தில் உள்ள
தண்ணீர், ஊசிநத்தம் விவசாயிகளுக்கும், இடது பக்கம் உள்ள
தண்ணீர் வையாவூர், மாம்பட்டு ஆகிய இடங்களுக்கும் செல்கிறது,
அந்த ஏரியில் இருந்து 3 கிராமங்களுக்கு நீர் செல்ல வேண்டி
யிருப்பதால், அதை 3-பிரிவுகளாகப் பிரித்து, அந்த மூன்று கிரா
மங்களுக்கும் சரிசமமாக தண்ணீரைப் பகிர்ந்து கொடுக்கலாம்
என்று தீர்மானிக்கப்பட்டு, அதற்குரிய ஆணைகள் பிறப்பிக்கப்
பட்டு, 1984-85 ஆம் ஆண்டில் விரிவாக்கம் மற்றும் மேம்பாடு
என்ற தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டு, அந்தப் பணிகள்
செய்யப் பெறவேண்டும் என்று அறிவுரைகள் வழங்கப்பட்டு
இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இந்தத் திட்டத்திற்காக 1984-85 ஆம் ஆண்டில்
நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும், அந்தப் பணிகள்
துவக்கப்படவிருக்கின்றன என்றும் அமைச்சர் அவர்கள் தெரிவித்
தார்கள். அந்தத் திட்டப் பணிகள் எவ்வளவு காலத்திற்குள்
முடிவு அடையும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே,
ஏற்கெனவே அங்கே இரண்டு வென்ட்கள் அமைக்கப்பட்டு இருக்
கின்றன. அந்த இரண்டு வென்ட்கள் மூலம் 3 கிராமத்திற்குத்
தண்ணீர் செல்ல வேண்டியிருப்பதால், பிரச்சினைகள் ஏற்படு
கின்றன என்பதால், 3 கிராமங்களுக்கும் சமமாக தண்ணீர் விடு
வதற்காக 3 வென்ட்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கும் வகை
யில், உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, 1984-85
ஆம் ஆண்டில் அந்தப் பணிகள் துவக்கப்பட வேண்டும் என்று
ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இதற்கு மேலும் கூடுதலாக
எந்தவிதமான விவரமும் சொல்ல முடியாத நிலையில் நான்
இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மார்த்தாண்டத்தில் செயல்பட்டு வரும் தொழிற்பேட்டை.

445—* வினா எண் 19171—திரு. டி. மணி : மாண்புமிகு
ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை
யளிப்பாரா—

(அ) மார்த்தாண்டத்தில் செயல்பட்டு வந்த தொழிற்
பேட்டையில் இப்போதுள்ள தொழில் என்ன ?

(ஆ) கயிறு மெத்தை தயாரிக்கும் தொழில் ஆரம்பிக்க
அரசு முன்வருமா ?

(இ) ஆம் எனில், எப்போது முதல் ஆரம்பிக்கப்படும் ?

மாண்புமிகு திரு இரா. அருணாசலம் : (அ) கன்னியாகுமரி
மாவட்டம் மார்த்தாண்டம் தொழிற்பேட்டையில் உள்ள மூன்று
தொழிற்கூடங்களில், தொழில் நடத்துவோருக்கு இரண்டு கூடங்
களும், மற்றொன்று தமிழ்நாடு நுகர்பொருள் வாணிடக் கழகத்
திற்கு தானிய சேமிப்புக் கிடங்காகவும் பயன்பட்டு வருகின்றது.
காரணம் அப்பொழுது வேறு இடங்களில் இருந்து விண்ணப்பங்கள்
வரவில்லை.

(ஆ) மற்றும் (இ) மார்த்தாண்டம் தொழிற்பேட்டையில் கயிறு மெத்தை தயாரிக்கும் தொழிற்சாலை ஆரம்பிக்கும் உத்தேசம் இல்லை. ஆனால் கன்னியாகுமரி மாவட்டம் எழுதேசம் கிராமத்தில் ஆதி திராவிடர் நலனுக்காக ஒரு கயிறு மெத்தை தயாரிக்கும் கூட்டுறவு சங்கம் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(முற்பகல் 10-20)

திரு டி. மணி : தலைவரவர்களே, இந்த மார்த்தாண்டம் தொழிற் பேட்டை என்று சொல்லப்படுகின்ற இடத்தில் நுகர் பொருள் வாணிபக் கழகத்திற்கு கிடங்கு வசதிக்காக இடம் கொடுத்துள்ளதாகச் சொன்னார்கள். ஏற்கெனவே தொழில் துறையில் மிகவும் பின்தங்கிய மாவட்டம் என்ற அடிப்படையில் அங்கே தொழில் தொடங்குவது என்று சொல்லுகிறபோது கயிறு தொழில் வந்திருக்கிறது. அதைப் புதிதாக ஆரம்பிக்க வேண்டுமென்றால், புதிய யூனிட் ஒன்றைத் தொடங்க, போதுமான இட வசதிஅந்தத் தொழிற்பேட்டையில்தான் இருக்கிறது. எனவே நுகர் பொருள் வாணிபக் கழகத்திற்கு கொடுத்த இடத்தை திரும்ப எடுத்துக் கொண்டு, அவர்களுக்கு மாற்று இடம் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : தலைவரவர்களே, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு கொடுக்கப்பட்டுள்ள கூடத்தை திரும்பப் பெற்று, சிறு தொழில்கள் நடத்த கொடுக்க வேண்டுமென்று சிறு தொழில் வளர்ச்சிக் கழகத்தை அணுகியபோது தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் பொதுமக்களுக்கு அத்தியாவசியமான உணவுப் பொருள்களை வழங்கும் சேவையில் ஈடுபட்டுள்ளதாலும், அந்தக் கூடத்திற்கு உள்ள முழு பணத்தையும் அவர்கள் கட்டி விட்டதாலும் அந்த இடத்தைத் திரும்பப் பெற முடியாது என்று சிறு தொழில் வளர்ச்சிக் கழகம் தெரிவித்து விட்டது.

திரு. டி. மணி : தலைவரவர்களே, நுகர் பொருள் வாணிபக் கழகத்திற்கு அந்த இடத்தைக் கொடுக்கப் போகிறார்கள் என்ற தகவலை அறிந்தவுடனே நான் அந்தத் துறைக்கு கடிதம் எழுதினேன். தொழில் துறையில் மிகவும் பின்தங்கிய மாவட்டமாக இருப்பதால் அந்த இடத்தை வேறு காரியங்களுக்குப் பயன்படுத்தக் கூடாது, தொழில்கள் தொடங்குவதற்கே பயன்படுத்த வேண்டும் என்று எழுதியிருந்தேன். அதை ஏற்க முடியாது என்று இப்போது சொல்கிறார்கள். ரப்பரையும் தேங்காய் மட்டையையும் அடிப்படையாக வைத்து அங்கே தொழில் தொடங்கப்பட்டால்தான் கயிறு தொழிலைப் பாதுகாக்க முடியும். எனவே இதை புனர் பரிசிலனை செய்து, முன்னால் இருந்த இடத்திற்கே நுகர்பொருள் வாணிபக் கழகத்தை மாற்ற நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு இரா. அருணாசலம் : தலைவரவர்களே, மாற்று இடம் இல்லாத காரணத்தால்தான் அந்தக் கூடத்தை நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனை பரிசீலிக்கப்படும்.

கோபி சட்டமன்றத் தொகுதியில் சிறுதொழில் துவக்கும் திட்டம்

446—*வினா எண் 22658 திரு கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம் கோபி சட்டமன்றத் தொகுதியில் சிறு தொழில் துவங்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், என்னென்ன தொழில்கள் துவங்க உள்ளது ?

மாண்புமிகு திரு இரா. அருணாசலம் : (அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு கு. அ. செங்கோட்டையன் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் வினாவிற்கு இடமில்லை என்று சொன்னார்கள். கோபி தொகுதியில் தனியாக 32 சிறு தொழில்களைத் தொடங்குவதற்கு நான்கு ஆண்டுகளுக்கு முன்னாலேயே தலா 500 ரூபாய் கட்டியிருக்கிறார்கள். தொழில் மைய மேலாளர் அவர்கள் பவளமலையில் தொழில் மையம் அமைக்க, நிலத்தை ஆர்ஜிதம் செய்ய பார்வையிட்டிருக்கிறார்கள். அந்த விவரம் அமைச்சரிடம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : தலைவரவர்களே, அதுபற்றிய தகவல் தற்போது என்னிடம் இல்லை. ஆனால் சுய வேலை வாய்ப்பு முயற்சியில் ஈடுபடுகின்றவர்களுக்குத் தேவையான எல்லா வசதிகளையும் அரசு செய்து கொடுக்கிறது.

திரு. கு. அ. செங்கோட்டையன் : தலைவரவர்களே, பெரியார் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் கோபி போன்ற பகுதிகளில் உள்ள மக்கள் வேளாண்மையை நம்பி வாழ்ந்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அங்கே தொழில் மையம் உருவாக்க அரசு மீண்டும் பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : தலைவரவர்களே, தமிழக அரசும் மத்திய அரசும் தமிழ் நாட்டிலே சில பகுதிகளை 'பாக்வெர்டு ஏரியா' என்று அறிவித்திருக்கின்றன. அந்த வகையில் பார்க்கும்போது கோபி சட்டமன்ற தொகுதி தொழில் வளர்ச்சியில் முன்னேறிய பகுதி என்று அறிவிக்கப்பட்டிருக்கிற காரணத்தால் தற்போது அங்கே எந்தவிதமான தொழிலும் தொடங்குவதற்கு இல்லை.

திரு தி. கா. நல்லப்பன் : தலைவரவர்களே, தொழில்கள் தொடங்குவதற்கு உதவிக்காக வங்கிகளுக்குச் செல்கிறபோது, முறையாக அந்த வங்கிகளில் கடன் பெற வேண்டுமென்றால் யீட்டுத்தொகைக்காக ஜாமீன் கேட்கிறார்கள். ஜாமீன் கொடுக்க வில்லை என்றால், ஜாமீன் கொடுக்க நபர் இல்லை என்று சொல்லி அந்த மனுக்களை தள்ளுகிற சூழ்நிலை இருக்கிறது. அதை மறு பரிசீலனை செய்து, தொழில் தொடங்குகிறவர் அதற்குத் தகுந்த முறையில் இருக்கிறதா என்பதை மட்டும் பார்த்து கடன் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : தலைவரவர்களே, படித்த இளைஞர்களுக்கு சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின், கீழ் எந்தவிதமான ஜாமீனும் வங்கிகளில் கேட்பதில்லை. இந்தத் திட்டத்தில் இல்லாமல், வேறு வகையிலே தனியாகச் தொழில் தொடங்க வேண்டுமென்று கேட்கும்பொழுது ஜாமீன் கேட்கிறார் கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி யிடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற் றது என்பதைக் குறிக்கும்].

## 2. தகவல் கோரல்.

### உள்ளாட்சி மன்றத் தேர்தல்களை நடத்துவது பற்றி.

திரு. என். சங்கரய்யா : தலைவர் அவர்களே, தங்கள் மூலம், நான் அரசாங்கத்திடம் ஒரு விளக்கத்தைக் கேட்க விரும்பு கிறேன். நேற்றைய தினம் சென்னை உயர்நீதிமன்றம் நடை பெற இருந்த உள்ளாட்சி, நகராட்சித் தேர்தல்களை தடை செய்துள்ளது. சட்டமன்றத்திலே ஒரு முற்போக்கு நடவடிக்கை யாக இருக்க வேண்டும் என்று கருதி, பெண்களுக்கும், தாழ்த்தப் பட்ட மக்களுக்கும், இட ஒதுக்கீடு செய்யவேண்டுமென்று இறுதி யாக ஒரு நிலை எடுக்கப்பட்ட பிறகு, உச்ச நீதிமன்றத்தில் தேர்தல் நடத்தக் கூடாது என்று தடை விதித்துள்ளது. இதற்கு முன்னால், இரண்டு, மூன்று தடவை தேர்தலுக்கான நாமினேஷன் எல்லாம் நிர்ணயிக்கப்பட்டு, அதற்குப் பிறகு தடை விதித்தி னால், மிகுந்த சிரமம் ஏற்பட்டுவிட்டது. மக்கள் மத்தியில் தேர்தல் நடக்குமா என்ற ஒரு கவலையும் ஏற்பட்டுவிடுகிறது. ஆகவே, அரசாங்கம் உச்ச நீதிமன்றத்தில் இது விஷயத்தில், விரைவாக முடிவு செய்வதற்கு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ? அதற்காக என்ன கால அளவிற்குள் ஏற்பாடு செய் யப்படும் என்பதை தங்கள் மூலமாக அரசாங்கத்திடம் கேட்க விரும்புகிறேன்.



திரு. அ. ரகுமான்கான் : நான் இதுசம்பந்தமாக ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன்..........

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, ஊராட்சி, நகராட்சி தேர்தல் சம்பந்தமாக தேர்தல்களை அறிவிக்கின்ற நேரத்தில், எதிர்க்கட்சியிலே இருக்கும் நாங்கள் ஏற்கெனவே சொன்னோம். இது சம்பந்தமாக உயர்நீதிமன்றத்தில் வழக்கு இருக்கிறது என்பது (குறுக்கீடு) தடை இருந்தாலும், இல்லை யென்றாலும், அரசாங்கம் இதைத் தெரிந்து தேதியை அறிவித் திருக்கலாம். இதனால், எல்லாக் கட்சிகளுக்கும், சிரமங்கள் ஏற் பட்டிருக்கின்றன. தவிர, ஆங்காங்கு தேர்தல் சம்பந்தமான நட வடிக்கைகள் எடுப்பதற்கு அதிகாரிகள் அனுப்பப்பட்டிருக்கிறார் கள்............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சங்கரய்யா அவர் கள் சொன்னதையேதான் தாங்களும் சொல்லிக்கொண்டிருக் கிறீர்கள். (குறுக்கீடு).

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, இந்த விஷ யம் உயர்நீதிமன்றத்திலே இருப்பது அரசுக்குத் தெரியும். தெரிந் திருந்தும், தேர்தல் நடத்துவது சம்பந்தமாக ஸ்டே வரலாம் என்று தெரிந்திருந்தும், இப்படிச் செய்தது சரிதானா ? (குறுக் கீடுகள்).

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, நகராட்சி, பஞ்சாயத்து, பஞ்சாயத்து ஒன்றியங்கள், தேர்தல்களை பொறுத்த அளவில், இன்று பத்தி ரிகை வாயிலாக, நேற்று உயர்நீதிமன்றத்தில் இந்தத் தேர்தல் களை நடத்தக் கூடாது என்று தடை விதித்தது பற்றிய செய்தியை நானும் படித்தேன். அதிலே முக்கியமாக எழுப்பப்பட்டிருக்கின்ற பிரச்சினைகள் என்னவென்றால், அங்கே இருக்கக் கூடிய ஜஸ்டீஸ் இரத்தினவேலு பாண்டியன் அவர்கள் சொல்கிறார்கள்

The main question raised by the Petitioners before him, the Judge said, was that when the validity of reservation was pending decision before the Supreme court, the Government was not justified in notifying the elections and issuing the programme.....

[திரு. ப. குழந்தைவேலு] [1984 மார்ச் 24

என்கின்ற அந்த முக்கியமான எண்ணத்தின் அடிப்படையில்தான்
இந்தத் தேர்தல்களை நிறுத்திவைத்திருக்கிறார்கள். நான் ஏற்
கெனவே இதே மாமன்றத்தில், பாமன்ற உறுப்பினர்கள் பல்
வேறு நிலைமைகளில் எழுப்பிய கேள்விகளுக்கு பதில் சொல்லி
யிருக்கிறேன். ஏனென்றால், தேர்தலைத் தள்ளிப் போடக்
கூடாது, சீக்கிரமாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற உங்க
ளுடைய எண்ணமும், அதே நேரத்தில், இந்த அரசினுடைய
எண்ணமும் அதுதான். அதன் காரணமாக தேர்தலை உடனடி
யாக நடத்த வேண்டும் என்ற ஒரு முடிவை எடுத்தோம். அது
மட்டுமல்ல, இருக்கக்கூடிய பிரச்சினை என்னவென்றால், உச்ச
நீதிமன்றத்திலே மேல் முறையீடு செய்து, அந்த மேல் முறை
யீட்டை சீக்கிரமாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று
அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் நாம் முடிவு எடுத்
தோம். அந்த அடிப்படையில், கடந்த 1983 ஆம் ஆண்டு ஏப்ரல்
திங்களில், சீக்கிரமாக அந்த அப்பீலை நாங்கள் எடுத்துக்கொள்
கிறோம் என்ற தீர்ப்பை அவர்கள் தெரிவித்தார்கள். ஆனால்,
இருக்கக் கூடிய நிலைமை என்னவென்றால்,... உச்சநீதிமன்றம்
சீக்கிரமாக எடுத்துக்கொள்கிறோம் என்று சொன்னாலும், அது
எவ்வளவோ மாதங்கள் ஆகலாம், பல ஆண்டுகள் ஆகலாம்.
அது நமக்குத் தெரியும்.

(முற்பகல் 10-30)

ஆனாலும்கூட தடை இல்லாத காரணத்தாலேதான் நாம் ஏற்
கெனவே விளக்கத்தைச் சொல்லி, இந்த மன்றத்தினுடைய ஒப்பு
தலைப் பெற்றுத்தான் இந்தத் தேர்தலை அறிவித்தோம்.
ஆகவே, தேர்தலை அறிவித்ததற்குப் பின்னாலே, மேல் முறையீடு
அங்கே நிலுவையிலே இருக்கிறது. ஆகவே, அது முடிந்ததற்குப்
பின்னாலேதான் இந்தத் தேர்தலை நடத்த வேண்டும் என்று
உயர்நீதிமன்றம் தடை ஆணையிட்டிருக்கிறது. ஆனால், மாண்பு
மிகு உறுப்பினர் சங்கரய்யா அவர்களும், மாண்புமிகு உறுப்
பினர் அழகர்சாமி அவர்களும், இங்கே கூறினார்கள். உயர்நீதி
மன்றமோ, அல்லது உச்சநீதிமன்றமோ, தடை விதிக்கும் என்று
தெரிந்தால்,ஏன் இந்த அரசு இதை நடத்த வேண்டும் என்றகேள்வி
யைக் கேட்டார்கள். நாம் அதற்குப் பதில் சொல்ல முடியாது.
காரணம் உயர்நீதிமன்றமோ, உச்சநீதிமன்றமோ, எப்போது
தடை கொடுக்கும், எப்போது தடை கொடுக்காது என்பது நமக்
குத் தெரியாது. ஆனால், இந்தச் சட்டங்களைப் பொறுத்த
வரையில் எந்தவிதமான சந்து பொந்துகளும் இல்லை. உண்மை
யிலேயே நல்ல எண்ணத்தின் அடிப்படையில், தூய எண்ணத்தின்
அடிப்படையிலே இந்தக் கொள்கையை : விளக்கங்களைக்
கொண்டு வந்து, இந்தப் புரட்சிகரமானத் திட்டத்தை நடை
முறைப்படுத்த வேண்டும் என்ற முறையில்தான் இந்த அரசு
நடவடிக்கை எடுத்திருக்கிறது. ஆனாலும் கூட அதைத்தடை
செய்துவிட்டகாரணத்தால், பழைய சட்டப்படி நடத்தலாமா,



1984 மார்ச் 24] [திரு. ப. குழந்தைவேலு]

என்பதை உடனடியாகதீவிரமாக இந்த அரசு ஆலோசனை செய்து
முடிவு எடுக்கும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்
கொள்கிறேன். ஆகவே, ஏற்கனவே தமிழக முதல்வர் புரட்சித்
தலைவர் அவர்கள் கூட சொன்னார்கள். அப்படி ஏதாவது
தடை வந்துவிட்டாலும்கூட, பழைய சட்டத்தின் அடிப்படையில்,
நடத்த முடியுமா என்பதை பரிசீலிக்கும் என்று தெரிவித்தார்கள்.
அந்த அடிப்படையிலே கண்டிப்பாக இந்த அரசு பரிசீலனை செய்
யும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது சம்பந்தமாக்
மேலும் எந்த விவாதமும் வேண்டாம்.

திரு. அ. ரகுமான்கான் : நான் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம்
கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைப்பற்றி என் அறை
யில் வந்து கேட்க வேண்டும். (குறுக்கீடு) நீங்கள் ஒத்திவைப்புத்
தீர்மானத்தை இன்று காலை 8-30 மணிக்குக் கொடுத்திருக்
கிறீர்கள். இன்றைக்கு வேறு ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம்
அவையில் எடுத்துக்கொள்ளப்பட இருக்கிறது. (குறுக்கீடு).

திரு. அ. ரகுமான்கான் : தேர்தல் நடக்காது என்பதால்,
ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றைக்கு உங்களது
ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக்கொள்ளவில்லை. (குறுக்
கீடு). நீங்கள் ஒரு வழக்குரைஞர். உயர்நீதிமன்ற தீர்ப்பைப்
பற்றி நாம் இங்கே எப்படி பேச முடியும் ? (குறுக்கீடு).

திரு. அ. ரகுமான்கான் : ஒத்திவைப்புத் தீர்மானத்திலே
நான் கேட்கிறேன் ; சுப்ரீம் கோர்ட்டிலே வழக்கு இருக்கு
போது, இங்கே வீடியோக்களை பற்றி பேசப்பட்டது........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ரகுமான்கான் அவர்
களுடைய ஒத்திவைப்புத் தீர்மானம் என் அறையிலேயே நிராகரிக்
கப்பெற்றுவிட்டது. அதற்கு நான் அனுமதி மறுத்து இருக்
கிறேன். (குறுக்கீடு) மேற்கொண்டு அதுபற்றி பேசவேண்டுமா
னால் என்னுடைய அறைக்கு வந்து பேசலாம். (குறுக்கீடு).

திரு. அ. ரகுமான்கான் : ஒத்திவைப்புத் தீர்மானம் நிரா
கரிக்கப்பட்டு விட்டது சரி, அதன் மீது கருத்துகூடவா சொல்
லக்கூடாது ?

[1984 மார்ச் 24

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதுதான் உங்கள் கருத்தைச் சொன்னீர்களே; நான் ஒன்றும் தடுக்கவில்லையே. வீடியோ கேசட் என்றீர்கள். இன்னும் என்னென்னவோ சொல்கிறீர்கள். அவையின் நிகழ்ச்சி தொடர முடியாதபடி பேசிக்கொண்டே இருக்கிறீர்கள். நானும் கேட்டுக்கொண்டுதானே இருக்கிறேன். (குறுக்கீடு).

திரு. அ. ரகுமான்கான் : எங்கள் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விடுங்களேன்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது கட்சிப் பிரச்னை அல்ல; பொதுப் பிரச்னை. திரு. சங்கரய்யா அவர்களும், திரு. அழகர்சாமி அவர்களும் கேட்டார்கள். மாண்புமிகு அமைச்சர் அதற்குப் பதில் சொல்லியாகிவிட்டது. வேறு பிரச்னைகள் இருக்கும் போது அந்தப் பிரச்னையையே திருப்பி திருப்பி கேட்டுக் கொண்டிருந்தால் என்ன அர்த்தம் ?

திரு. அ. ரகுமான்கான் : என்னைப்பேச விடுங்கள்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே ஒவ்வொரு கட்சியின் கருத்தும் என்ன எனச் சொல்வதற்கு அனுமதித்துக் கொண்டிருந்தால் அவையை நடத்த முடியாது. இன்று அவை முன் அந்தப் பிரச்சினை விவாதத்திற்கு வரவில்லை.

திரு. அ. ரகுமான்கான் : அதைக்காட்டிலும் சபைக்கு என்ன வேலை ? அது பற்றி நான் கொடுத்திருக்கும் ஒத்திவைப்புத் தீர்மானத்தையாவது எடுத்துக்கொள்ளுங்கள்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையின் விதிமுறைகளையும், மரபுகளையும் அறிந்து திரு. ரகுமான்கான் செயல்பட வேண்டும். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் இதில் என்ன சொல்ல விரும்புகிறார். நான் அவருடைய கருத்தை அறிய விரும்புகிறேன்.

Thiru K. S. G. Haji Shareef : Sir, I would request my esteemed colleague and friend Mr. Rahmankhan to observe the Parliamentary procedure. When the Hon. Speaker has given his ruling we should respect it. If the Hon'ble Member wants to get any further clarification, it is better Mr. Rahman khan discusses with the Hon, Speaker at his Chamber. Thank you.

Thiru A. Rahmankhan : Sir, I am on a point of order, not on this matter. (கூச்சல், குழப்பம்).



1984 மார்ச் 24]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ரகுமான்கான் பேரவை விதிமுறைகளையே ஏற்றுக்கொள்வதில்லை என்று தீர்மானம் பண்ணிவிட்டார். (கூச்சல், குழப்பம்) சட்டமன்ற திராவிட முன்னேற்றக் கழக தலைவரும் வருவதில்லை, துணைத் தலைவரும் வருவதில்லை. இப்போது எல்லாமே ரகுமான்கான் தான். அவர் என்ன பேச வேண்டுமோ பேசட்டும்.

திரு. அ. ரகுமான்கான் : எங்கள் கட்சியின் சார்பாக ஒரு கருத்தை சொல்ல அனுமதியுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் திரும்ப திரும்பச் சொல்கிறேன். அவைக்கு என்று சில விதிமுறைகள் மரபுகள் இருக்கின்றன. அவை முன்னுள்ள பொருள் குறித்து, இந்தக் கட்சி அந்தக் கட்சி என்றில்லாமல் எல்லோருக்கும் வாய்ப்பு அளிக்கிறேன். (குறுக்கீடு) இன்று ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் எடுந்துக்கொள்ள இருக்கிறோம். முந்தாநாள் அன்று திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. இராஜமாணிக்கம் அவர்கள் கொண்டுவந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக்கொண் டிருக்கிறோம்.

திரு. அ. ரகுமான்கான் : இது இன்னும் முக்கியமான பிரச்னை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எந்த விதிக்கும் மரபுக்கும் உட்படாது திடீர் திடீர் என்று நீங்கள் எழுந்து கேட்பதெல்லாம் தான் முக்கியமானது ; மற்றவர்களுக்கு இல்லை. யாருக்கும் கட்டுப்படாது அவை விதிகளை மதித்து நடப்பதில்லை என்று தீர்மானம் செய்துவிட்டீர்கள்.

திரு. அ. ரகுமான்கான் : என்னுடைய ஒத்திவைப்புத் தீர் மானத்தை எடுத்துக்கொள்ளுங்கள். அது தள்ளப்பட்டு விட்டது என்றால் என் கருத்தைச் சொல்ல விடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ரகுமான்கான் இப்படி என்னை வற்புறுத்த முடியாது.

இந்தப் பிரச்னை எதுவும் தயவு செய்து அவைக் குறிப்பிலே வரவேண்டாம். பத்திரிகைக்காரர்களையும் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். இதையெல்லாம் போடவேண்டாம்.

திரு. அ. ரகுமான்கான் : நீங்கள் செய்வதையும் செய்து விடுவீர்கள். பிறகு அதைப்போட வேண்டாம், அனுமதிக்க முடியாது என்று சொல்வதா ? என்ன நியாயம் இது ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சரி, திரு. ரகுமான்கான் அவர்களே, இது பத்திரிகையிலே வரலாம். நடந்தது பூராவும் அப்படியே குறிப்பேட்டிலே இருக்கும் போதுமா ? (குறுக்கீடு).

[1984 மார்ச் 24

திரு. அ. ரகுமான்கான் : ஒத்திவைப்புத் தீர்மானத்தை நான் விட்டுவிட்டேன். அது முடிந்துபோன விவகாரம். எல்லோருக்கும் வாய்ப்புக் கொடுத்த மாதிரி இந்த முக்கியமான பிரச்சினையில் என் கட்சியின் சார்பாக கருத்துச் சொல்ல எனக்கு வாய்ப்புக் கொடுக்க வேண்டும். நான் இங்கே சொல்ல விரும்புவது, ஏற்கெனவே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அவையிலே கொடுத்த அஷ்யூரன்ஸ் இங்கே மீறப்படுமானால் அது 'கன்டெம்ப்ட்' சபையின் உரிமையை மீறுவது ஆகும். இங்கே முதலமைச்சர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். இட ஒதுக்கீடு சம்பந்தமாக யாரேனும் கோர்ட்டுக்குப் போய் தடையுத்தரவு வாங்கினால் நாங்கள் அதிலே பிடிவாதமாக இருக்காமல் அந்த நிலைமைகளை மக்களிடம் விளக்கி விட்டு பழைய நிலைகளின் அடிப்படையில் தேர்தலை நடத்துவோம் என்று இந்த அவையிலே சொல்லியிருக்கிறார். அது மீறப்பட்டால் அவையில் கொடுத்த வாக்குறுதியை மீறுவது ஆகும். நாங்கள், இட ஒதுக்கீட்டுக்கு எதிரிகள் அல்ல., ஏற்கெனவே உள்ள சட்டத்திலே இட ஒதுக்கீடு இருக்கிறது........

[முற்பகல் 10-40]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே என்ன பாயின்ட் ஆப் ஆர்டர் இருக்கிறது? அடுத்து ஒத்திவைப்புத் தீர்மானம்.

### 3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

வடஆர்க்காடு மாவட்டம் வந்தவாசி ஆணைபோகி சுகாதார செவிலியர் ஒருத்தியின் மரணம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் கே. ஆர். சுந்தரம், என். பழனிவேல், த. வேணுகோபால், என். ஏ. பூங்காவனம், ரா. கிருஷ்ணன் ஆகியோர் "வடஆர்க்காடு மாவட்டம், வந்தவாசி ஆணைபோகி என்ற கிராமத்தில் உள்ள பொது சுகாதார நிலையத்தில் செவிலியராக பணியாற்றிய மகேஸ்வரி என்ற ஆதி திராவிடப் பெண் ஒரு கிணற்றில் மாண்டு கிடந்ததையும், அது கொலை என்று அந்தப் பகுதி மக்களிடையே சந்தேகம் ஏற்பட்டு அந்த வட்டாரம் பூராவும் ஏற்பட்டுள்ள கொந்தளிப்பு நிலை குறித்தும் விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்" என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து அவர்கள் மிகச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக் கொள்கிறேன்.



1984 மார்ச் 24]

*திரு கே. ஆர் சுந்தரம் : தலைவர் அவர்களே, வந்தவாசி
அருகிலே ஆணைபோகி சுகாதார நிலையத்திலே செவிலியராக
பணிபுரிந்த மகேஸ்வரி என்பவர், வயது 17, கிணற்றிலே பிண
மாகக் கிடந்தார். அது தற்கொலையல்ல, கொலைசெய்யப்
பட்டு கிணற்றிலே எறியப்பட்டார் என்று அந்தப் பகுதி மக்க
ளிடையே பரவலாக பேசப்பட்டு வந்தது. கிணற்றில் கிடந்த
பிணத்தைப் பற்றி போலீசுக்கு அறிவிக்காமலேயே அந்த வட்டத்
தில் உள்ள செல்வாக்கு படைத்த பல நபர்கள் அந்தப் பிணத்
தைத் தாங்களாகவே எடுத்து அந்தப் பெண்ணின் தகப்பனா
ருக்குத் தகவல் கொடுத்து பிணத்தை எடுத்துப் போக வேண்டு
மென்று வற்புறுத்தியிருக்கிறார்கள். பிணத்தை எடுப்பதற்கு
முன்னாலே அங்கே உள்ள கிராம அதிகாரிகள், ரெவின்யூ
இன்ஸ்பெக்டர்கள் போலீஸ் எல்லாம் வந்த பிறகு தான்
பிணத்தை எடுக்க வேண்டுமென்று சொல்லியும் மீறி அந்தப்
பிணத்தை வெளியே எடுத்திருக்கிறார்கள். அப்படி அந்தப்
பிணத்தை வெளியே எடுத்தது பற்றி அந்த வட்டாரத்திலே உள்ள
மருத்துவ அலுவலர்கள், நமக்கு நியாயம் கிடைக்காது உடனே
நீங்கள் பிணத்தை எடுத்துச் செல்லுங்கள் என்று வற்புறுத்தி
அந்தப் பிணத்தை எடுத்துச் செல்வதற்கு ஏற்பாடு செய்தார்கள்.
அந்தப் பிணத்தை எடுத்துச் சென்றதற்குப் பின்னாலே அந்த
வட்டாரத்திலே உள்ள அரசு ஊழியர்கள் அரசாங்கத்தினுடைய
கவனத்திற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் கவனத்திற்கு கண்
காணிப்பாளருடைய கவனத்திற்கு கொண்டுசென்ற பின்னால்
அவருடைய கிராமமான பள்ளிகொண்டாவிற்கு அந்தப் பிணம்
எடுத்துச் செல்லப்பட்டதற்குப் பின்னால் அரசுக்கு அந்தத் தகவல்
வந்து அதன் பிறகு வேலூர் மருத்துவ மனைக்கு பிணத்
தைக் கொண்டுவந்து அந்த பிணத்தைப் பரிசோதனை செய்திருக்
கிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அந்த பரிசோதனையில் தெரிந்து இருப்பது இது தற்கொலை
அல்ல. இது கொலை செய்யப்பட்டதாக இருக்கும் என்று அந்த
போஸ்ட் மார்ட்டம் அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது.
அவருடைய தகப்பனார் கூட அரசு அதிகாரிகளுக்கு கொடுத்துள்ள
மனுவில் சொல்லியிருக்கிறார்கள். என்னுடைய பெண்ணுக்கு
நீச்சல் தெரியும். ஆகவே இது தற்கொலை அல்ல, கொலை
செய்யப்பட்டு இருக்கிறாள் என்று கூறியிருக்கிறார்கள். பொது
வாக அந்தப் பகுதி மக்களிடத்திலே இந்தப் பெண்ணை பல
கிளர்ந்து கற்பழித்து இந்த கற்பழித்தது வெளியில் தெரியாமல
இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் அந்தப்பகுதியில் உள்ள
சமூக விரோதிகள், செதி டைத்தவர்கள் அந்தப் பெண்ணை
ணற்றில் தள்ளியிருக்கிறார்கள். பிறகு கிணற்றிலிருந்து எடுத்து
இருக்கிறார்கள். இதை அந்த மாவட்டத்திலுள்ள அரசு ஊழியர்
கள், மாவட்டம் முழுவதும் அரசு அலுவலகங்களுக்கு முன்னால்
ஆர்ப்பாட்டம் நடத்தி இந்த வழக்கை விசாரணை நடத்த வேண்

டும் என்று வற்புறுத்தி சொல்லியிருக்கிறார்கள். அவைகளுக்கு பின்னால் கூட இன்னும் அது தற்கொலை இல்லை என்று சொன்னதற்கு பின்னாலும் கூட அந்த மரணத்திற்கு காரணமாக இருந்தவர்களை கண்டுபிடித்து அவர்கள் மேல் நடவடிக்கை எடுக்காத நிலை இன்றைய தினம் வரைநீடித்து கொண்டிருக்கிறது. இதனால் அந்த பகுதியில் உள்ள அரசு ஊழியர்கள் நிம்மதியாக வேலை செய்ய முடியாது, ஒரு பதட்டமான நிலையில் இருக்கிறார்கள். எனக்கு தெரிந்த வரையில் அந்த வந்தவாசி பகுதி, ஆணைபோகி பகுதியில் ஏற்கனவே, 2, 3 ஆண்டுகளுக்கு முன்னாலிருந்து இத்தகைய கொலை சம்பவங்கள் பல நடந்து இருப்பதாகவும், அவைகள் மறைக்கப்பட்டு இருப்பதாகவும் வசதி படைத்தவர்கள் இதற்கு உடந்தையாக இருக்கிற காரணத்தால் என்று சொல்லப்படுகிறது. ஆகவே, தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மகேஸ்வரி என்ற பெண் மரணம் அடைந்து இருப்பது ஒரு சந்தேகத்திற்குரியதாக இருப்பதால் அதை விசாரணை நடத்தி அதற்கு சம்பந்தப்பட்டவர்கள் மேல் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதற்காக வேண்டி இன்றைக்கு இப்படிப்பட்ட பல நிகழ்ச்சிகள் நாடு பூராவும் நடக்கிற நிலையில் இதைப் பற்றி பரிபூரணமாகப் பேசி விசாரிப்பதற்காக வேண்டி, நடவடிக்கை எடுப்பதற்காக வேண்டி இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து, இதுபற்றி விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. என். ஏ. பூங்காவனம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டம், வந்தவாசி வட்டத்தைச் சேர்ந்த ஆணைபோகி என்ற கிராமத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் பணியாற்றிய மகேஸ்வரி என்ற 17 வயதுள்ள பெண் குறிப்பிட்ட 26—2—1984 ஆம் தேதிக்கு முன் நாள் அலுவலகத்தில் நடந்த நிகழ்ச்சிகளில் வேறு பல வேலைகளில் மேல் அதிகாரிகளோடு பணியாற்றிய அவர் மறு நாள் கிணற்றில் விழுந்து தற்கொலை செய்து கொண்டாள் என்று செய்தி வெளியே சொல்லப்பட்டது. சம்பந்தப்பட்டவர்கள் அந்தப் பிணத்தை எடுப்பதற்கும் அதிலே கொலை நடந்திருக்கிறது வேறு பல நிகழ்ச்சிகள் நடந்திருக்கிறது என்பதை எடுத்துச் சொல்வதற்கும் அங்கே எந்தவிதமான வாய்ப்பும் இல்லாமல் பாதுகாப்பும் இல்லாமல் போலீசும் அதில் தலையிடாமல் கடைசியில் வேலூர் அரசு மருத்துவ மனைக்கு எடுத்துச் சென்றார்கள். அங்கே, எப்படி செத்தாள் கொலை செய்யப்பட்டாரா என்று பரிசீலனை செய்யப்பட்டு முடிவின் அடிப்படையில் கொலை செய்யப்பட்டு இருக்கிறாள், இருக்கலாம் என்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். பொதுவாக தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் பல்வேறு மாவட்டங்களில் காவல் நிலையங்களிலும் வேறு பல இடங்களிலும் அரசு அலுவலகங்களில் பணிபுரியும் தாய்மார்களையும் அல்லது வெளியூர்களுக்கு சென்று பணியாற்றுகின்ற தாய்மார்களையும் இப்படி பலவந்தமாக கற்பழிக்கப்பட்டு கொலை செய்யப்படுகிறார்கள். இது சம்பந்தமாக நடவடிக்கைகள் துரிதமாகவும் உரிய முறையிலும் எடுக்



காமல் காலம் தாழ்த்தி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இருக்கிற காரணத்தால் தற்போதும் இப்படி நடந்து இருக்கிறது. இந்த கொலை சம்பந்தமாக குற்றவாளிகளை கண்டுபிடிப்பதற்கும், இது சம்பந்தமாக விரிவாக பேச வேண்டி இருப்பதால் இன்றைய அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இதைப் பற்றி விரிவாக விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

*மாண்புமிகு திரு. க. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 26—2—1984 ஆம் தேதி மாலை 5.20 மணிக்கு பெரணமல்லூர் வருவாய் ஆய்வாளர் திரு. சங்கரன் அவர்கள் ஆணைபோகி ஆரம்ப சுகாதார நிலையத்தில் துணைச் செவிலியராகப் பணியாற்றிய செல்வி மகேஸ்வரி 26—2—1984 ஆம் தேதி அதிகாலையில் 5.30 மணிக்கு தன் குடியிருப்பிற்குப் பின்னால் உள்ள கிணற்றில் தண்ணீர் எடுக்கச் சென்ற பொழுது தவறி விழுந்து இறந்துள்ளார் என்றும், பிரேதத்தை கிணற்றிலிருந்து ஊர் மக்கள் அகற்றி வெளியில் போட்டுள்ளார்கள் என்றும், செய்த புகாரின் பேரில் பெரணமல்லூர் காவல் நிலைய குற்ற எண். 16/1984-ல் குற்றமுறைச் சட்டப் பிரிவு 174-ல் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது.

(முற்பகல் 10.50)

பள்ளிகொண்டாவில் வசிக்கும் பெண்ணின் பெற்றோருக்கு இது பற்றிய தகவல் தெரிவிக்கப்பட்டது. பெரணமல்லூர் உதவி ஆய்வாளர் மருத்துவ விடுப்பில் இருந்ததால் ஆரணி பாதுகாப்பு பணிக்குச் சென்று திரும்பிய பெரணமல்லூர் காவல் நிலைய தலைமைக் காவலர் (எண். 473) குப்பன் என்பவர் பள்ளிகொண்டா சென்று 27—2—1984 ஆம் தேதி காலை 9 மணி முதல் பகல் 12 மணி வரை பிரேத விசாரணை செய்து பிரேதத்தை பிரேதப் பரிசோதனைக்காக வேலூர் தலைமை மருத்துவ மனைக்கு அனுப்பியுள்ளார். 1—3—1984 அன்று செய்யாறு துணைக் காவல் துறை கண்காணிப்பாளர் சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்று தீவிர விசாரணை நடத்தினார்.

செல்வி மகேஸ்வரி ஆதிதிராவிட வகுப்பினைச் சார்ந்தவர். இவர் தற்காலிகமாக ஆரம்ப சுகாதார நிலையத்தில் துணைச் செவிலியராக 27—2—1983 முதல் பணியாற்றி வந்துள்ளார். புதிதாக துவங்கப்பட்ட இந்த ஆரம்ப சுகாதார நிலையத்தில் வேலை செய்யும் பணியாளர்களுக்குக் குடியிருப்பு வசதி அங்கேயே இல்லாததால் மகேஸ்வரி ஜெயராம நாயுடு என்பவரின் வீட்டின் ஒரு பகுதியில் மாதம் ஒன்றுக்கு வாடகையாக ரூபாய் 25 கொடுத்து தங்கியிருந்து வந்திருக்கின்றார். இந்தச் சிறிய குடியிருப்புப் பகுதியின் பின்புறத்தில் மேற்கு நோக்கி செல்லும் வழியில் ஒரு பெரிய கிணறு - (24 அடிக்கு 24 அடி) - 30 அடி தூரத்தில் உள்ளது. பள்ளிகொண்டாவில் இருக்கும் மகேஸ்வரியின் தந்தை திரு. ஆறுமுகம் முன்னாள்

இராணுவ பேட்டையில் 45 நாட்கள் மகளுடன் தங்கி இருந்துவிட்டு பயிற்சி வேலை நிமித்தமாக பள்ளிகொண்டா வந்து விட்டதாகவும் மேற்படி மகேஸ்வரி தனிமையில் வசித்து வந்தார் என்று விசாரணையில் தெரிய வருகிறது.

செய்யாறு மாவட்ட சுகாதார அலுவலருடன், மண்டல உதவி இயக்குநர் அவர்கள் 25—2—1984 அன்று சுகாதார நிலையத்தை ஆய்வு செய்த போது மகேஸ்வரி மாலை 5.30 மணி வரை அலுவலகத்தில் இருந்து விட்டு பின் வீட்டிற்குச் சென்று உள்ளார். அன்று இரவு 7.30 மணிவரை ஜெயராமன் நாயுடு வீட்டின் அருகில் வசிக்கும் மற்ற பெண்களுடன் தெருவில் பேசிவிட்டு உறங்கச் சென்று விட்டதாகத் தெரிய வருகிறது. அதன் பிறகு அவரை யாரும் பார்க்கவில்லை. 26—2—1984 ஆம் தேதி காலை சுமார் 5.30 மணிக்கு ஜெயராமன் நாயுடு மகன் மோகன் தன் மாட்டுக் கொட்டகைக்கு வந்தபொழுது கிணற்றில் மகேஸ்வரியின் பிரேதம் மிதந்ததைக் கண்டு, சத்தம் எழுப்பவே, அதனை கேட்டு திருவாளர்கள் தெய்வநாத நாயுடு, பலராம் நாயுடு ஜெயராம நாயுடு இவர்கள் கிணற்று அருகே ஓடி வந்தனர். கிணற்றிலிருந்து மகேஸ்வரியை வெளியே எடுத்து முதல் உதவி அளித்து பார்த்தபொழுது மகேஸ்வரி இறந்து இருக்கின்றார். வாயிலும், மூக்கிலும் சிறிது தண்ணீர் வந்து கொண்டும், நுரையுடனும் இருந்துள்ளது. தாமோதர நாயுடு என்பவர் மூலம் பள்ளிகொண்டாவில் இருக்கும் மகேஸ்வரியின் தந்தைக்கு தகவல் கொடுக்கப்பட்டது. பெரணமல்லூர் வருவாய் ஆய்வாளர் அன்று காலை 10 மணிக்குத் தகவல் பெற்று, சம்பவ இடத்தையும், இறந்து கிடந்த மகேஸ்வரியையும் பார்த்துவிட்டு, மாலை 5.20 மணிக்கு பெரணமல்லூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார். இவ்வேளையில் மகேஸ்வரியின் தந்தையும், உறவினர்களும் பகல் 2 மணிக்கு ஆரணிபோகி வந்தடைந்து, [illegible] நாயுடு மற்றும் சிலர் ஏற்பாடு செய்திருந்த வாடகைக் காரில், மகேஸ்வரியின் பிரேதத்தை, காவல் துறையினர் வருமுன், இதுபோன்ற சம்பவத்தில் கடைபிடிக்க வேண்டிய முறையினை அறியாமல், மாலை 6 மணிக்கு எடுத்துக் கொண்டு பள்ளிகொண்டா வந்துள்ளனர். இதனையறிந்து தலைமைக் காவலர் பள்ளிகொண்டா சென்று, 27—2—1984ந் தேதி காலை பிரேத விசாரணை செய்து, பிறகு பிரேத பரிசோதனைக்காக, மகேஸ்வரியின் பிரேதத்தை வேலூர் தலைமை மருத்துவ மனைக்கு அனுப்பியுள்ளார்.

27—2—1984 ஆம் தேதி மாலை 4.05 மணிக்குப் பிரேதப் பரிசோதனையைச் செய்த மருத்துவ அதிகாரி டாக்டர் சித்ரா, பிரேதத்தின் வெளியேயும் மற்றும் உள்ளேயும் எந்தவித காயங்களையும் பார்க்கவில்லை என்றும், விலா எலும்பு, இடுப்பு, மண்டை எலும்பு, முதுகெலும்பு போன்ற இடங்களில் எந்தவித முறிவும் இல்லை எனவும் ஹயாய்டு எலும்பு சரியாக உள்ளதாகவும் அறிக்கையில் கூறியுள்ளார். விசிரா முதலியவை இரசாயனப் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டு, அதன் அறிக்கை நிலுவையில் உள்ளது.





சாட்சிகளின் விசாரணையில், இறந்து போன மகேஸ்வரி ஒரு பிளாஸ்டிக் வாளியில் வென்னீரும், ஒரு துண்டு, பாவாடை, விரிப்பு, சோப்புடைய சோப்புப் பெட்டி, சீயக்காய்த் தூள் அனைத்தையும் அவருடைய குளியல் அறையில் குளிப்பதற்காக வைத்திருந்ததாகக் கூறுகின்றனர்.

இதனால் மகேஸ்வரி குளிப்பதற்கு ஆயத்தமாகி, வென்னீரில் கலக்க தண்ணீர் எடுத்துவர கிணற்றிற்குச் சென்ற பொழுது கிணற்றில் தவறி விழுந்து இருக்கலாம் என்று கூறப்படுகிறது. அத்துடன் மேற்படி கிணற்றிற்கு சுற்றுச் சுவர் இல்லை. தரையிலிருந்து 2½ அடி தூரத்தில் தண்ணீர் உள்ளது. இடையில் மூன்று படிக்கற்கள் பதிக்கப்பட்டு, மூன்றாவது படிக்கல் தண்ணீரில் உள்ளது. இந்தப் படிக் கற்களில் நின்றுதான் அனைவரும் தண்ணீர் எடுப்பது வழக்கம். அவ்வாறே இறந்து போன மகேஸ்வரியும் தண்ணீர் எடுத்திருக்க வேண்டும் எனச் சொல்லப்படுகிறது.

பிரேதப் பரிசோதனையில், எந்தவித புறக்காயமோ உட்காயமோ இறந்த மகேஸ்வரியின் பிரேதத்தில் தென்படவில்லை என்பதாலும், தாக்குதலுக்குண்டான அடையாளங்கள் இல்லாமையினாலும், விசாரணை அதிகாரியால், இறப்பின் சரியான காரணத்தை அறிய முடியவில்லை. இரசாயனப் பரிசோதனையின் அறிக்கைக்காக காத்திருப்பதாலும், இறப்பின் சரியான காரணம் தெரியாததாலும் இவ்வழக்கில் மேற்கொண்டு புலன் விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகிறது. ஆகவே அவை நடவடிக்கையை ஒத்திவைத்து இதுகுறித்து விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கோள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத் தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லை என்பதால், இதற்கு இசைவு மறுக்கப் பெறுகிறது.

## 4. அறிக்கை அளித்தல். —

### விதி 107-ன் கீழ் போக்குவரத்துத்துறை அமைச்சரின் திருத்த அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 107-வது விதியின் கீழ் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் பேரவைக்கு ஒரு அறிக்கையை அளிப்பார்கள்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவ்ர் அவர்களே, 20-3-1984 அன்று நடந்த போக்குவரத்து மானியத்தின் மீது நான் பதிலளிக்கும்போது கீழ்க்கண்டவாறு பேசியிருந்தேன் :

[திரு. சு. முத்துசாமி] [1984 மார்ச் 24

'' யார், யார் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று கேட்டார்கள். நடராஜன், ராஜு, நீதிவிளங்கன், ராஜ கோபால் இப்படி ஏறத்தாழ 8 பேர்கள் பதவி நீக்கம் செய்யப் பட்டிருக்கிறார்கள்......நான் சொல்லியது ஏதோ இந்த 8 பேர்களோடு நிறுத்திவிடுவதில்லை ''

இதற்குப் பதிலாகக் கீழ்க்கண்டவாறு இருக்க வேண்டும் :—

''இப்படி ஏறத்தாழ 6 பேர்கள் பதவி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள்......நான் சொல்லியது ஏதோ இந்த 6 பேர்களோடு நிறுத்திவிடுவதில்லை. இந்த 6 பேர்களுடைய விவரம் திரு. மு. ராஜகோபாலன், காசாளர், பணி எண். 125. இவர் நிரந்தர வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார். திரு. என். ராமச்சந்திரன், உதவியாளர், பணி எண். 239, காசோலை எழுத்தர், கணக்குப்பிரிவு. இவர் நிரந்தர வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார். திரு. டி. நீதிவிளங்கள், இளநிலை கண்காணிப்பாளர், பணி எண். 295 இவர் நிரந்தர வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார். திரு. ஆர். நடராஜன், முதுநிலை கண்காணிப்பாளர், பணி எண். 50. இவர் நிரந்தர வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார். திரு. எம். ராஜு, துணை மேலாளர், கணக்கு. இவர் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார். திரு. வி. ராமநாதன், முதன்மைக் கணக்கு அலுவலர், இவர் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்.

## 5. கவன ஈர்ப்புகள்.

### (அ) வேதாரணியம் விம்கோ உப்புத் தொழிற்சாலை ( [illegible]கள் வேலை நிறுத்தம்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருவாளர்கள் எம். எஸ். மாணிக்கம், எம். செல்லமுத்து, டி. மணி, ரா. கிருஷ்ணன், ஜே. ஹேமச்சந்திரன், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. எம். எஸ். மாணிக்கம் : துணைத் தலைவர் அவர்களே, வேதாரண்யத்திலுள்ள விம்கோ உப்புத் தொழிற்சாலை மூடப்பெற்றுள்ளதால் தொழிலாளர் படும் இன்னல் குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.



1984 மார்ச் 24] [திரு. எஸ். இராகவானந்தம்]

அறிக்கை.

இத்தொழிற்சாலையில் 350 தொழிலாளர்கள் உள்ளனர்
16-2-1984 முதல் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடு
பட்டுள்ளார்கள். தொழிற்சாலை மூடப்படவில்லை. தொழி
லாளர்கள் தங்களுக்கு வாழ்க்கைச் செலவு புள்ளியோடு இணைந்த
அகவிலைப்படி தர வேண்டுமென்ற கோரிக்கையின் மீது இவ்
வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். தற்போது அவர்களுக்கு
அவர்கள் வாங்கும் ஊதியத்தின் அடிப்படையில் ஒட்டு மொத்த
மான ஒரு அகவிலைப்படி கொடுக்கப்பட்டு வருகிறது.

உப்பு உபயோகிக்கும் தொழிற்சாலைகள், உற்பத்தி செய்யப்
பட்ட பொருட்களை வாங்கியது, 1982-83 ஆம் ஆண்டில்
குறைந்து விட்டது என்றும், அதனால், இருப்புகள் பெருமளவில்
குவிந்து விட்டன என்றும் இந்நிலைமைக்கு கடுமையான மின்
வெட்டு கூட ஒரு காரணமாகும் எனவும், சிக்கனமின்றி தொழிற்
சாலையை நடத்துவதில் ஏற்பட்டுள்ள சாதகமற்ற நிலையில்,
தொழிலாளர்கள் கேட்பதைப் போல் அவர்களுக்கு வாழ்க்கைச்
செலவுடன் இணைந்த அகவிலைப்படி தர இயலாது என்றும்.
எனவே தொழிலாளர்களின் கோரிக்கையை ஏற்க இயலாது என்றும்
சமரச அதிகாரியின் முன்பு நிர்வாகம் தெரிவித்துள்ளது. இரு
தரப்பினரிடையேயும், நஞ்சாவூர் தொழிலாளர் துறை அலுவலர்
முன்பு நடந்த பேச்சு வார்த்தைகளில் ஒரு ஒப்பந்தம் ஏற்படாத
காரணத்தால், திருச்சிராப்பள்ளி தொழிலாளர் துறை துணை
ஆணையர் இத்தொழிற்தகராறில் தலையிட்டு இரு தரப்பினரு
டனும் 17-3-84 அன்று பேச்சு வார்த்தைகள் தொடரப்பட்ட
போது இரு தரப்பினரும் தங்கள் நிலைகளை எடுத்துரைத்த
னர்.

ஊதிய உயர்வு அளிக்க இயலாது என்பதும், எனினும் விலை
வாசி குறியீட்டை 1960 ஆம் ஆண்டின் அடிப்படையில் 570
புள்ளிகளுக்கு மேல் உள்ள ஒவ்வொரு ஐந்து புள்ளிகளுக்கும்
அடிப்படை சம்பளத்தில் 2.5 சதவீதம் அளிக்க இயலும் என்பதும்
நிர்வாகத்தின் நிலையாகும். மாறாக, தொழிற்சங்கம் ஊதிய
உயர்வை வற்புறுத்தியதுடன் மேற்படி விலைவாசி குறி
யீட்டில் 100 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும்
70 காசுகள் பஞ்சப்படியாக வழங்கவேண்டுமென்று கோரியது.
மேலும், கோரிக்கைகள் எழுப்பியுள்ள தொழிற்சங்கங்களில் ஒன்
றான சி.ஐ.டி.யு. சங்கம் தொழிலாளர்களுக்கு பீஸ் ரேட் கூலி
நிர்ணயித்தது சம்பந்தமான 26-9-83 அன்று தஞ்சாவூர்
தொழிலாளர் துறை அலுவலர் முன்பு தொழிற்தகராறுகள் சட்
டப் பிரிவு 12 (3)-ன் கீழ் ஏற்பட்ட ஒப்பந்தத்தை ரத்து செய்ய
வேண்டுமென்று கோரியது. இப்பிரச்னை மீது தஞ்சாவூர் தொழி
லாளர் துறை அலுவலர் தனியே நடவடிக்கை எடுத்து வருகி
றார்.

[திரு. எஸ். இராகவானந்தம்]    [1984 மார்ச் 24

பிரச்சினையின் முக்கியத்துவம் கருதி இத் தாவாவின் மீது
தொழிலாளர் துறை இணை ஆணையர் (சமரசம்), சென்னை
பேச்சு வார்த்தைகளைத் தொடர முடிவு செய்து, அது 27-3-84
அன்று மதுரையில் நடைபெற உள்ளது. இவ்விதம் பேச் மாட்-
டத்தில் பேச்சு வார்த்தைகள் நடைபெற உள்ளதை கருத்திற்
கொண்டு, திருச்சிராப்பள்ளி தொழிலாளர் துறை துணை ஆணைய
ரின் ஆலோசனையின் படி தொழிற்சங்கங்கள் 26-3-84
முதல் வேலை நிறுத்தத்தை விலக்கிக் கொண்டு தொழிலாளர்கள்
திரும்ப வேலைக்குச் செல்ல ஒப்புக் கொண்டுள்ளதாக தொழிலா
ளர் துறை ஆணையர் தெரிவித்துள்ளார்.

இவ்வேலை நிறுத்தத்தின் காரணமாக சட்டம் மற்றும் ஒழுங்கை பாதிக்கும் வகையில் எந்தவிதமான அசம்பாவிதங்களும் நடைபெறவில்லை என்றும் தொழிலாளர் துறை ஆணையர் தெரிவித்துள்ளார்.

திரு. எம். எஸ். மாணிக்கம்: தலைவர் அவர்களே, இந்த் தொழிற்சாலை 1965 ஆம் ஆண்டிலிருந்து இயங்கி வந்தாலும் இங்கே வேலை பார்ப்பவர்களில் 15 பேர் மட்டும் நிரந்தரத் தொழிலாளர்களாகவும் மற்றவர்கள் தற்காலிகத் தொழிலாளர்களாகவும் இருக்கிறார்கள். மேலும் இங்கே அதிகபட்ச சம்பளம் வாங்கக்கூடியவர்கள் 600 ரூபாய்தான் வாங்குகின்ற நிலைமை இருக்கின்றது. அந்த நிலைமையை மாற்றுவதற்காகத்தான் அவர்கள் போராட்டத்திலே [illegible] ஈடுபட்டு வேலைநிறுத்தம் செய்து வருகிறார்கள். அவர்களுக்கு மிகக் குறைந்த சம்பளம்தான் கொடுக்கப்படுகின்றது. எனவே அவர்களுக்கு அதிகப்படியான ஊதியம் கொடுக்கப்பட வேண்டும் என்ற வகையிலே அங்கே இருக்கின்ற ... பொதுமக்களும் அவர்களுக்கு ஆதரவு அளிக்கின்ற நிலைமை இருக்கின்றது. இப்படிப்பட்ட நிலைமை மட்டுமல்ல.

அந்த விம்கோ தொழிற்சாலைக்காக இருக்கக்கூடிய நிலத்திற்குக் கூட அவர்கள் மிகக் குறைந்த அளவிற்தான் கிஸ்தி தருகிறார்கள். தற்போது அந்த கிஸ்தியைக் கூட அவர்கள் கொடுக்காத நிலைமையிலே அவர்கள் ஹைக்கோர்ட்டிலே ஸ்டே வாங்கி வைத்திருக்கிறார்கள். இப்படி அதிக இலாபம் பெறுகின்ற தொழிற்சாலை அதிபர்கள் தொழிலாளர்களுக்குக் குறைந்த ஊதியத்தைத் தருவதால்தான் இப்படிப்பட்ட நிலைமை இருக்கின்றது. எனவே இதை அரசாங்கம் கவனித்து அவர்களுக்கு ஊதிய உயர்வு அளிக்கவும் தற்காலிகத் தொழிலாளர்களுக்கு நிரந்தர வேலைப் பாதுகாப்பு அளிக்கவும் அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?



1984 மார்ச் 24]

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, இதைப்பற்றி எல்லாம் சமரசப் பேச்சுவார்த்தையை Joint Commissioner of Labour Conciliation. அவர்கள் 27-3-1984 அன்று எடுத்துக்கொள்ள இருக்கிறார்கள். ஆகவே பேச்சுவார்த்தை நடக்கும். அப்படி 27-3-1984 அன்று பேச்சுவார்த்தை நடக்க இருக்கின்ற காரணத்தால் வேலை நிறுத்தத்தைத் பின் வாங்கிக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டதற்கிணங்க 26-3-84 முதல் அவர்கள் வேலை நிறுத்தத்தை விலக்கிக் கொண்டு தொழிலாளர்கள் திரும்ப வேலைக்குச் செல்ல ஒப்புக்கொண்டுள்ளார்கள்' என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 11.00)

திரு ஏ. மணி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த உப்புத் தொழிலாளர்கள் சம்பந்தமாக ஏற்கனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சில தகவல்களை இங்கே சொல்லியிருக்கின்றார்கள். இப்பொழுது மட்டுமல்ல, தூத்துக்குடியில் கூட சுமார் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். மத்திய அரசாங்கத்தினுடைய சால்ட் கமிஷன் ரூ. 16½ கோடி செஸ் நிதியாக இன்று பெற்றிருக்கிறது. எனவே, தொழிலாளர்களுக்கு நிவாரணம் தரும் வகையில், அதனைப் பெற்றுக் கொடுக்க தமிழக அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கும் மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற பிரச்சினைக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. இந்தக் கவன ஈர்ப்புப் பிரச்சினை தொழிலாளர் சம்பந்தப்பட்ட பிரச்சினை, 27-3-84 அன்று மதுரையிலே கன்சிலியேஷன் நல்ல உயர் பதவியிலே இருக்க கூடிய இணை ஆணையாளர் (சமரசம்) அவர்களால் நடத்தப்பட இருக்கிறது. அதையொட்டி தொழிலாளர்களே வேலை நிறுத்தத்தைப் பின்வாங்கிக் கொண்டு, 26 ஆம் தேதியிலிருந்து வேலைக்குப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அந்தப் பேச்சு வார்த்தையில் நல்ல முறையில் ஒரு ஒப்பந்தம் ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. ஜெ. ஜெயச்சந்திரன்: பேரவைத்துணைத் தலைவர் அவர்களே, ஒரு நல்ல முடிவை ஏற்படுத்த வேண்டுமென்ற எண்ணத்துடன் இந்தத் தொழிலாளர்கள் பேச்சு வார்த்தை முடிவு செய்யப்பட்டிருக்கிறது என்ற காரணத்தாலே, வேலை நிறுத்தம் வாபஸ் பண்ணப்பட்டிருக்கிறது. அந்தப் பின்னணியை கணக்கில் எடுத்துக்கொண்டு அரசே 12,265 ஏக்கர் நிலத்தை ரூ. 55,192 ஒரு ஆண்டுக் கட்டணமாக வசூலித்து, சில வசதிகளை அந்த நிறுவனத்திற்குச் செய்து கொடுத்திருக்கிறது என்ற காரணத்தாலேயும், மிகப் பெரிய மல்ட்டி நேஷனல் கம்பெனி

[திரு ஜே. ஹேமச்சந்திரன்] [1984 மார்ச் 24

இந்த கம்பெனி என்ற காரணத்தாலேயும், அவர்களுக்கு ஊதிய உயர்வு கொடுப்பதற்கும் பஞ்சப்படி உயர்வு கொடுப்பதற்கும் பேயிங் கபாசிட்டி இருக்கிறது என்ற காரணத்தாலும் அருகாமையிலே உள்ள மேட்டூர் கெமிக்கல்ஸ் கம்பெனி இன்று உயர்ந்த டி.ஏ. கொடுத்துக் கொண்டிருக்கிறது என்ற பின்னணியை எடுத்துக் கொண்டும், உயர்ந்து கொண்டிருக்கிற விலைவாசியைக் கணக்கில் எடுத்துக் கொண்டும், இத்தொழிற்சாலைக்கு அருகாமையில் உள்ள கம்பெனிகள் கொடுப்பதைப் போல உயர்ந்த டி.ஏ. கொடுப்பதற்கு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களிடம் உள்ள பிரத்தியேகமான இன்புளுயன்சை உபயோகித்து, இந்தத் தொழிலாளர்களுக்கு உதவி செய்யக் கூடிய முறையில் செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இவைகளைப் பற்றியெல்லாம் சமரசப் பேச்சு வார்த்தையின்போது, திரு. ஹேமச்சந்திரன் சொன்ன பிரச்சினைகள், இதை விட இன்னும் ஆதாரத்தோடு, விவரங்களெல்லாம் தெரிந்த தலைவர்கள்தான் தொழிற் சங்கம் சார்பாக சமரச பேச்சு வார்த்தையில் கலந்து கொள்வார்கள். நிர்வாகத்தின் சார்பில் சில பிரச்சினைகள் சொல்வார்கள். இரண்டையும் சீர்தூக்கிப் பார்த்து, இரு சாரரையும் நெருக்கமாகக் கொண்டு ஒரு ஒப்பந்தம் கொண்டு வருவதற்கு நல்ல சீனியர் ஆபீசரே போகின்ற காரணத்தால் அங்கே ஒரு நல்ல ஒப்பந்தம் வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற செழியன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையிலே ஒரு விஷயம் சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது பீஸ் ரேட் சம்பந்தமாக போடப்பட்ட 12 (3) செட்டில்மென்ட்டை மாற்றி அமைக்க வேண்டுமென்ற ஒரு கோரிக்கை வைக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. 12 (3) செட்டில்மென்ட் போடும் போது மெஜாரிட்டி தொழிலாளர் பிரதிநிதித்துவம் இருக்கக் கூடிய தொழிற்சங்கமா என்று பரிசீலித்துத்தான் ஒப்பந்தம் போடுவது வழக்கம் ; அதுதான் மரபு என்று கூட அமைச்சர் அவர்கள் ஒத்துக் கொண்டார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையிலே இங்கே 12 (3) செட்டில்மெண்ட் மெஜாரிட்டி தொழிலாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற தொழிற்சங்கம் தானா என்பதைப் பரிசீலித்து அந்த ஒப்பந்தம் போடப்பட்டதா? இப்பொழுது மெஜாரிட்டி தொழிலாளர்கள் நாங்கள் என்று ஏற்றுக் கொள்ள முடியாது என்று அதை மறுத்திருக்கிறார்களே, அதன் அடிப்படையிலே அது ரத்து செய்யப்பட்டு ஒரு நியாயமான உடன்பாடு வர அரசாங்கம் முயற்சிக்குமா ?



1984 மார்ச் 24]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனக்குக் கொடுக்கப் பட்டிருக்கிற குறிப்பில் மெஜாரிட்டி தொழிற்சங்கம் இதை எதிர்க் கிறது என்று இல்லை. சி.ஐ.டி.யூ. சங்கம் 26-9-1983 ஆம் தேதி ஏற்பட்ட 12 (3) ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ள மாட்டோம். அது மாற்றியமைக்கப்பட வேண்டுமென்று சொல்கிறார்கள் என்றுதான் என்னிடத்திலே தகவல் இருக்கிறது. அது செப்ப ரேட் இஷ்யூ. சம்பள உயர்வு, பஞ்சப்படி உயர்வு என்பது தனி இஷ்யூ. அதைப் பற்றிய கன்சிலியேஷன் மதுரையில் நடக்கிறது. 12 (3) செட்டில்மென்ட் பற்றி சி.ஐ.டி.யூ. சங்கம் சொல்வதை தஞ்சாவூர் தொழிலாளர் துறை அலுவலர் பரிசீலனை செய்வார்

(ஆ) மதுரைக்கும் மானாமதுரைக்கும் இடைப்பட்டுள்ள கண்மாய் களுக்கு வைகை அணையிலிருந்து தண்ணீர் விடுதல்.

திரு. செ. சிவசாமி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர் களே, ''மதுரைக்கும், மானாமதுரைக்கும் இடைப்பட்டுள்ள கண்மாய்களில் வைகை அணையின் தண்ணீரை விட்டு, நிரப்ப வேண்டிய அவசியம் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்ச ரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட றி ; ர க ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

மதுரைக்கும் மானாமதுரைக்கும் இடையில் வைகை நீர் வழங்கப்படும் கண்கமாய்களுக்கு வைகை அணையிலிருந்து சிறப் பாக தண்ணீர் விடுதல் (Special Release) மூலம் தண்ணீர் வழங்கப்படுகிறது. இப்படி சிறப்பாக தண்ணீர் விடுதல் முறையில் வைகை அணையிலிருந்து மேற் கூறப்பட்ட கண்மாய்களை நிரப்புவதற்கு வழங்கப்படும் பாசன நீர் வைகை அணையில் தேக்கி வைக்கப்பட்டிருக்கும் வைகை கணக்குப் பற்றிலிருந்து (Vaigai Credit) வழங்கப்படுகிறது. இப்படி வழங்கப்படும் நீர் இரண்டு நிபந்தனைகளுக்கு உட்பட்டு வழங் கப்படுகிறது. (1) வைகை நீர் வழங்கப்படும் கண்மாய்களின் கீழ் உள்ள ஆயக்கட்டு நிலங்களின் பாசன நீர்த்தேவை (2) வைகை அணையில் வைகை கணக்குப் பற்றில் (Vaigai Credit) இருக்கும் நீரின் அளவு. வைகைக் கணக்குப் பற்றில் போதுமான நீர் சேர்ந்தபிறகு தான் இந்தக் கண்மாய்களுக்கு சிறப்பு தண்ணீர் விடுதல் மூலம் நீர் வழங்கப்படுகிறது. இந்த சிறப்பு தண்ணீர் விடுதல் பெரியாறு வைகை கோட்ட நிர்வாகப் பொறியாளரால் மதுரை மற்றும் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் களின் ஒத்திசைவைப் பெற்று செயல்படுத்தப்படுகிறது.

வைகை நீர்த் தேக்கத்தின் மொத்தக் கொள்ளளவில் (6,800 மில்லியன் கன அடி) ஒரு பகுதி பெரியாறு மூலமாகவும் மற்றொரு பகுதி வைகையின் இயற்கை நீர் வரத்து மூலமாகவும் பெறப்படுகிறது. வைகை அணை அமைக்கப்பட்ட காலத்தில் அந்த அணையின் மொத்த கொள்ளளவில் 4,000 மில்லியன் கன அடி பெரியாறு கணக்குப் பற்று என்றும் 2,800 மில்லியன் கன அடி வைகை கணக்குப் பற்று என்றும் நிர்ணயிக்கப்பட்டது.

திரு. செ. சிவசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வைகை பாசன கண்மாய்களுக்கு சிறப்பாக தண்ணீர் விடுதலைப் பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் கடந்த 7, 8 தேதிகள் வரையில் அந்தப் பகுதி தண்ணீர் இல்லாத பகுதியாக காட்சியளித்தது. தஞ்சாவூர் ஜில்லாவிலே கடுமையான வெள்ளம் ஏற்பட்ட போது அந்தப் பகுதி முழுவதும் வரண்டு இருந்தது. தண்ணீர் வேண்டுமென்று கேட்கக் கூடிய காலத்தில் தண்ணீர் விட முடியாமல் இருந்ததை அமைச்சர் அவர்கள் அறிவார்கள் என்று நினைக்கிறேன். இந்த வரசனூர் அணை, பாச்சனூர் அணை ஆகிய இரண்டு அணைக் கட்டுகள் மூலமாக கிட்டத்தட்ட ஒரு லட்சத்து 50 ஆயிரம் ஏக்கர்களுக்கு தண்ணீர் பாசனம் செய்யப்படுகிற அமைப்புகள் இருந்தாலும் கூட அந்தப் பகுதியில் தண்ணீர் கிடைப்பதில்லை. ஆனால் தண்ணீர் விடக்கூடிய காலத்தில் பாரபட்சமாக விடப்படுவதன் காரணமாக, அந்தப் பகுதியில் ஒரு பகுதியில் அதிகமான தண்ணீரும், இன்னொரு பகுதியில் குறைவான தண்ணீரும் விடப்படுவதன் காரணமாக பெரும் பகுதி கண்மாய் சரியானபடி பெருகுவதில்லை. அந்த நிலைமையை மாற்றி தண்ணீர் விடுகிறபோது எல்லாக் கண்மாய்களுக்கும் ஏக்கர் விகிதாச்சாரம் அடிப்படையில் முறைப்படுத்தி தண்ணீர் விடப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன். அத்தோடு இப்போது தான் விவசாயம் செய்ய அங்கே ஆரம்பித்திருக்கிறார்கள். ஆகவே மேலும் ஒரு ரிலீஸ் தண்ணீர் கொடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் முன்பே சொன்னதைப் போல ஒரு சில விதிமுறைகளுக்கு உட்பட்டு தான் இந்தச் சிறப்பு தண்ணீர் விடுதல் மேற்கொள்ளப்படுகிறது. அந்த முறையில்தான் இப்போது மானாமதுரைக்கும் மதுரைக்கும் இடையே உள்ள பகுதிகளில் உள்ள கண்மாய்களுக்கு தண்ணீர் விடப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆகவே நிச்சயமாக விதிமுறைகளுக்கு உட்பட்டு தண்ணீர் விடப்படும்.

திரு. செ. சிவசாமி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தண்ணீர் விடக்கூடிய காலத்திலும், சரி, வெள்ளம் வருகிற போதும் சரி, அங்கே கால்வாய்களை அகலப்படுத்தாமல், ஆழப்படுத்தாமல் இருப்பதன் காரணமாகவும், 1978-79-ல் ஏற்பட்ட





உடைப்புகளை இன்று வரையிலும் அடைக்காமல் இருப்பதன் காரணமாகவும், தண்ணீர் சரியாக வருவதில்லை. அந்த உடைப்புகளை உடனடியாக அடைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 11-10)

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உடைப்புகளைப் பொறுத்தவரையில், உடனடியாக அந்த உடைப்புகள் மூடப்பட்டுக் கொண்டு வருகின்றன. அதற்காக இப்போது தனியாக வெள்ளத் தடுப்புக்கு என்று சிறப்புத் தலைமைப் பொறியாளர் ஒருவரைக் கூட தமிழக அரசு நியமித்து இருக்கிறது. ஆகவே, உடைப்புகளைப் பழுதுபார்க்கும் பணி தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

6. வரவு-செலவுத் திட்டம் 1984-85— மானியக் கோரிக்கைகள்—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண். 24—தொழில்கள்.

மாண்புமிகு திரு. இ. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 24—தொழில்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,30,12,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்.''

திரு. எஸ். சிவராமன் : துணைத் தலைவர், அவர்களே, தென்னாற்காடு மாவட்டத்தில் சர்க்கரை ஆலைகள் அதிகமாக இருப்பதால், கரும்புச் சக்கையைக் கொண்டும், வைக்கோல் அதிகமாக இருப்பதாலும் தென் ஆற்காடு மாவட்டத்தில் ஒரு காகிதத் தொழிற்சாலை அமைப்பது குறித்து. விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண். 24—தொழில்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 2,30,12,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. பொ. சு. திருவேங்கடம் : துணைத் தலைவர் அவர்களே, வடாற்காடு போளூர் வட்டப் பகுதியில் கூட்டுறவுத் துறையில் ஒரு சக்கரை ஆலை ஏற்படுத்தி அப் பகுதி விவசாயிகளின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றி வைக்க வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 24—தொழில்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 2,30,12,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. டி. மணி: துணைத் தலைவர் அவர்களே, முந்திரி ஆலைகளில் பணிபுரியும் அனைத்துத் தொழிலாளர்களுக்கும் கை உறை போன்ற பாதுகாப்பு சாதனங்களும் மற்றும் சோப்பு, எண்ணெய் போன்றவைகளும் வழங்க வகை செய்வது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழி கிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 24—தொழில்கள் என்ற தலைப் பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 2,30,12,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. எம். ஆறுமுகம்: துணைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம் அவினாசி வட்டத்தில் ஒரு கூட்டுறவு நூற் பாலை உருவாக்கித் தரவேண்டும் என விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 24—தொழில்கள் என்ற தலைப் பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 2,30,12,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

(ஆ) கோரிக்கை எண். 50—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

''மானியக் கோரிக்கை எண். 50—தொழில் வளர்ச்சிக் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 16,11,30,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்.''

THIRU N.S.V. CHITHAN: Sir, to discuss policy, I move—'That the allotment of Rs. 16,11,30,000 under Demand No. 50 Capital Outlay on Industrial Development be reduced by Rs. 100.

திரு. சு. பாலன்: துணைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:—

''மானியக் கோரிக்கை எண். 50—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 16, 11,30,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்.''

திரு. தி. கா. நல்லப்பன்: துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் தொழில் வளர்ச்சிக்கு மத்திய அரசின் நிதித் தொகை யிலிருந்து அதிகம் கொடுக்கவேண்டும் என்பது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:—





''மானியக் கோரிக்கை எண் 50—தொழில் வளர்ச்சிக் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 16,11,30,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப்பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொழில் கொள்கை திட்டங்கள் என்பது பற்றியும், தொழில் துறை செயல்முறைகள் பற்றியும் குறிப்புகள், விளக்கங்கள் ** பேரவைமுன் வைக்கப்பட்டிருக் கின்றன. அவற்றையெல்லாம் நான் படித்ததாக சபைக் குறிப்பிலே ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். மாண்புமிகு உறுப்பினர்களின் ஆலோசனைகளையும் கருத்துக்களையும் கேட்டபின்பு இறுதியாக என் கருத்துக்களை எடுத்து வைக்க விரும்புகிறேன்.

திரு. எஸ். சிவராமன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, தொழில்கள், தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்புகளின் கீழ் தமிழக அரசால் கொண்டுவரப்பட்டிருக்கிற மானியக் கோரிக்கைகள் மீது எங்களுடைய கட்சியின் சார்பாக ஒரு சில வார்த்தைகள் பேச வாய்ப்பளித்ததற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைய தினம் நாட்டிலே வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிறவர்களுக்கு எல்லாம் நாம் உதவி செய்ய வேண்டுமென்ற அடிப்படையிலே, உணவு இல்லாதவர்களுக்கு உணவு அளிக்க வேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையில் அவர்களுக்கு வேலைவாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்து, அவர்களுடைய பசிப்பிணியை நீக்க நல்லமுறையிலே வழிவகைகளைச் செய்து கொடுத்தால் சிறப்பாக இருக்கும். அந்த அடிப்படையில்தான் இன்றைய தினம் நாட்டிலே தொழில்துறையை உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். அந்த அடிப்படையில் பார்க்கும் போது இன்றைக்கு நடந்துகொண்டிருக்கிற தொழில்களைத் தான் இந்த கொள்கை விளக்கக் குறிப்பில் சொல்லியிருக்கிறார் களே தவிர புதிதாக என்ன திட்டங்கள் நிறைவேற்றப்பட இருக்கின்றன என்றோ, புதிதாக என்ன கொள்கையை உருவாக்கப் போகிறோம் என்றோ ஒன்றும் சொல்லப்படவில்லை.

**450—549-ம் பக்கங்களில் இணைப்பு II-ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

ஏற்கனவே இந்தத் தொழில் துறையில் 4 ஆண்டு காலம் அமைச்சராக இருந்த இளைஞர் என்ன காரணத்தாலோ வேறு துறைக்கு மாற்றப்பட்டிருக்கிறார். அவர் நல்லமுறையில் செயல்படவில்லையா என்று தெரியவில்லை. அதோடு பொது மக்கள் மத்தியிலே தவறான கருத்து நிலவுகிறது. ஆகவே, மாற்றியதன் மர்மம் என்ன என்று தெரியவில்லை.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

மாண்புமிகு திரு. பி. பொன்னையன் : மாற்றுத் தலைவரவர்களே, முன்னாள் தொழில் துறை அமைச்சர் மாற்றப்பட்டதற்கு ஏதோ காரணம் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். அப்படி எந்த விதமான காரணமும் இல்லை.

Change of portfolio is routine and common

என்ற முறையிலே மாற்றப்பட்டிருக்கிறார். குறிப்பாக கூட்டுறவுத் துறையில் தேர்தலை நடத்தி, ஜனநாயக அமைப்பிலே நல்லமுறையில் செயல்படுத்தும் பெரும் பொறுப்பைச் செய்கின்ற ஒரு மாபெரும் பொறுப்பு அவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். சிவராமன் : மாற்றுத் தலைவரவர்களே, தேர்தல்களை நடத்தி அந்தத் துறையை நல்லமுறையிலே நடத்துவதற்காக மாற்றப்பட்டிருக்கிறார் என்று சொன்னார்கள். ஆனால் தேர்தல் இப்போது நடத்தப்படுவதாகத் தெரியவில்லை இருந்தாலும் புதிதாகத் தொழில் துறையை ஏற்றிருக்கிற அமைச்சர் சுறுசுறுப்பானவர், இளைஞர். நல்லமுறையில் செயல்படுவார் என்பதில் சந்தேகம் இல்லை. கூட்டுறவுத்துறையில் தேர்தலை நடத்துவதோடு மட்டுமல்லாமல், தொழில் துறையை நல்லமுறையில் மேம்பாடு செய்து, இந்தத் துறையை நல்லமுறையில் இயங்கச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றையதினம் தொழில் துறை எப்படி செயல்படுகிறது என்று பார்த்தால், தினசரி செய்தித்தாளைப் பார்த்தால் நமக்குத் தெரியும். தொழிலாளர்கள் ஸ்டிரைக் என்று சொல்லி பல ஆலைகள் மூடப்பட்டு வருகின்றன. அதனால் தொழிலாளர்கள் இன்றைக்கு பெருமளவுக்கு அவதிப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய பெண்டு, பிள்ளைகள் எல்லாம் பட்டினி கிடக்கிறார்கள். ஆகவே, தொழில் துறையை முன்னேற்ற வேண்டுமென்றால் ஒரு நிலையான கொள்கையை நாம் உருவாக்கிக்கொள்ள வேண்டும். அப்படி ஒரு நிலையான கொள்கை இல்லாத காரணத்தால் இன்றைக்கு தொழில்கள் சிறப்பாக நடைபெறாமல், தொழிலாளர்கள் ஸ்டிரைக் செய்யும் நிலைமை எல்லாம் இருக்கிறது. அரசாங்கத்தை அணுகி இருக்கிற நிலைமைகளைப் பார்க்கும்போது தொழில் நடக்குமா, நடக்காதா என்பது சந்தேகமாக இருக்கிறது.



தொழில் நடத்துகிறவர்கள் வாங்கிய கடனுக்கு அதிக வட்டி கட்டுகிறார்கள். அதன் காரணமாகவும், தொழில் முடக்கம் ஏற்படுவதன் காரணமாகவும் தொழிற்சாலைகளை மூடுகின்ற சூழ்நிலை ஏற்படுகிறது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் சென்னையை அடுத்துள்ள வேளச்சேரியில் உள்ள ராணி மோட்டார்ஸ் தொழிற்சாலை 24—1—1984 லிருந்து மூடிக்கிடக்கிறது. அதனால் ஆயிரத்திற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் வேலையில்லாமல், தங்களுடைய குடும்பத்தோடு அவர்களும் பட்டினி கிடக்கிறார்கள். அவர்களுக்கு பெருத்த பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. விரைவிலே அந்தத் தொழிற்சாலையைத் திறக்க ஏற்பாடு செய்ய வேண்டும். இந்தத் தொழிற்சாலை கடந்த ஆண்டு மே மாதம் 25-ம் தேதியிலிருந்து ஆகஸ்ட் 18 வரை மூடப்பட்டிருந்தது. அப்போது வேலை நிறுத்தம் நடைபெற்று, 3 மாதமாக அந்தத் தொழிற்சாலை மூடப்பட்டது. இன்றையதினம் இரண்டு மாதமாக மூடிக்கிடக்கிறது. அந்தத் தொழிற்சாலையை உடனே திறப்பதற்கும், தொழிலாளர்கள் வேலை செய்வதற்கும் அரசாங்கம் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழில் துறை முன்னேற்றத்தில் நம்முடைய அரசாங்கம் சரியான நடவடிக்கை எடுக்கவில்லை என்று நான் கருதுகிறேன். அதனால் புதிய தொழில்கள் தொடங்க வாய்ப்பும் இல்லை; இருக்கின்ற தொழில்களும் சரியாக நடைபெறவில்லை. சில தொழிலதிபர்கள் சலுகைகள் இல்லாத காரணத்தால் இங்கிருந்து ஓடிவிடுகின்ற நிலைமை இருக்கிறது. தொழில் தொடங்குவதற்கு கொடுக்கப்படுகின்ற நிவாரணம் கிடைப்பதில் தடை ஏற்படுகிறது. இப்படி எல்லாம் இருந்தால் தொழில் துறை நல்லமுறையில் செயல்பட முடியுமா என்பதை அரசாங்கம் சிந்திக்கவேண்டும்.

புதிதாக பெரிய தொழில்களைத் தொடங்குவதற்கு நம்மிடம் எந்தவிதமான திட்டமும் இல்லை. நாம் இப்போது நடத்திக் கொண்டிருப்பது சத்துணவுத் தொழிற்சாலைகள்தான். நான் சத்துணவுத் திட்டத்தைப் பற்றி குறைகூறவில்லை. சத்துணவு இல்லாத காரணத்தால் குழந்தைகள் நன்றாகப் படிக்க முடியவில்லை என்ற அடிப்படையில் சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தோம். தொழிலாளர்களுக்கு போதுமான வருமானம் இல்லாத காரணத்தால்தான், அவர்கள் தொழில் செய்ய வாய்ப்பு இல்லாத காரணத்தால்தான், குழந்தைகளுக்கு நல்ல உணவு கொடுக்க முடியவில்லை. இதை அரசாங்கம் புரிந்துகொள்ளவேண்டும். தொழிற்சாலைகளைத் தொடங்கினால் வேலை வாய்ப்பு கிடைத்து, வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்கு வேலையும் கிடைத்து, வருமானமும் கூடும். அப்படி இருந்தால் அவர்களுடைய குழந்தைகளுக்கு நல்ல உணவு கிடைக்கும்; படிக்க வைக்க நல்ல வசதி ஏற்படும். அவர்களுடைய குழந்தைகளுக்கு நல்ல வசதி வாய்ப்புக்கும், அந்தக் குழந்தைகள் முன்னேற்றத்திற்கும் வழிவகை இருக்கும்.

(முற்பகல் 11-20)

ஆகவே வருமானம் இல்லாத காரணத்தினால்தான் இன்றைய தினம் சத்துணவுத் தொழிற்சாலையை நாம் ஆரம்பித்திருக் கிறோம். சத்துணவுத் தொழிற்சாலையை நடத்துவதோடு பெரிய தொழிற்சாலையை ஆரம்பித்து, அவர்கள் வேலை வாய்ப்பு பெறுவதற்கும், நாட்டினுடைய பொருளாதாரம் வளர்ச்சி அடையவும் வழிவகை காணவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தென்னாற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அதிக மான சர்க்கரை ஆலைகள், கூட்டுறவுத் துறை சர்க்கரை ஆலைகள், தனியார்த்துறை சர்க்கரை ஆலைகள் இருந்து கொண்டிருக்கின்றன. அந்த ஆலைகளைப் பொறுத்தவரையில், அங்கே நிறைய கழிவுப் பொருள்கள் கிடைக்கின்றன. அந்த மாவட்டத்தில் அதிக அளவில் நெல் பயிரிடுவதனால், வைக் கோல் அதிகமாக கிடைக்கிறது. எனவே இந்த இரண்டு சாமான் களையும் வைத்து, ஒரு காகித தொழிற்சாலையை நிறுவ வேண்டும் என்று வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்தோம் கோரிக்கைகளை வைத்திருக்கிறோம். அதுகுறித்து அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை. எனவே பின்தங்கிய அந்த மாவட்டத்திலே காகிதத் தொழிற்சாலை ஒன்றை நிறுவவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு அந்த மாவட்டத்திலே நிறைய மரவள்ளிக் கிழங்கு கிடைக்கின்ற காரணத்தினால், குளூகோஸ் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை ஆரம்பிக்கலாம்.

கள்ளக்குறிச்சியில் சர்க்கரை ஆலை இருக்கிறது. 1967 ஆம் ஆண்டுமுதல் அந்தச் சர்க்கரை ஆலை இயங்கிக்கொண்டு வருகிறது. இன்றையதினம் அந்தக் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை சுமார் ரூ. 40 கோடிக்கும் மேலாக கடனிலே மூழ்கிக்கொண் டிருக்கிறது. ரூ. 1¾ கோடியிலே ஆரம்பிக்கப்பட்ட அந்தச் சர்க்கரை ஆலை ரூ. 40 கோடி கடனில் மூழ்கிக்கொண்டிருக்கிறது என்றால் அதற்கு என்ன காரணம்? அங்குள்ள தனி அதிகாரி தன்னிச்சையாகவும், சுயநலப்போக்காகவும் நடந்துகொண்டிருப் பதால், உற்பத்தி அதிகம் ஆகவில்லை. இங்கே கொடுக்கப் பட்டிருக்கின்ற புள்ளிவிவரத்தின்படி அறவை 2,000டன் என்றி ருக்கிறது. ஆனால் 1,100 டன், 1,200 டன் தான் அறைக் கிறார்கள். டிரிப்யூலா என்ற யந்திரம் ஒன்று வாங்கப்பட்டது. சர்க்கரைக் கட்டுமானத்தை அதிகமாக்கவேண்டுமென்று அதை வாங்கினார்கள். ஆனால் சர்க்கரை கட்டுமானம் அதிக மாகக் கிடைக்கவில்லை. ஆனால் ரூ. 40 கோடி கடன் கட்டு மானம்தான் இன்று கிடைத்தது. அதுகுறித்து சென்றமாதத்திற்கு முன் அமைச்சர் அவர்களிடத்திலும், முதலமைச்சர் அவர்கள் இடத்திலும், அந்த விவசாயப் பெருங்குடிமக்கள் சார்பாக ஒரு





குற்றச்சாட்டைக் கொடுத்திருந்தோம். சர்க்கரைத்துறைத் தலைவருக்கும் கொடுத்திருந்தோம். அவரும் 3 மணி நேரம் அந்தச் சர்க்கரை ஆலையின் தனி அதிகாரியை வைத்துக்கொண்டு வாதாடினார்கள். அவரும் தலையில் அடித்துக்கொண்டு இவ் வளவு மோசமாக நடத்திக்கொண்டிருக்கிறார்களே என்று சொல்லிவிட்டு, அறிவுரைகளைக் கூறி அனுப்பினார்கள். அப்படி யிருந்தும், உடனடியாக அந்த அதிகாரிகள்மீது தக்க நட வடிக்கை எடுக்காமலும், அவரை மாற்றம் செய்யாமலும் இருக் கிறார்கள். அந்தச் சர்க்கரை ஆலையின் தனி அதிகாரி அந்த புதிய உத்தரவின் மூலமாக பதவி ஏற்றுக் கொள்ளும்போது அவருடைய வீட்டு சாமான்களை ஏற்றிச் செல்வதற்கு சர்க்கரை ஆலையிலிருந்து தனியாக ஒரு வண்டி கொடுக்கப்பட்டது. அவரும் சர்க்கரை ஆலையிலிருந்து அனுப்பப்பட்ட வண்டியிலே சாமான் களை எடுத்துச்சென்று விட்டார். பிறகு அவர் வேறு ஒரு தனியார்த் துறையைச் சேர்ந்த லாரி ஓனரிடத்திலே லாரி வாடகை யாகக் கொடுத்ததாக ரூ. 500ஐ ஆலையிலிருந்து பெற்றிருக் கிறார். இப்படி லாரி வாடகையின் மூலமாக ரூ. 500 பெறக்கூடிய அந்த தனி அதிகாரி பெரிய நிறுவனத்திற்குச் சென்றால், எந்த அளவிற்கு ஊழல் செய்வார்கள் என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அடுத்து டி.வீ. டவர் கட்டுவதற்காக ரூ. 25,000-ஐ ஏற்கனவே செலவு செய்தார்கள். அவருடைய வீட்டிற்காக என்று அந்த ஆலையிலே இருக்கக் கூடிய இரும்புச் சாமான்களை எல்லாம் பயன்படுத்தி ரூ. 25,000 செலவில் தன்னுடைய வீட்டிற்காக டி.வீ. டவர் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். அந்த அளவிற்கு மோசமாக நடந்து கொண்ட அவர் மீது எந்தவிதமான நட வடிக்கையும் எடுக்கப்படவில்லை. இந்த குற்றச்சாட்டைக் கொடுத்தும் அதைப் பார்த்துக்கொண்டு, ஆலையிலே சென்று 'பைல்களை' திருத்திக் கொண்டிருக்கிறார். இங்கே கேட்டால் விசாரணை நடப்பதாகச் சொல்கிறார்கள். திருத்திய பிறகு அவர் நிரபராதி என்று சொல்வதற்காகவா இந்த வேலையைச் செய்துகொண்டிருக் கிறார்கள். எனவே உடனடியாக அவரை மாற்றம் செய்யவேண்டும் என்றும், அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் இந்த நேரத்தில் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றையதினம் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், கச்சாப் பொருள்கள் நிறைய கிடைத்துக்கொண்டிருக்கின்றன. உதாரணத்திற்குச் சொல்லவேண்டு மென்றால், கல்ராயன் மலைப் பகுதியில் ஆதிவாசிகளும், மலைவாசிகளும் நிறைய இருக்கிறார்கள். அங்கே கூட்டுத் துறையின் மூலமாக கடுக்காய் வாங்குகிறார்கள். 1976 ஆம் ஆண்டு இருந்த மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், மலைப் பகுதி மக்களுக்கு ஏதாவது ஒரு தொழிற்சாலையை உரு வாக்க வேண்டுமென்று கருதி, கடுக்காய்த் தொழிற்சாலையை உருவாக்கலாம்

[திரு. எஸ். சிவராமன்] [1984 மார்ச் 24

என்று அரசுக்குப் பரிந்துரை செய்தார்கள். இந்தச் சட்டமன்றத்திலேகூட கடுக்காய்த் தொழிற்சாலை ஒன்றை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்கப் பட்டது. ஆனால் அதுபோன்ற ஒரு அறிக்கை வரவேயில்லை என்று சொல்லி விட்டார்கள். அப்படியென்றால் அந்த அறிக்கை எங்கே போனது என்று தெரியவில்லை. எனவே மீண்டும் பரிசீலனை செய்து அந்த மலைவாழ் மக்க ளுக்காக கடுக்காய்த் தொழிற்சாலையை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றையதினம் திண்டிவனம் பகுதியிலே தென் ஆர்க்காடு மாவட்டத்தில் கறுப்புக் கற்கள் நிறைய கிடைக்கின்றன. அந்தக் கறுப்புக் கற்களை வைத்துக்கொண்டு, தென் ஆர்க்காடு மாவட்டத்தில் சிறிய கறுப்புக் கற்கள் தொழிற்சாலையை ஏற்படுத்த வேண்டும் என்று, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பரிந்துரை செய்திருக்கிறார்கள். ஆனால் இதுவரையில் அதற்கான முயற்சிகள் எதுவும் நடைபெறவில்லை.

அத்தோடு கடலை உற்பத்தியிலே அது மூன்றாவது இடத்தைப் பெற்று இருக்கிறது. எனவே அந்தக் கடலையை வைத்து, எண்ணெய் ஆலையைத் தொடங்குவதற்கு அரசாங்கம் முன்வர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள் கிறேன்.

இன்றையதினம் திருச்சி மாவட்டத்திலே [illegible] பொருள்கள் நிறையக் கிடைக்கின்றன. அங்கே [illegible] மரங்கள் அதிகமாக இருக்கின்றன. நெசவுத் தொழில் செய்வதற்கு வேண்டிய சாமான்களைத் தயாரிப் பதற்கு, [illegible] தயாரிப்பதற்கு அந்த [illegible] மரங்கள் பயன் படும். எனவே அங்கே ஒரு தொழிற்சாலையை ஆரம்பிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இந்த மாவட்டத்தில் தொழில்கள் அதிகமாக இல்லாத காரணத்தால், அங்கே ஒரு பெரிய தொழிற்சாலையை ஆரம்பிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இப்படி பல தொழிற் சாலைகளை நிறுவினால், அங்கே இருக்கின்ற மக்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும். அவர்களுக்கும் வருமானம் கிடைப்பதற்கு வாய்ப்புகள் ஏற் படும். எனவே அதைச் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். நாம் அரைத்த மாவையே அரைப்பது போன்று சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்வது என்பதும் அதைக் கேட்டுக்கொண்டிருப்பதும் [illegible] அல்ல என்பதைக் கூறிக்கொள்கிறேன். எனவே புதிய புதிய தொழிற்சாலை களை உருவாக்க வேண்டும். புதிய தொழில் கொள்கையை தீட்ட வேண்டும். தொழில் செய்யக்கூடியவர்களுக்கு ஊக்கம் அளிக்கின்ற வகையில் நடவ டிக்கைகள் எடுக்க வேண்டும்.



1984 மார்ச் 24] [திரு. எஸ். சிவராமன்]

அடுத்து ஹோசூரிலே இன்றையதினம் தொழில் துறையின் மூலமாக சிறு சிறு தொழில் செய்பவர்களுக்கு தொழிற்சாலைகள் கட்டப்பட்டு, தொழிற் கூடங்கள் கட்டப்பட்டு, முடங்கிக் கிடக்கின்றன. ஆகவே இதனால் அரசின் பொருளாதாரம் முடங்கிக் கிடப்பதோடு, கடன் வாங்கியவர்களும், அதற்கு அதிகமான வட்டியைக் கொடுத்துக்கொண்டு பாழாகிக்கொண்டிருக்கக்கூடிய நிலைமை இருக்கின்றது. எனவே அந்தத் தொழிற்கூடங்களை சிறு தொழில்கள் நடத்துபவர்களுக்கு அரசு உடனடியாக ஒதுக்கித் தர முன்வர வேண்டும் என்று நான் கேட்டுக்கொண்டு, வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி முடிக்கிறேன். **வணக்கம்.**

* **திரு. எஸ். டி. உகம்சந்த்:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர் களே, தொழில் அமைச்சர் அவர்களால் இன்றையதினம் கொண்டுவரப்பட் டிருக்கிற தொழில் மானியக் கோரிக்கையின் மீது பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு அளித்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து, இதன்மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இன்றையதினம் நம்முடைய இதய தெய்வம், புரட்சித் தலைவருடைய ஆட்சியிலே தமிழகம் தொழில் மயமாகிக்கொண்டு வருகிறது. அதற்காக பல்வேறு திட்டங்களை இன்றைக்கு இந்த அரசு அறிவித்துக்கொண்டிருக் கிறது. அதன் மூலமாக தற்போது இருக்கின்ற வேலையில்லாத் திண்டாட்டத் தைப் போக்க முடியும். புதிய தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதற்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்துக்கொண்டு வருகிறது. அதேநோக்கில் அரசின் மூலமாக பல்வேறு தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதற்கு வேண்டிய நடவ டிக்கைகளை எடுத்துக்கொண்டும் வருகிறார்கள். அதற்கு என்னுடைய நன்றியை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதே நோக்கில் இன்றைக்கு காகித ஆலை ஒன்றை நிறுவ, கரூர் பக்கத் திலே புகளூர் என்ற இடத்திலே ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் 160 கோடி ரூபாய் வரையிலும் செலவுகளைச் செய்து அங்கே ஒரு பெரிய தொழிற் சாலையை ஆரம்பிப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதேபோன்று மதுராந்தகம் பகுதியிலேயும் ஒரு காகித ஆலை துவக்க வேண்டும் என்றும் அதற்காக திட்டங்கள் இடப்பட்டிருக்கின்றன. 1981 ஆம் ஆண்டு, அதற்காகவே அரசாங்கம் 35 லட்சம் ரூபாய் வரையில் அரசு நிதியிலேயிருந்து ஒதுக்கி இருப்ப தாக, இந்த மன்றத்திலே, கொள்கை விளக்கக் குறிப்பிலே போடப்பட்டு இருந்தது. ஆனாலும், இதுவரையில் அந்த ஆலையானது துவக்கப்படவில்லை. அந்தப் பகுதி மிகவும் பின்தங்கிய பகுதி என்று அரசு அறிவித்திருக்கிறது. அதன்மூலம் அரசு பல்வேறு சலுகைகளைக்கூட அளித்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட இடத்திலே இந்தத் தொழிற்சாலையை உருவாக்க வேண்டும்.

அங்குள்ள மக்கள் இதை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தத் தொழிற்சாலையை விரைவிலே ஆரம்பித்தால் அந்தப் பகுதியில் உள்ள ஏழை எளிய மக்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கின்ற நிலைமைகள் உருவாகும். அதே நேரத்தில் அங்கே உற்பத்தி ஆகின்ற 'பக்காஸ்'ஸைக்கொண்டு நல்ல முறையில் ஒரு காகித ஆலையை துவக்க முடியும் என்று ஏற்கெனவே குறிப்பிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு மகாராஷ்டிராவிலேயும், மற்ற மாநிலங்களிலேயும் நாம் பார்க்கின்ற நேரத்தில் அங்கே எல்லாம் சர்க்கரை ஆலைகள் இருக்கின்ற பகுதியிலே அதற்குப் பக்கத்திலே காகித ஆலைகளை துவக்கி, அதன் மூலமாக அங்கே காகிதங்களை உற்பத்தி செய்து கொண்டு வருகிறார்கள். அப்படிப்பட்ட நிலைமையிலே, இன்றைக்கு மதுராந்தகத்திலே மக்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிற, அந்தப் பகுதி மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக வர இருக்கின்ற, அந்தக் காகித தொழிற்சாலையை ஆரம்பிக்க வேண்டும் என்றும், அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் நான் கேட்டுக்கொள்கிறேன். அதன் மூலமாக 200-க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று இங்கே அறிவித்திருக்கிறார்கள். அதையும் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் இன்றைக்கு தொழில்கள் நல்ல முறையில் வளர வேண்டும் என்றால், அதற்கு முதன்மையாக இருப்பது மின்சாரம். அடுத்து தொழில் அமைதி. தமிழகத்திலேதான் வேறு எந்த மாநிலத்திலேயும் இல்லாத அளவிற்கு தொழில் அமைதி நல்ல முறையில் இருந்து கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட நிலைமையில் மின்சாரத்திற்கு நாம் என்னென்ன செய்ய வேண்டுமோ அவைகளைச் செய்ய வேண்டும். அதன் மூலமாக தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதற்கு, அவைகள் செயல்படுவதற்கு நல்ல வாய்ப்புகள் ஏற்படும்.

(முற்பகல் 11-30)

சென்ற ஆண்டு நம்முடைய தமிழகத்திற்கு வருகை தந்த, மற்ற மாநில முதல்வர்களும், மற்றவர்களும் இங்கே பேசுகிற நேரத்திலே ஒன்றைச் சொன்னார்கள். எங்களுடைய மாநிலத்திலே இதுபோன்ற தொழில் அமைதி இல்லை. ஆனால் நாங்கள் மின்சாரத்தை அதிகமாக வைத்துக்கொண்டிருக்கிறோம். நீங்கள் அங்கே வந்து தொழில்களை ஆரம்பியுங்கள் என்று தமிழக தொழில்முனைவர்களைக் கேட்டுக் கொண்டார்கள். அப்படியும், இங்கேயிருக்கிற தொழில் அதிபர்களும் மற்றவர்களும் அதற்கு முன்வராத நிலையில் இருந்தார்கள். இந்தச் சூழ்நிலையில் நாம் அவர்களுக்கு நல்ல வகையில் மின்சாரத்தை அளிப்போமேயானால், இங்கே தமிழகத்திலே



இருக்கிற வேலை இல்லாத் திண்டாட்டத்தைப் போக்குகிற அளவுக்கு, தொழிற்சாலைகளை இங்கே அதிகமாக ஏற்படுத்துவதற்கு வாய்ப்பு ஏற்படும் என்பதை தெரிவித்துக்கொண்டு அதற்காக உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த ஆண்டு பட்ஜெட்டிலே மின்சார உற்பத்தியை அதிகரிப்பதற்காக வேண்டிய வழி வகைகளைச் செய்திருக்கிறார்கள். அதை விரைவுபடுத்து வதன் மூலமாக மின்சாரத்தை அதிகமாக உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் தமிழகம் விவசாயத்தையே பிரதானமாகக் கொண்ட ஒரு பெரிய மாநிலம். இந்த விவசாய உற்பத்திக்கு வேண்டிய உப தொழில்களைச் செய்தால்கூட, அதன் மூலமாக தமிழகத்தில் வேலை வாய்ப்பு இன்மை மாறும் என்ற நிலைமை இருக்கிறது. ஆகவே, விவசாயக் கருவிகளை உற்பத்தி செய்கிற தொழிலுக்கு நாம் ஊக்கத்தை அளிக்க வேண்டும். பஞ்சாபிலே இருக்கிற சிறிய பேக்டரிகள் எல்லாம் அத்தகைய உற்பத்தியை செய்து கொண்டிருக்கின்றன.

லூதியானா போன்ற இடங்களில் குடிசைத் தொழிலாகவே விவசாயக் கருவிகளை உற்பத்தி செய்து வருகிறார்கள். அப்படிப்பட்ட நிலைமை தமிழ் நாட்டில் ஏற்பட, விவசாய பெருமக்களுக்கும் உதவிகளைச் செய்கிற வகையில், அந்தக் கருவிகளையெல்லாம் நாமாகவே உற்பத்தி செய்கிற அளவுக்கு, அத்தகைய தொழிற்சாலைகளை அமைக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல கடலோர பிரதேசங்களில் பனைப் பொருள்களுக்கு நிரம்ப வாய்ப்புகள் இருக்கின்றன. அந்தப் பனைத் தொழில்களை அதிகரிக்கச் செய்ய வேண்டும். என்னுடைய மதுராந்தகம் தாலுக்காவில் ஒரு பனை சம்பந்தப்பட்ட தொழிற்சாலையை ஏற்படுத்தி தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல உப்புத் தொழிலிலிருந்து பல உப தொழிற்சாலைகளை ஆரம்பிக்கலாம் என்ற நிலைமை இருக்கிறது. என்னுடைய தொகுதியில் மதுராந்தகம் தாலுக்காவில், செய்யாறு, சூணாம்பேடு, மரக்காணம் போன்ற இடங்களில் உப்பு அதிகமாக உற்பத்தியாகிறது. அங்கே ஒரு தொழிற்சாலையை உப்பை மூலதனமாக வைத்துக்கொண்டு ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல மத்திய அரசு தமிழகத்தில் நிறைய தொழில்களை ஏற்படுத்து கிற வகையில் பல தொழிற்சாலைகளுக்கு முதலீடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மத்திய அரசினுடைய முதலீடு தமிழகத்தில் மிகவும் குறைவாக இருக்கிறது. இந்த நிலைமையை போக்குவதற்கு நம்முடைய சட்டமன்றத்திலே நாம் அதற்காக தனியாக வாதாட வேண்டிய நிலையிலே கூட இருக்கிறோம். நம்முடைய மாநிலத்தில் உள்ள மாவட்டங்கள் எல்லாம் பெரிய மாவட்டங்களாக இருப்பதால், பல மாவட்டங்களில் தொழிற்சாலை இல்லை என்ற நிலைமை இல்லாதிருப்பதால், மத்திய அரசு நம்முடைய மாவட்டங்களை பின்தங்கிய மாவட்டங்களாக அறிவிக்காத நிலைமை இருக்கிறது.

இப்போது தமிழக அரசு தமிழகத்திலிருக்கிற பல்வேறு மாவட்டங்களை சிறிய மாவட்டங்களாக பிரிக்கின்ற அளவுக்கு ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்கள். பிரிக்கின்ற மாவட்டங்களை தொழிலில் பின் தங்கிய மாவட்டங்களாக அறிவித்து அவைகளில் நல்ல விதமாக சிறிய தொழில்களும் பெரிய தொழில்களும் கொண்டு வரும் வகையில் வேண்டிய வழி வகைகளை இந்த அரசு மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய தமிழக அரசு தற்போது 33 மாவட்டங்களை பின் தங்கிய மாவட்டங்களாக அறிவித்து, அவைகளில் பரவலாக தொழில் வளர்ச்சி ஏற்பட வேண்டும் என்று சொல்லியிருக்கிறது. அவைகளில் எல்லாம் இன்றைக்கு தொழிற்சாலைகள் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. ஆனாலும் அந்த தொழில் வளர்ச்சியை முறையான விளம்பரம் மூலம் தான் செய்ய முடியும். பின் தங்கிய மாவட்டங்களில் தொழில் வளர்ச்சியில் ஈடுபடலாம் என்பதற்கு அரசின் மூலமாக நல்ல விளம்பரம் செய்ய வேண்டும். அப்படி விளம்பரம் செய்தால்தான் மேலும் பல இடங்களில் புதிய தொழில்களை ஆரம்பிப்பதற்கு நல்ல வாய்ப்பு ஏற்படும்.

இப்போது பல தொழிற்சாலைகள் சென்னையிலும், சென்னையைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் ஏற்பட்டிருக்கின்றன. ஆனால் சென்னையிலிருந்து 50 மைல் தொலைவில் உள்ள என்னுடைய மதுராந்தகம் தொகுதியில் எந்தவித தொழிற்சாலையும் கிடையாது. என்னுடைய பகுதி தொழிலில் பின் தங்கிய பகுதி என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே அந்தப் பகுதியில் பல தொழிற்சாலைகள் வர வாய்ப்பு இருக்கிறது. ஆனால் நல்ல விளம்பரம் செய்யப்படாததன் காரணமாக மக்கள் அதைப் பயன்படுத்திக் கொள்வதற்கு வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. தமிழக அரசின் மூலமாக பல விளம்பரங்களை, அல்லது பல கூட்டங்களை கூட்டி மக்களுக்கு அறிவிக்கும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படிச் செய்தால், தொழிற்சாலைகள் அங்கே நிறைய உருவாவதற்கு வாய்ப்புகள் ஏற்படும். எந்தெந்தப் பகுதிகள் எல்லாம் பின் தங்கிய பகுதிகளாக அரசு அறிவித்திருக்கிறார்களோ, அந்தந்தப் பகுதிகளில் தொழில் துறையின் மூலமாகவும், விளம்பரத்துறையின் மூலமாகவும், தொழில்





முனைபவர்களுக்கு இன்னின்ன சலுகைகள் தரப்படும் என்று தக்க விளம்பரம் செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். நம்முடைய தமிழக அரசு இதுவரை யில் எந்த ஒரு அரசுமே செய்யாத மாபெரும் திட்டங்களை தீட்டி தொழில் துறையில் பல வளர்ச்சிகளை செய்து வருகிறது. மைய அரசும் மாநில அரசும் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் மூலமாக இன்றைக்கு பல இடங்களில் மேலும் தொழிற்சாலைகள் அதிகமாக வருவதற்கான ஒரு வாய்ப்பை ஏற்படுத்தியிருக்கிறது. மத்திய அரசும் மாநில அரசும் செய்துகொண்ட ஒப்பந்தத்தின் காரணமாக தொழிற்சாலைகளை உருவாக்க பல்வேறு சலுகைகள் தருகின்ற ஒரு வாய்ப்பை நம்முடைய அரசு உருவாக்கியிருக்கிறது, தமிழ்நாட்டில் மத்திய அரசு மாநில அரசு உதவித் திட்டத்தின்கீழ் அதுவரையில் வராததுமான பல தொழிற்சாலைகள் உருவாகும் நிலையில் சொத்து இருப்பில் 10 சதவீதம் வரையில் தனியாக சலுகைகள் வழங்குவதற்காக அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. இந்தச் சலுகை வேறு எந்த மாநிலத்திலேயும் கொடுக்காத முறையில் இந்த மாநில அரசு எடுத்திருக்கிறது. ஆகவே நான் பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்குச் சர்க்கரைத் தொழிலுக்கு முக்கியத்துவம் அளித்துக் கொண்டிருக்கிறோம். சர்க்கரைத் தொழிலானது இந்த ஆண்டு வறட்சியின் காரணமாக மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. தமிழகத்திலே விவசாயப் பெருமக்களின் நலனில் அக்கறை கொண்டிருக்கிற நம்முடைய அரசு அவர்களுக்கு கரும்புக்கு டன்னுக்கு ரூ. 160 வழங்குகிறார்கள். அதை நாம் அதிகப்படுத்த வழிவகை செய்ய வேண்டும். மத்திய அரசு கொடுக்கிற தொகை குறைவாக இருக்கிறது டன் ஒன்றுக்கு 135 ரூபாய் வழங்குவதை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

வறட்சியின் காரணமாக பாதிக்கப்பட்டிருக்கிற விவசாயிகளின் வாழ்விலே மறுமலர்ச்சியை ஏற்படுத்த வழிவகை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். கரும்பாலைகளுக்குச் செல்லுகின்ற சாலைகளைப் பழுதுபார்க்க நிதியை அரசாங்கத்திற்குச் செலுத்துகிறார்கள். ஆனால் அந்தப் பணிகளுக்காக தொகை குறைவாக ஒதுக்கப்படுகிறது. எனவே அந்த நிதியை அதிகமாக ஒதுக்கி அந்தச் சாலைகளைச் செப்பனிட்டுக் கொடுத்தால் விவசாயப் பெருமக்கள் உற்பத்தி செய்த கரும்பை நல்ல முறையில் ஆலைகளுக்கு எடுத்துச் செல்ல முடியும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திருச்சி மாவட்டத்திலே மருங்காபுரியிலே ஒரு கூட்டுறவு நூற்பாலை ஆரம்பிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதைப்போலவே சிதம்பரம் தாலுகாவிலே ஒரு சர்க்கரை ஆலை தேவை என்று அங்குள்ள மக்கள் கோரிக்கை அனுப்பியிருக்கிறார்கள். அங்கே அதற்குத் தேவையான கரும்பு உற்பத்தியாகிறது. ஆகவே உடனடியாக அங்கே அதைப் பயன்படுத்தக் கூடிய முறையிலே ஒரு சர்க்கரை ஆலையைத் துவக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. எஸ். டி. உ ம்சந்த்]　　　　[1984 மார்ச் 24

மதுராந்தகம் தாலுகாவிலே பல்வேறு தொழிற்சாலைகள்
ஆரம்பிக்கப்படக்கூடிய நிலைமையில் பல மூலப்பொருட்கள்
அங்கே கிடைக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. அவற்றை
யெல்லாம் அரசு பரிசீலித்து அங்கே தொழிற்சாலைகளை
ஆரம்பிக்க ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டு
வாய்ப்பு அளித்தமைக்காக நன்றி தெரிவித்துக்கொண்டு முடித்
துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. ப. நெடுமாறன் : அவைத் தலைவர் அவர்களே,
தொழில் மானியக் கோரிக்கையில் சில கருத்துக்களை எடுத்து
சொல்ல வாய்ப்பு அளித்தமைக்காக நான் நன்றியைத்
தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே நம்முடைய அமைச்சர்
அவர்கள் அவர்களுடைய அறிக்கையிலே பல்வேறு விஷயங்களை
சொல்லியிருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக சென்னைக்கு
அருகில் ஃப்ரி டிரேட் ஸோன் ஒன்றை ஏற்படுத்துவதைப் பற்றிச்
சொல்லியிருக்கிறார்கள். அதற்கு என்ன என்ன நடவடிக்கை
களை இந்த அரசு எடுத்திருக்கிறது என்பதைப் பற்றியெல்லாம்
அவர்கள் விரிவாக சொல்லியிருக்கிறார்கள். இத்தகைய ஃப்ரி
டிரேட் ஸோன் நம்முடைய் தமிழகத்திற்கு வரவேண்டுமென்பது
தமிழக மக்களின் மிக நீண்டநாளைய கோரிக்கை. அதை
மத்திய அரசிடம் வற்புறுத்தி அதற்கான அனுமதியை நம்முடைய
அரசு பெற்றிருப்பதற்காக நான் நம்முடைய அமைச்சர்
அவர்களுக்குப் பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.
அதே நேரத்திலே ஃப்ரி டிரேட் ஸோன் செயல்படுகிற முறை
களைப்பற்றிப் பல்வேறு விதமான ஐயப்பாடுகள் தொழிலதிபர்
கள் மத்தியில் இருக்கிறது. குறிப்பாக ஏற்கனவே பம்பாய்
விமான நிலையத்திற்கு அருகிலேயும் குஜராத் மாநிலத்திலே
கண்ட்லா துறைமுகத்திலேயும் ஃப்ரி டிரேட் ஸோன்கள்
நம்முடைய நாட்டிலே ஏற்படுத்தப்பட்டு அவைகள் எப்படி
செயல்படுகின்றன, அவர்கள் செயல்படுகிற முறையில் என்ன
என்ன குறைகள் இருக்கின்றன என்பதை அறிந்து அந்த
அனுபவங்களையெல்லாம் முன்மாதிரியாகக் கொண்டு நம்மு
டைய மாநிலத்திலே அமைய இருக்கிற இந்த ஃப்ரி டிரேட்
ஸோன் சிறப்பாகச் செயல்படுவதற்கு என்ன என்ன செய்ய
வேண்டுமோ அதை நாம் செய்யவேண்டும். அதற்காக நம்மு
டைய அமைச்சர் அவர்கள் துரிதமான நடவடிக்கைகளை எடுப்
பார்கள் என்று நான் நிச்சயமாக எதிர்பார்க்கிறேன்.

(முற்பகல் 11-40)

அதேபோல் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இன்னும் ஒன்றை
இங்கே சொல்லியிருக்கிறார்கள். மத்திய அரசு தொழில்
களுக்கு உதவி செய்வதிலே பின் தங்கிய மாவட்டங்கள்
என்று இதைப்பற்றி ஒரு கொள்கை வகுத்து இருக்கிறது.
அதைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய
அறிக்கையில் சொல்லியிருக்கிறார்கள். ஏ.பி.சி.டி. என்று எல்லாம்



1984 மார்ச் 24]　　　　திரு. ப. நெடுமாறன்

பிரித்து உதவி செய்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்
கள். அதிலே ஒன்றை மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். 30 கோடி
ரூபாய்க்குமேல் ஏதாவது ஒரு மாவட்டத்தில் தொழிலுக்கு
முதலீடு செய்யப்பட்டு இருக்குமானால் அதை பின்தங்கிய
மாவட்டமாக ஏற்பதற்கு இல்லை என்று மத்திய அரசு
அறிவித்து இருக்கிறது. அந்த வகையில் சரி.

அதைப்போலவே எந்த தொழிலும் இல்லாத மாவட்டம்
தான் மத்திய அரசின் மானிய உதவி பெறுவதற்கு தகுதியானவை
என்று மத்திய அரசு கொள்கையாக இருக்கிறது. இதை மாண்பு
மிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய அறிக்கையில் சுட்டிக்
காட்டியிருந்தாலும் கூட இதனால் எந்த அளவுக்கு தமிழ்நாடு
தொழில் வளர்ச்சி பாதிக்கப்படும் என்பதை நாம்எடுத்துச் சொல்ல
வேண்டும், வற்புறுத்தவேண்டும், வேண்டுமானால் அதற்காக
போராடவும் வேண்டும். இல்லை என்றால் தமிழகத்தின்
தொழில் வளர்ச்சியை பெரிய அளவுக்கு பாதிக்கும். நான் இன்னும்
ஒன்றை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு கூற
விரும்புகிறேன்.

'Allocation criteria for subsidy and industrial licensing should ont be based on financial considerations but the Physical consideraiton of the are is epuully important.'

அது ரொம்பவும் முக்கியமானது. ஒரு மாவட்டத்தில் ஏதோ
ஒரு நகரில் தொழில்கள் வந்து விடுவதால் மட்டும் அந்த மாவம்
டம் பூராவும் முன்னேறி விட்டது என்பது அர்த்தன்
அல்ல. ஒரு மாவட்டத்தில் பல்வேறு தாலுக்காக்கள்
பல்வேறு வட்டாரங்கள் மிகவும் பின்தங்கிய, மிகவும் ஏழைமை
நிலையில் இன்னமும் இருக்கின்றன. தமிழ்நாட்டில் பல்வேறு
மாவட்டங்கள் அதற்கு உதாரணமாக இருக்கின்றன. ஆக ஒரு
மாவட்டத்தில் 30 கோடி ரூபாய்க்கு மேல் முதலீடு ஆகிவிட்டது
அங்கே தொழில்கள் வந்து விட்டன, ஆகவே அந்த மாவட்டம்
முன்னேறி விட்டது என்ற நிலையை எடுத்துச் சொல்வது
தவறு. இதிலே ஒவ்வொரு வட்டார வாரியாக அல்லது வட்ட
வாரியாக இதை செய்யவேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் இங்கே வற்புறுத்தி மத்திய அரசிடம் வேண்டுமானால்
போராடி ஒரு அகில இந்திய கொள்கையாக இதை ஏற்கச் செய்ய
வேண்டும். அதையும் நான் இங்கே வற்புறுத்த விரும்புகிறேன்.

அதேபோல் இங்கே தமிழ்நாட்டில் மாநில முதலீட்டு
உதவித் தொகை பெறுவதற்கு என்ன என்ன தொழில்கள் ஏற்
படுத்தலாம் என்பதை பற்றி ஒரு பட்டியல் சொல்லியிருக்கிறார்
கள். அதிலே ஒன்றை நான் வற்புறுத்திச் சொல்ல விரும்பு
கிறேன். சூரிய வெப்பச்சக்தியை அடிப்படையாகக் கொண்டு

இயங்கும் சாதனங்கள் உற்பத்தி செய்கின்ற தொழில்கள் திறக்கலாம் என்று இங்கே சொல்லியிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் சூரிய வெப்பத்தின் அளவு அதிகமாக இருக்கிறது. ஆனால் இந்த சக்தியை நாம் எந்த அளவுக்கு பயன்படுத்துகிறோம் என்று பார்த்தால் குறைந்த அளவு கூட இன்னும் நாம் பயன்படுத்தவில்லை. ரஷ்யா போன்ற மிக முன்னேறிய நாடுகளில் நான் சென்று பார்த்தபோது ருமேனியா என்று ஒரு மாநிலத்தில் ஒரு குடியரசில் அவர்கள் சூரிய வெப்ப சக்தியை எந்த அளவுக்கு விஞ்ஞான பூர்வமாக பயன்படுத்துகிறார்கள் என்பதை பார்க்கும்போது ஆச்சரியமாக இருக்கும். பல நகரங்களுக்கு அதன் மூலம் குடிநீர் அளிக்கிறார்கள். உப்பு நீராக இருப்பதை சூரிய சக்தியின் உதவி கொண்டு நல்ல நீராக மாற்றி அங்கே உள்ள மக்களுக்கு அளிக்கக்கூடிய ஒரு நிலை இருக்கிறது. இதுபோல பல தொழிற்சாலைகள் பல அமைப்புகள் எல்லாம் சூரிய சக்தி உதவி கொண்டு இயங்கக்கூடிய பல்வேறு முன்னேற்றத்திற்கு காரணமான திட்டங்கள் அங்கே செயற்படுத்தப்படுகின்றன. அதேபோல் நம்முடைய நாட்டில் சூரிய வெப்ப சக்தியை இன்னும் முற்றிலுமாக பயன்படுத்துகிற ஒரு நிலையை உருவாக்கவேண்டும் என்று நான் இங்கே எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

நம்முடைய மாநில அரசின் பல்வேறு தொழில் நிறுவனங்கள் பற்றி சிலவற்றை நான் எடுத்துச் சொல்லவிரும்புகிறேன் (Public Sector Units like—Tansi; Tidco, Sidco, Sipcot, Tiic போன்றவைகள் எல்லாம் இன்றைக்கு செயல்படுகின்றன. இவைகள் செயல்படும் முறை பற்றி ஆராய்வதற்காக இன்றைக்கு மத்திய அரசில் அமைச்சராக இருக்கக்கூடிய மாண்புமிகு திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் தலைமையில் ஒரு குழுவை நியமித்து அந்த குழு தன்னுடைய அறிக்கையினை கொடுத்திருக்கிறது. அந்தக் குழு செய்திருக்கிற பரிந்துரைகளை நீங்கள் ஏற்றுக்கொண்டு இருக்கிறீர்கள். ஆனால் அதைச் செயல்படுத்துவதில் அதிகத் தாமதம் இருக்கிறது. சுணக்கம் இருக்கிறது. அது என்ன காரணத்தால்என்பது தெரியவில்லை. அந்தக் குழு அறிக்கையில் ஏற்புடையவைகள் இருந்தால் அவற்றை உடனடியாகச் செயல்படுத்துங்கள். இல்லை என்றால் அவற்றையாவது வெளியே சொல்லவேண்டும். ஆனால் அந்தக் குழு செய்து இருக்கக்கூடிய சிபாரிசுகள் மிகமுக்கியமான சிபாரிசுகள் மிக நல்ல சிபாரிசுகள். அவறறை இன்னும் அமுல் நடத்தவில்லை, அமுல் நடத்தவேண்டும் அதை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

டான்சி யூனிட் மிகவும் நஷ்டத்தில் நடக்கிறது என்பதைப் பற்றிப் புகார்கள் நிறைய வந்திருக்கின்றன. அதைப்போல, பல்வேறு யூனிட்டுகள். அதில் ஒன்றைமட்டும் சுட்டிக்காட்டவிரும்புகிறேன். டான்சி மொபட் செய்கின்ற அந்தத் தொழிற்சாலையிலே



மாதம் ஒன்றுக்கு ரூபாய் மூன்று இலட்சம் நஷ்டம் ஆகிறது. அது தொடர்ந்து ஆகிக்கொண்டே இருக்கிறது. மக்களுடைய வரிப் பணத்திலேயிருந்து இவ்வளவு பெரிய நஷ்டம் ஏற்படுவதை ஏற்றுக்கொண்டு அதை அரசாங்கம் தொடர்ந்து நஷ்டத்தில் நடத்துவதால் யாருக்கும் எந்தவிதமான இலாபமும் கிடையாது. இதை அரசு எண்ணிப்பார்த்து, நம்முடைய தமிழ் நாட்டில் சிறந்த முறையில் இதே தொழிலில் ஈடுபட்டிருப்பவர் களையும் இதிலே சேர்த்துக்கொண்டாவது இந்தத் தொழிலைச் சிறப்பாக நடத்த முடியுமா என்று ஆராய வேண்டும். இதைப் பற்றி ஏற்கனவே ஒரு திட்டமும் அரசு பரிசிலனையில் கடந்த மூன்றாண்டு காலமாக இருந்து வருவதாக அறிகிறேன். ஆனால் அது இன்னமும் செயல்படுத்தப்படவில்லை, நஷ்டம் தொடர்ந்து ஆகிறது. ஆகவே, சிறந்த முறையில் இதுபோன்ற இரு சக்கர வண்டிகளை உற்பத்தி செய்பவர்களைக் கலந்து கொண்டு, இதை அரசாங்கம் இலாபகரமாக நடத்துவதற்கு என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்ய வேண்டுமென்று வற்புறுத்த விரும்புகிறேன்.

அரசு நிறுவனங்கள் உதவி பெறுகிற தொழில்கள், சிறு தொழில்கள், மத்திய தர தொழில்களில் பல்வேறு நஷடங்களுக்கு ஆளாகியிருக்கின்றன. தொழில்கள் அவ்வாறு ஏற்படுவது இயற்கைதான்; இலாபம் வருவதும், நஷ்டம் வருவதும் இயற்கைதான் ஆனால் அந்த நஷடத்திற்கு என்ன காரணம் என்று பார்த்து எதைச் செய்தால் இந்தத் தொழிலைச் சரியாக நடத்தி, சிறு நிறுவனங்கள் மத்திய நிறுவனங்கள் ஆகியவைகளைப் பற்றி ஆராய்ச்சி செய்து, உதவி செய்து, அந்தத் தொழில்கள் மேலும் நல்லமுறையில் நடைபெறச் செய்வதுதான் தமிழ்நாட்டிற்கு இலாபகரமாக இருக்குமே தவிர. நம்முடைய அரசு நிறுவனங்கள் இப்படிப்பட்ட தொழில்களுக்காக வாங்கப்பட்ட கடனைத் திருப்பிக் கட்டவில்லை என்றால் அல்லது வேறுவிதமாக இருக்கிறது என்றால் அதை ஏலம் விடுகின்ற முறை இருக்கிறது. இதனால் என்ன ஆகிறது? வர்த்தக சூதாடிகளும், தொழில் சூதாடிகளும் அதில் புகுந்து, அந்தத் தொழில்களை ஏலம் எடுத்து, அதில் உள்ள இயந்திரங்களைப் பெயர்த்து விற்று, வெளி மாநிலங்களுக்கு அனுப்புகிறார்கள். அதுதான் நடக்கிறது இது தமிழ்நாட்டிற்குப் பெரும் நஷ்டம். தமிழ்நாட்டிலே தொழில் வருவதே பெரும்பாடாக இருக்கிறது. வந்திருக்கின்ற தொழில்களும் சிரமத்தில் நடக்கின்றன என்றால் அரசாங்கம் தன்னிடம் உள்ள அதிகாரிகளைப் பயன்படுத்தி, என்ன காரணத்தினால் இந்தத் தொழில்களில் நஷ்டம் ஏற்படுகின்றது. ஏன் திருப்பிக் கட்ட முடியாமல் இருக்கிறார்கள் என்று ஆராய்ந்து பார்த்து, அவர்களுக்கு உதவி செய்து, தன்னுடைய கன்ட்ரோலில் வைத்துக்கொண்டாவது அதைச் செய்ய வேண்டும். மாறாக, ஏலம் விடுகின்ற முறை இருந்தால் தொழில் அழிந்து போகும் என்பதைச் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

திரு. ப. நெடும்ாறன் [1984 மார்ச் 24

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல வேண்டுமென்றால், ஏற்கனவே இந்த மன்றத்திலே நான் சொல்லியிருக்கிறேன், சென்ற ஆண்டு, இந்தியா சிமென்ட் என்ற புகழ் பெற்ற நிறுவனம், ஐ.டி.பி.ஐ. யிடம் வாங்கிய கடனின் காரணமாக, இன்றைக்கு அந்த நிறுவனம் ஏகபோக முதலாளியின் கைக்குப் போய்விட்டது. தமிழக அரசே அதை ஏற்று நடத்தியிருக்கலாம். அதைத் தமிழக அரசு ஏற்று நடத்துகிறதா என்று ஐ.டி.பி.ஐ.யைக் கேட்டு ஆறு மாத காலமாகப் பதில் வராத காரணத்தால்தான் பங்குகளை விற்று யார் கையிலே அது சேர்ந்திருக்கிறது! தமிழ்நாட்டில் ஆரம்பிக்கப்பட்ட சிறந்த தொழில் நிறுவனம் இன்று நம் கையை விட்டுப் போய்விட்டது. இன்றைக்கு இந்த அரசு அதை ஏற்று நடத்தியிருந்தால் என் போன்றவர்களுக்கு மகிழ்ச்சி ஏற்பட்டிருக்கும். ஆனால் இன்று அந்த நிலை இல்லை. புதுத் தொழில்கள் வரவில்லை என்றாலும். இருக்கின்ற தொழில்களாவது தமிழர் கையிலிருந்து வேறொருவர் கைக்குப் போவதைத் தடுக்க வேண்டுமென்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நம்முடைய அரசே தொழில்களை நடத்துகிறது. சிலவற்றை
ஜாயின்ட் செக்டாரிலே, இந்தத் தொழில் அனுபவம் உள்ளவர்
களிடம் பகிர்ந்து கூட்டாகவும் நடத்துகிறது. சிட்கோ, நிறைய
தொழில் லைசன்ஸ்களை மத்திய அரசிடம் பெற்று வைத்திருக்
கிறார்கள். ஆனால் பல்வேறு நிதிநிலை நெருக்கடிகளின் காரண
மாக, அந்தத் தொழில்களை சிட்கோவினால் தொடங்க முடிய
வில்லை. அப்படி நிலைமை இருக்கும் பொழுது தமிழ்நாட்டிலே
ஸ்மால் அன்ட் மீடியம் இன்டஸ்ட்ரியலிஸ்ட்ஸ் இருக்கிறார்கள்.
யார் யார் அந்தந்தத் தொழில்களைத் திறமையாக நடத்தி,
தொழில் ரீதியில் வெற்றி கண்டிருக்கிறார்களோ அவர்களை
அழைத்துப் பேசி, ஜாயின்ட் செக்டாரில் நீங்கள் பெற்றிருக்கின்ற
இந்தத் தொழில் லைசென்ஸ்களைப் பகிர்ந்து கொடுத்து, அப்படிப்
பட்ட தொழில்களை உடனடியாக ஆரம்பிப்பதற்குச் சகல நட
வடிக்கைகளையும் ஆரம்பிக்க வேண்டுமென்று வற்புறுத்த
விரும்புகிறேன்.

(முற்பகல் 11-50)

அதிலே உங்களுடைய கண்காணிப்பு வேண்டுமானாலும் அதிக
மாக வைத்துக்கொள்ளுங்கள். ஆகவே தொழில்களை ஆரம்
பிக்காமல் இருப்பதால் எந்தவிதமான பயனும் இல்லை. ஆகவே
தமிழ்நாட்டிலே இருக்கின்ற மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கக்
கூடிய வேலையில்லாத் திண்டாட்டம் போன்றவற்றை மனதில்
எண்ணிப்பார்த்தாவது அந்தத் தொழில்களை அந்த முறையிலே
யாவது ஆரம்பிக்க தக்க நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்க
வேண்டும் என்று நான் வற்புறுத்துகிறேன்.



1984 மார்ச் 24] [திரு. ப. நெடுமாறன்]

மத்திய அரசிடமிருந்து தமிழ்நாட்டிலுள்ள தொழில் அதிபர்களோ, அல்லது சிறு தொழில் அதிபர்களோ தொழில்களை ஆரம்பிப்பதற்கான லெட்டர் ஆப் இன்டென்ட் பெற்றவுடனே அது பற்றிய விவரம் தமிழக அரசிற்குத் தெரிந்துவிடும். அப்படி வந்தவுடன் அவர்களை நீங்களே அழைத்துப் பேச வேண்டும். என்ன தொழிலை நீங்கள் செய்யப் போகிறீர்கள்; எப்படி செய்யப் போகிறீர்கள்; என்னென்ன உதவிகளை நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள் என்று பேச வேண்டும். ஆனால் இப்போது என்ன நடக்கிறது என்பதை வருத்தத்துடன் மாண்புமிகு தொழில் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வர நான் விரும்புகிறேன்.

அண்டை மாநிலங்களான ஆந்திரம், கர்நாடகம் போன்றவற்றின் அரசுகள் யார், யாருக்குத் தொழில் துவங்குவதற்கான லெட்டர் ஆப் இன்டென்ட் வந்திருக்கின்றன என்று பார்த்து அவற்றை தட்டிக்கொண்டு செல்கிறார்கள். இந்தத் தொழிலைத் தங்கள் மாநிலத்திலே ஆரம்பிக்க வேண்டும் என்றும், அப்படி ஆரம்பிக்கின்றபோது வேண்டிய உதவிகளை நாங்கள் செய்வோம் என்றும் சொல்கிறார்கள். நாம் அதிலே மெத்தனமாக இருப்போமானால் தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்குப் பெரிய அளவிலே குந்தகம் ஏற்படும் என்பதை நான் இங்கே சொல்ல விரும்புகிறேன்.

நான் இன்னொன்றையும் இங்கே மாண்புமிகு அமைச்சர்
அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். நாம்
இங்கே விற்பனை வரி விதிக்கின்ற முறையினாலும் நம்முடைய
தொழில் பெருமளவில் பாதிக்கப்படுகின்றது. ஸ்கூட்டர்
போன்ற டூ வீலர்கள் அதாவது இரு சக்கர வண்டிகளுக்கு விற்
பனை வரி நமது அண்டை மாநிலங்களான பாண்டிச்சேரியில் 7
சதவீதமும், ஆந்திராவிலே 8 சதவீதம் இருக்கின்றது. ஆனால்
நமது தமிழ் நாட்டிலே ஏறத்தாழ 15 சதவீதமும் விற்பனை
வரிவிதிக்கப்பட்டிருக்கின்றது. அது மட்டும் போதாதென்று ஒன்றே
கால் சதவீதம் சர்சார்ஜ் சேர்த்து ஆக மொத்தம் 16¼ சதவீதம்
விற்பனை வரி விதிக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே இதே வண்
டியை பாண்டிச்சேரியிலோ. ஆந்திராவிலோ சென்று வாங்கினால்
விலை குறைகின்றது. இதன் காரணமாக என்ன நடக்
கின்றது என்றால் உற்பத்தியாளர்கள் பாண்டிச்சேரியில்
ஒரு டெப்போவும், சித்தூரிலே ஒரு டெப்போவும் வைத்துக்
கொள்கிறார்கள். அந்த டெப்போக்களிலே அவர்கள் டெலிவரி
கொடுக்கிறார்கள். ஆகவே அங்கே விலை குறைகின்றது
என்பதால் வாங்குபவர்கள் அங்கே சென்று வாங்கிக் கொள்
கிறார்கள். இதன் காரணமாக நமது அரசாங்கத்திற்கு விற்
பனை வரியில் எவ்வளவு பெரிய நஷ்டம் ஏற்படுகின்றது என்
பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

டிராக்டருக்கு விற்பனை வரியை நம்முடைய நிதியமைச்சர்
அவர்கள் குறைத்திருக்கிறார்கள். அதைப்போல இரு சக்கர
வண்டிகளைப் பொறுத்த விஷயத்திலும் அண்டை மாநிலங்
களோடு சமமாக இருக்கக்கூடிய வகையில் விற்பனை வரியை
ஆக்கிக்கொள்ள வேண்டும்.

அடுத்து நம்முடைய தொழில்களுக்குத் தேவையான நிலக்கரி
பெறுவதில் சிரமம் இருக்கின்றது. அதை மாண்புமிகு அமைச்சர்
அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். நம்
முடைய நெய்வேலியிலே கிடைக்கக்கூடிய லிக்னைட்டாக இருந்
தாலும் லீக்கோவாக இருந்தாலும் அவர்கள் என்ன விலைக்குக்
கொடுக்கிறார்கள் என்பதைச் சொன்னால் நீங்கள் அதிர்ச்சி அடை
வீர்கள். பீகார் மாநிலத்திலிருந்தும், மேற்கு வங்காளத்திலிருந்தும்
என்ன விலைக்குச் சுரங்கங்களிலிருந்து வாங்கிக் கொண்டு வரு
கிறார்களோ அதோடு அதனை இரயில் மூலமோ அல்லது வேறு
வகையிலோ தமிழ்நாட்டிற்குக் கொண்டுவர என்ன செலவு
ஆகின்றதோ அதையும் சேர்த்து உள்ள அந்த விலைக்குத்தான்
இங்கே லிக்னைட்டை வாங்கவேண்டும் என்று நெய்வேலி
யிலே இருக்கின்ற நிலக்கரிச் சுரங்க அதிகாரிகள் வற்புறுத்து
கிறார்கள். இது ஒரு தவறான அணுகு முறை என்பதைத் தெரி
வித்துக்கொள்கிறேன். இந்தியா பூராவும் உள்ள நிலக்கரிச்
சுரங்கங்களில் ஒரேமாதிரியான விலையைத்தான் மத்திய அரசு
நிர்ணயிக்கின்றது. ஆகவே மேற்கு வங்காளத்திலும், பீகாரி
லும் உள்ள சுரங்கங்களில் என்ன விலைக்கு நிலக்கரி கொடுக்கப்
படுகின்றதோ அதே விலையில்தான் தமிழ்நாட்டிலுள்ள நெய்
வேலி நிலக்கரிச் சுரங்க அதிகாரிகளும் அளிக்க வேண்டும் என்று
கேட்டுக் கொள்கிறேன். போக்குவரத்துச் செலவையும் மற்றவற்
றையும் அந்தந்தத் துறையிலே இருப்பவர்கள் ஏற்றுக்கொள்வார்
கள். ஆனால் இன்றைக்கு நெய்வேலி நிலக்கரிச் சுரங்க நிர்வாகம்
என்ன செய்கின்றது என்றால் மேற்கு வங்காளத்திலே இருந்தும்,
பீகாரிலிருந்தும் இங்கே கொண்டுவருவதற்கு என்ன செலவு ஆகின்
றதோ அதையும் நெய்வேலி நிலக்கரியின் மீது ஏற்றி அந்த
விலைக்குத்தான் விற்போம் என்று பிடிவாதம் செய்கிறது.
இது ஒரு தவறான முறை. எனவே இதுபற்றி மத்திய அரசின்
கவனத்திற்குக் கொண்டுபோய் உடனடியாக இந்த நிலைமையை
மாற்றுவதற்கு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன். நெய்வேலி லிக்னைட் போர்டிலே நம்
முடைய பினான்ஸ் செக்கரட்டரி இருக்கிறார், இன்டஸ்ட்ரி செக்
கரட்டரி இருக்கிறார், எலெக்ரிசிட்டி போர்ட் சேர்மன் இருக்
கிறார். இவர்கள் எல்லாம் இருந்துங்கூட இந்தக் குறையைப்
போக்க முடியவில்லை. இது ரொம்ப வருந்தத்தக்கது. நம்
முடைய அமைச்சர் அவர்கள் உடனடியாகத் தலையிட்டு ஆவன
செய்வார் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன்.





இறுதியாக ஒன்றைச் சொல்லி என்னுடைய உரையை
முடிக்க விரும்புகிறேன். இதே மன்றத்திலே 1981ஆம் ஆண்டு
ஒரு குற்றச்சாட்டைச் சொன்னேன்.

Tam l Nadu Chemicals Produc:s L:mited-லே
என்ன, என்ன மோசடிகள் நடந்திருக்கின்றன என்பதைச்
சொன்னேன். 1971-ஜூனிலே ஆரம்பிக்கப்பட்ட இந்த ஜாயின்ட்
செக்டர் கம்பெனி 1978 ஏப்ரலில் மொத்தம் ரூ. 765 இலட்சம்
முதலீட்டில் தொடங்கப்பட்டது. அதிலே, நம்முடைய அரசாங்
கத்தின் முதலீடு, டிட்கோ மூலமாக ரூ. 118.30 இலட்சம்.
இந்தக் கம்பெனி நிர்வாக இயக்குநராக இருந்த ஒருவர் ஏறத்தாழ
ரூ. 40 இலட்சத்துக்கு மேலே மோசடி செய்து, அது பற்றி
1977-லே டிட்கோ, போலிசிலே புகார் செய்து நடவடிக்
கைக்கு உள்ளாகி, அவர் கைது செய்யப்பட்டு, ஹைகோர்ட்டிலே
அவர் மீது வழக்குகள் தொடுக்கப்பட்டு, ஹைகோர்ட் நீதிபதி
நீங்கள் போட்ட செக்ஷன் போதாது, மேலும் இரண்டு
செக்ஷன்கள் சேர்க்கவேண்டும், அவ்வளவு மோசடிகள் நடந்
திருக்கின்றன என்று சொல்லி, இவ்வளவெல்லாம் ஆகியிருக்
கின்றன. அவர் அந்தக் கம்பெனியின் பணத்திலே ஏறத்தாழ
ரூ. 40.78 இலட்சம் மோசடி செய்திருக்கிறார். அதற்குப்
பின்னால் இரண்டு ஆண்டுகள் வழக்கு நடந்த பின்னால், திடீ
ரென்று 1980 ஜூனிலே அவர் மீது இருந்த வழக்குகளை எல்
லாம் அரசாங்கம் வாபஸ் வாங்கியிருக்கிறது. இதே மன்றத்திலே
நான் கேள்வி கேட்டேன். அன்றைக்கு, அரசாங்கம் அதை அட்வ
கேட் ஜெனரலின் ஆலோசனைப்படிதான் செய்தது என்று
அப்பொழுது சொன்னார்கள். ஆனால், இந்த வழக்குப் போகும்
போது எந்த அட்வகேட் ஜெனரல் ஆலோசனை சொன்னாரோ
அந்த அட்வகேட் ஜெனரல்தான் வாபஸ் வாங்கும்போது இருக்
தார்; ஆகவே, இது சரியான பதில் இல்லை என்பதையும் சுட்டிக்
காட்டினேன். அது முடிந்து விட்டது. ஆனால் இன்றைக்கு
என்ன ஆகியிருக்கிறது? ஆடிட்டர் ஜெனரலினுடைய ரிப்
போர்ட்டிலே அதைச் சுட்டிக்காட்டி, இந்த வழக்கை இந்த
அரசாங்கம் வாபஸ் வாங்குவதற்கு எந்த நியாயமும் இல்லை
யென்று குற்றம் சாட்டி இருக்கிறார். ஆனால், இன்றைக்கு
அரசாங்கம் என்ன செய்திருக்கிறது? அரசாங்கம் நேரடியாகச்
செய்யவில்லை. ஆனால் அந்தக் கம்பெனி நிர்வாகம் இந்த அரசு
கையிலே இருக்கிறது. அந்தக் கம்பெனி, ஏற்கெனவே ரூ. 40
இலட்சம் அரசுக்கு மோசடி செய்த ஒருவருடன் இன்றைக்கு
ஒப்பந்தம் செய்து கொண்டிருக்கிறது. என்ன ஒப்பந்தம்
என்றால் அவருக்கு ரூ. 9,45,310 கொடுக்க வேண்டுமென்று
ஒரு ஒப்பந்தம் செய்து, அந்த ஒப்பந்தத்திலே அரசு அதிகாரி
களும் கையெழுத்திட்டு, சம்பந்தப்பட்ட குற்றவாளியும் கை
யெழுத்திட்டு, இதை நீங்கள் முடித்திருக்கிறீர்கள் என்றால்
இது ரொம்ப முறை கேடானது. அரசாங்கப் பணத்தை மோசடி
செய்த ஒருவருக்கு மக்கள் வரிப் பணத்திலிருந்து மேலும் ரூ. 9
இலட்சத்துக்கு மேலே அள்ளிக் கொடுப்பது என்பது மிகப்

[திரு. ப. நெடுமாறன்] [1984 மார்ச் 24

பெரிய தவறு என்பதைச் சுட்டிக்காட்டி நம்முடைய அமைச்சர் அவர்கள் தலையிட்டு அதைப்பற்றி முழுமையாக விசாரிக்க வேண்டுமென்று சொல்லி, அந்த ஒப்பந்தத்தின் நகல் பத்திரத்தை அவர் கையிலே அளித்து என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

திரு. ஆர். ரங்கசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள தொழில் மானியக் கோரிக்கையை வரவேற்று எனது கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை.)

தமிழகத்தைத் தொழில்மயமாக்க புரட்சித் தலைவர் அரசு ஆற்றிவரும் மகத்தான பணிகள், பெரும் தொழில்கள், நடுத்தர தொழில்கள், சிறுதொழில்கள்—வளர்கின்ற வகையில் அமைய வேண்டும் என்பதுதான், தமிழக அரசின் நோக்கமாகும். அதைக் கருத்தில் கொண்டு, தொழில் வளர்ச்சிக்காக, டிட்கோ, டான்செம், சிப்காட், டிக், எல்காட், டின்பில், தமிழ்நாடு உப்புக் கழகம், டான்சி, டாமின், டான்மாக், சர்க்கரைக் கழகங்கள் போன்ற அரசு நிறுவனங்கள் மூலம் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு சிறப்பாகப் பணியாற்றி வருகின்றன என்பதை இந்த நேரத்திலே நான் தெரியப்படுத்துகின்றேன்.

சென்னையில் 450 ஏக்கரில் தடையில்லா வணிக மண்டலத்தில் தொழிற்சாலைகள் அமைப்பதற்கு இவ்வரசு திட்டமிட்டு இருப்பது தமிழகத்தின் தொழில் வளர்ச்சியில் சிகரமாக அமையும் என்பதைத் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் நெடுமாறன் அவர்கள்கூட நீண்ட நெடுங்காலமாக இருந்து வந்த கோரிக்கை இந்த அரசால் நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்று தெரிவித்தார்கள். அவருக்கு என்னுடைய நன்றியைத் தெரியப் படுத்துகிறேன்.

(நண்பகல் 12-00)

தொழில் வளர்ச்சியில் தமிழகம் பின்னோக்கிச் சென்று விட்டது என்று சொல்லும் மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள், இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற பட்டியலை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டுகிறேன். 1978 ஆம் ஆண்டு முதல் 1982 ஆம் ஆண்டு முடிய இந்தியா முழுவதும் தொழில் வளர்ச்சிக் குறியீட்டு எண். 786 ; வளர்ச்சி சதவீதம் 22.2 ஆகும். தமிழகத்தின் தொழில் வளர்ச்சிக் குறியீட்டு எண். 952; வளர்ச்சி சதவீதம் 46.88 ஆகும். இதைப் பரந்த நோக்கத்தோடு பாராட்ட மனமில்லாத எதிர்க் கட்சி உறுப்பினர்கள், '' குண்டு சட்டிக்குள் குதிரை ஓட்டிக் கொண்டு'' தவறான தகவல்களை மக்களுக்குத் தந்து கொண்டு இருக்கிறார்கள்.



1984 மார்ச் 24] [ திரு. ஆர். ரங்கசாமி ]

தமிழ்நாடு அரசு தொழில் வளர்ச்சியில் மிகச் சிறப்பாக பணியாற்றிக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவிக்கிற வகையில் உதாரணமாக தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் ஈட்டியிருக்கிற வளர்ச்சியை நான் குறிப்பிட விரும்புகிறேன். மத்திய அரசின் மானியத் திட்டத்திலே பங்கு பெறுவதில் தமிழகம் முன்னணியில் இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு புரட்சி தலைவர் அவர்களின் அரசு வந்ததற்குப் பிறகு முதன் முதலாக அறிவித்த மானிய நிதியுதவி 65 இலட்சத்து 21 ஆயிரம் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியின் ஆரம்ப மூலதன நிதியுதவி கடந்த ஆண்டைக் காட்டிலும் 80 சதவீதம் உயர்ந்து இருக்கிறது என்பதை நான் பாரட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். தவணை கடன் ஒப்புதல் வழங்குவதில் சென்ற ஆண்டைக் காட்டிலும் 37 சதவீதம் உயர்ந்திருப்பது தமிழகத்தில் தொழில் வளர்ச்சியை மேம்படுத்துவதற்கு இந்த அரசு செய்கிற மிகப் பெரிய உதவி ஆகும். மின்சாரத் தட்டுப்பாடு வந்த நேரத்தில் உடனடியாக அதைப் போக்க, தமிழகத்தில் தொழில்கள் குன்றாமல் பாதுகாக்க மின் ஆக்கி பெற நடப்பாண்டில் 200 இலட்சம் ரூபாய் கடன் வழங்க இசைவு தந்திருப்பது பாராட்டிற்குரியது.

நிகர ஆதாயத்தில் ரூபாய் 77.02 இலட்சத்திலிருந்து ரூபாய் 104.39 இலட்சமாகக் கணிசமாக உயர்ந்திருக்கிறது என்பதை இந்த நேரத்தில் பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழகத்தில் தொழில்கள் துவங்குவதற்கு உரிமம் வழங்க இந்த அரசு முனைப்பாகச் செயலாற்றி 1980-ல் 108 விண்ணப்பங் களை மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்தது. அதில் 57 விண் ணப்பங்களுக்கு மத்திய அரசு இசைவு வழங்கியது. 1981-ல் 92 விண்ணப்பங்களை மாநில அரசு மத்திய அரசிற்குப் பரிந்துரை செய்தது. அதில் 44 விண்ணப்பங்களுக்கு இசைவுக் கடிதங்கள் வழங்கப்பட்டன. 1982-ல் 184 விண்ணப்பங்களுக்குப் பரிந்துரை செய்யப்பட்டது. 67 விண்ணப்பங்களுக்கு மத்திய அரசு இசைவுக் கடிதங்களை வழங்கியது. இந்த மூன்று ஆண்டுகளில் பரிந் துரை செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 384 ; அனுமதிக்கப் பட்டது 168; நிலுவையில் உள்ளது 216 ; நான் இந்த மாமன்றத் தின் மூலமாக மத்திய அரசைக் கேட்டுக்கொள்வது, இப்படி ஆமை வேகத்தில் அனுமதி வழங்கக் காரணமென்ன? தமிழகத்தின் தொழில் முன்னேற்றம் இதனால் பாதிக்கப்பட்டிருக்கிறது என் பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருச்சி மாவட்டம் புகளூரில் 200 கோடி ரூபாயில் துவங்கப் பட்டு முடியும் தருவாயில் உள்ள காகித ஆலை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் தொழில் துறையில் செய்துள்ள மாபெரும் சாதனைக்கு எடுத்துக் காட்டாகும். மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இங்கே பேசுகிறபோது சொல்வார்கள் ; எப்போது பார்த்தாலும் இந்தப் புகளூர் காகித

ஆலைதான் உங்களுக்குக் கிடைத்ததா? இதையே சொல்லிக்
கொண்டிருக்கிறீர்களே என்று சொல்வார்கள். இது என்ன
பெட்டிக் கடையா, 200 ரூபாயில் இரண்டு மணி நேரத்தில்
கட்டி முடித்து விட; இது 200 கோடி ரூபாயில் ஆரம்பிக்கப்
படுகிற மிகப் பெரிய தொழிற்சாலை என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

அடுத்து தமிழகத்தில் சிமென்ட் விநியோகத்தைப் பற்றி சில
கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். 1982 ஆம் ஆண்டிற்கு
முன்னாலே மத்திய அரசு தன்னுடைய கட்டுப்பாட்டிற்குள்
சிமென்ட் விநியோகத்தை வைத்திருந்தது. 1982 ஆம் ஆண்டிற்
குப் பின்னாலும் உற்பத்தியாகும் சிமென்ட்டில் மூன்றில் இரண்டு
மடங்கை லெவியாகக் கொடுத்து விட வேண்டும் என்றும், ஒரு
மடங்கு சிமென்ட்டை அந்தத் தொழிற்சாலை விற்பனை செய்து
கொள்ளலாம் என்றும் சொல்லப்பட்டது. தமிழ் நாட்டில் சரா
சரியாக காலாண்டிற்கு 6 இலட்சம் டன் சிமென்ட் தேவையுள்ளது.
சிமென்ட் மீதான கட்டுப்பாட்டைத் தளர்த்துவதற்கு முன்னாலே
3.90 இலட்சம் டன் சிமென்ட் ஒதுக்கி வந்த மத்திய அரசு
கட்டுப்பாட்டைத் தளர்த்திய பிறகு 1.42 இலட்சம் டன் லெவி
சிமென்ட் மட்டும் ஒரு காலாண்டிற்கு ஒதுக்கியது. 1983 ஆம்
ஆண்டு 1.52 இலட்சம் டன் மட்டுமே உயர்த்தியது. தமிழ்
நாட்டில் உற்பத்தி செய்யப்படும் சிமென்ட்டில் 3-ல் 2 பங்கு
மத்திய அரசுக்கு மொத்தமாகக் கொடுத்துவிட வேண்டும்.
இப்படித் தமிழகம் கொடுத்துவிட்டு மிகக் குறைந்த அளவிற்கு
அந்தச் சிமென்ட்டைப் பெறுகின்ற ஒரு துர்பாக்கியமான
நிலைமை தமிழகத்திற்கு இருந்து கொண்டு இருக்கிறது. கன்ட்
ரோல் விலையில் சிமென்ட் 41 ரூபாய்க்கும் வெளி மார்க்
கெட்டில் 62 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது. இதனால் அரசுக்கு
வேண்டிய சிமென்ட்டைக் கூட வெளி மார்க்கெட்டில் வாங்கும்
நிலைமை ஏற்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு கடுமையான சிமென்ட் கட்டுப்பாட்டைச்
சமாளிக்கச் சென்ற ஆண்டு தமிழக மக்களுக்கு வேண்டிய
சிமென்ட்டை அளிக்க டான்செம் நிறுவனத்தின் மூலம் கொரியா
விலிருந்து சிமென்ட் இறக்குமதி செய்ய அனுமதித்தது. அந்த
வகையில், கொரியாவிலிருந்து 1,93,594 டன்னும், தென் கொரி
யாவிலிருந்து 3,14,500 டன்னும் இறக்குமதி செய்து
தமிழக மக்களுக்கு நியாயமான விலையில் சிமென்ட் கிடைக்க
ஏற்பாடு செய்தது. ஆகவே, தமிழகத்தில் சிமென்ட் தட்டுப்
பாடு இருக்கிறது என்பதைத் தமிழக மக்கள் உணர முடியாத
அளவிற்குத் தமிழக அரசு திறமையாக செயலாற்றியது. அதற்காக
தமிழக மக்கள் இந்த அரசைப் பாராட்டிக் கொண்டு இருக்கிறார்
கள். இதைக் கூட பொறுத்துக்கொள்ள முடியாத மத்திய அரசு
தமிழக அரசு இறக்குமதி செய்வதை நிறுத்தி, மத்திய அரசு
ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் மூலம் சிமென்ட்டை இறக்குமதி
செய்ய உத்தரவிட்டுள்ளது. மாநில அரசின் உரிமைகள்





எவ்வளவு வேகமாக மத்திய அரசால் பறிக்கப்படுகின்றன என்பதற்கு எடுத்துக் காட்டாக இந்த சிமென்ட் இறக்குமதி செய்து, தமிழக அரசு கொடுக்கின்ற அந்தச் சீரிய பணியைத் தமிழக அரசின் சுதந்திரமான நிர்வாகத்தில் விடாமல் அவர்கள் எடுத்துக்கொண்டு இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதன் மூலம் இந்த ஆண்டு ஏற்பட்டு இருக்கும் நிலைமை என்னவென்றால், சிமென்ட் தட்டுப்பாடு மீண்டும் உருவாகி இருக்கிறது. ரூ. 80, ரூ. 90 என்று சிமென்ட் வெளி மார்க்கெட்டில் விற்கும் நிலை இருக்கிறது. ஆகவே, தமிழக அரசே சிமென்ட் இறக்குமதியை நேரடியாகச் செய்து தமிழக மக்களுக்கு வழங்க மத்திய அரசு அனுமதியை வழங்க வேண்டும் என்று இந்த மன்றத்தின் மூலம் நான் வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன்.

சர்க்கரை ஆலைகளைப் பொறுத்த வரையில், தமிழகத்தில் இன்றைக்குப் 10 ஆலைகள் கூட்டுறவுத் துறையின் மூலமும் 8 ஆலைகள் தனியார் துறையின் மூலம் 2 ஆலைகள், பொதுத் துறையின் மூலமும் மத்திய அரசு நிர்வாகத்தின் கீழ் ஒரு ஆலையும் நடக்கின்றன. இதிலே டிசம்பர் மாதம் 1983 ஆம் ஆண்டு தமிழக அரசு மதுரா சர்க்கரை ஆலையை எடுத்து இருக்கிறது. சர்க்கரை ஆலை விவசாயிகளுக்கு மிகவும் முக்கியமானதாகும். இதைத் திறமையாக இந்த அரசு நடத்தி வந்தாலும், இதன் மீதான முழு அதிகாரமும் மத்திய அரசிடம் உள்ளது. கரும்பு உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்குக் கொடுக்கும் விலை மிகவும் குறைவு. டன் ஒன்றுக்கு 135 ரூபாய்தான் மத்திய அரசு நிர்ணயம் செய்துள்ளது. தமிழக அரசு ரூ. 20 சேர்த்து ரூ. 155 தருகிறது. 1983-84 ஆம் ஆண்டில் ரூ. 160 வழங்க வேண்டும் என்று சர்க்கரை ஆலைகளுக்குத் தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. இந்த விலை கட்டுப்படியான விலை இல்லை. ஆகவே, இதை உயர்த்திக் கொடுக்க வேண்டும். இதை மனதில் கொண்டு மத்திய அரசு விவசாயிகளுக்குக் குறைந்தபட்சம் ரூ. 200 கொடுக்க வேண்டும். என்னைப் பொறுத்த வரையில் குறைந்த பட்சம் ரூ. 225 ஒரு டன்னுக்குக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சமீபத்தில் மத்திய அரசு ரேஷன் கார்டுக்குக் கொடுக்கப்படும் சர்க்கரைக்குக் கூட விலையை உயர்த்தியுள்ளது. ஆனால் விவசாயிகளுக்கு அளிக்கப்படும் விலையை உயர்த்தவில்லை. அதற்குக் காரணம் என்ன என்ற வினாவை நான் எழுப்ப விரும்புகிறேன். தமிழ்நாடு முழுவதும் வீதி விளக்குகளுக்குத் தேவையான உதிரி பாகங்கள் வெளியே இருந்துதான் டெண்டர் மூலம் வாங்கி போடப்படுகின்றன. மிகக் குறைந்த விலையில் அவை வாங்கப்படுவதால் போட்டவுடனே பீஸ் போய்விடுகிறது. இதனால் அரசுக்குக் கெட்ட பெயர் ஏற்படுகிறது. இந்த நிலையை மாற்றி அமைக்கும் வகையில் தொழில் நிறுவனமும் மின்சார வாரியமும் இணைந்து ஒரு தொழிற்சாலையை

ஏற்படுத்தி, அரசுக்குத் தேவையான மின்சார சாதனங்கள், உதிரி பாகங்கள் எல்லாவற்றையும் தயாரித்து, நல்ல தரமான வகையில் மக்களுக்கு வழங்க வேண்டும் என்று இந்த நேரத்தில் பணிவோடு என் வேண்டுகோளை எடுத்து வைக்க விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-10)

சத்தியமங்கலம் தொகுதியில், மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு பரிந்துரை செய்ததன் அடிப்படையில் இன்றையதினம் 'பன்னாரி சுகர்ஸ்' என்ற சர்க்கரை ஆலை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசுக்கும் மத்திய அரசுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சத்தியமங்கலம் வட்டத்தைத் தொழிலில் பின்தங்கிய வட்ட மாக அறிவிக்க வேண்டுமென்ற கோரிக்கையை இந்த நேரத்தில் அவைமுன் வைக்கிறேன்.

மூன்று ஊராட்சி ஒன்றியங்கள்—பவானிசாகர், சத்தியமங் கலம், தாளவாடி—உள்ளன. பவானிசாகரில் அணை கட்டப் பட்டிருப்பதாலும் அங்கே இருக்கிற நிலத்தில் 15 சதவீதம் மட்டுமே பாசனம் பெறுகிறது. மீதி உள்ள நிலம் எல்லாம் மானா வாரி நிலமாக சுமார் ஒரு இலட்சம் ஏக்கருக்குமேல் இருக்கிறது. மைசூருக்கு அருகில் இருக்கிற காமராஜ் நகரைப் பின்தங்கிய வட்ட மாக அறிவித்திருக்கிறார்கள். நாம் அவிநாசி வட்டத்தைப் பின் தங்கிய வட்டமாக அறிவித்திருக்கிறோம். சத்தியமங்கலம் வட்டத்தையும் பின்தங்கிய வட்டமாக அறிவித்தால் அங்கே அதிகத் தொழில்கள் தொடங்க வாய்ப்பு ஏற்படும். அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயத் தொழில் செய்வதற்கு விவசாயிகள் வாழுகின்ற அந்தந்தப் பகுதிகளிலேயே சிறு தொழில்கள் ஏற்படுத்துவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். விவசாயத்திற்குத் தேவையான உபகரணங்கள், உதிரிப் பாகங்கள் தயாரிக்கின்ற சிறு தொழில் களை அவரவர் இருக்கக்கூடிய, விவசாயம் செய்யக்கூடிய இடங் களில் ஏற்படுத்தினால் அவர்கள் விவசாயத் தொழில் இல்லாத நேரத்தில் இந்தத் தொழில்களைச் செய்ய வசதியாக இருக்கும். அதன்மூலம் தங்களைக் காப்பாற்றிக்கொள்ளும் சூழ்நிலை ஏற்படும். ஆகவே, தமிழ்நாடு முழுவதும் பரந்து கிடக்கிற விவசாயப் பெருங்குடி மக்களுக்கு இதுபோன்று பொதுத் துறையின் மூலமாக உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பெரியார் மாவட்டம் சிவகிரியில் தமிழ்நாடு பஞ்சாலை நிறுவனத்தின் பொறுப்பில் இயங்கும் விசைத்தறி ஆலையில் ஏறத்தாழ 150 தொழிலாளர்கள் பணி செய்கின்றார்கள். தற்போது அவர்களில் 100 பேரை 'நோ ஒர்க்' என்று சொல்லி நிறுத்தி உள்ளார்கள். காரணம் கேட்டால் ஆலைக்குத் தேவை யான நூல் சப்ளை இல்லை என்று சொல்கிறார்கள். மேலும் 25 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள துணிகள் ஆலையில் தேங்கி உள்ளன. நூற்பாலைகளுக்குப் பணம் செலுத்த முடியாததால்





நூல் வாங்க முடியாத சூழ்நிலை நிலவுகிறது. எனவே தொழி லாளர்களுக்கு வேலை கொடுக்க முடியவில்லை என்று ஆலை மேலாளர் கூறியுள்ளார். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தேங்கியுள்ள துணிகளை அரசு விற்பனைக்கு எடுத்துக் கொண்டு வேலை இழந்து நிற்கும் தொழிலாளர்களை மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ளும் வாய்ப்பை உருவாக்கித்தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இந்த மானியக் கோரிக்கைகளை வரவேற்றுப் பேசுகின்ற வாய்ப்பு கிடைத்ததற்காக நன்றி தெரிவித்து, உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

*திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாற்றுத் தலைவரவர்களே இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பில் அதிகமான தொழில்கள் வரவேண்டும் ; எம்பிளாய்மென்ட் பொட்டன்ஷியல் அதிகப் படுத்த வேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது. அதை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால் இன்று நாட்டிலே இருக்கக்கூடிய நிலைமை என்ன ? தொழிலாளர்களுடைய எண்ணிக்கை குறைந்துகொண்டே வருகிற அபாயம் இருக்கிறது. குறிப்பாக மதுரா கோட்ஸ் நிறுவனத்தில் 15,000 தொழிலாளர்கள் வேலை செய்தார்கள். இப்போது அங்கே 7,000 தொழிலாளர்களாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. அதைப்போன்று மின்சார வாரியத்தில் 1,20,000 தொழிலாளர்கள் இருந்த இடத்தில் தற்போது 80,000 பேர்கள்தான் இருக்கிறார்கள். இப்படித் தொழிலாளர்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டே வருகிறது.

இதற்குப் பிரதான காரணம் தொழிலில் ஏற்பட்டிருக்கிற நெருக்கடிதான் என்பது நமக்குத் தெரியும். மக்களுடைய வாங்கும் சக்தி (purchasing power) கீழே வந்திருக்கிறது என்பது தான் இதற்கு முக்கியமான காரணம். இதைத் தவிர்க்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று பார்க்க வேண்டும்.

சென்னை நகரில் பி. அன்ட் சி. மில் ஜனவரி 15-ந்தேதியி லிருந்து மூடிக்கிடக்கிறது. அதிலே 8,000 தொழிலாளர்கள் வேலை இழந்திருக்கிறார்கள். 'ஒன்ஸ் பிரைடு ஆஃப் இந்தியன் இன்டஸ்டிரி' என்று இருந்த இந்த நிறுவனம் கொள்ளையடிக்கப் பட்டதன் காரணமாக, காட்டன் பர்ச்சேஸ், கோல் பர்ச்சேஸ், ஃபர்னஸ் ஆயில் பர்ச்சேஸ் போன்றவற்றில் ஃப்ராடு நடந்ததன் காரணமாக, ரிசர்வ் ஃபண்டு சாப்பிடப்பட்டதன் காரணமாக, ஹாட்டிங் நடந்ததன் காரணமாக இன்றைக்கு அந்த ஆலை மூடிக் கிடக்கிறது. அதனால் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார் கள். நிர்வாகம் சரியாக நடைபெறாததால் பல தொழிற் சாலைகளில் தொழிலாளர்களின் எண்ணிக்கைக் குறைந்து கொண்டே வருகிறது ; பல தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக் கின்றன.

கன்னியாகுமரி மாவட்டத்தில் 180 முந்திரி ஆலைகள் மூடிக் கிடக்கின்றன. அதன் காரணமாக 5,000 தொழிலாளர்கள் வேலை யிழந்திருக்கிறார்கள். அதைப்போன்று கிருஷ்ணாராவ் பாடி ஒர்க்ஸ், இந்தியா ஃபோர்ஜ், அம்பத்தூர் ; லாஸ்கோ ஸ்டீல்ஸ்

தர்மபுரி, தர்மபுரி ஸ்டீல் காஸ்டிங்ஸ் ; ஜீவன்லால் அலுமினியம்
ஃபாக்டரி, அம்மாண்டிவிளை காயர் ஃபாக்டரி, தமிழ்நாடு ஸ்பின்
னிங் மில்ஸ், ஜனார்த்தனா மில்ஸ், சவுத் இந்தியா கிளாஸ் மற்றும்
எனாமல் ஒர்க்ஸ் -- இவை அத்தனையும் மூடிக்கிடக்கின்றன.
அம்மாண்டிவிளை காயர் ஃபாக்டரியை மூடியதால் சுமார் 20,000
குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன.

இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பில் தர்மபுரி ஸ்டீல் காஸ்
டிங்ஸ் நிறுவனத்தை திறந்திருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள்.
ஆனால் உண்மையான தொழிலாளிக்கு எந்தவித வருவாயும்,
நன்மையும் இல்லாத நிலை அங்கே இருக்கிறது. சவுத் இந்தியா
கிளாஸ் அண்டு எனாமல் தொழிற்சாலையைப் பொறுத்தவரையில்
இன்று எடுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னாலும் மூடி
யிருப்பதாகக் கொள்கைக் குறிப்பிலே இருக்கிறது. அதற்குக்
காரணம் அங்கே உள்ள மிஸ் மேனேஜ்மெண்டும், அங்கே ஏற்
பட்டுள்ள ரீசெஷனும் தான். இன்னொரு முக்கியமான காரணம்
என்னவென்றால், இன்று தனியார் முதலாளிகள் மட்டுமல்ல,
அரசு நிறுவனங்களும் இவ்வாறு செய்துகொண்டிருக்கின்றன.
உதாரணமாக, போட் தயாரிக்கும் தொழிற்சாலை, பல்லாவரம்
க்வாரி போன்ற பல நிறுவனங்கள் மூடப்பட்டிருக்கின்றன.
அவர்கள் சீப் லேபருக்காகத் தேடிப் போகிறவர்கள்.
டிரான்ஸபோர்ட்டிலும், எலக்ட்ரிசிடி போர்டிலும் இன்று
ப்ராபிட் மோடிவ் இருப்பதால், அங்குள்ள தொழிலாளர்
களுடைய எண்ணிக்கையை குறைக்கக் கூடிய ஆபத்து இருக்கிறது.
இன்டஸ்ட்ரியல் கிரோத் ரேட் குறைந்து கொண்டு வருகிறது.
அதே போன்றுதான் இன்ப்ராஸ்ட்ரக்சர் பொறுத்தவரையில்
மிகத் தெளிவாக ஒன்றைப் பார்க்க வேண்டும்.

"The need for sub:tantial n w inve:tments in the infrastructure
stands out clearly to rel ve the :hortages we have experienced in
such sectors as power supply, wagon availabili y and the like, which
have ac ed as maj r constraints on grow h and employm nt. There
will also be need to expand many industries and to set up now ones.
The resources for hese should not be m bilised in a way that would
cripple the p ssibilities of' people satisfying their basic needs on
acc unt of rising tax rates.

இந்த விஷயத்தில் அரசு எங்கே இருக்கிறது என்று கேட்டுக்
கொள்ள விரும்புகிறேன். இந்த விஷயத்தைப் பொறுத்தவரை
யில், பவர் கேப்பிடல் மார்க்கெட், கேரண்டி எந்த நிலையில்
இருக்கிறது ? இதிலே அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது
என்பதைப் பார்க்க வேண்டும். உற்பத்தியைப் பொறுத்த அள
வில், ப்ரொடக்ஷன் ஒரு வருட காலத்தில் கூடியிருக்கிறதா என்ற
விவரம் குறிப்பிலே இல்லை, மேலும் இங்கே மூன்று ஷிப்ட்
களாக வேலை செய்வதற்குத் தொழிலாளர்கள் தயாராக இருக்
கிறார்கள். அந்த இன்ஸ்டால்டு கெபாசிட்டியைப் பயன்படுத்
தும் முறையில் இந்தத் தொழில்கள் இல்லை. அதற்குப் பிர
தான காரணத்தை திரு. எல். கே. ஜா. தலைவர், எகனாமிக்
அட்மினிஸ்ட்ரேஷன் ரிபார்ம்ஸ் கமிஷன் சொல்கிறார்.





The Economic Administration Reforms Commission. ailing textile,
sector, the textile industry out of whose prosperity most other indus-
tries in India were born, is suffering from increasing sickness, the entire
textile economy is suffering from a lot of distributions brought about
by well-intentioned but illconceived policies in the field of administration
and taxation. The long staple cotton, which we developed in India
after considerable research and effort, has virtually become unusable
in the country largely because of the higher taxation of the finer counts
of yarn which can be spun out of it. Man made fibres and yarns which
provide cheap clothing to lower income groups all over the world are
taxed as and have thus become, the luxuries of the rich.

The tax concessions meant for handlooms in the interest of employ-
ment generation have had to the growth of power looms which threaten
the very survival of the weaving section of the integrated mills. The
sad past of this story is that weaving in the powerlooms sector is hardly
more labour-intensive than in the mills sector. Further its wages are
lower, and often mill-owners themselves are owners of powerlooms as
well. A well programme of modernisation, much greater freedom in
the matter of counts to be spun or fibres and yarns to be employed
continuing support to the handloom sector which has established a
market for itself in the industrialised countries can lead to higher employ-
ment in the textile industry and a better standard of cloth consumption
in the community.

ஆனால் பவர்லூம் எங்கே இருக்கிறது என்றால் . . . . மத்திய
அரசாங்கத்தினுடைய 1977-ஆம் ஆண்டில் டெக்ஸ்டைல்
கண்ட்ரோல் ஆர்டர் கூட பகிரங்கமாக வையலேட் பண்ணப்
பட்டிருக்கிறது. இந்த ஹேண்ட்லூம் இண்டஸ்ட்ரீஸ் தரைமட்ட
மாகிக்கொண்டிருக்கிற நிலை இருக்கிறது.. இந்த ஹேண்ட்லூம்
இண்டஸ்ட்ரிசைப் பொறுத்த வரையில் எந்தவிதமான நடவடிக்
கையும் எடுக்கப்படவில்லை.

இன்னொரு விஷயம், ஸ்மால்ஸ்கேல் இண்டஸ்ட்ரீசினுடைய
நிலை என்ன ! 1977-78 குறிப்பில் இருக்கிறது. இந்த மாதிரி சிறு
தொழிலதிபர்கள் கூட கடுமையாகப் பாதிக்கப்படக் கூடிய நிலையில்
இருக்கிறார்கள். 1.26 இலட்சம் 1976-77லே இருந்தது ஆனால்
இன்றைக்கு அந்த தொழிலாளர்களுடைய எண்ணிக்கை 1.15
இலட்சம் ஆக குறைந்திருக்கிறது.

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [1984 மார்ச் 24

அந்த முறையிலே அன்-எம்ப்ளாய்மென்ட் இன்றைக்கு
வளர்ந்து கொண்டிருக்கிறது என்பதை நாம் பார்த்துக்கொண்
டிருக்கிறோம்.

(முற்பகல் 12-20)

இன்று அரசினுடைய 'டான்சி' நிர்வாகம்,
வரையிலே மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன் அவர்கள் பொறுத்த
சொன்னார்கள். நானும் ஒரு தகவலைச் சொல்ல கூட
கிறேன். நமக்குக் கிடைக்கக்கூடிய தகவல் உண்மையாக விரும்பு
மானால், ஒருசில மாதங்களில் டான்சி நிறுவனங்கள் இருக்கு
கூடிய ஆபத்துக்கள் இருக்கின்றன. காரணம் என்ன மூடப்படக்
அங்கே உற்பத்தி ஆகக்கூடிய பைப்புகளை, என்றால்,
பொருள்களை வாங்குவதற்கு ஆள் இல்லாத நிலைமையிருக்கிறது. மற்றுமுள்ள,
ஆனால் அதேநேரத்தில் நாம் என்ன பார்க்கிறோம் என்றால்,
அரசினுடைய நிறுவனமாக இருக்கின்ற 'ட்வார்ட்' போர்ட் கூட
அந்த நிறுவனங்களிலேயிருந்து வாங்குவதில்லை. அவர்கள்
தனியார் துறையிலேயிருந்து, தனியார் முதலாளிகளிடமிருந்து
வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலை கட்டாயமாக மாற்
றப்பட்டாகவேண்டும்.

அதேபோன்று இன்று மல்டி-நேஷனல் கம்பெனிகள் சிறு
சிறு தொழில்களில் தலையிட்டு, சிறுதொழில்களுக்குக் கிடைக்கக்
கூடிய கன்சசனை அவர்கள் வாங்கிக்கொண்டு போகக்கூடிய
ஆபத்துக்கள் இருக்கின்றன. உதாரணமாக இந்தியா டுபாக்கோ
கம்பெனி, மல்டி-நேஷனல் கம்பெனி, மேட்ச் இன்டஸ்ட்ரீஸ்,
ஸ்மால் ஸ்கேல் இன்டஸ்ட்சீசுக்காக ஒதுக்கப்பட்டு இருக்கிறது.
அவர்கள் அங்கே போய் "New Modern sophisticated Japanese
Machineries கொண்டு வந்து, இந்த மேட்ச் இன்டஸ்ட்ரியிலே
அவர்களுடைய மோனாப்பலி வரக்கூடிய ஆபத்துக்கள்
இருக்கின்றன. ஆகவே அந்த முறையிலே உள்ள நிலைகள்
மாற்றப்பட வேண்டும். ஸ்மால்ஸ்கேல் இன்டஸ்டிரிசுக்குக்
கிடைக்கக்கூடிய அந்தக் கன்செசனை, சிக் இன்டஸ்ட்ரீஸ்க்கு
கிடைக்கக்கூடிய அந்தக் கன்சசனை, இவர்கள் வாங்கிக்கொண்டு
போகக்கூடிய நிலைமைகள் இருக்கின்றன. எனவே இதைத்
தடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.



1984 மார்ச் 24] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

அதேபோல் இன்று சிறுதொழில்களைப் பொறுத்தவரை
யில் அவர்களுக்கு 'ரா மெட்டிரியல்ஸ்' கிடைக்கவில்லை. அவர்
களுக்கு ஒதுக்கப்பட்டு இருக்ககூடிய பல பொருள்கள் பிளாக்-
மார்க்கெட்டிலே போகக்கூடிய நிலைமையிருக்கிறது.
இது இன்று நேற்று இருக்கக்கூடிய நிலைமையல்ல. சென்ற,
4, 5 வருஷங்களாக இதே நிலைமை தான் இருக்கின்றது. இதை
மாற்றுவதற்கு எந்தவிதமான நடவடிக்கையும் இதுவரையில்
எடுக்கப்படவில்லை.

அதேபோல் இந்த இண்டிஜெனஸ் இன்டஸ்ட்ரீஸ்-ஐப்
பொறுத்தவரையில் நாம் என்ன பார்க்கிறோம் என்றால், இங்கே
சென்னையில் உள்ள அசோக் லேலண்ட்டிலே உற்பத்தி செய்
யக்கூடிய வெகிகில்சை வாங்குவது இல்லை. அரசே பிர்லா
வைத் தேடிப் போகக்கூடிய நிலைமை ஏற்பட்டு இருக்கிறது.
அதேபோல் தமிழகத்திலே உள்ள இந்தியா மீட்டர்ஸ் உற்பத்தி
செய்யக்கூடிய மீட்டர்களை வாங்குவதற்குப் பதிலாக, எலக்டிரிசிடி
போர்டே, கல்கத்தாவிற்குப்போய் அங்கே உள்ள பிர்லா நிறு
வனங்களைத் தேடிப் போகவேண்டிய நிலைமையிருக்கிறது. ஏன்
இந்த இந்தியா மீட்டர்ஸ்-ஐ அரசே எடுத்து, மின்சாரத்துறை
அதற்குத் தேவையான மீட்டர்களை வாங்கக் கூடாது என்று
நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று என்னுடைய கன்னியாகுமரி மாவட்டத்திலே
ரப்பர் அதிகமான அளவிலே இருக்கின்றது. அரசினுடைய
போக்குவரத்துக் கழகங்களுக்குத் தேவையான டயர் உற்பத்தி
செய்வதற்கு, ஒரு டயர் பேக்டரியை அமைக்க வேண்டும் என்று
கேட்டுக் கொண்டோம். ஆனால் ஒன்றும் நடக்கவில்லை.

அதேபோன்று இங்கே மினரல்ஸ் நிறைய கிடைக்கிறது.
இன்று 'வேர்ல்ட் மார்க்கெட்டிலே' மிக முக்கியமாக இருக்
கக்கூடிய அந்த மினரல்சை வைத்துக் கொண்டு 'டிட்டேனி-
யத்தை' உற்பத்தி செய்வதற்காக தமிழக அரசுக்கு 1974-லே
புராகிராம் கொடுக்கப்பட்டது. அதன் மீது கூட தமிழக
அரசு நடவடிக்கை எடுக்கவில்லை.

அதேபோல் 'ஷீகர் பேக்டரிஸ்-ஐப் பொறுத்தவரையிலும்
இன்றைக்கு நாம் என்ன பார்க்கிறோம் என்றால், பாண்டிய
ராஜபுரம் மற்றும் பேட்டை வாய்த்தலை என்ற இரண்டு இடங்
களிலேயும், நெல்லிக் குப்பத்தைப் போல் ஏன் நிர்வகிப்பதற்கு
நடவடிக்கை எடுக்கவில்லை என்று நான் கேட்டுக்கொள்
கிறேன். இன்று சர்க்கரை ஆலைகளைப் பொறுத்தவரையில்,
'கன்சூமர் பாயின்ட் ஆஃப் வியூவிலே' ஒரு முக்கியமான
இன்டஸ்ட்ரிஸ் என்ற முறையில் அந்த நெல்லிக்குப்பம் ஆலையை

நீங்கள் ஏன் எற்று நடத்தக்கூடாது. தற்போது அதிசமான லாபத்தை பெற்று, அந்த ஆலை முதலாளி ள் தில்லுமுல்லுகள் செய்கிறார்கள், அது உங்களுக்குத் தெரியும். ஆக்வே அந்த முறையிலே அந்த ஆலையை எடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை நீங்கள் மேற்கொள்ள வேண்டும். கூட்டுறவுத்துறையை வளர்ப்பதற்கு நீங்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும். எனக்கு ஒன்று சொல்லமுடியும். கன்னியாகுமரி மாவட்டத்திலே இரண்டு கூட்டுறவுச் சங்கங்கள் அமைப்பதற்கு 1978-லே மனு கொடுக்கப்பட்டு 1981-லே தான் அதற்கு ரெஜிஸ்ட்ரேசன் கொடுக்கப்பட்டிருக்கிறது. 1981-லேயிருந்து ஒரு புறம்போக்கு நிலத்திற்காக மனுப்போட்டு, 1983-லேதான் அது சமரசத்தில் ஏற்படுத்திக்கொள்ள முடிந்தது. 1983-லே ஜூன் மாதத்திலே கல் நடப்பட்டது என்றாலும் இன்று வரையி யிலும் அங்கே கட்டிடம் கட்டி முடிக்கப்படவில்லை. நான் ஏன் இதைச் சுட்டிக்காட்டுகிறேன் என்றால், தொழிலை வளர்ப்பதிலே அரசினுடைய இயந்திரங்கள் எவ்வளவு 'ஸ்லோவாக மூவ்' ஆகிறது என்பதற்காகத் தான் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

உங்களுடைய இன்டஸ்ட்ரியல் பாலிசி எங்கே இருக்கிறது என்றால் டிரேட் யூனியன்சை 'கிரிப்பில்' செய்வதிலேதான் இருக்கிறது என்பதை நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

"Employees who had taken casual leave or compenatary rest and participated in token fast, are not eligible for payment of performance incentive".

என்று சொல்வதினுடைய அர்த்தம் என்ன? தொழிலாளி எந்தவிதமான தர்ணாவிலேயும் ஈடுபடக்கூடாது என்பது தானே. இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலேயே மைய அரசு 184 விண்ணப்பங்களுக்கு லைசன்ஸ் வழங்க பரிந்துரை செய்திருக்கிறது என்று சொன்னபிறகு இன்னும் 123 விண்ணப் பங்கள் லைசன்ஸ் கொடுக்கப்பெறாமல் பெண்டிங்கிலே இருக் கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் நேற்றைக்கு முன் தினம் ராஜ்யசபாவிலே இருக்கக்கூடிய அமைச்சர் திவாரி அவர்கள் அங்கே பேசும்போது சொல்லியிருக்கிறார்கள். என்னுடைய இலாக்காவிலே எந்தப் பெட்டிஷனும் பெண்டிங்கி லே இல்லை என்று. இப்படிப்பட்ட நிலையில் மத்திய அரசு நடவடிக்கை எடுக்கின்ற நேரத்திலே அதை எதிர்த்து தொழி லாளர்கள் தர்ணா நடத்தினால் கூட இந்த ஜி.ஓ. படி அந்தத் தொழிலாளர்கள் பாதிக்கப்படக் கூடிய அபாயம் ஏற்படும்.



இரண்டாவது இதிலே நான் தெளிவாக சொல்லிக் கொள்ள விரும்புவது என்னவென்றால், எம்பிளாய்மென்ட் பொட்டென்ஷியாலிட்டி வளரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிற நேரத்திலே தொழிலாளர்களுடைய நலனையும் பாதுகாக்க வேண்டும் என்பதற்காகத்தான், தொழிலாளர்களுடைய வாழ்க்கைத் தரம் உயரவேண்டும் என்பதற்காகத்தான், வெறும் தொழில்களை ஏற்படுத்தினால் மட்டும் போதாது. எம்பிளாய்மெண்ட் பொட்டென்ஷியாலிட்டியும் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று சொல்லக் கூடிய நேரத்திலே, பலனை அந்தத் தொழிலாளர்கள் அனுபவிக்கும் முறையிலே அரசு தன்னுடைய கொள்கையை உருவாக்க வேண்டும் என்று கேட்டு........ (மணியடிக்கப்பெற்றது).

*திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 1984-85-க்கான தமிழ்நாடு அரசினுடைய தொழில் கொள்கை திட்டங்களை வரவேற்று சில கருத்துக்களை கூறவிரும்புகிறேன். நம்முடைய மாநிலத்திலே பொதுவாக தொழில்கள் வளர வேண்டிய அளவுக்கு வளராத ஒரு சூழ்நிலையில், நம்முடைய அரசு பொறுப்பு ஏற்ற பின், பல புதிய திட்டங்களை தமிழகத்தில் உருவாக்கி அமைத்துக் கொடுத்திருக்கிறார்கள்.

அதன் மூலம் தொழிலிலே மொத்த உற்பத்தி 26.6 சதவீதம். இந்த சத்வீத வளர்ச்சி போதுமானது இல்லை. இந்த வளர்ச்சியை மேலும் போதுமானதாக வளர்ப்பதற்கு நம்முடைய அரசு பாடுபட வேண்டும். பொதுவாக இங்கே பேசிய மாற்றுக் கட்சி உறுப்பினர்கள் எல்லாம் பெர்கேப்பிட்டா இன்பவஸ்ட்மெண்ட் (Per Capital Investment) குறைந்துக் கொண்டு வருகிறது என்று ஒரு மாயையை உருவாக்கி கொண்டிருக்கிறார்கள். நான் அதற்கு சில புள்ளி விவரங்களை அளிக்க விரும்புகிறேன்.

1977-ல் பேக்டரி ஆக்ட்டின் கீழ் பதிவு செய்த சிறு தொழில்கள் 18 ஆயிரம் ஆகும். ஆனால் 1977-க்குப் பிறகு கிட்டத்தட்ட 48 ஆயிரம் தொழிற்சாலைகளுக்கு மேல் பதிவு செய்யப்பட்டுள்ளன. அதுபோல DGTD (Medium Scale) என்று சொல்வார்களே, அதில் 200 தொழில்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. 1977-க்குப் பிறகு மினிமம் அண்டு மேஜர் இன்டட்ஸ்ட்ரீஸ் இன் தி ஸ்டேட் 42 ஆக இருந்தது, இப்போது 275 யூனிட்டுகளாக வளரக் கூடிய வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. நம்முடைய தமிழகத்தில் 1977-ல் 2,500 மில்லியன் யூனிட்டுகள் தான் மின்சாரம் உபயோகப் படுத்தப்பட்டது. 1982-83-லே 3,683 மில்லியன் யூனிட்டுகளும், 1983-84-ல் 4,547 மில்லியன் யூனிட்டுகளும் உற்பத்தியாகி உபயோகமாகிக் கொண்டிருக்கிறது.

அதுபோல இன்வெஸ்ட்மெண்ட் இன் தி இன்டஸ்ட்ரீஸ் (Invesment in the Industries) 800 கோடி ரூபாய்க்கு மேல் வளர்ந்துக் கொண்டிருக்கிறது. அகில இந்திய ரீதியிலே எடுத்துக் கொண்டால் தமிழ்நாட்டில் சர்க்கரை உற்பத்தி 10 சதவீதம். சிமென்ட் உற்பத்தி 20 சதவீதம். ஸ்பின்னிங் கெப்பாசிட்டியில (Spinning capacity) 25 சதவீதம் டோட்டால் ஆடோமைபல் ஆன்சிலியரி அண்ட் ஸ்பேர்பார்ட்ஸ் (Total Automobile Ancillary and Space Parts) 25 சதவீதம். தீப்பெட்டி உற்பத்தி 60 சதவீதம், லெதர் அண்ட் அதர் பிராடக்ட்ஸ்-லே (Leather and Leathe Products) 75 சதவீதம் என்று உற்பத்தியை பெருக்கக்கூடிய அளவுக்கு இன்று வளர்ந்து கொண்டு வருகிறது.

அதேபோல பின் தங்கிய பகுதிகளுக்காக மத்திய அரசு அளிக்கிற உதவிகளையெல்லாம் 14 சதவீதம் பெறக் கூடிய அளவுக்கு தமிழ்நாடு முன்னேறியிருக்கிறது. அத்தோடு 1967-லே தமிழ்நாட்டிலே ஒரே ஒரு தொழில்பேட்டைதான் இருந்தது. 1977-க்குப் பிறகு 5 தொழில் பேட்டைகளை அமைப்பதற்கான ஏற்பாடுகளை தமிழக அரசு செய்திருக் கிறது. மின்சாரக் குறைவினாலே தொழில் வளர்ச்சி பாதிக்கப் படக்கூடாது என்று அதற்காக 2 ஆயிரம் கோடி திட்டம் ஒன்றைத் தீட்டி மத்திய அரசு அனுமதிக்காக நம் அரசு அனுப்பியிருக்கிறது.

அதற்கான அனுமதி கிடைத்தால் மேலும் மின்சார தட்டுப்பாட்டையே தமிழகத்திலே ஒட்டு மொத்தமாக ஒழிக்கக் கூடிய அளவுக்கு வழிவகை செய்து இருப்பதற்காக அரசை நான் பாராட்டுகிறேன். அத்தோடு மட்டுமல்லாமல், கன் சார்ட்டியம் ஆன் இன்டஸ்ட்ரி (Consortium on Industries) என்பது போல, ஜாயின்ட் செக்டார் முறையில் மின்சார உற் பத்தியை அதிகரிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பொதுவாக தமிழகத்திலே பல்வேறு பகுதிகள் தொழிலிலே பின் தங்கிய பகுதிகளாக அறிவிக்கப்பட்டிருந்தாலும் நான் சார்ந்திருக்கிற காஞ்சி புரம் தொகுதியிலே எந்தவிதமான தொழிற்சாலைகளும் இல்லை பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த காஞ்சிபுரத்தில் ஓரிகை என்ற இடத்தில் ஒரு தொழிற்பேட்டை ஆரம்பித் தார்கள் தொழில் பேட்டை தொழில்கள் இல்லை. எவ்வித வளர்ச்சியும் இன்றி கேட்பாரற்று இருக்கிறது. பின்தங்கிய பகுதியாக அறிவிக்கப்படாததினால் வளரவில்லை. அரசு உதவிகள் கிடைக்கவில்லை. ஆகவே காஞ்சிபுரம் வட்டத்தை பின்தங்கிய பகுதியாக அறிவித்து இங்கு டிட்கோ சிட்கோ மூலமாகவோ அல்லது பிற அரசு நிறுவனங்கள் மூலமாகவோ தொழிற்சாலைகளை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டு கிறேன்.



அதை ஏன் குறிப்பிடுகிறேன் என்றால் செங்கல்பட்டு மாவட் டத்திலே தொழிற்சாலைகள் இருக்கிறது என்று கூறிக் கொண் டாலும், அத்தனையும் சென்னையைச் சுற்றி, கிண்டியிலும், ஆவடியிலும், சென்னையை ஒட்டியுள்ள பகுதியிலேயும் இருக்கிறது.

அந்த நிலையை மாற்றி காஞ்சிபுரத்திலே உள்ள அந்தப் பகுதிக்கு நல்ல ஒரு தொழில் பேட்டையை அமைத்துத் தருவதன் மூல மாக அங்கே இருக்கிற , ஏழை மக்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தருவதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன். காஞ்சிபுரம் பகுதியில் அதிகமான நெசவுத் தொழிலும், விவசாயமும் இருக்கின்றன. நெசவுத் தொழிலுக்குத் தேவையான சாயப் பொருள் உற்பத்தி தொழிற்சாலைகள் • (Dyes and Chemicals Indusries) ஆரம்பிக்க வேண்டும். தற்போது பம்பாயிலிருந்தும் வட மாநிலங் களிலிருந்தும் Dyes and Chemicals தமிழ்நாட்டிற்கு வருகின்றன. இப்பொருள்களை தயாரிக்கக்கூடிய நிலைமை ஏற்படுத்தினால் தொழிலை ஒட்டிய தொழிற்சாலைகள் அமையும். ஆகவே அதற் கான ஏற்பாடுகளை நம்முடைய அமைச்சர் அவர்கள் அருள் கூர்ந்து செய்யவேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-30)

அது மட்டுமல்லாமல் இது பாலியஸ்டர் யுகமாக இருப்பதால் அந்தப் பகுதியிலே உள்ள நெசவாளர்கள் பயன் அடையக்கூடிய அளவுக்கு பாலியஸ்டர் இழைகள் தயாரிக்கக்கூடிய தொழிற்- சாலையை ஆரம்பித்தால் அந்த மக்களுக்கு உதவிகரமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் 1967ஆம் ஆண்டு சட்டமன்றத் திலே பேசுகின்றபோது பிராந்திய சம நிலை ஏற்படுவதற்கு புதுப்புது தொழில்கள் ஆரம்பிக்கப்படவேண்டுமென்று வலியுறுத் தினார்கள். ஆனால் மத்திய அரசு பல நேரங்களிலே மாற்றாந் தாய் மனப்பான்மையோடு நடக்கிறது. மத்திய அரசிடம் அதி காரக் குவியல் இருக்கிற காரணத்தால் தமிழகத்திலே தொழில்கள் வேகமாக அரம்பிக்கப்பட முடியாத சூழ்நிலைகள் இருக்கின்றன. மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வழங்க மறுப்பதோடு இருக் கின்ற அதிகாரங்களை பறிக்கின்ற நிலை இருக்கின்றது. இந்நிலை மாறவேண்டும். மாநிலங்களுக்கு கூடுதல் அதிகாரங்கள் வழங்கப் படவேண்டும். குறைந்த பட்சம் Licensing Policy-ஐ மாற்றியமைப் பதற்கு நம்முடைய தமிழக அரசு போராடியோ வாதாடியோ கூடுதலான அதிகாரங்கள் கிடைக்கச் செய்ய வேண்டுமென்று விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

சிறு தொழில்களுக்கு தற்போது இருக்கும் 20 லட்ச ரூபாய் லிமிட்டை ஒருகோடியாக கிடைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். D.G. . Unit என்று சொல்லப்படுகின்ற தொழில்கள் 3 கோடி ரூபாய் வரையில் நம்முடைய அரசுக்கு அதிகாரம் இருப்பதை 7, 8 கோடியாக உயர்த்துவதற்குப் பாடுபடவேண்டும்.

அதோடு மட்டுமல்லாமல் தொழிற் சாலைகள் ஆரம்பிக்கிறபோது. State Government should have a say in the setting up of these units நம்முடைய மாநில அரசு . வழிமுறைகளையும் வலியுறுத்தக்கூடிய அளவுக்கு அதை மாற்றியமைக்கவேண்டும். சென்னையிலே தடையில்லாத வணிக மண்டலம் அமைப்பது தமிழகவரலாற்றிலே ஒரு திருப்பு முனையாக அமையும் என்பதால் நான் அதைப் பாராட்டுகிறேன். வரவேற்கிறேன்.

மற்றொரு முக்கியமான அம்சம் என்னவென்றால் தொழில்களுக்கு உரிமம் வழங்குகிற கொள்கையாகும். 1980 இல் நம்முடைய மாநில அரசு 108 பரிந்துரைகளை மத்திய அரசுக்கு அனுப்பியது. 57 பரிந்துரைகளை மத்திய அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது. 1981 இல் 92 பரிந்துரைகளை மத்திய அரசுக்கு அனுப்பியதில் 44 பரிந்துரைகளை அது ஏற்றுக்கொண்டிருக்கிறது. 1982 இல் 184 பரிந்துரைகளை நம்முடைய அரசு அனுப்பியதில் 67 பரிந்துரைகளை மத்தியஅரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. மொத்தம் நம்முடைய மாநிலம் 3 ஆண்டுகளிலே செய்த 384 விண்ணப்பங்களிலே 123 விண்ணப்பங்கள் மத்திய அரசிடம் நிலுவையில் உள்ளன. எதற்கு எடுத்தாலும் அவர்களுடைய ஒத்துழைப்பை அவர்களுடைய ஆதரவை நாட வேண்டிய நிலைமையை மாற்ற வேண்டும். அரசுக்கு முழுமையான அதிகாரங்கள் தொழிற்சாலைகள் அமைப்பதில் தேவை என்பதை அமைச்சர் அவர்கள் வாதாடி பெறவேண்டுமென்று வேண்டிவிரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

மத்திய அரசு Zero Industry district என்ற தேவையில்லாத நிலையை பின்பற்றுகிறது. மாறி வருகிற காலச் சூழ்நிலையில் இது தேவையில்லாத திட்டம் என்று கருதுகிறேன். அப்படி எடுத்துக் கொண்டால் தென் மாவட்டங்களில் தென் இந்தியப் பகுதிகளிலே ஒரே ஒரு மாவட்டம் தொழிற்சாலை இல்லாத மாவட்டமாக இருப்பதாக அவர்களுடைய குறிப்புகள் இருக்கின்றன. அதுபோன்ற நிலைமைகள் மாறி ஒவ்வொரு பிளாக்கிலும் (Block develo ment offic r) அவர்களைக் கொண்டு தொழில் இல்லையென்றால் தொழில் ரீதியாக பின்தங்கிய பகுதியாக அறிவித்து அந்தப் பகுதியில் தொழில்களை ஆரம்பிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்) Zero industry districet) என்பதை (Zero In'ustries Block) என்று மாற்றி அதற்கான ஏற்பாடுகளைச் செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.





மத்திய அரசு முதலீடுகள் கடந்த 10 ஆண்டுகளாக கொஞ்சம் கொஞ்சமாக குறைந்துகொண்டே வந்திருக்கிறது. ஆரம்பத்திலே 8 சத விகிதம் ஆக இருந்தது. 4 சத விதமாக குறைந்திருக்கிற சூழ்நிலை இருக்கிறது. இது நல்ல சூழ்நிலையல்ல. மத்திய அரசு இதுபோன்று சூழ்நிலை உருவாக்கியதை வன்மையாகக் கண்டிக்கிறேன். காலப்போக்கிலே தமிழகத்திலே மத்திய அரசின் இன்வெஸ்ட்மெண்ட் ஒன்றுமே இல்லாமல் போய்விடுமோ என்று அஞ்சுகிறேன்.

அது போன்ற நிலைமை ஏற்படாமல் நம்முடைய தமிழகத்திற்கு மத்திய அரசு உரிய பங்கை வழங்கவேண்டும். தமிழ்நாட்டிற்கு உரிய பங்கை மத்திய அரசிடமிருந்து பெற இன்னும் வேகமாக நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன். நாம் தமிழகத்தில் மிகவும் அதிகமாக எதிர்பார்த்து கொண்டிருந்த சேலம் உருக்காலை திட்டத்தை பற்றி பல்வேறு சூழ்நிலையில் நம்முடைய தமிழக மக்கள் போராடிக்கொண்டு இருக்கிறார்கள். சேலம் உருக்காலை 1977-ல் ரூ. 560 கோடி முதலீட்டில் மத்திய அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டது. முதற்கட்டமாக ரூ. 127 கோடி செலவில் ஆண்டு ஒன்றுக்கு 32,000 டன் துருபிடிக்காத தகடுகள் தயாரிக்க மைய அரசு தனது அனுமதி அளித்தது. இதுவரை இத்திட்டத்தில் ரூ. 167 கோடி தான் செலவிடப்பட்டதாக தெரிகிறது. வெறும் உருட்டாலையாகத்தான் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதனை ஒருங்கிணைந்த உருக்காலையாக மாற்ற வேண்டும் என்று இந்த அரசு பலமுறை வற்புறுத்தியும் மைய அரசு 1984-85 ஆம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் ரூ. 5 கோடி தான் ஒதுக்கியுள்ளது. மத்திய அரசு அந்த திட்டத்தை செயல்படுத்துவதில் தயக்கம் காட்டுவது ஆகும் என்று நான் கருதுகிறேன். கூடிய விரைவில் மத்திய அரசு இந்தத் திட்டத்திற்கு தமிழக மக்களுடைய வேண்டுதலை நிறைவேற்றுவதற்கு ஒத்துழைப்புத் தரவேண்டும். துரித நடவடிக்கை எடுக்க மாநில அரசு மேலும் நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

அடுத்து, இந்துஸ்தான் போட்டோ பிலிம் தொழிற்சாலை நம்முடைய தமிழகத்தில் உள்ள உதகையில் ஆரம்பிப்பதாக இருந்தது. ஆனால் அரசியல் சூழ்நிலையின் காரணமாக தமிழகத்தை புறக்கணிக்க வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் மத்திய அரசு அதை உதக மண்டலத்திலிருந்து வட மாநிலங்களுக்கு மாற்றி இருக்கிறார்கள். மேலும் காந்த நாடா Magn tic Tape plant சுமார் ரூ. 10 கோடி திட்டமும், எக்ஸ்ரே பிலிம் தயாரிக்கும் தொழிற்சாலையும் சுமார் ரூ. 100 கோடி அளவில் உதகையில் ஆரம்பிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு மட்டும் அல்லாமல் டி.வி.க்கு தேவையான டியூப்புகள் தயாரிக்கின்ற அந்த தொழிற்சாலைக்கும் நம்முடைய அரசின் சார்பில் பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. மத்திய அரசிலிருந்து இது வரை அதற்கான அனுமதி வரவில்லை என்று அறிகிறேன். அதற்கான அனுமதி அளிக்கவேண்டும். அதோடு நம்முடைய பகுதியில் தொழிற்சாலைகள் வளர்வதற்கு இரண்டொரு யோசனைகளை நான்கூற விரும்புகிறேன். பொதுவாக மற்ற மாநிலங்களில் இது போன்று புதிய தொழிற்சாலைகள் ஆரம்பிக்கின்ற காலத்தில் ஆந்திராவில், கர்நாடகாவில் எல்லாம் சேல்ஸ் டாக்ஸ் 5 ஆண்டுகளுக்கு இல்லாமல் செய்திருக்கிறார்கள். அது போன்ற ஒரு சூழ்நிலையை தமிழகத்தில் ஏற்படுத்தினால் உகுவிகரமாக இருக்கும். அதோடு மட்டும் அல்லாமல் குஜராத் மாநிலத்தில் contr c. centres என்று ஒன்றை வைத்துக்கொண்டு அதன் மூலம் தொழில் முனைவோர்களுடைய பிரச்சனைகளை நேரடியாக ஆராய்ந்து அதை நிவர்த்தி செய்வதற்கு வழிவகைகளைச் செய்திருக்கிறார்கள். அது போன்ற ஒரு சூழ்நிலையை இங்கு ஏற்படுத்தித் தரவேண்டும். அதோடு மட்டும் அல்லாமல் Centrally aided Revolving Fund for State Industrial Corporation ஏற்படுத்தினால் நல்லது. ஒவ்வொரு மாநிலத்திற்கும் அந்த தொழில் சம்பந்தப்பட்டவர்களுக்கு உதவுவதற்காக தனியாக நிதி ஏற்படுத்தித் தரவேண்டும். அதோடு மட்டும் அல்லாமல் கெமிக்கல் இண்டஸ்ட்ரீஸ் பொருள்களுக்கு நம்முடைய மாநிலத்தில் 8 சதவீதம் மற்ற மாநிலங்களில் 4 சதவீதம் வரி வசூலிக்கின்ற சூழ்நிலை இருக்கிறது. அது போன்ற சூழ்நிலையை அரசு கருதி அந்த டாக்ஸ் பேட்டர்னை Tax Pattern-ஐ திருத்தி அமைத்து அந்த தொழிற்சாலைகள் வளருவதற்கு எந்த அளவுக்கு மாற்றலாமோ அந்த அளவிற்கு மாற்ற. ஆக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டு இந்த மானிய கோரிக்கையை வரவேற்று அமர்கிறேன். நன்றி வணக்கம்.

*திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்து இருக்கக்கூடிய தொழில் மானிய கோரிக்கைககள் மீது இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக சில கருத்துக்களை எடுத்துச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையில் தமிழக அரசினுடைய தொழில் கொள்கைப் பற்றி சொல்கிற போது மாநிலத்தின் தொழில் வளர்ச்சி பாதிக்கப்பட்டுள்ளது என்றும், நிலையானப் பொருளாதார வளர்ச்சித் திட்டங்கள் ஒரு சில மட்டுமே மேற்கொள்ளப் பட்டுள்ளன என்றும் ஒரு சில தரப்பினரிடையே ஆதாரமற்ற கருத்து நிலவி வருகிறது என்று இங்கே மேற்கோள் காட்டியிருக்கிறார்கள். நீங்கள் வேண்டுமானால் கேட்கலாம் ஆதாரம் வைத்து இருக்கிறீர்களா என்று இங்கே இருக்கக்கூடிய ஆளும் கட்சியைச் சார்ந்த நண்பர்களும் மாண்புமிகு அமைச்சர்களும் கேட்கலாம். இதோ உங்களுக்கு நான் உங்களுடைய ஆதாரங்களையே தருகிறேன். நம்முடைய மாண்புமிகு தொழில்



அமைச்சர் அவர்கள் கொடுத்து இருக்கக்கூடிய கொள்கை விளக்கக் குறிப்பில்கடந்த 10 ஆண்டுகளில் தமிழ்நாட்டில்மைய அரசு செய்த முதலீடுகள் 8 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாகக் குறைந்துள்ளது. இங்கு ஏற்பட்டுள்ள சமமின்மையை விரைவில் சரி செய்யுமாறு மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்தி வருகிறது. புதிய திட்டங்கள் உருவாகும் போதெல்லாம், புதிய திட்டங்களை இம் மாநிலத்தில் அமைக்குமாறு மாநில அரசு மத்திய அரசினை கேட்டுக்கொள்கிறது. எனினும், இம்மாநிலத்தில் மத்திய அரசு தொழிற்சாலைகள் 11 மட்டுமே உள்ளன. இவையனைத்தும் 1967 ஆம் ஆண்டிற்கு முன்னரே நிறுவப்பட்டவை. 1967 ஆம் ஆண்டிற்குப் பின்னர், மத்திய அரசின் நடுத்தர அளவிலான இரு திட்டங்கள் மட்டுமே இம்மாநிலத்தில் நிறுவப்பட்டுள்ளன, என்று விளக்கக் குறிப்பில் இங்கே குறிப்பிட்டு இருக்கிறீர்கள். இதன்மூலம் நான் தெரிவித்துக்கொள்ளுவது எல்லாம் தமிழகத்தில் கடந்த 10 ஆண்டு காலமாக மிகப்பெரிய தொழிற்சாலை ஏற்படவில்லை. அதன்மூலம் தமிழகத்தில் தொழில் வளர்ச்சி ஏற்படவில்லை என்ற குற்றச்சாட்டு இங்கே நிரூபிக்கப்பட்டிருக்கிறது என்பதை முதற்கண் நான் இங்கே சுட்டிக்காட்ட கடமைப் பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 12.40)

நம்முடைய தமிழகம் தொழில் வளத்தில் முன்னேறவேண்டும் என்று சொல்லும்பொழுது உண்மையில் என்ன நிலைமை இருக்கிறது? இங்கே பல்வேறு மானியங்களுக்கு நம்முடைய அரசு ஒதுக்கீடு செய்கிறது. நீங்கள் வானளாவப் புகழ்ந்து கொண்டிருக்கின்ற சத்துணவுத் திட்டத்திற்கு 200 கோடி ரூபாய், 250 கோடி ரூபாய் என்று ஒதுக்குகிறீர்கள். அதை நாங்கள் மறுக்கவில்லை. காவல் துறைக்கு 86 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. தாழ்ந்த தமிழகம் தலைநிமிர்ந்து நிற்கவேண்டும், தொழில் வளத்தைப் பெருக்கவேண்டும் என்று சொன்னால் அதற்காக ஒதுக்கியுள்ள பணம் எவ்வளவு என்று பார்க்கின்ற பொழுது 18 கோடி ரூபாய்தான். ஆகவே, இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் தொழில் வளத்தைப் பெருக்கும் திட்டத்தில் இந்த அரசுக்கு நாட்டம் இல்லை என்பதைத்தான் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழக மக்களுடைய உயிர் மூச்சாகவும், தென் மாவட்டங்களில் பெரும் கிளர்ச்சிக்குக் காரணமாகவும் இருப்பதும், வியாபார ஸ்தலத்திலே இருப்பவர்கள் போராடுகின்ற ஒரு நிலையை ஏற்படுத்தக் கூடியதாகவும் இருப்பதுமான தூத்துக்குடி—மதுரை—திண்டுக்கல் அகல இரயில் பாதை திட்டத்தைப் பற்றி ஆளுநர் உரையிலேயும் இல்லை; நம்முடைய தொழில் கொள்கைக் குறிப்பிலேயும் ஒரு வார்த்தைகூட இல்லை. அப்படிப்பட்ட நிலையில் தொழில் முன்னேற்றம் எங்கேயிருந்து, எப்படி

ஏற்படும் என்பதைப்பற்றி எங்களுக்குச் சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது. ஆனால், பக்கத்தில் உள்ள கேரளாவில் ஆறு மாதங்களுக்கு ஒரு ஆட்சி என்று நீங்கள் பேசுகின்ற நிலையிலே அது கொச்சையாக இருந்தாலும், அந்த மாநிலத்திலே இருப்பவர்கள் எர்ணாகுளத்திற்கும் திருவனந்தபுரம் வழியாக தூத்துக்குடி அகல இரயில் பாதையைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால், தமிழகத்தில், தூத்துக்குடி துறைமுகத்தோடு இணைக்கும் வகையில், மதுரை, கோயம்புத்தூர், திருச்சி, சென்னை போன்ற பெரிய நகரங்களை இணைக்கும் விதத்தில், அகல இரயில் பாதைத் திட்டம் இல்லாததால் இன்றைக்குத் தமிழகத்தின் தொழில் வளர்ச்சியும் தொழில் முதலீடுகளும் குறைந்திருக்கின்றன. ஆகவே, கரூர்—திண்டுக்கல் அகல இரயில் பாதைத் திட்டத்தைப் பெறுவதற்கு நம்முடைய மாநில அரசு போராட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே, நாம் விண்ணப்பிக்கும் விண்ணப்பங்களுக்கு மத்திய அரசானது தொழில் முதலீட்டு உரிமங்களைத் தருவதற்குக் கால தாமதப்படுத்துகிறார்கள் என்று சொல்கிறீர்கள். எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள், நேற்று, நாடாளுமன்றத்தில் சொன்ன கேள்வி—பதிலைச் சுட்டிக்காட்டினார்கள். நாங்கள் தாமதப்படுத்தவில்லை என்று மத்திய அரசு அறிவிக்கிறது என்றால் நம்முடைய மாநில அரசு அப்படிப்பட்ட உரிமங்களைப் பெறுவதற்கு அமைச்சரவர்கள் என்ன நடவடிக்கைகளை எடுத்தார்கள், நம்முடைய அதிகாரிகள் என்ன நடவடிக்கைளை எடுத்தார்கள் என்ற அந்த விவரங்களைச் சொல்லியிருக்கலாம். அப்படிப்பட்ட தகவலே இல்லை என்பதால் நீங்கள் வாய்மூடி மௌனிகளாக இருக்கிறீர்கள் என்றுதான் நான் சொல்ல விரும்புகிறேன்.

அந்த அடிப்படையில் பார்க்கின்றபொழுது, பெரம்பூர் வேகன் பழுது பார்க்கும் தொழிற்சாலையை வேகன் உற்பத்தி தொழிற்சாலையாக மாற்றலாம் என்று நிபுணர் குழு சிபார்சு செய்திருக்கிறது. அப்படிச் செய்வதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆயிரம் கிலோ மீட்டர் நீளம் கடற்கரையைக் கொண்ட நம் நாட்டில், 400-க்கு மேற்பட்ட கடற்கரைப் பகுதிகளைக் கொண்டதாக இருப்பது நம்முடைய தமிழகம். தூத்துக்குடியிலும், சென்னையிலும் துறைமுகங்கள் இருக்கின்றன. ஆனால் இந்தத் துறைமுகங்களில் இன்றைக்குச் சரக்குகளை ஏற்றி, இறக்க சில கப்பல்கள் வருகின்றனவே தவிர கப்பல்கள் தங்கிப் பழுது பார்க்கின்ற கப்பல் கூடங்களை ஏற்படுத்துவதற்கு



முயற்சிக்க வேண்டும். அதன் மூலம் ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்பது மட்டும் அல்ல பெயிண்ட் தொழிற்சாலையை உருவாக்கும் நிலைமையும் ஏற்படும். எனவே, சென்னையிலேயும், தூத்துக்குடியிலேயும் கப்பல் பழுது பார்க்கின்ற கூடங்களை ஏற்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வளர்ச்சி மையங்கள் என்று ஓசூரையும் கும்மிடிப்பூண்டியையும், இராணிப்பேட்டையையும், தூத்துக்குடியையும் வைத்திருக்கிறார்கள். ஓசூரில் தேக்கமான நிலை ஏற்பட்டு, குடிநீர்ப் பற்றாக்குறை என்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட நிலையில் மீண்டும் ஓசூரில் மூலதனத்தைப் போடுவது என்பதும், வளர்ச்சி மையம் என்று அறிவிப்பதும் சரியா? எனவே, அதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தூத்துக்குடியில் இன்றைக்கு நில ஆர்ஜிதம் செய்வதற்கான ஏற்பாடுகள் நடக்கின்றன என்று கோடிட்டுக் காட்டியிருக்கிறீர்கள். அதைத் துரிதப்படுத்த வேண்டும். வருங்காலத்தில் சென்னைக்கு அடுத்தப்படியாக மிகப்பெரிய தொழில் கேந்திர நகரமாக ஆவதற்கான வாய்ப்பு பெற்ற தூத்துக்குடியில் சிப்காட் ஏற்படுத்துவதற்கு துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பொதுநிறுவனங்களைப் பொறுத்தவரையில் இன்றைக்குப் பல்வேறு நிறுவனங்கள் நமக்குக் கொடுக்கின்ற கணக்கெல்லாம் நஷ்டக் கணக்குத்தான். ஒரு காலத்திலே நம்முடைய மூதறிஞர் திரு. இராஜகோபாலாசாரியார் அவர்கள் பொதுத் துறை வெள்ளை யானை என்று சொன்னார்கள். அந்தக் கருத்தை உறுதிப்படுத்துகிற அளவில்தான் அரசாங்கத்தின் கொள்கை இருக்கின்றது. அதற்கு பிரதானமான காரணம் அங்கே மிகப்பெரிய நிர்வாகச் சீர்கேடு நடக்கின்றது.

அதைப்பற்றிப் பேசுவதற்கு முற்படுகின்றபோது அதற்காகத்தான் பொது நிறுவனங்கள் குழு இருக்கின்றது என்று நீங்கள் சொல்லாம். அந்தக் குழு எப்படிச் செயல்படுகின்றது என்பதை இங்கே இருக்கின்ற மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் அறிவார்கள். ஆகவே அது மட்டும் போதாதது. ஆகவே அவற்றை எல்லாம் நல்ல முறையில் கண்காணிக்கவும், அங்கே ஏற்படுகின்ற சீர்கேடுகளையும், ஒழுங்கீனங்களையும் களையவும் தனியாக ஒரு குழுவினை அமைக்க வேண்டும். மேலும் பொது நிறுவனங்கள் பற்றி தனியாக ஒரு பொது விவாதம் நடத்த வருடந்தோறும் ஏற்பாடு செய்யவேண்டும். குறிப்பாக நம்முடைய

பொது நிறுவனங்களில் ஒன்றாக தமிழ்நாடு உப்பு நிறுவனம் இயங்குகின்றது. நான்கூட இரண்டு, மூன்று முறை சென்று பார்த்திருக்கிறேன். நெல்லை மாவட்டத்திலுள்ள உப்புத் தொழிலாளர் சங்கத் தலைவன் என்ற முறையில், அந்தத் தொழிலைப் பற்றித் தெரிந்தவன் என்ற முறையில் இங்கே ஒன்றைச் சொல்லவிரும்புகிறேன்.

எங்களுடைய மாவட்டத்திலே பெரிய பெரிய செல்வந்தர்கள் உப்புத் தொழிற்சாலை மூலமாக வருமானம் பெறுகிறார்கள். ஆனால் துரதிர்ஷ்டவசமாக தமிழ்நாடு உப்புக் கழகம் நிறுவனம் நஷ்டக் கணக்கைக் காட்டுகின்றது. ஆயிரக்கணக்கான, இலட்சக்கணக்கான மூட்டை உப்பு அங்கே மண்மூடி போடாமல் கிடக்கின்றது. அப்படிப்பட்ட ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. அந்த நிலைமையை எல்லாம் நீக்கவேண்டும். அதைப் போன்று இன்றைக்கு நாம் எடுக்கக்கூடிய தொழிற்சாலைகளைப் பொறுத்தவரையில் தமிழகத்திலே பெரிய நெருக்கடி ஏற்பட்டு, அதிலே அவை எல்லாம் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கின்றன.

அரசாங்கத்தினுடைய தொழிலாளர் கொள்கை பற்றி இன்றைக்குப் புள்ளிவிவரம் சொல்கிறது. தமிழகத்தில் இருக்கக்கூடிய பதிவுசெய்யப்பட்ட ஆலைகளில் பணிபுரிகின்ற தொழிலாளர்கள் 7 இலட்சம் பேர். அவர்களில் ஒரு இலட்சம் பேர் இன்றைக்குத் அந்தத் தமிழ்நாடு அரசினுடைய தொழிலாளர் விரோதக் கொள்கை காரணமாக கதவடைப்பு, லே ஆஃப் ஆகியவற்றின் மூலம் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதுதான் இந்த அரசாங்கத்தினுடைய தொழில் கொள்கை. இப்படிப்பட்ட நிலைமை இருந்தால் தமிழகத்திலே தொழில் வளம் பெருகுமா? ஆகவே தொழிலாளர் கொள்கையை நீங்கள் மாற்றியாகவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் வரையில் தமிழகத்தில் ஸ்டிரைக், லே ஆஃப் ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் 11 ஆயிரத்து... பேர்தான். அதிலும் பி. அண்ட் சி. மில்லிலே இருக்கக்கூடிய 7,800 பேரையும் கழித்துவிட்டால் 3,550 பேர்தான் வருகிறார்கள். இவ்வளவுதான் நம்முடைய தமிழ்நாட்டில் உள்ள ஆர்கனைஸ்ட் லேபரர்ஸ். மொத்தம் 9 இலட்சத்து 41 ஆயிரத்து 99 பேரில் இவ்வளவு பேர்தான் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மிகைப்படுத்திக் கூறுகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





திரு. மு. அப்பாதுரை: மாண்புமிகு மாற்றுத்தலைவர் அவர்களே, 1983 ஆம் ஆண்டில் தமிழகத்தில் மனித இழப்பு மட்டும் 2 இலட்சம் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: அதற்கு ஒரு காரணம் உண்டு. நாமே இலங்கைப் பிரச்சினைக்காக ஒரு நாள் தமிழகம் பூராவும் ஹர்த்தால் செய்த காரணத்தால் மனித இழப்பு நாள் அதிகமாக ஆயிற்று என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. மு. அப்பாதுரை: மாற்றுத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிவு பெறாத தொழிலாளர்கள்தான் அதிகம் என்று சொன்னார்கள். அவைகள் எல்லாம் உற்பத்திக் குறைவுக்கு காரணங்கள் இல்லையா? ஆகவே அப்படிப்பட்ட நிலையை நீங்கள் மாற்றியாக வேண்டும். இன்றைக்கு மிகப்பெரிய தொழிற்சாலைகள் ஏற்படாத தன் காரணத்தால் விளைவு என்ன? சிறு தொழில்களிலும் முடக்கம் ஏற்பட்டு இருக்கின்றது. அதற்கு பிரதான காரணம் என்ன? மூலப்பொருள் கிடைக்கவில்லை என்பதுதான். மேலும் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களுக்கு விரிவான சந்தை வசதி இல்லை. மேலும் இண்டஸ்ட்ரியல் ஹார்மனி என்று சொல்வார்களே அந்தத் தொழில் இணைப்பு இல்லாத காரணத்தாலும் சிறு தொழில்கள் எல்லாம் நசிந்து இருக்கின்றன. ஆகவே அந்த நிலைமையைப் போக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சர்க்கரை ஆலையைப் பொறுத்தவரையில் இன்றைக்கு நமக்கு மிகப் பெரிய இலாபம் என்று சொன்னாலும் கூட கரும்பை உற்பத்தி செய்யக் கூடிய தொழிலாளர்கள் இன்றைக்கு மிகப்பெரிய பாதிப்புக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறார்கள். குறிப்பாக சர்க்கரை ஆலை முதலாளிகள் அந்தக் கரும்பு விவசாயிகளுக்கு முன்பணம் கொடுக்கிறார்கள். அப்படிக் கொடுக்கப்பட்ட முன்பணத்திற்கு இரண்டு தவணை பணத்தைப் பிடித்தம் செய்கிறார்கள். ஆனால் அதற்குப் பிறகும், இரண்டாண்டு காலம், மூன்றாண்டு காலம் கழித்தும் அவர்களால் அந்தத் தவணையைக் கொடுக்க முடியாத காரணத்தால் கரும்புத் தொழிற்சாலைகளில் மிகப்பெரிய தேக்கம் ஏற்பட்டிருக்கின்றது.

(பிற்பகல் 12-50)

இன்றைக்குச் சர்க்கரை ஆலைகளிலுள்ள கழிவுப் பொருளை வைத்து, எரி சாராயம் இண்டஸ்ட்ரியல் ஆல்கஹால் உற்பத்தி செய்ய முடியும். அப்படிப்பட்ட வாய்ப்பினை தமிழக அரசு உருவாக்க வேண்டுமென்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். சு

[திரு மு. அப்பாதுரை] [1984 மார்ச் 24

நலிவுற்ற தொழில் நிறுவனங்களுக்கு உதவி செய்வது என்ற அடிப்படையில் இன்றைக்கு 12 நிறுவனங்களை எடுத் திருக்கிறீர்கள். அப்படிப்பட்ட நலிவுற்ற நிறுவனங்களுக்கு நீங்கள் உதவி செய்வதன் மூலமாக, அவைகள் வளம் பெற்று மீண்டும் நல்ல முறையிலே செயல்பட்ட பிறகு, அந்த நிறுவனங் களை மீண்டும் அந்தத் தனியார்களுக்குக் கொடுப்பது என்பது சரியான கொள்கைதானா? அப்படிப்பட்ட நிலைமைகளை மாற்றி, அவைகளை அரசே கையகப்படுத்திக்கொள்ள வேண்டும், ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

அதேபோன்று தமிழகத்தில் கடந்த 4 ஆண்டு காலத்தில் தொழில் கல்வி பெற்ற மாணவர்களுக்கு வேலை வாய்ப்பு குறைந்திருக்கிறது என்று சொன்னால், தமிழகத்தில் இன்றைக்கு தொழில் உற்பத்தியில்லை, தொழிற்சாலை பெருகவில்லை யென்பதைத்தான் காட்டுகிறது.

அடுத்தபடியாக திருச்சி மாவட்டம், பேட்டைவாய்த் தலை யில் காவேரி சர்க்கரை ஆலையிருக்கிறது. நலிவுற்ற நிலையில் 1979 ஆம் ஆண்டு இந்த ஆலையின் நிர்வாகப் பொறுப்பை மத்திய அரசு ஏற்றுக் கொண்டது. இந்தச் சர்க்கரை ஆலையைப் பொறுத்தவரையில் நல்ல நிலையில் இயங்கி வருகிறது. ஆகவே, இந்த ஆலையைத் தமிழக அரசு ஏற்று நடத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதே போன்று ஊட்டியிலே இருக்கக்கூடிய கலர் பிலிம் தொழிற்சாலையை நம்முடைய தமிழகத்திற்குக் கொண்டு வருவ தற்கு அரசு தவறிவிட்டது. அதைக் கொண்டு வர நீங்கள் முயற்சி செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதி, நெல்லை மாவட்டத்திலே மிகவும் பின்தங்கிய தொகுதி, தாழ்த் தப்பட்ட மக்கள் அதிகமாக வாழக் கூடிய தொகுதி இந்த நாடு விடுதலை பெறுவதற்காக முதன் முதல் விடுதலைக் குரல் எழுப்பிய வீரபாண்டிய கட்டபொம்மன் பிறந்த பாஞ்சாலங் குறிச்சியும் அவர் இறந்த கயத்தாறும் என்னுடைய தொகுதியில் தான் இருக்கின்றன. நம்முடைய மரியாதைக்குரிய வ. உ. சிதம்பரம் பிள்ளை பிறந்த மண் அந்த மண். இப்படிப்பட்ட வரலாற்றுப் புகழ்மிக்க அங்கு ஒரு கூட்டுறவு நூற்பாலை உரு வாக்கித்தர வேண்டும். அதைப் போல கயத்தாறு மிகவும் பின்தங்கி யபகுதி. அங்கே ஒரு கூட்டுறவுத் தொழிற்பேட்டை அமைத்துத் தரவேண்டும். அதே போன்று என்னுடைய அருமை தோழர், திரு. டி. கே. நல்லப்பனுடைய பெருந்துறை தொகுதியைப் பிற் பட்ட பகுதியாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள் றேன்...............(மணியடிக்கப் பெற்றது.



1984 மார்ச் 24]

*திரு. துரைமுருகன் : துணைத் தலைவர் அவர்களே, நம் முடைய மாண்புமிகு தொழில் துறை அமைச்சரால் இந்த மாமன்றத்திலே வைக்கப்பட்டிருக்கிற மானியக் கோரிக்கையின் மீது நான் சார்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே சில கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக் கிறேன். பட்ஜெட் படிக்கிறபொழுது வேறு ஒரு அமைச்சர் இந் தத் துறையிலே இருந்தாலும் மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் இப்பொழுது இதையும் சேர்த்து வைத்திருக்கிறார்.

'இதனை இதனால் இவன்முடிக்கும் என்று ஆய்ந்து
அதனை அவன்கண் விடல்'

என்று காலையிலே நம்முடைய சபாநாயகர் குறள் படித்திருக் கிறார். அந்தக் குறள் அவருக்குத் தான் பொருத்தமோ, என்னவோ, தெரியவில்லை. எனவே நசிந்து போயிருக்கிற பந்த யக் குதிரை போல ஒரு காலத்திலே தமிழ் நாட்டிலே தொழில் துறை இருந்தது. அது நொண்டிக்குதிரையாக மாறி இருக்கிறது. நொண்டிக் குதிரைக்குப் புத்தூர் கட்டுப் போடுவதற்காக நம் முடைய மாண்புமிகு பொன்னையன் அவர்கள் வந்திருக்கிறார் கள். அவர்களுடைய காலத்திலாவது இந்தக் குதிரையை நல்ல குதிரையாக மாற்றுவதற்கு, தொழில் துறையைச் செம்மை யாக்குவதற்கு வழிவகை செய்வார் என்று நான் கருதுகிறேன். காரணம், அகில இந்தியாவிலே தமிழ்நாடு 3-வது இடத்திலே இருந்தது. அது இப்பொழுது 13-வது இடத்திற்குப் போய் இருக்கிறது என்று பத்திரிகைகளும் தொழில் நோக்கர்களும் எடுத் துக் காட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஒருமுறை இங்கே தொழில் துறை அமைச்சராக இருந்த திரு. ஆர். வெங்கட்ட ராமன் அவர்கள் திருப்பத்தூர் இடைத் தேர்தல் நேரத்திலே சொன்னார். தொழில் துறை மிகக் கெட்டுப்போயிருக்கிறது என்று. அன்றைய தினம் தொழில் துறை பொறுப்பிலிருந்த அமைச்சரைப் பற்றி ஒரு கமெண்ட் அடித்தார்.

It is not fair to say once again in this august Assembly.

ஆகையினாலே அதை நான் விட்டுவிடுகிறேன். இருந்தாலும், தொழில் துறை தொய்ந்து போயிருக்கிற ஒன்று என்பதை யாராலும் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது. கொள்கைக் குறிப்பிலே அவர்கள் குறிப்பிட்டிருப்பதில்கூட அந்தப் புலம்பல் நிரம்ப இடங்களிலே இருக்கிறது என்பதை அதைப் படிக்கின்ற யாரும் தெரிந்துகொள்வார்கள்.

தொழில் துறையில் தேவையான, முக்கியமான ஒன்று 'காப்பிட்டல்'. பண முதலீடு வேண்டும். முதலாளிகள் பணம் போட்டாலும், தொழிற்சாலை ஓடுவதற்கு மின்சாரம் மிக அவசியம். அதுவும் நம்மிடத்திலே இல்லை. ஆக, இரண்டு சோர்சும் நம்மிடத்திலே இல்லாத காரணத்தாலே, இன்றைக்கு இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது. மின்சாரம் இல்லை என்பதை இந்த நாட்டிலே தொழிற்சாலை நடத்துகிற, தொழில் துறையைப் பற்றி பேசுகிற அனைவரும் சொல்கிறார்கள். நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர் சபை நடக்கிற பொழுது வருவார். மின்சாரக் கட்டெல்லாம் எடுக்கப்படுகிறது. கட் கிடையாது என்று சொல்லிவிடுவார்கள். அசெம்பிளி முடிந்தவுடனே 3-வது நாள் 50 சதவீதம் கட் என்று சொல்வார். அதற்குப் பிறகு எப்பொழுது சபை கூடுமோ தெரியாது. வந்த உடனே விதி 106 பிரகாரம் இப்பொழுது விவசாயத்திற்கு கட் கிடையாது. தொழில் துறைக்குப் பவர் கட் கிடையாது. எல்லாம் ஓட்டலாம் என்று சொல்வார். 40 நாள் கடந்து, அசெம்பிளி முடிந்த உடனே கட் என்பார். அவர் சொல்லிவிட்டுப் போய்விடுவார். மின்சார பட்ஜெட்டே இங்கே வரவில்லை, வருமோ, வராதோ, தெரியாது. ஏன் என்று கேட்டால் அதற்காக நாம் எடுத்திருக்கிற மின்சார உற்பத்தி இருந்தால் தான் தொழில்துறை இயங்க முடியும். அது தான் அதற்கு உயிர் போன்றது. அந்த மின்சாரத்தை உற்பத்தி செய்யவேண்டும் என்பதற்காக இப்போது இந்த ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்கியுள்ள பணம் அதிகம். நம்முடைய நிதிநிலை அறிக்கையிலே பெரும் பகுதியை இது விழுங்கி இருக்கிறது. அந்த மின்சார வாரியத்திற்கு 500 கோடி ரூபாய் நாம் கடன் வேறு கொடுத்திருக்கிறோம். ஒரு வெள்ளை யானையைப் போல தமிழ் நாட்டில் மின்சார இலாக்கா இருக்கிறது. அந்த இலாக்காவிலே ஒன்றை நான் கேட்கிறேன். நமக்கு மின்சாரம் வேண்டும் என்பதற்காக மேட்டூர் தெர்மல் பவர் புராஜெக்ட்—2 × 210 மெகாவாட் கெபாசிட்டியில் ஒரு புராஜெக்ட்டை துவங்குவதற்கு சென்ட்ரல் கவர்ன்மெண்ட் பெர்மிஷன் கொடுத்துவிட்டது. சென்ட்ரல் கவர்ன்மெண்ட் பலவற்றை கொடுக்கவில்லை. ஆனால் இதைக் கொடுத்து விட்டது. பணமும் கொடுத்தாகிவிட்டது. சிவில் ஒர்க்குகளுக்காக டெண்டர் கால்-பார் பண்ணினார்கள். டெண்டர் என்று வைத்தாகிவிட்டது. ஆனால் தலைவர் அவர்களே நான்கு மாதத்திற்குள்ளாக டெண்டரை டிஸ்போஸ் பண்ண வேண்டும். ஆனால் விசித்திரம், சர்க்கார் தரப்பிலேயிருந்து இன்னொரு நான்கு மாதங்கள் எடுத்துக் கொள்கிறார்கள். காண்ட்ராக்டர்களே என்ன சொல்கிறீர்கள் என்று கேட்டு கிட்டத்தட்ட ஒரு ஆண்டுகாலமாகி விட்டது. சிவில் ஒர்க்ஸ் டெண்டர் பைனலைஸ் பண்ணவில்லை. ஏன் என்றால் கோப்புகள் குவிந்து இருக்கின்றன. பார்க்க நேரம் இல்லை.





அதோடு மட்டுமல்லாமல் லோயர் மேட்டூர் புராஜெக்ட். அதிலே கூட டெண்டர் விடுவதில் ஒரு தகராறு ஏற்பட்டது, குறிப்பாக நம்முடைய சட்டத்துறை அமைச்சர் அவர்கள் அறிவார்கள். அதிலே ஒரு ஆளுக்கு கிடைக்கவில்லை என்று கோர்ட்டுக்கு போனார்கள். கோர்ட் அவருக்குத் தான் கொடுத்திருக்க வேண்டுமென்று சொல்லி மறுபடியும் லீவ் கொடுக்கிறார்கள். அவர் போகப் போகிறார். லோயர் மேட்டூர் புராஜெக்ட்டிலும் இன்னும் சிவில் ஒர்க்ஸ் ஆரம்பிக்கவில்லை. அப்படி இருக்கிற போது மின்சாரம் இல்லாத நிலை இருக்கிறபோது நீங்கள் எங்கே போய் தொழில் துறையை ஆரம்பிக்கப் போகிறீர்கள்? நம்முடைய இலாக்கா அதிகாரிகள் வழக்கமாக எழுதுவார்கள். தமிழ் நாட்டிலே தொழில் துறை வளர்கிறது. வேலையில்லாத் திண்டாட்டம் போகிறது என்று எழுதுவார்கள். அது ஒரு இராமாயணம். வருடா வருடம் வருவது தான். எனக்கும் 1971-லிருந்து படித்து படித்து புளித்து போய்விட்டது. இந்த அறிக்கையில் முதலில் எடுத்தவுடன் சொல்கிறார்கள். 'மாநிலம் முழுவதும் வேலை வாய்ப்பை உருவாக்குதல் என்பது மாநில அரசின் முக்கிய பணிகளுள் ஒன்றாகும்'. ஆல் ரைட். தொழிற்சாலைகள் பெருகினால் வேலை வாய்ப்புகள் கிடைக்கும். ஆகவே வேலையில்லாத் திண்டாட்டம் போகும். இது ஒரு பெரிய சூத்திரம். கிளீனாக முதல் சென்டன்சை முடித்து விட்டார்கள். ஆனால் தொழிற்சாலை கிடையாது. வேலையில்லாத் திண்டாட்டம் எங்கே போயிருக்கிறது? பாம்பு அடிக்கு, மருந்து போட ஒரு பெரிய தொழிற்சாலை, சர்க்கார் சப்ளிமெண்டரி பட்ஜெட்டிலே பார்த்தேன். குதிரை வாங்குகிறார்களாம். 1,000 அல்லது 800 குதிரைகளை வாங்கி டகடகட வென்று காடு, மலை வனாந்திரம் எல்லாம், அச்சம் என்பது மடமையடா என்று பாடிக்கொண்டு அவர்கள் போய்க் கொண்டே இருந்துவிடுவார்கள். இதிலே இன்னொன்றை பார்க்கிறேன். புதிய தொழிற்சாலைகளை ஆரம்பிப்பது, வேலையில்லாதவர்களுக்கு வேலை கொடுப்பது இருக்கட்டும். இருக்கிற தொழிற்சாலைகளில் எவ்வளவு மூடி இருக்கின்றன என்பதை பட்டியல் போட்டு நண்பர்கள் சொன்னார்கள். மூடப்பட்டு லாக்-அவுட்டோ, ஸ்ட்ரைக்கோ வேறு ஏதுவோ வந்திருக்கிறது. நடந்த உடனே நீங்கள் தலையிட மாட்டேன் என்கிறீர்கள். அதற்கு ஒரு ஒன்பது மாதம் ஆக வேண்டும். அது என்னவோ ஒன்பதிலே உங்களுக்கு ஒரு நாட்டம். 9 மாதம் டெண்டர் பைனலைஸ் பண்ணுவதற்கு; இதிலே ஒரு ஒன்பது மாதம்; எல்லாவற்றிலும் ஒன்பது என்றால் அது அவ்வளவு நல்லதில்லை. அந்த எண்ணும் நல்லதில்லை.

அடுத்து தடையில்லா வணிக மண்டலம் ஆரம்பிக்க போகிறோம் என்று சொல்கிறீர்கள். நான், இந்த மண்டலத்திற்கு என்ன பண்ணி இருக்கிறீர்கள் என்று ஸ்டேட்மெண்டை முழுவதும் படித்துப் பார்த்தேன். [illegible] 40 அப்ளிகேஷன்கள் வந்திருக்கின்றன. 500 [illegible]

கிறார்கள்; 400 ஏக்கர் நிலம் சாணிடோரியம் எதிரில் பிடித்தாகி விட்டது; தாம் ரத்திலே வந்துவிட்டது. சென்ட்ரல் அப்ரூவல் வந்து விட்டது; எல்லாம் சொல்லி முடித்தாகி விட்டது. இந்த பட்ஜெட்டிலே பினான்ஷியல் மெமொரண்டத்தை நான் புரட்டி புரட்டிப் பார்த்தேன். நிதியமைச்சர் அவர்களிடம் கூட கேட்டேன். ஒரு அணா கூட ஒதுக்கவில்லையே இந்தத் தடையிலா வணிக மண்டலத்தை எப்படி செய்ய போகிறீர்கள் என்று. அவர் ஒன்றும் பதில் சொல்லவில்லை. ஆனால் அவர் என்ன சொல்வார் என்று நானே நினைத்துக் கொண்டேன். எதற்கு தான் நாங்கள் ஒதுக்குகிறோம்; ஒரு ரூபாய் ஒதுக்காத சத்துணவுத் திட்டத்திற்கு 300 கோடி ரூபாய் போகவில்லையா? ஆகவே தலைப்பாகை மாற்றுகிற வேலை நடக்கும்; ஒரு ஹெட்டிலேயிருந்து இன்னொரு ஹெட்டிற்கு மாற்றி விடுவோம் என்று அவர் சொல்லலாம் ஆகவே இதுவும் இல்லை.

இன்னொன்றையும்கூட சொல்லி இருக்கிறார்கள். 'லோ இண்டஸ்ட்ரீஸ் ஏரியா; இந்தியாவிலேயே 83 ஜில்லாக்களை பொறுக்கி இருக்கிறார்கள். தமிழ்நாட்டில் இருக்கிற உங்களுடைய மகத்தான சாதனை என்னவென்றால் அந்த 83-ல் ஒன்று கூட நீங்கள் சேர்க்க வில்லை. சேர்த்துக் கொள்ள முடியவில்லை. மத்திய அரசிடம் அதற்காக வாதிடவில்லை. என்ன நடந்திருக்கிறது இதிலே ஒரு பெரிய ஒப்பாரி. இங்கே பேசிய வெங்கடசுப்பிரமணியம் அவர்கள் கூட சொன்னார்கள். 1980-ல் மாநில அரசு 108 விண்ணப்பங்களை பரிந்துரை செய்தது. 57 தான் அனுமதி கிடைத்தது. 1981-ல் 92 விண்ணப்களை அனுப்பியது; 44-க்கு தான் இசைவு கிடைத்தது. 1982-ல் 184 அனுப்பினோம், 67-க்குத்தான் இசைவு கிடைத்தது. மொத்தம் 384 விண்ணப்பங்கள் அனுப்பியதில் 168-க்குத்தான் அனுமதி கொடுத்தார்கள் என்று ஒப்பாரி. அவர்கள் கொடுக்க மாட்டார்கள். எப்படி கொடுப்பார்கள்? மத்திய அரசிடத்தில் கேட்பதில் ஒன்று இருக்கிறது. நம்முடைய முதல்வர் அவர்கள் கூட சொன்னார்கள். ஆடி கறக்கிற மாட்டை ஆடி கறக்க வேண்டும்; பாடி கறக்கிற மாட்டை பாடி கறக்க வேண்டும்.

(பிற்பகல் 1-00)

அது ஒரு மாதிரியான மாடு. அதை நீங்கள் பாடிக்கறக்கப் பார்க்கிறீர்கள். அது நடக்காது. அது அடித்துக் கறக்கிற மாடு.





உங்களுக்கு நான் ஒன்றைச் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். சேலத்தில் இரும்பாலை இருக்கிறது. அந்தச் சேலம் இரும்பாலை திட்டத்தை நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்க முடியாது என்று சொல்லிவிட்டார்கள். என்.டி.சி. மீட்டிங்கிற்கு எல்லா சீப் மினிஸ்டர்களும் வந்திருக்கிறார்கள். அப்படி வந்திருந்த போது, தமிழகத்தில் முதலமைச்சராக இருந்த கலைஞர் அவர்களும் அங்கே சென்றிருந்தார்கள். அப்போது கேட்டார்கள், சேலம் உருக்காலை திட்டம் உண்டா இல்லையா? இல்லை அத்திட்டம் இதிலே சேர்க்கப்படவில்லை என்றார்கள். அப்படியானால் நான் வர முடியாது என்று என்.டி.சி. மீட்டிங்குக்குப் போகாமல் தமிழ்நாடு ஹவுசிலேயே உட்கார்ந்து விட்டார். இன்றைக்கு பிரதம அமைச்சராக இருக்கும் இந்திரா காந்தி அவர்கள்தான் அன்றைக்கும் பிரதம அமைச்சராக இருந்தார்கள். உடனடியாக பிரதம அமைச்சர் அவர்கள் கலைஞர் அவர்களோடு தொடர்பு கொண்டு சொன்னார்கள். நான் டெபனெட்டாக சேலம் உருக்காலைத் திட்டத்தைச் சேர்த்து கொள்கிறேன். நீங்கள் என்.டி.சி. மீட்டிங்கிற்கு வாருங்கள் என்று சொன்னார்கள் அப்புறம் தான் கலைஞர் அவர்கள் என்.டி.சி. மீட்டிங்கிற்குப் போனார்கள். அதற்குப் பிறகு அது சேர்க்கப்பட்டது, அம்மையார் அவர்கள் வந்தார்கள். பெரிய விழா எல்லாம் நடந்தது. இன்றுள்ள சபாநாயகர் அவர்கள் அப்போது 3 தங்க மாம்பழத்தைக் கொண்டு வந்து அம்மையார் கையிலே கொடுத்து, சேலத்திற்கு இரும்பாலை கொடுத்த அம்மையாரே, தங்க மாம்பழத்தை கொண்டு செல்லுங்கள் என்று சொன்னார்கள். நானும் அந்த விழாவிற்குப் போய் இருந்தேன்.

அந்த சேலம் உருக்காலை இன்றைக்கு எப்படி ஆயிற்று என்று சொன்னால் அந்த உருக்காலை போய், உருட்டாலை ஆகி, இன்றைக்கு தகட்டாலையாகி விட்டது. அந்தத் தகட்டாலையும் ததிங்கிணத்தோம் போடும் நிலையில் இன்றைக்கு இருக்கிறது. இந்த சேலம் உருக்காலை பற்றி இதிலே என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால், இன்றைக்கு அதிலே இருக்கிற நிலைமையைப் பார்க்கிறபோது, சேலம் உருக்காலை உருப்படியாக நிற்குமா என்ற பிரச்சினை எழுந்து இருக்கிறது. காரணம், சேலம் இரும்பாலையோடு போட்டி போடும் அளவிற்கு நார்த் இந்தியாவிலே இருக்கும் பல்வேறு நிறுவனங்கள் அதிலே தலையிட்டு சேலம் இரும்பாலையின் வளர்ச்சியைக் குறைக்கும் அளவிற்கு நடவடிக்கைகளை எடுத்து இருக்கிறார்கள். எனவே சேலம் இரும்பாலை உங்களின் காலத்திலே நிச்சயமாக வராது; இப்போது தகடு அடிக்கிற ஆலையும் போய் கடைசியில் தரித்திர நாராயணர்களாக சேலம் மக்களை நீங்கள் வைக்கப்போகிறீர்கள் என்பதைத்தான் நான் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

[திரு. துரைமுருகன்] [1984 மார்ச் 24

அது மட்டுமல்ல, சேலம் இரும்பாலை மட்டுமல்ல, மத்திய அரசின் முதலீடு, சென்ட்ரல் கவர்ன்மென்ட் கேபிடல் போடுவது பற்றி நாவலர் அவர்கள் இங்கே படித்துக் காட்டி இருக்கிறார் கள். எனக்கே கூட வெட்கமாக இருக்கிறது. ஏனென்று கேட்டால் நாம் என்ன தான் ஆளும்கட்சி, எதிர்க்கட்சி என்று இருந்தாலும், தமிழ்நாட்டைப் பொறுத்தவரைக்கும் எல்லோருமே ஒன்றாக ஒரே குரலாகக் கொடுக்கவேண்டும். அதிலே நாவலர் அவர்கள் படிக்கிறார், ''6-வது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் தமிழ்நாட்டில் மத்திய அரசு ஏற்படுத்தியுள்ள புதிய தொழில் திட்டம் ரூ. 1.06 கோடி. சொற்ப முதலீட்டுடன் தொடங்கப் பட்ட மத்திய 'பிளாஸ்டிக் பொறியியல் கருவிகள் உற்பத்தி நிறு வனம்' மட்டுமேயாகும். எப்படிசார் மனது வந்து இதைப் படித்தீர்கள்?

சரி அவர் தான் படித்தார். நம்முடைய அமைச்சர், புதி தாக வந்து இருப்பவர், அவருக்கு அதிகாரிகள் எழுதிக் கொடுத்து இருப்பார்கள். டிடெயில்ஸ் அதிகம் தெரியாது. போகப் போகத் தான் அவரே எல்லாவற்றையும் பார்ப்பார். அவருக்கு என்ன எழுதிக் கொடுத்து இருக்கிறார்கள் என்றால், மத்திய அரசின் முத லீடு 8 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதம் என்ற அளவிற்கு வந்து விட்டது. ஆக, மத்திய அரசாங்கத்தின் முதலீடு தமிழ்நாட்டில் கிடையாது. ஏழை இந்தியாவில் தமிழ்நாடு சேர்க்கப்படவில்லை. தேசிய நீரோட்டத்திலே தமிழ்நாடு கத்தரித்து விடப்பட்டு இருக் கிறது. கங்கையும், காவிரியும் இணைக்க வேண்டும் என்று சொல்கிறார்களே, இது சரிதானா? இத்தனை விண்ணப்பங்கள் தேங்கிக் கிடக்கிறதே, அமைச்சர் அவர்கள் மைய அரசை வற் புறுத்த வேண்டும் என்று சொல்கிறோம். அவர் வற்புறுத்துவது இருக்கட்டும்.

அதற்கு என்று ஒரு ஆளைப் போட்டிருக்கிறோம், மினிஸ் டர் ஸ்டேடஸ் கொடுத்து டெல்லியிலே உட்கார வைத்திருக்கி றோம். தமிழ் நாட்டினுடைய ஸ்பெசல் ரெப்பிரசெண்டேட்டிவ் எப்போது வேண்டுமானாலும் விமானத்தில் வரலாம், போகலாம். அம்மாவுக்கு உடம்பு சரியில்லை என்றாலும் கவர்ன்மெண்ட் பணம்தான்; அப்பாவுக்கு வாந்தி என்றாலும் உடனே வரலாம். தமிழ்நாடு கஸ்டு செலவுசில் ஒரு ரூம், தெண்டச்சோறு, எல்லாம் செலவு செய்து கொண்டிருக்கிறீர்களே தவிர, இதுவரை அந்த நபர் எடுத்த நடவடிக்கை என்ன? மத்திய அரசை கண்டித்து நீங்கள் எடுத்த நடவடிக்கை என்ன? இதுவரை நீங்கள் சண்டை போட்டிருக்கிறீர்களா? சண்டை போடுவதற்கு என்று ஒரு மந்திரியை தயார் பண்ணினீர்கள். அவர் உடனே ''ஆகா ஊகு, மத்திய அரசே'' என்கிறார். மறுநாள் நான் அப்படிச் சொல்லவில்லை, அது அவருடைய சொந்தக் கருத்து என்று இன்டர்வியூவில் கொடுத்துவிட்டு பாண்டியனிலே போய்விடுகிறார்கள். ஆகை



1984 மார்ச் 24] [திரு. துரைமுருகன்]

யால் உங்களுக்கு ஒரு திடமான கொள்கை இல்லை; மத்திய அரசை வற்புறுத்திக் கேட்கிற நிலைமை இல்லை. இப்படியே போனால் தமிழ்நாடு அன்னக்காவடியாகிவிடும், ஆண்டிமடம் ஆகிவிடும். ஆண்டி மடம் என்றால் அவருடைய தொகுதி அல்ல. இப்படிப்பட்ட நிலைமைக்கு வந்துவிடும் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

இன்னொன்றையும் சொன்னார்கள். இப்போது ஒரு புதிய சட்டம் போட்டிருக்கிறார்கள். ஒரு தாலுகாவில் 30 கோடி ரூபாய்க்கு மேல் முதலீடு இருக்குமானால் அதற்கு சப்சிடி கட்டாகி விடும். உதாரணத்திற்கு இராணிப்பேட்டை. இராணிப் பேட்டையை எடுத்துக் கொண்டால் ஏதோ சிறு தொழில்களை, சிப்காட்டு அப்படி, இப்படி என்று உருக்குகிறது. அடிக்கிறது என்று ஏதோ பண்ணிக் கொண்டிருந்தார்கள். திடீரென்று பெல்லை கொண்டுவந்து போட்டார்கள். பெல்லே 38 கோடி, 48 கோடி விழுங்கிவிட்டது. ஆகையால் என்னவாயிற்று இனிமேல் சென்ட்ரல் கவர்ன்மென்ட் அசிஸ்டன்ஸோ. சலு கையோ எதுவும் கிடைக்காது. அதனால் இனிமேல் இராணிப் பேட்டையிலே எந்தத் தொழிலையும் யாரும் செய்ய முற்பட மாட்டார்கள். ஏன்? மத்திய அரசினுடைய அத்தனை சலுகைகளும் போய் விட்டன அதை எதிர்த்து இதுவரை என்ன செய்திருக்கிறீர்கள்? யாராவது எதற்காகவாவது கிளர்ச்சி பண்ணு கிறார்கள் என்றால் அவர்களுக்கு முன்னாலேயே நீங்கள் ரயில் ஓடாது, பஸ் ஓடாது என்று அறிவித்து விடுகிறீர்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருக்கிற போது தூத்துக்குடி ஆழ்கடல் துறைமுகம், சேலம் இரும்பாலைத் திட்டம் இப்படிப்பட்டவைகளுக்கு ஒரு போராட்டம் நடத்தி னார்கள். அப்போது நாம் ஆளும் கட்சி, நீங்களும் ஒன்று சேர்த்துதான் நடத்தினோம். அதைப் போன்று இப்போது நீங்கள் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்து, மத்திய அரசைக் கண்டிப்பீர்களா? ஒரு தாலுகாவிலே 30 கோடி ரூபாய்க்கு மேல் இன்வெஸ்ட் செய்திருந்தால் சலுகை கிடையாது என்று சொன்ன தற்கும் நாங்கள் அனுப்பிய விண்ணப்பங்களை புறக்கணிக்கிறீர்கள் என்பதற்கும், சேலம் உருக்காலையை தகட்டாலையாக ஆக்கிய தற்காகவும் தமிழக அரசு, அண்ணா தி.மு.க. அரசு கொதித்து எழுகிறது என்று சொல்லி, நீங்கள் போராட்டம் நடத்த தயாரா? இந்த மாநில சட்டசபையிலே மத்திய அரசை கண்டித்து ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்து விவாதிக்கத் தைரியம் உண்டா? எப்படிசார் முடியும்? அது உங்களால் முடியாது. ஏனென்றால் உங்களுக்கு திறமை போதாது.

இன்னொன்று, சர்க்கரை ஆலை பற்றிச் சொல்லியிருக்கிறார்
கள். பிரைவேட் செக்டாருக்கு கொடுப்பது என்று முடிவு பண்ணி
விட்டீர்கள். திருத்தணியில் ஒரு சர்க்கரை ஆலை.
மாதம் தொடங்குகிறது என்று சொல்கிறார்கள். அடுத்த
இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்களை 'ஐ சேலஞ்ச்'
கேட்டுக் கொள்கிறேன். இன்று மாலையிலே பணிவன்போடு
போவோம். அவருடைய காரிலே திருத்தணிக்குப்
என் காரிலேயே நான் வரட்டும் இல்லை என்றால்
சபாநாயகரும் கூட்டிக் கொண்டு போகிறேன். துணைச்
மானாலும் வரவேண்டியது. அப்படியே கோவிலுக்கு வேண்டு
அந்தப் போய் வரலாம். மூன்று நாட்களுக்கு முன்னால்
இல்லை ; பக்கம் போகும் வாய்ப்புக் கிடைத்தது. அங்கே மிஷன்
மாதம் சுவர் கிடையாது, ஒரு இளவும் கிடையாது. அடுத்த
கவர்ன்மெண்ட் 16-ந் தேதிக்குள் செய்யவில்லை என்றால் சென்ட்ரல்
என்ன அசிஸ்டன்ஸ் எல்லாம் போய்விடும். அதற்கு
தனம் பண்ணப் போகிறீர்கள் ? ஒரு கரும்பை வைத்து ஊமத்
கலரா பண்ணுகிற மாதிரி பண்ணி, ஒரு சர்க்கரையை எடுத்து
காட்டி, ஏதோ செய்ய நினைக்கலாம்.

It is not in working condition.
ஃபாக்டரி ஓடும் நிலையில் இல்லை. அடுத்த மாதம் 16-ந்
தேதிக்குள் அந்த ஃபாக்டரி ஓடாது. மத்திய அரசு சலுகையாக
வரவேண்டிய 30 இலட்சம், 40 இலட்சம் ரூபாய் பெற வேண்டு
மானால் அதற்குள் ஓட வேண்டும். ஆனால் அது சாத்தியமாகத்
தெரியவில்லை. நம்முடைய மாண்புமிகு அமைச்சர் பொன்னை
யன் அவர்கள் ஒரு நல்ல லா மினிஸ்டர். கூட்டுறவு எல்லாம்
அவர் பார்த்தார். அவரிடம் கொண்டு வந்து இதைக் கொடுத்
திருக்கிறார்கள். அவருக்கு இது ஒரு பெரிய 'ஹெட்டேக்' ஆக
இருக்கிறது. இதற்கு தனியாக ஒருவரைப் போட்டிருக்கலாம்.
அவர் சட்டத்தைக் கவனிப்பாரா ? ரிட்டை கவனிப்பாரா ?
என்ன செய்வார் ?

அடுத்து, தஞ்சை மாவட்டத்தில் மயிலாடுதுறை வட்டத்தில்
கூட்டுறவுத் துறையில் நாள் ஒன்றுக்கு 1,200 டன் கரும்புபிழி
திறன் கொண்ட சர்க்கரை ஆலை ஒன்றை நிறுவ உரிமம் கோரி
தமிழ்நாடு தொழில் நிறுவனம் செய்த விண்ணப்பத்தினை மாநில
அரசு மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளது என்று சொல்லி
யிருக்கிறீர்கள். இது மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது.
மயிலாடுதுறையில் சர்க்கரை ஆலை அமைக்க வேண்டுமென்று
நீங்கள்கேட்கிறீர்கள் ? எப்படி ? மத்திய அரசே, மத்திய அரசே,
ஒரு இறகு போடு என்று கேட்கிறீர்கள் இதுவரை வழங்கவில்லை.
நீங்கள் என்ன பண்ணியிருக்கிறீர்கள் ? பரிசீலனையில் உள்ளது.
நாங்கள் பரிசீலிக்கிறோம் என்று சொல்லியிருக்கிறீர்கள். இதையே
பிரைவேட் செக்டாரிலும் கேட்கிறார்கள். தனிப்பட்ட முதலாளி
களிடம், தேவை என்றால் நீங்கள் சர்க்கரை ஆலை தொடங்குங்
கள் என்று சொல்லியிருக்கிறீர்கள். இதிலே அப்படி குறிப்பிட்டி
ருக்கிறீர்கள். தனியார் துறையில் சர்க்கரை ஆலை கொடுக்கப்





பட்டிருக்கிறது. பன்னாரியம்மன் சர்க்கரை ஆலை என்று அவர்
கள் ஆரம்பித்திருக்கிறார்கள். பொள்ளாச்சி மகாலிங்கம், அவ
ரைச் சேர்ந்த தொழிலதிபர்கள் ஆரம்பித்திருக்கிற அந்த
சர்க்கரை ஆலைக்கு சென்ட்ரல் கவர்ன்மெண்ட் நினைத்து நேரக்
தில் லைசென்ஸ் வழங்கியிருக்கிறது. ஒரு அரசாங்கம் கேட்கிறது.
கிடைக்கவில்லை. எங்களுக்கு ஸ்டேட் ரெப்ரசென்டேடிவ்
ஃபைனான்ஸ் மினிஸ்டர், இண்டஸ்ட்ரீஸ் மினிஸ்டர்,
பின்னாலே படை பலம் அத்தனையும் இருந்தும் மாநில அரசில்
ஒரு சுகர் பாக்டரி ஆரம்பிக்க உங்களுக்கு வக்கில்லை என்று
சொன்னால் நீங்கள் ராஜிநாமா செய்திருக்க வேண்டாமா?

பொள்ளாச்சி மகாலிங்கத்திற்கு இருக்கிற துணிவு, திறன்
தெம்பு உங்களுக்கு இருந்திருக்க வேண்டாமா ? பன்னாரியம்மன்
சர்க்கரை ஆலை என்று வருகிறது. கேட்டால் சொல்லலாம்.
அது பன்னாரியம்மன் அருள் பெற்றதால் வந்திருக்கிறது என்று
சொல்லலாம்.

அது மட்டுமல்ல. இந்த சுகர் பாக்டரி என்று சொன்னவுடன்
காட்பாடியில் கூட இருக்கிறது. ஆம்பூரில் சுகர் பாக்டரி இருக்
கிறது. இந்த கூட்டுறவுத் துறையில் இருக்கிற பாக்டரிக்கு நாங்
களும் தான் பணம் போடுகிறோம். எங்களிடம் பணம் வாங்கி,
நீங்களும் பணம் போட்டுத்தான் அந்த பாக்டரி ஆரம்பித்திருக்
கிறோம். அது எப்படி நடக்கிறது என்று பார்த்தால் ஒரு பெண்
ணுக்கு இரண்டு கணவன் இருக்கிற மாதிரி அந்த ஆலைக்கு
இரண்டு மந்திரிகள் இருக்கிறார்கள். விவசாய மந்திரி, தொழில்
மந்திரி என்று இரண்டு பேர் இருக்கிறார்கள். கரும்புக்கு விலை
கேட்டால் அவர் என்கிறார், பாக்டரி வேலையை கேட்டால் இவர்
என்கிறார், முதலில் ஒரு ஆளிடம் கொண்டு வாருங்கள்.

(பிற்பகல் 1-10).

இரண்டாவதாக ஒரு அமைச்சரைப் போடுங்கள். ஜெனரல்
பாடியைக் கூட்டுவதே கிடையாது. பணம் கொடுப்பவர்கள் நாங்
கள். அதற்கு எலெக்ஷன் வைக்கக் கூடாதா ? அரியலூர் ஸ்பின்
னிங் மில்லானாலும் சரி, வேலூர் சுகர் பேக்டரியானாலும் சரி,
ஆம்பூர் தொழிற்சாலையானாலும் சரி, எல்லாம் நாமினேஷன்
தான். நம்முடைய அமைச்சர் பொன்னையன் அவர்கள் கேட்க
லாம். எல்லாம் தெரிந்த துரைமுருகன் இப்படிக் கேட்கலாமா ?
நாங்கள் எதற்கு எலெக்ஷன் வைத்திருக்கிறோம், இதற்கு வைக்க
என்று. நம்முடைய அமைச்சர் குழந்தைவேலு அவர்களுடைய
ஜாதகராசிப்படி வைத்தீஸ்வரன் கோயிலில் சொல்வதைப்போல,
இவருடைய பெயர் ராசிக்கே எலெக்ஷன் வராது. இப்போது
பார்த்தால், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் பெயர்
ராசிக்கே தேர்தல் வராது போல் இருக்கிறது. அதற்கு எலெக்ஷன்
வைக்க மாட்டீர்களா ? இப்படிப்பட்ட நிலையில் வைத்திருப்பது
நல்லதல்ல. (மணியடிக்கப்பெற்றது).

திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரீப் : மிஸ்டர் டெபுடி ஸ்பீக்கர் சார், மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் இந்த அவையின் முன் வைத்த தொழில் கொள்கைத் திட்டங்களைப் பற்றி என்னுடைய கருத்துக்களைக் கூற ஆரம்பிக்கிறேன்.

Sir, I am very happy to read his policy statement. I quote "on account of the vigorus efforts taken by our Government, the growth of industrial sector has been good in Tamil Nadu as compared to the All India picture, as may be seen from the partiuclars of index number of industrial growth given below :

I quote "out of 384 cases recommended by the State Government in these three years, 123 applications are still pending with the Government of India. During the period from 1st January 1977 to 31st October 1983, 449 medium and major industries have been set up in Tamil Nadu with an investment of Rs.850 crores and creating an employment potential of 1.10 lakh persons. "I hope the Hon. Minister has given a very correct and true statement because nobody will be happier than myself if our State really comes up industrially the foremost State.

Sir, it is a wellknown fact that at one time, our State was competing with Maharashtra and Gujarat, to come as the first State. But later on our State has receded and taken the 7th or 8th position. Now you say that our State is doing very well on the industrial front. I would like to know whether our State is doing equally like Maharashtra and Gujarat or Punjab or at least like Karnataka and Andhra Pradesh. My information is that the Industrial Development and growth are very tardy. I have been insisting on the floor of this House, that we would like to have a more suitable and good industrial climate, so that thousands of small scale industries and hundreds of medium and large scale industries can come in our State. I am one of those who feel that we are turning out lakhs of youngsters from Colleges, High schools, Diploma holders Degree holders, up to X Standard, or up to 2 Standard. What is the future for all these people ? What is the employment opportunities created for the educated young men here ? We have been depending up on agriuclture. But agriuclture alone cannot produce more employment potential. It is only the Industries that can produce more employment potential. How many such industries have come ? You have said there is an employment potential for 1.10 lakh persons. I do not think this is enough. Even if employment potential for 1.10 lakh persons has been created, in three years how many lakhs of educated people we have turned up and what is their future ? I know Government alone cannot help in giving employment in their own offices or in their own Sectors. But Government can only help in bringing more industries to come here and create more employment opportunities. Let us examine what are the impediments that stand in the way of creation of more employment opportunities. I was one of those who was telling that there should be a powerful industrial development Committee of a compact nature. But I am sorry that the Industrial Committee like an Assembly with 130 or 140 people, was not set up. I am extremely, happy and thankful to the new Industries Minister who is young, energetic and dynamic and who has made considerable success in other fields when he met the Industrialists at a meeting recently, he said he was going to reconstitute the Committee, though it may be a very small one. I do not know Whether the Committee has been reconstituted. I would suggest that the Committee should be reconstituted with the success ful business men of various fields. I would even suggest that the Committee should be vested with the power and it should be headed by the Chief Minister and the Industries Minister, so that a right-royal exercise can be made to prove that we can produce and start more industries.





Sir, there are already industrial Estates in our State. How many of the Estates are functioning successfully—I would like to know. I would like both the Industries Minister and his very dynamic Secretary who has proved his worth as Chairman of the Port Trust, to examine whether the Industrial Estate at Maraimalai Nagar is getting on well. Why is it not getting on well and what are the reasons for it ? About two months ago, there was a scathing article in a paper which cutting I have sent to the then Hon. Minister for Industries and wanted him to verify whether the statements contained in the paper are correct and true and if so, what are the remedial steps that he is going to take. I am sorry no reply has been received from him and this is exactly my complaint. I do not receive any reply for various letters I have been sending to the Government. I hope at least the present Minister will take it up and find out the reasons for the Estate at Maraimalai Nagar not getting on well.

I have been often going to Hosur. What exactly it was three years ago, same situation exists in Hosur even now. The plots that have already been taken up for development, have not been developed—Why ? I wish a High power Committee is constituted to find out why the estate in Hosur, which is one of the best Industrial Estates in our country, where we have got the best climate, is not coming up very well. Why the Maraimalai Nagar Estate is not coming up well ? Certainly we can develop lot of new Industries, particularly Engineering and Small Industries and Electronic Industries. Why is it the Industry in Ranipet is not coming up ? What is the use of beginning new Industrial Estates when the existing Estates have not been functioning properly. Please therefore constitute Committee and examine and find out the reasons

for these Industrial Estates not coming up and I want the Government to see that these things are attended to. My feeling is that proper infrastructural facilities have not been developed there. If you want any Industrial Estate to develop, you should develop the infrastructural facilities first, like road, water, sanitation, lighting and also buildings for the works. Even a small room in Housr costs Rs. 150 by way of rent. Even for that rent, the rooms are not available. The Government have built some quarters and the rent for the quarter is also high. All these things shall have to be looked into, to see that a new orientation is given. Let not the Government be complacent saying that so many Industries have developed in this State and we are going to see that they will continue to develope. There is no use of having ambition without transforming the same into action.

*(பிற்பகல் 1-20)*

Sir, when compared to the incentives given by other States for the development of new Industries I must say that the incentives given by us are not very much. The Indian Chamber of Commerce, Calcutta has published a book on the 'Incentives on Industrial development'. While going through it I found that even the Pondicherry Government has given very good incentives. We have not given even 50 per cent of what they have given. Please kindly examine this position. On account of the non-cooperation of the West Bengal Government with the Industrialists for the last five or six years, lot of Industrialists have shifted their Factories from West Bengal. Now Mr. Jyothi Basu has come down announcing enormous amount of incentives.

தும்பை விட்டு வாலை பிடிக்கிற கோளாறு இது. முதலிலே தும்பை விட்டு விடுவது. பிறகு எல்லோரும் வெளி மாநிலங்களுக்கு போன பிறகு வாங்க வாங்க எல்லோரும். நாங்கள் இது கொடுக்கிறோம், அது கொடுக்கிறோம். நீர் கொடுக்கிறோம், மின்சாரம் கொடுக்கிறோம். பணம் கொடுக்கிறோம் என்று வாங்க வாங்கன்னு, கண்ணாடி போட்டு படம் காட்டுவர்களே அது மாதிரி காட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

Sir, I am telling the following information of the Honourable Leftist friends who are here. West Bengal Government has anncunced refund of Sales Tax to new units as well as existing units. Eligible Units set up after 1st April 1983 in the backward areas coming under Group B are declared entitled to a subsidy of 15 per cent and more if possible on their fixed capital. Rebate of 30 per cent in Electricity Tariff has been allowed, in the industrially backward areas. Subsidy of 75 per cent of the cost of feasibility study for the approved project anywhere in the



State which has been allowed need not be refunded. They have given lot of such facilities. Unless you relax your rules and study very deeply the issues and find out what types of subsidies the Industrialists require and what incentives you should give them, I am afraid Sir, the result of Industrialisation will be very tardy in this State.

I request the Honourable Minister for Industries to go into this question along with the Industrialists and find out what are the incentives to be given.

I agree with the view of some Honourable Members that Power is the major obstruction for Industrial development. But fortunately for us, power position has become alright, though not to the extent we require. The Honourable Minister for electricity has stated he is going to create 3 more power stations. I wish that the creations are coming out quickly. I was told that the Private Sector can start the Thermal stations. But if you really mean, it, if you want the Private Sector should play its part, they will certainly play their part well. But why it is under negotiation for about 1½ or 2 years. Why is it not coming up? I received an information that they are afraid that once if it is settled and a Thermal Power Station is set up and it is developed, then the Government will take over. That is why I state that the Honourable Minister should discuss with the Industrialists and give them a categorical assurance that the Government will not take over the Thermal Stations after being established by the Private Sector.

**டாக்டர் கே. பி. இராமலிங்கம் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சி தலைவர், தெர்மல் ஸ்டேஷனை வெளியார்களுக்கு கொடுத்தால் அதை அவர்கள் வளர்த்து, வளர்ந்த பின்னாலே அரசாங்கமே எடுத்துக் கொள்ளுமோ என்ற ஐயப்பாட்டுடன் இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். நேற்றைய தினம் மத்திய அரசு தொலை பேசிகளையும் தொலை பேசிக் கருவிகளையும் உறுப்புக்களையும் உற்பத்தி செய்கிற தொழிற்சாலை தனியார்களிடம் விடப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். அந்தத் தொழிற்சாலைகள் வளர்ந்த பின்னால் அரசு எடுத்துக் கொள்ளும் என்ற ஐயப்பாடு அவர்களுக்கு இருக்கலாம் அல்லவா? ஆகவே அதற்கு என்ன கியாரண்டி அவர்கள் தந்திருக்கிறார்களோ அதுதான் மாநில அரசுக்கும் பொருந்தும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கே. எஸ். ஜி. ஹாஜாசெரீப் :** எதற்கெடுத்தாலும் சென்ட்ரல் கவர்ன்மெண்ட் அப்படிச் செய்கிறார்கள், யு.பி. அப்படிச் செய்கிறார்கள், கர்நாடகா இப்படிச் செய்கிறார்கள் என்று

சொல்லி நீங்கள் செய்வீர்களா என்று கேட்பது சரியல்ல. காரியம் பெரிது, வீரியம் பெரியதல்ல. காரியத்தைப் பெரிதாக நினைக்க வேண்டும். சென்ட்ரல் கவர்ன்மெண்ட் அவர்களுக்கு கியாரண்டி கொடுத்தால் என்ன கொடுக்காவிட்டால் என்ன? நீங்கள் எடுக்காமல் இருப்பீர்களா என்று அவர்கள் கேட்கிறார்கள். நாங்கள் அவைகளை டெவலப் செய்து விட்டால் எடுத்துக் கொள்வீர்களோ என்ற பயம் அவர்களுக்கு இருக்கிறது. அந்தப் பயத்தை நீங்கள் தீர்க்க வேண்டும். அவர்களுக்கு அதற்காக என்ன என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்ய வேண்டும். சென்டரல் கவர்ன்மெண்ட் செய்தால்தான் நாம் செய்ய வேண்டுமென்று சொல்வது சரியல்ல. I do not think, it is a very correct argument.

அது மட்டுமல்லாமல் பவர் ஸ்டேஷன் ஓர்க் பண்ணுவதற்கு கரி வருவதிலே தடை இருக்கிறது என்று பேப்பரிலே வந்தது.

The coal is overproduced. Recently I read in the "Economic Times" which has stated that to a very great extent coal is over produced in India and the difficulty is only in transportation. The bottleneck is only transportation. If that is the case I think the transport can be organised without much difficulty. The present Secretary who was the Chairman of the Port Trust will help you to transport coal.

அதை விட்டுவிட்டு 4 கப்பல்கள் வாங்க பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் அனுமதி கேட்டது. ஒரு கப்பல் வாங்க அனுமதி கொடுத்து இருக்கிறார்கள், 3 கப்பல்களுக்கு கொடுக்கவில்லை என்று சொன்னால் என்ன பிரயோசனம்? மூலப் பொருளான பூவரை புரடியூஸ் பண்ண நீங்கள் எதை எதை செய்ய வேண்டுமோ அதையெல்லாம் அவசியமாகச் செய்து எவ்வளவு எக்ஸ்பென்டிச்சர் வந்தாலும் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கோல் இல்லை, பவர் இல்லை. டிஸ்ட்ரிப்யூஷன் இல்லை, புரடக்ஷன் இல்லை, பணப்புழக்கம் இல்லை என்று சொல்வது சரியல்ல. கோல் சரியாக வருவதற்கு ஒரு கியாரண்டி கொடுக்க வேண்டும். சரியான கான்ட்ராக்ட என்ற முறையில் ஒப்படைத்து உங்கடைய ஆள் ஒருவர் அங்கே போய் இருந்து கொண்டு இந்தக் கஷ்டத்தை நிவர்த்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது பிர்லா கடலூரிலே பெரிய பேக்டரி ஆரம்பிக்கப் போகிறார் என்று கேள்விப்பட்டேன்.

It is a very welcome move. Tata, Birla, Karanchea





அவர்கள் எல்லாம் நேரிலே பார்க்கலாம். மற்றவர்கள் வந்து பார்க்கிற மாதிரி நம்முடைய ஊரில் என்ன என்ன இருக்கிறது, என்ன என்ன சௌகரியங்கள் இருக்கின்றன, அரசாங்கம் இன்ன இன்ன சௌகரியங்களை செய்து கொடுப்பார்கள், உதவி கொடுப்பார்கள் என்று சொல்லி பர்சனல் லெவலில் கான்டாக்ட் பண்ணினால் அவசியம் நல்ல நிலைமை ஏற்பட்டு நமக்கு அட்வான்டேஜ் ஆக நிலைமை வரும் என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். அதுமாதிரி பல மாநிலங்களிலிருந்து போயிருக்கிறார்கள். வெஸ்ட் பெங்காலிலிருந்து மெள்ள மெள்ள கொண்டு வந்து யு.பி., பீகார், கர்நாடகா, ஆந்திரா என்று கொண்டு வந்து வைத்திருக்கிறார்கள். இங்கே பெரிய ஆசாமிகள் ஆரம்பித்து இருக்கிறார்கள். டி.சி.எம். ஆரம்பித்திருக்கிறார்கள். பிர்லா ஆரம்பித்து இருக்கிறார்கள். அவர்கள் சில சமயங்களிலே மந்திரிமார்களை அல்லது முதலமைச்சரை பார்க்க முடியவில்லை. அதைத் தவிர்த்து, சுமுகமாக சரியாகபார்க்கக் கூடிய நிலைமை வந்தது என்றால் அவசியம் அதிலே ஒரு என்கரேஜ்மெண்ட் நமக்குக் கிடைக்கும். ஆரம்பிக்கலாம் என்ற நம்பிக்கை அவர்களிடம் இருக்கிறது என்று எனக்குத் தெரிகிறது.

136243

(பிற்பகல் 1-30)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அவையின் அனுமதியுடன் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரீப் :** எப்போது இருந்தாலும் யாரும் எந்தத் தொழில் அதிபரும் என்னை வந்து பார்க்கலாம், நான் அதற்கு உடந்தையாக இருக்கிறேன் என்று சொன்னார்கள். அது ஒரு நல்ல உறுதியான செய்தி. சார், நீங்கள் சலுகைகள் கொடுக்கிறீர்கள், அப்படி கொடுக்கிற சலுகை சீக்கிரம் கொடுத்தால் நல்லது. 2 வருடம் 3 வருடமாகக் கொடுக்கவில்லை என்று எனக்கு நிறைய புகார்கள் வருகின்றன. சேல்ஸ் டாக்ஸ் இன்செண்டிவ் கொடுப்பது கொடுக்கவில்லை. சென்ட்ரல் கவர்ன்மெண்டு இன்செண்ட்டிவ் கொடுக்கவில்லை என்று சொன்னார்கள். என்ன காரணம்? பணம் இல்லை. இப்படி எல்லாம் நிறைய புகார்கள் வருகின்றன. நீங்கள் கொடுக்காததன் காரணமாக அவர்கள், உங்களுக்கு கொடுக்க வேண்டிய பணத்தை கொடுக்கவில்லை. பணம் கொடுக்காததன் காரணமாக பவர் இல்லை, வாட்டர் இல்லை, சானிடேஷன் இல்லை, கேப்பிட்டல் இல்லை, ரா-மெட்டிரியல்ஸ் வருவதில் தடை. இந்த மாதிரி இதில் நீங்கள் உங்களுடைய டிஸ்ட்புரிபுஷனை செய்து இருப்பது ரொம்ப டார்டியாக இருக்கிறது. அது ரொம்ப அசௌகரியமாக இருக்கிறது. அதனால் ஏற்படும் தீமைகள் மிகுதியாக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

I want the Industries Department to investigate what are all the pending payments to be made and why they have not been made for months and years together. I would request the Hon. Minister to place before this House or before the Committee that is duly going to be constituted, a report as to why these distribution of the various incentives which are entitled to be given have not been given for months and years together. I would request him very much to take immediate action to see that all these difficulties are being solved. I am very glad that the free trade zone is going to come. I must compliment the Government for getting this from the Government of India. இங்கே சொல்கிறார்கள் செண்ட்ரல் கவர்ன்மெண்டு கொடுக்கவில்லை என்றும் அவர்கள் மாற்றாந்தாய் மனப்பான்மையில் நடத்துகிறார்கள் பாருங்கள் என்று எல்லாம் இங்கே சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். That is not the point. Government of India is to look after all the 20 States together. They cannot be concentrating only in one State. Of course it is also our duty and I would only point out that you have not come with big industries and all these things. But I must say that the progress of this free trade zone is very very tardy. I don't know why and I wish a paragraph is being added or atleast the Honourable Minister will tell now in his reply what are the reasons for the tardy progress of free trade zone. இந்த மாதிரி ப்ரி டிரேடு ஜோன்கள் வைத்த இடம் எல்லாம் இருக்கிறது. அவைகள் எல்லாம் சரியாக வேலை செய்யவில்லை. அப்படி வேலை செய்யாததற்கு பல காரணங்கள் சொல்கிறார்கள். அவைகளை எல்லாம் சரியாகப் பார்த்து நம்முடைய ப்ரி டிரேடு ஜோன் தாம்பரம் பக்கத்தில் ஏற்படுத்த இருப்பதை எவ்வளவு சக்ஸஸ்புல்லாக, எவ்வளவு வேகமாக, எவ்வளவு ஸ்மூத்தாக நடத்த வேண்டுமோ அதற்கு வேண்டிய எல்லா நடவடிக்கைகளையும் அரசு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

Sir, I am told that the "Bombay High Natural Gas" is being taken advantage of many States. A lot of fertilizer factories have been organised in Uttar Pradesh, Gujarat, Rajasthan, Maharashtra and other States. I understand that this gas can travel over 2.500 kilometres. I don't know whether we have examined, whether this gas can be got to our State. If I may say so, I would like the Honourable Minister to investigater If it is feasible, I think we should put our claim to the Government of India that we should also get our share. தொழிற்சாலைகள் இப்பொழுது மூடப்பட்டு இருக்கின்றன. எத்தனை ஒன்றே ஒன்றுதான் இப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலையிட்டு- சிம்ஸன் குருப் தொழிற்சாலையை திறந்து வைத்து இருக்கிறார்கள். நிறைய தொழிற்சாலைகள் மூடப்பட்டிருப்பதாக நான் கேள்விப்படுகிறேன். எந்தத் தொழிற்சாலையாக இரு





தாலும், அரசாங்கத்தின் கடமை, தொழிலதிபர்களையும், தொழிற்சாலையூனியன்களின் காரியதரிசிகளையும் கூப்பிட்டு ஒருசுமுகமான நிலையை ஏற்படுத்தி, உற்பத்தியை ஆரம்பிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அப்படியில்லாமல், இவர்கள் கேட்க மாட்டேன் என்கிறார்கள், அவர்கள் கேட்க மாட்டேன் என்கிறார்கள், அதனால் நாங்கள் ஒன்றும் செய்யவில்லை, ஆகவே மூடியிருக்கின்றன என்று சொல்வதில் பயன் இல்லை. இப்படி மாதக் கணக்கில் மூடியிருப்பதால் யாருக்கு நஷ்டம்? ஃபைனான்ஸ் பட்ஜெட்டில் பேசும்பொழுதுகூட நான் சொன்னேன். இதற்காக ஒரு சட்டத்தையாவது கொண்டு வருவது குறித்து, சட்ட மந்திரி அவர்கள் எச்சாரின் செய்ய வேண்டும். மூன்று வாரங்களுக்கு மேல் எந்த தொழிற்சாலையும் மூடியிருக்கக்கூடாது. கவர்ன்மெண்ட், கொடுக்கக்கூடிய தீர்ப்பை அவர்கள் எல்லோரும் அங்கீகரிக்க வேண்டும்; அந்தத் தீர்ப்பு அவர்களுக்கு உகந்ததாக இல்லை என்று நினைத்தால் பிறகு அவர்கள் சட்டப்படி என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்யலாம். அதைவிட்டு விட்டு இப்படி மாதக் கணக்கில் மூடியிருந்தால் தொழிலாளர்களுக்கும் நஷ்டம்; தொழிலை நடத்துகிறவர்களுக்கும் நஷ்டம்; ஸ்டேட்டுக்கும், நஷ்டம்; கவர்ன்மெண்ட்டுக்கும் நஷ்டம்; தேசத்திற்கும் நஷ்டம். எனவே, இதைப் பற்றித் தயவுசெய்து சுமுகமான முறையில் செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

Sir I want that Industries to be started hereafter should be dispersed, not to be concentrated at one place or at the capital because of the over population in this metropolitan city and over population in the metropolitan cities of the various districts.

ரோடுகளை ஃபர்ஸ்ட் கிளாசாக டெவலப் செய்திருக்கிறோம். பவரை டெவலப் செய்திருக்கிறோம். Even to the remotest village we have taken power. There won't be any difficulty for transporting the raw materials. இருந்தாலும் கூட அந்த எண்டர்பிரனர்ஸ் ஸ்டேட் கேப்பிடல் அல்லது பக்கத்திலே தான் ஸ்டார்ட் செய்ய கண்ணும் கருத்துமாக இருப்பார்கள். எனவே இதில் அரசாங்கம் நல்லமுறையில் கவனித்துச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். Sir, our port is the third biggest port in our country. When compared to Bombay and Calcutta our ports size is small but comparatively the turnover in our port is the highest because of the various reasons. Now, for the last one week the port is strike bound. What amount of colossal loss to the Shipping, Trade, Commerce and Industry? வெளியிலே போக வேண்டிய சரக்கு போகவில்லை, இறக்குமதியாக வேண்டிய சரக்கு இறக்கப்படவில்லை, அப்படியே இருக்கிறது. இதனால் யாருக்கு நஷ்டம் Has the Government taken any initiative to see that this strike is being withdrawn and the port is working? I hope the Government has got a share in it and the Government should come

out boldly and take up the mater with the Government of India to see the strike is resolved that as quickly as possbile and the port comes to operation. நம்முடைய ஸ்டேட்டிலே அக்ரோபேஸ்ட் இண்டஸ்ட்ரீஸாலும், பார்மசூடிகல் இன்டஸ்ட்ரீஸானாலும், ஃப்ரூட் புராசசிங் இன்டஸ்ட்ரீஸானாலும் சரி நிறைய செய்யலாம். அதையெல்லாம் செய்யக்கூடிய இயற்கை வளம் நம்மிடத்தில் இருக்கிறது. மற்ற மாநிலங்களிலேயெல்லாம் இதை நிறையச் செய்கிறார்கள். மகாராட்டிரம், குஜராத், உத்தரப்பிரதேசம் ஆகிய இடங்களிலேயெல்லாம் இது நிறைய வந்திருக்கிறது. Particularly the fruit-processed industries have come up very well in Karnataka and I would like the Hon. Minister to set up a small cell of his own people to see whether we can develop these industries much more than what they are now. I find that there are so many financial institutions backed by the Government. May I give a suggestion Mr. Deputy Sepaker Sir, to the Hon. Minister to consider whether it will be feasible to have only 2 or 3 Corporations wherein you can constitute the administrative body, with more of industrialists and private sectors than the bureaucrats. Certain insitutions are managed only by bureaucrats. Not even a single place was allowed to be managed by the private sector people.

(பிற்பகல் 1-40)

I quite agree with my esteemed Friends to my left, Communists, who have been pleading that Karur-Dindigul project should be implemented I do not understand why there is delay in this one. The Government must go to Delhi, sit there tight and see that this is being developed. Sir, I have been agitating on the floor of this House for the location of Dry dock facilities in the Madras Port. There is no dry dock facilities in the Madras Port, except in Vizagapattanam to some extent, in Calcutta and in Bombay. Next is only in Singapore. I remember Santhanam Committee was constituted and it has gone into this matter. One or two more Committees were also constituted. Mr. Alagesan's Committee has also gone into this matter. I think they have given a very favourable recommendation that Dry Dock facility can be provided in the Madras Port. I would, therefore, like the Government to go into this matter deeply and take up the matter with the Government of India with pursuasion and confidence to see that this is achieved.

I can assure the Hon. Minister that we will be one with him in the development of this State, as one of the foremost industrially developed State because whatever development is happening will enrich our people to become more and more prosperous and which will also enable them to earn more per capita income. Please do not have any reservation to talk to us to secure our advice or help. We will be too glad to give you. Thank you.





**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே பேசுகின்றபோது தொழில்களின் வளர்ச்சி, தொழிலாளர் நலன் ஆகியவை குறித்து அரசு மேற்கொள்ள வேண்டிய ஆக்கப் பணிகள் பற்றிய ஆலோசனைகளை நல்கினார்கள். குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகின்றபோது தொழில் தகராறு காரணமாக தொழிற்சாலைகள் பல மூடப்பட்டுள்ளன என்றும் இந்த நிலை மாறவேண்டும் என்றும் சொன்னார்கள். அதற்கு நமது மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் விளக்கம் தந்து எந்த அளவிற்கு தொழில் அமைதி ஏற்படுத்த வேண்டும் என்பதிலேயும், தொழிலாளர் நலனைப் பேணவேண்டும் என்பதிலேயும் அதே நேரத்திலே தொழில் அமைதி, உற்பத்தித் திறன் நாட்டினுடைய ஒட்டு மொத்த முன்னேற்றத்திற்கு மிக இன்றியமையாத ஒன்று என்பதையும் கருத்தில் கொண்டு தொழிற்சாலைகள் எல்லாம் இயங்க அரசு எடுத்த நடவடிக்கைகளை அவர்கள் சொடிட்டுக் காட்டினார்கள்.

தற்போது இந்த ஆட்சி பொறுப்புக்கு வந்த பிறகு மட்டும், அதாவது புரட்சித் தலைவர் திரு. எம்.ஜி.ஆர். அவர்களின் ஆட்சிக் காலத்தில் மட்டும் 17 பெரும் தொழிற் சாலைகள் தொழில் தகறாரால் மூடப்பட்டு இருந்த தொழிற்சாலைகள் திறக்கப்பட்டு, தக்க நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொண்டிருக்கின்றது என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் சொன்னது போல் கிட்டத்தட்ட 2,700 தொழிலாளர்கள் மட்டுமே, இதில் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் அந்த பாதிப்பிலிருந்து விடுதலை தர விரைவாக நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள இருக்கின்றது என்பதையும் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அதே நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்பாதுரை, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமசந்திரன் ஆகியவர்கள் எல்லாம் பேசுகின்றபோது சிறு தொழில்களில் பணியாற்றுகின்ற பணியாளர்கள் கூட பாதிப்புக்கு உள்ளாக்கப்பட்டிருப்பதை அவர்கள் பேச்சின் ஊடே எடுத்துச் சொன்னார்கள். சிறு தொழிலாக இருந்தாலும், பெரு தொழிலாக இருந்தாலும், தொழிற்சாலைகள் மூடப்படுகிறபொழுது வேலை வாய்ப்பு மக்களுக்குக் கிட்டாமல் போகிறது, மக்கள் அவதிக்கு உள்ளாக்கப்படுகிறார்கள் என்பதால் இது போன்ற பிரச்சினைகளில் அரசு மிக அக்கறையாகச் செயல்பட்டு வருகிறது என்பதை நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவராமன் அவர்கள் பேசுகிறபொழுது, கள்ளக்குறிச்சி சர்க்கரை ஆலையில் தனி அதிகாரி ஒருவர் சரியாக நடக்கவில்லையென்றும் அதனால் அந்த ஆலை நட்டத்தில் இயங்குகிறது என்றும் சுட்டிக்காட்டினார்கள். அது குறித்து அரசு விசாரித்து தக்க நடவடிக்கை எடுக்கும்.

[திரு. சி. பொன்னையன்] [1984 மார்ச் 24

அது மட்டுமல்லாமல், மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் நெடுமாறன் அவர்கள் பேசுகிறபொழுது "ப்ரீ டிரேட் சோன்" செம்மையான முறையில் இயங்குவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கையை அரசு மேற்கொள்ள வேண்டுமென்று சொன்னார்கள். அது குறித்து சொல்ல இருக்கிறேன். தக்க நடவடிக்கைகளை அரசு எடுத்து முறைப்படி செயல்பட்டு வருகிறது.

இன்னும் ஒன்றைச் சொல்கிறபோது Solar based units should be encouraged என்று சொன்னார்கள். மிகத் தீவிரமான அக்கறை செலுத்தி, விவசாயத் துறையாக இருந்தாலும் சரி, தொழிற்சாலைக்காக இருந்தாலும் சரி, இந்த 'சோலார் எனர்ஜி' எந்த அளவிற்குப் பயன்படுத்துவது, அதன் காரணமாக மிச்சப்படுகிற மின்சாரத்தைத் தொழில் வளர்ச்சிக்கு எப்படிப் பயன்படுத்துவது என்பதில் தீவிரத் திட்டத்தைத் தீட்டி, விரைவில் அதை நடைமுறைக்குக் கொண்டு வர அரசு தற்போது செயலில் இறங்கி இருக்கிறது என்பதையும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போலவே இன்னொன்றைச் சொன்னார்கள். State Governments Public undertakings பல நலிவுற்ற நிலையில் இருப்பதை மாற்றுகிற முகத்தான் குழு அளித்த பரிந்துரையை ஆய்ந்து தக்க நடவடிக்கையை விரைவில் எடுக்க வேண்டுமென்று சொன்னார். அது குறித்தும் அரசு விரைவு நடவடிக்கையை மேற்கொள்ளும் என்பதையும் நான் சொல்ல விரும்புகிறேன்.

இந்தியா சிமெண்ட்டைப் பொறுத்தவரைக்கும் தனி முதலாளி ஒருவருக்கு சென்று விட்டது, தமிழர் கையைவிட்டுச் சென்று விட்டது, அது தடுத்து நிறுத்தப்பட வேண்டுமென்று எடுத்துச் சொன்னார். தமிழக அரசைப் பொறுத்தவரைக்கும் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் பலமுறை மைய அரசுக்கும் மைய அமைச்சர்களுக்கும் அது சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் கூட அஞ்சல் எழுதி, அண்மையில் நான் கூட அது குறித்த நடவடிக்கையை மேற்கொண்டு, மாநில அரசு இந்தியா சிமெண்ட்டை எடுத்துக்கொள்ளக்கூடிய ஒரு நிலை உருவாக வேண்டும், அதற்கு மைய அரசு முன்வர வேண்டுமென நாங்கள் மிக வற்புறுத்தி வருகின்றோம். அது முடியும் என்ற நம்பிக்கை இந்த அரசுக்கு இருக்கிறது.

இன்னொரு ஆலோசனையைக்கூடச் சொன்னார்கள், Letter of Intent கிடைத்தவர்களை எல்லாம் அவர்கள் நம்மைத் தேடி வந்து, அவர்களுக்கு உரிமம் வழங்குவதில், தேவைப்பட்ட வசதிகளைச் செய்வதில் காலதாமதம் செய்யாமல், நாம் அவர்களைத் தேடிப் போய், என்ன, என்ன பிரச்சினைகள் உங்களுக்கு இருக்கின்றன என்பதை எல்லாம் கேட்டறிந்து, விரைவில் தொழில் துவங்க, நாட்டினுடைய வளம் பெருக, நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று சொன்னார். அது குறித்தும் அரசு தக்க நடவடிக்கையை எடுத்து வருகிறது. Tamil Nadu Chemical Products Ltd.-ல்



1984 மார்ச் 24] [திரு. சி. பொன்னையன்]

ஒரு தவறு நடந்து நடவடிக்கை எடுக்கப்படுவதற்குப் பதிலாக ரூ. 9 இலட்சம் அந்த நிறுவனத்தினுடைய ப்ரமோட்டருக்கு கொடுக்கப்பட்டு விட்டது என்பதைச் சுட்டிக்காட்டிச் சொன்னார். உயர்நீதிமன்ற ஆணையை ஒட்டி அந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக எனக்குத் தகவல் தரப்பட்டிருக்கிறது. அது என்ன என்பதனை நான் ஆழமாக ஆய்ந்து அரசு அளவில் என்ன நடவடிக்கையை எடுக்க முடியுமோ, அந்த நடவடிக்கையை எடுக்க நான் முயற்சிகளை மேற்கொள்வேன் என்பதைச் சொல்கிறேன்.

அதைப்போலவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் பேசுகிறபொழுது, குறிப்பாக, அரசினுடைய தொழிற்சாலைகள் பல பாதிக்கப்படுகின்ற நிலை இருக்கின்றது. அந்தக் குறை நீக்கப்பட்டு, அவை செம்மையாக்கப்படவேண்டுமென்று சொன்னார். அரசு ஏற்கெனவே, அதற்காக சிரத்தையாக, சிறப்பு நடவடிக்கையை எடுத்து வருகிறது.

இன்னும் ஒன்றை எடுத்துச் சொன்னார். தமிழ்நாட்டிலே உற்பத்தியாகிற பொருள்கள் இருக்கின்றன, அரசு அமைப்புகள் தங்களுக்குத் தேவையான பொருள்களை வாங்கும்பொழுது, தமிழ்நாட்டிலே உற்பத்தி செய்கிற பொருள்களை வாங்காமல் பிற மாநிலங்களிலே இருந்து வாங்குகிற ஒரு முறை மேற்கொள்ளப்படுகிற காரணத்தால் தமிழ்நாட்டின் தொழிற்சாலைகளுடைய முன்னேற்றம் பாதிக்கப்பட்டு, இறுதியாக அந்தத் தொழிற்சாலை நலிவுற்று, பணியாளர்களுக்கு நிரந்தரப் பணிப் பாதுகாப்புக் கூட இல்லாத நிலை உருவாகி வந்திருக்கிறது.

(பிற்பகல் 1.50)

இந்தக் குறையைப் போக்க தமிழகத்தில் துவக்கப்படுகிற தொழில்களுக்கு, எண்ட்-புராடக்ட்ஸ் என்று சொல்லப்படுகிற உற்பத்திப் பொருள்களை வாங்குகிறபோது மாநில அரசு அமைப்புகள் அவைகளிலிருந்து வாங்க முன்னுரிமை தர வேண்டும் என்பதை கோடிட்டுக் காட்டினார். அது நல்ல ஆலோசனை. அரசு அதுகுறித்து பரிசீலித்து, தக்க நடவடிக்கையை மேற்கொள்ளும் என்பதை கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்றைச் சொன்னார்கள் இந்த அரசினுடைய கொள்கை தொழிற்சங்கத்தை, ட்ரேட் யூனியன் மூவ்மெண்ட்டை சப்ரஸ் செய்யக்கூடிய, நசுக்கக்கூடிய கொள்கையாக இருக்கிறது என்று சொன்னார்கள். அதில் நான் முற்றிலும் மாறுபடுகிறேன். இந்த அரசினுடைய கொள்கையைப் பொறுத்த வரையிலும் தொழில் அமைதி இருக்க வேண்டும்; தொழிலாளர்கள் நலம் பாதுகாக்கப்பட வேண்டும்; உற்பத்தி பெருக வேண்டும்;

உற்பத்தி பெருகுகிற போது தொழிலாளர்களின் நலமும் அதோடு இணைத்து பாதுகாக்க வேண்டும் என்பது நான் இந்த அரசினுடைய கொள்கை. தொழிலாளர்களுக்கு விரோதமாக இந்த அரசு எந்த ஒரு கொள்கையையும் எடுக்காது; எடுக்கவில்லை என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடு.)

I know that it is detrimental to your interest. That report is different- What I am telling is different.

மாண்புமிகு உறுப்பினர் அப்பாதுரை அவர்கள் பேசுகிறபோது தொழில் வளம் நிதி ஒதுக்கீடு குறைந்தது தொழில் துறைக்கு இந்த அரசு அதிகப்படியான ஊக்கத்தை தரவில்லை என்பதற்கு உதாரணமாக எடுத்துச் சொன்னார்கள். நான் அதிலே மாறுபடுகிறேன். துரைமுருகன் அவர்கள் பேசுகிற போது சொன்னதைப் போல எந்தத் தொழிலை அரசுத் துறைகளில் துவக்க அரசு முற்படுகிறதோ அதே நேரத்தில் தக்க நிதியை அரசு ஒதுக்க இயலும் என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஒரு தொழிலை நாம் உருவாக்குகிற பொழுது, அரசே அந்தத் தொழிலில் நேரடியாக பங்கேற்று ஊக்குவிக்கிறபோது பணச் செலவு அதிகமாக ஏற்படுகிறது. ஆனால் அரசு நிதி நிறுவனங்கள் மூலமாக தொழிலை ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்கிற போது அதற்கு ரீ-பைனான்சிங் பெசிலிட்டி ஐ.டி.பி.ஐ. மூலமாக இருக்கிறது என்பதும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும் என்று நினைக்கிறேன். எனவே, இந்த நிதி ஒதுக்கீட்டினுடைய அளவை வைத்துக் கொண்டு, தொழில் வளர்ச்சி குறைவாக இருக்குமென்ற கணிப்பு சரியான கணிப்பல்ல. மாறாக, பல மடங்கு தொழில் வளர்ச்சியை நாம் மேற்கொள்கிற சாத்தியக் கூறுகள் இருக்கின்றன. இந்த அரசு தக்க நடவடிக்கைகளை எடுக்கவிருக்கிறது என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

தூத்துக்குடி-கரூர் அகலப்பாதை குறித்து இந்த அரசு மத்திய அரசை வற்புறுத்தி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு அப்பாதுரை அவர்கள் மட்டுமல்ல, மாண்புமிகு எதிர் கட்சித் தலைவர் அவர்கள் கூட அதை வற்புறுத்திச் சொன்னார்கள். அந்தப் பணியில் தமிழகத்தைச் சேர்ந்த அனைத்து அமைப்புகளும் அக்கறையாக இருப்பதை இந்த அவை அறியும். இந்த அரசு பலமுறை மத்திய அரசை வற்புறுத்தி தூத்துக்குடி-கரூர அகலப் பாதை அமைக்க வேண்டும்; தூத்துக்குடியை மையமாகக் கொண்டு பலவிதமான தொழில் வளர்ச்சிக்கு ஒரு கேந்திரமாக அது அமையக்கூடிய ஒன்று என்பதால் அதை விரைவில் நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று நாம் பலமுறை வற்புறுத்தியும் மைய அரசு ஏனோ தெரியவில்லை அதிலே மெத்தனமாக





இருக்கிறது. என்னுடைய வேண்டுகோள், மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் கூட அவர்கள் பேசிய பேச்சில் கூறிய கருத்துக்களில் எல்லாம் ஒட்டு மொத்தமாக தமிழகத்தினுடைய வளர்ச்சியைப்பற்றி சொன்னார்கள், நான் பாராட்டுகிறேன். அதைப் போலவே, இந்தத் தூத்துக்குடி-கரூர் அகலப் பாதை தென் மாவட்டங்களுடைய தொழில் வளர்ச்சிக்கு மிக முக்கியமான ஆணி வேராக அமையவிருக்கிறது என்ற காரணத்தால் உங்களுக்கு மைய அரசிடம் இருக்கிற செல்வாக்கைப் பயன்படுத்தி இந்த முயற்சியிலே தமிழகத்திற்கு வெற்றி கிடைக்க நீங்கள் உறுதுணையாக இருக்க வேண்டும் என்பதை பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி-கரூர் அகலப் பாதை விஷயத்தில் மத்திய ரெயில்வே மந்திரியாக இருந்த கேதார் பாண்டே அவர்களும், மத்திய நிதியமைச்சராக அப்போதிருந்த ஆர். வெங்கட்ராமன் அவர்களும் 1984 ஆம் ஆண்டிற்குள் இந்தத் திட்டம் நிச்சயமாக முடிக்கப்படும். எந்தவிதமான தடையும் இல்லாமல் நிதி அதற்கு ஒதுக்கப்படும் என்று பகிரங்கமாக நாடாளுமன்றத்திலே அறிவித்தார்கள். ஆனால் 1984 ஆம் ஆண்டிலே அதற்கான நிதி கொஞ்சம் கூட ஒதுக்கவில்லை. இந்த நிலையைப் போக்குவதற்கு மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும், எல்லாக் கட்சிகளும் இதிலே ஒத்துழைப்பதற்கு தயாராக இருக்கின்றன. சகல கட்சிகளையும் சேர்த்துக் கொண்டு இந்தத் திட்டத்தை இந்த ஆண்டில் முழுமையாக எடுத்துக் கொள்ள வேண்டும், அதற்கான நிதியை ஒதுக்க வேண்டுமென்று மத்திய அரசிடம் நாம் போராட வேண்டுமென்று இங்கே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

THIRU K. S. G. HAJA SHAREEF: Mr. Deputy Speaker, Sir, I do not believe in agitation. I want that it should be conveyed to the Central Government that the Tuticorin-Karur railway line is a very feasible one. There should be an aggresive policy; from all points of view, economically, industrially and from various points of view, it is a very feasible project and it should be taken up immediately. I am sure if this policy is conveyed, the Government of India will certainly help and there is no question of any agitation for it. Agitation will never bring any success and that is my point.

[திரு. சி. பொன்னையன்] [1984 மார்ச் 24

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் போராட்டம் இல்லாமலேயே மைய அரசு நமக்குச் செவி சாய்த்துவிடும் என்று நம்பிக்கை தந்து இருக்கிறார்கள். எனவே, நாம் அனைவரும் ஒருங்கிணைந்து அந்தப் பிரச்சினையில் வெற்றி பெறுவோம். அந்த முயற்சியில் மாநில அரசு மிகத் தீவிரமான நடவடிக்கைகளை எடுக்கும் என்பதை நான் இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் பேசுகிறபோது திருத்தணி சர்க்கரை ஆலையைப் பொறுத்த வரையில், பண்ட்ஸ் லாப்ஸ் ஆகிவிடும் நிலை உள்ளதாகவும, அந்தத் தொழிற்சாலை இன்னும் துவங்கப்படும் ஆரமப கட்ட நிலையில் இருப்பதாகவும் சொன்னார்கள். அந்த தொழிற்சாலை விரைவில் துவங்கப்படும். லாப்ஸ் ஆகாத நிலையில், பாதிக்கப்படாத நிலையில் அரசு தக்க நடவடிக்கைகளை எடுக்கும் என்பதை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகிறபோது, Constitution of Industrial Committee பற்றிச் சொன்னார்கள். பல்வேறு பிரிவுகள், துறைகள், பல்வேறு வல்லுநர்கள் அடங்கிய experts from different fields அடங்கிய குழுக்கள் ஏற்கனவே அமைக்கப்பட்டு சென்ற வாரம் அறிவிக்கப்பட்டு இருக்கிறது. அதை இன்னும் சற்று விரிவாக்கி இருக்கிறோம். 2-3 பேர் ஒரு குழுவிற்குப் போட்டு இருக்கிறோம். இன்னும் அதை விரிவாக்கி, எந்தெந்த வல்லுநர்களை, எந்தெந்த பிரிவிலே இன்னும் சேர்த்தால் அது நலமுடையதாக இருக்கும், நாட்டின் வளத்திற்கு உகந்ததாக இருக்கும் என்பதைப் பார்த்து, அந்த அடிப்படையில் அந்தக் குழு செயல்முறைச்கு வரும் என்பதை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து, Infrastructural facilities are inadequately provided என்பது பற்றி மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். மற்ற பல மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கிறபோது நமது Industrial complex பொறுத்தவரைக்கும் Infrastrucural facilities போதிய அளவிற்கு ஏற்கனவே தரப்பட்டு இருக்கிறது. அது முழுவதும் போதும் என்று நாம் ஒப்புக் கொள்ளவில்லை. மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதைப் போலவே, குறிப்பாக தொழிலாளர் நலன் கருதி அவர்களுக்கு வீட்டுவசதி வாய்ப்புகளும், அதைப் போலவே, தண்ணீர் பிரச்சினை; சாலை போக்குவரத்து, சுகாதார வசதிகள் எல்லாம் முழுமையாக இன்னும் பல இடங்களில் முற்றுறவில்லை என்பதை ஒப்புக் கொள்கிறேன். அவைகள் ஈடேற, அது infrastructural facilities



1984 மார்ச் 24] [திரு. சி. பொன்னையன்]

இருக்கட்டும், அல்லது, பணி செய்யும் மற்றவர்களுக்காக இருக்கட்டும், அல்லது தொழில் வளர்ச்சிக்காக இருக்கட்டும், அவற்றையெல்லாம் இன்னும் துரிதமாக ஈடேற்ற அரசு ஒரு குறுகிய கால திட்டத்தில், விரைவுத் திட்டத்தை மேற்கொள்ளும் என்பதை நான் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு அண்ணன் நெடுமாறன் அவர்கள் பேசுகிறபோது, சொன்னார்கள். நெய்வேலி லிக்னைட் பொறுத்த வரையில் அதனுடைய விலை பீகார், வெஸ்ட் பெங்கால் ஆகிய இடங்களில் இருந்து வருகிற நிலக்கரியை விட இரண்டு மடங்கு விலை ஆகிறது என்று சொன்னார்கள் பீகாரிலிருந்து, வெஸ்ட் பெங்காலில் இருந்து நிலக்கரியை தமிழகத்தின் பலனுக்காக வாங்கி வரவேண்டுமானால், என்ன போக்குவரத்து செலவு ஆகுமோ அந்தச் செலவையும் சேர்த்து நெய்வேலி லிக்னைட்டின் விலை நிர்ணயிக்க வேண்டும் என்ற அணுகுமுறை மேற்கொண்டு வருகிறார்கள். அதனால் அந்த நிலக்கரியைப் பயன்படுத்துகிற தொழில்கள் எல்லாம் பாதிக்கப்பட்டு இருச்கின்றன அதைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டார்கள். இது குறித்து நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன் சேரமனோடு தொடர்பு கொண்டு இந்தக் குறைபாட்டை களைய அரசு தக்க நடவடிக்கை மேற்கொள்ளும் என்று நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

(பிற்பகல் 2.00)

சப்சிடியைப் பொறுத்த வரையில் அரசு எந்த அளவுக்கு மேற்கொண்டிருக்கிறது என்பதை கொள்கை புத்தகத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் பார்த்திருப்பார்கள். 1973 ஆம் ஆண்டு வாக்கில் மத்திய அரசு 15 சதவீதம் சப்சிடி, ஆனால் 15 இலட்சத்திற்கு மேற்படாமல், அளிக்கும் திட்டத்தின் கீழ் மத்திய அரசு சில பகுதிகளை தேர்ந்தெடுத்து அறிவித்தது. ஆனால் தற்போது சப்சிடி பிரச்சினையைப் பொறுத்த வரையில் 'காட்டகிரி-ஏ' என்று ஏற்படுத்தி; 'நோ இன்டஸ்டரி டிஸ்டிரிக்ட்' என்று கொண்டு வந்து, அங்கே 25 சதவீதம் சப்சிடி., ஆனால் 25 இலட்சம் ரூபாய்க்கு மேற்படாமல், வழங்குகிறது. அதே மாதிரி 'பி காட்டகிரி' யில் 15 சதவீதம் சப்சிடி, ஆனால் 15 இலட்சம் ரூபாய்க்கு மேற்படாமல், வழங்குகிறது. அதே போன்று 'சி-காட்டகிரி'யில் அதைப் பொறுத்த வரையில் 10 சதவீதம் சப்சிடி, ஆனால் 10 இலட்சம் ரூபாய்க்கு மேற்படாமல், வழங்குகிறது. இந்த அடிப்படையில் சப்சிடி வழங்குகிறோம் என்று மத்திய அரசு கொண்டு வந்திருக்கிற ஒரு முறையில், இந்த 'நோ இன்டஸ்டிரி டிஸ்டிரிக்ட்' என்ற முறை தமிழ்நாட்டை பொறுத்த வரையில் பெரிதும் பாதிப்பதாக இருக்கிறது என்று மத்திய அரசுக்கு ஏற்கனவே சுட்டிக் காட்டியிருக்கிறோம். அதை மாற்றியமைக்க இந்த அரசு கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கும்.

காரணம் மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதைப் போல இராணிப்பேட்டையில் 30 கோடியிலே ஒரு தொழில் வந்து விட்டாலே அந்தப் பகுதியில் தொழில் வளம் அதிகமாக வந்து விட்டது என்று சொல்லி, மத்திய அரசின் உதவிகள் கிடைக்காமல் நிறுத்திவிடுவார்கள். அதற்கு நீங்கள் என்ன செய்தீர்கள் என்று கேட்டார்கள். இந்த அரசைப் பொறுத்த வரையில் தாலுகா வாரியாக கணக்கை எடுத்து அந்த அடிப்படையில் அறிவித்தால் தான் தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு உசந்ததாக இருக்கும் என்று மத்திய அரசை மாநில அரசு கேட்டிருக்கிறது. குறிப்பாக மத்திய தொழில் அமைச்சர் அவர்களையும், பிரதம அமைச்சர் அவர்களையும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சந்தித்து இது குறித்து பேசி தக்க நடவடிக்கை எடுக்க இருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, ஏப்ரல் மாதம் 1983-ல் மத்திய அரசு ஒரு திட்டத்தைக் கொண்டு வந்து, சில பகுதிகளை, கிட்டத்தட்ட 9 மாவட்டங்களை பின் தங்கிய மாவட்டம் என்று அறிவித்து, அங்கே தொடங்கப்படும் தொழில்களுக்கு 10 சதவீதம் சப்சிடி என்ற வகையில் நிதி உதவி தர நடவடிக்கை எடுத்திருக்கிறது. அதைப் போன்று நிதி நிறுவனங்களில் இருந்து சலுகை அடிப்படையில் கடன் உதவி பெறுவதற்கு மைய அரசு 9 மாவட்டங்களை ஐ.டி.பி.ஐ. அசிஸ்டன்சின்கீழ் அறிவித்து, நாம் 12½ சதவீதம் என்ற வகையில் குறைந்த வட்டிக்கு கடன் தரும் நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது.

அது மட்டுமல்ல, தமிழக அரசு 33 வட்டங்களை பின்தங்கிய வட்டங்கள் என்று அறிவித்து, அந்த பகுதிகளுக்கு 15 சதவீதம் சப்சிடி, ஆனால் 15 இலட்சத்திற்கு மேற்படாமல், வழங்கப் படும் என்று அறிவித்து, அந்தப் பகுதிகளை மேம்படுத்த மாநில அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது.

அது மட்டுமல்ல, சில குறிப்பிட்ட தொழில்களை தமிழ் நாட்டில் சில பகுதிகளில் மேம்படுத்துவதற்கு நல்ல வாய்ப்பு இருப்பதால், Taking into consideration the supply and demand of all the end products. மாநில அரசு எலக்ட்ரானிக் இன்டஸ்டிரீஸ், அதைப்போன்று அடிப்படை மருந்துகள் மற்றும் ஷெட்யூல்டு மருந்துகள் தயாரிப்பு போன்றவைகளைத் தொடங்குதல், ஆட்டோமொபைல் ஆன்சிலரி யூனிட்ஸ் தொடங்குவது, அருமை அண்ணன் நெடுமாறன் அவர்கள் சொன்னதைப் போல சோலார் எனர்ஜி பேஸ் யூனிட்ஸ் தொடங்குவது போன்றவைகளுக்கு முன்னுரிமை தந்து, தமிழ்நாட்டில் எந்த பகுதியில் இவற்றைத் தொடங்கினாலும்





அவர்களுக்கு 10 சதவீதம் சப்சிடி, ஆனால் 10 இலட்சத்திற்கு மேற்படாமல், வழங்க ஆணையிடப்பட்டு, அதை இந்த அரசு நடைமுறைக்கு கொண்டுவந்திருக்கிறது. இப்படிப்பட்ட சில தொழில்களை சில பகுதிகளில் கொண்டுவர நல்ல வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, இந்தக் குறிப்பிட்ட தொழில்கள் விரிவுபடுத்தப் படும். இங்கே எந்த எந்த தொழிலை தமிழ்நாட்டில் தொடங்குகிறார்களோ அவைகளுக்கு

All India Competition or Competition from imported goods.

ஆகியவை இல்லாமல் அந்தத் தொழில்கள் நசுங்கிவிடாத வண்ணம் th demand and supply of the end product ஆகியவற்றைக்

கணக்கில் எடுத்துக்கொண்டு If there is a wider gap between demand and supply of the end products, such industries will be given due encoragement under this category. என்பதனை நான் அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போலவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 'இன்ஃப்ரா ஸ்ட்ரக்சர் பெசிலிட்டீஸ்' பற்றிச் சொன்னார்கள். அதனால் மின்சாரக் கட்டண சலுகை கூட எலக்ட்ரிசிட்டி போர்டிலிருந்து அதிகமான அளவுக்கு தொழில் வளர்ச்சிக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக மின் சாரம் வழங்குவதில் உரிய நடவடிக்கை எடுத்திருக்கிறோம் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போலவே இன்னும் ஒன்றைச் சொன்னார்கள். தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் தொழில் துறையில் மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கிறோம் என்று சொன்னார்கள். அது தவறு என்று என்னுடைய கருத்தை இந்த அவைக்குச் சொல்வது என்னுடைய தலையாய கடமை என்று கருதுகிறேன். காரணம் 31-3-77 ஆம் ஆண்டு வாக்கில் மத்திய அரசினுடைய டிபார்ட்மெண்டு ஆப் கம்பெனி அபேயர்ஸ் அறிக்கையின் அடிப்படையில் இருந்தது 4,060 ஆகும். ஆனால் 31-3-77-லிருந்து 31-3-82 வரை கிட்டத்தட்ட 4, 5 ஆண்டுக் காலத்தில் அந்த எண்ணிக்கை 5,773 ஆக உயர்ந்திருக்கிறது. அதாவது 1,713 பெரிய தொழிற் சாலைகள் துவங்கப்பட்டிருக்கின்றன என்பதனை நான் கூறிக் கொள்ளவிரும்புகிறேன்.

அதேபோல, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், இப்படிக் கணக்கிட்டுப் பார்க்கிறபோது; தொழிற்சாலைகளின் வளர்ச்சியில், இந்தியாவில் நாம் 4-வது இடத்தில் இருக்கிறோம் என்பதையும், மராட்டியம் முதலிடத்தையும், மேற்கு வங்கம் 2-வது இடத்தையும், டில்லி 3-வது இடத்தையும், தமிழகம் 4 ஆவது இடத்தையும் பெற்றிருக்கிறது என்பதனைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல, இந்தத் தொழிற்சாலையில் ஈடு செய்யப்படுகிற—போடப்படுகிற —முதலீடு 31-3-77 வாக்கில் ரூ. 564 கோடியாகும். 1,713 தொழிற்சாலைகள் அதிகமாக துவக்கப்பட்ட காரணத்தால், அந்த முதலீடு சுமார் 925 கோடியாக உயர்ந்து, முதலீட்டிலே சுமார் ரூ. 360 கோடி அதிகமாக முதலீடு செய்யப்பட்டிருக்கிறது என்பதனையும் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல சிறு தொழில்களை எடுத்துக்கொண்டாலும், 1971 முதல் 1976 வரை, தமிழகத்தில் ஒட்டுமொத்தமாக 1,05,132 தொழில்கள் பதிவு செய்யப்பட்டிருந்தது. ஆனால் 1977-லிருந்து 1982 வரை புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். ஆட்சியில் 2¼ இலட்சம் சிறு தொழில்கள் ஒட்டுமொத்தமாக பதிவு செய்யப்பட்டிருக்கிறது. காரணம்; வேலைவாய்ப்பை அதிகமாகப் பெருக்குவதற்கு ஸ்மால்ஸ்கேல் இண்டஸ்ட்ரீசின் வளர்ச்சி மிக இன்றியமையாத ஒன்று என்ற அந்த அடிப்படையில் மக்கள் தொகை அதிகமாக இருக்கின்ற நமது நாட்டைப் பொறுத்தவரைக்கும், சிறு தொழில்கள் வளர்ச்சியின் மூலமாக வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க பெரிதும் உதவும் என்ற முகத்தான் சிறு தொழில்களுக்கு ஊக்கம் தரவேண்டுமென்ற முறையில் ஊக்கம் தரப்படுகிறது. அந்த அளவிற்கு தொழில் வளர்ச்சியும், அதையொட்டி, வேலைவாய்ப்பையும், இந்த அரசு உருவாக்கியிருக்கிறது........(குறுக்கீடு).

THIRU K.S.G. HAJA SHAREEF ; Mr. Deputy Speaker, Sir the Hon'ble Minister has stated that between 1977-1982, 2 and odd lakhs of Small Scale Industries have been started. How many of them are functioning and are continuously functioning without break? If there is any break or if the functioning is not good will the Governmene find out the reasons and give proper assistance and see that these are put back into their original position?





மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : துணைத் தலைவர் அவர்களே, தொழிற்சாலை எண்ணிக்கையில் எத்தனை என்பது பெரிதல்ல, என்பதை அரசும் உணர்கிறது. துவங்கப்பட்ட தொழிற்சாலைகள் எல்லாம் செவ்வையாக இயங்குகின்றனவா என்பதைத்தான் முக்கியமாக இந்த அரசு உணர்கிறது. அந்த அடிப்படையில் தொழிற்சாலைகள் எங்கெங்கு நலிவுற்றாலும், ஏன் நலிவுற்றிருக்கிறது, அதற்கு என்ன காரணம், ஒரு வேளை கிரடிட் பெசிலிட்டீஸ் கிடைக்கவில்லையா, ராமெட்டீரியல்ஸ் வாங்குவதில் தடை இருக்கிறதா, மார்க்கெட்டிங் பெசிலிட்டீஸ் இல்லையா என்பதையெல்லாம் ஆராய்ந்து, அந்த தொழிற்சாலைகளுக்கு ஊக்கம் தரவேண்டியது அரசினுடைய பொறுப்பு என்பதால், அதுகுறித்து அரசு தக்க நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து தனி நபர் வருமானத்தை எடுத்துக்கொண்டால், 1977 ஆம் ஆண்டு 954 ஆக இருந்தது தற்போது 1,269 ஆக உயர்ந்திருக்கிறது இதை நான் சொல்வதற்குக் காரணம், வேலைவாய்ப்புகளும் பெருகி, தொழில் வளர்ச்சியும் பெருகி இருப்பதன் காரணமாக, இதுபோன்ற வளர்ச்சி மேலும் பெருகுகிறது என்பதை இந்த அவைக்குச் சொல்ல வேண்டுமென்பதற்காகத் தான் இதை நான் சொல்லவிரும்புகிறேன்.

(பிற்பகல் 2-10.)

அது மட்டுமல்லாமல், மத்திய அரசினுடைய நிதி உதவியைப் பொறுத்தவரைக்கும்,

Institutional Finance from Industrial Development Bank of India Industrial Credit and Investment Corporation of India and Industrial Financial Corporation of India.

ஆகிய அமைப்புகளில் இருந்து, 1983 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் வரை நாம் வாங்கியிருக்கின்ற நிதியினுடைய கணக்கைப் பார்த்தால், ஒட்டு மொத்தமாக, ஐ.டி.பி.ஐ. பொறுத்த வரைக்கும், 11,005.31 கோடி ஒதுக்கப்பட்டதில், தமிழகத்திற்கு மட்டும், 1,246.43 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

அதைப்போலவே Industrial Credit and Investment Corporation மூலமாக அனுமதிக்கப்பட்ட தொகையில், 2,211 கோடி ரூபாயில் தமிழகத்திற்கு 200 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதைப் போலவே ஐ.எப்.சி. யைப் பொறுத்தவரைக்கு 1,818.33 கோடி ரூபாயில் தமிழகத்திற்கு 116.36 கோடி ரூபா

துக்கப்பட்டிருக்கிறது. இந்த அரசைப் பொறுத்த வரையில் மத்திய அரசினுடைய தொழில்கள் அதிகமாகத் துவக்கப்பட்டு மத்திய அரசினுடைய 'பைனான்சியல் இன்ஸ்ட்டிடியூசன்' மூல மாக நாம் தொடர்ந்து தக்க நடவடிக்கை எடுத்து வருகின்ற காரணத்தாலே, இன்று தமிழகத்தில் இதைப் பொறுத்த வரைக் கும் அதாவது மத்திய அரசினுடைய நிதி நிறுவனங்களில் இருந்து நிதியைப் பெறுவதிலே நாம் மூன்றாவது இடத்தை, மராட்டிய மாநிலம், குஜராத் மாநிலத்திற்கு அடுத்தபடியாக, தமிழகம் மூன்றாவது இடத்தை வகிக்கிறது என்பதை நான் அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

அதைப் போலவே நம் தமிழகத்தில் இருக்கக் கூடிய பல வேறு அமைப்புக்கள், 'சிப்காட்' என்ற அமைப்பு தக்கநடவடிக்கை ளை மேற் கொண்டு, Infr s ruc.ural facilities செய்து தருவது மட்டுமல்லாமல், P omotion of Industries எந்த அளவிற்கு மிக அக்கறையாக செயல் பட்டு வருகிறது என்பதைப் பற்றி இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பில் இருந்து இந்த அவை அறிந்திருக்கும். அதைத் தொடர்ந்து ஆக்கபூர்வ மான பணிகளை மேற்கொள்ள நடவடிக்கைகளை எடுக்க இருக் கிறது என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, தமிழ்நாடு கனிம நிறுவனம், அதாவது 'டாமின்'- ஐப் பொறுத்தவரைக்கும் 1982-83-ல் 60 இலட்ச ரூபாய் இலாபத்தைப் பெற்று, வரும் ஆண்டில் 1 கோடி ரூபாய் இலாபத்தைப் பெறக் கூடிய அளவிற்கு அந்த அமைப்பு பல்வேறு ஆக்கப் பணிகளை தற்போது மேற்கொண்டு வருகிறது என்பதை நான் சொல்ல விரும்புகிறேன்.

அதே போல், 'டான்மேக்' என்று சொல்லப்படுகிற, தமிழ் டு மாக்னசைட் நிறுவனம் 1982-83-ல் 90 இலட்ச ரூபாய் ாபம் பெற்றிருந்த அமைப்பு, 1983-84-ல் 110 இலட்ச ரூபாய் இலாபத்தைப் பெறும் என்ற நிலைக்கு அது வளர்ந்திருக்கிறது.

அதைப் போலவே 'டிட்கோ' என்ற அமைப்பைப் பொறுத்த வரையிலும், 30 லட்ச ரூபாய், 1980-81-ல் லாபத்தைப் பெற்று, 1981-82-ல் 160 லட்ச ரூபாய் லாபத்தைப் 1982-83-ல் 193 லட்ச ரூபாயை ஈட்டி, 1983-84-ல் 2 கோடி ரூபாய்க்கு மேல் லாபத்தைப் பெற இருக்கிறது என்பதை நான் அவைக்குச் சொல்ல விரும்புகிறேன்.

அதைப் போலவே, டி.ஐ.ஐ.சி. யைப் பொறுத்த வரைக்கும் 1949-லேயிருந்து இந்த அமைப்பு, 1978 வரை கிட்டத்தட்ட 37 ஆண்டுக் காலத்தில் 118.77 கோடி ரூபாய் மொத்தக் ்டனை அனுமதித்தது. இதிலே 74.51 கோடி ரூபாயை வழங்கி யிருக்கிறது. தமிழகத்தில் புரட்சித் தலைவருடைய ஆட்சி



வந்ததற்குப் பிறகு, கடந்த 5 ஆண்டுக் காலத்தில் மட்டும் 174.55 கோடி ரூபாய்க்கு அனுமதி வழங்கி, 116.94 கோடி ரூபாய் அளவிற்கு கடன் வழங்கியிருக்கிறது என்ற இந்த ஒரு புள்ளி விவரமே சிறு தொழில்களுக்கு குறிப்பாக எந்த அள விற்கு இந்த அரசு பெரிய ஊக்கத்தைச் செய்து வருகிறது என் பதை அவைக்குத் தெரிவிக்க வேண்டும் என்பதற்காக நான் சொல்ல விரும்புகிறேன்.

சிறு தொழில்களுக்கு மட்டும் மொத்தக் கடனில் 33.85 கோடி ரூபாயை கடந்த 5 ஆண்டுக் காலத்தில், டி.ஐ.ஐ.சி அமைப்பு தந்திருக்கிறது என்பதை நான் அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

அதைப் போலவே தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனத்தைப் பொறுத்த வரைக்கும், ஆலங்குளத்திலும், அரியலூரிலும், இரண்டு சிமெண்ட் அமைப்புகள் செவ்வனே செயல்பட்டு வருகின்றன். அதிலே குறிப்பாக அரியலூர் சிமெண்ட்டைப் பொறுத்தவரைக்கும், 7½ கோடி ரூபாய் செலவில் 'ஃப்ரி கால்சினர்' என்ற ஒரு நூதன சூளையை ஏற்பாடு செய்து, அதன் காரணமாக கிட்டத்தட்ட 500 மெட்ரிக் டன் உற்பத்தியைப் பெருக்க அரசு நடவடிக்கை களை தற்போது மேற்கொண்டு வருகிறது. மேலும் 40 கோடி ரூபாய் செலவில், கிட்டத்தட்ட 1,300 பேர்களுக்கு வேலை வாய்ப்புத் தரக்கூடிய, 5 இலட்சம் மெட்ரிக் டன் சிமெண்ட்டை உற்பத்தி செய்யக்கூடிய விரிவாக்கத் திட்டத்தை தமிழ்நாடு சிமெண்ட்ஸ் என்ற அமைப்பு மேற்கொள்ள இருக்கிறது என்பதை நான் அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

அதைப் போலவே தமிழ்நாடு சிமெண்ட் அமைப்பைப் பொறுத்த வரைக்கும் 300 பேர்களுக்கு வேலை வாய்ப்புத் தரக்கூடிய அளவில் 10 கோடி ரூபாய் மூலதனத்தில், தமிழ்நாடு ஆஸ்பெஸ் டாஸ் சிமெண்ட், பிரஷ்ஷர் பைப்' என்ற அந்த அமைப்பை நிறுவி, அந்த பாகங்களைச் செய்ய நடவடிக்கை தற்போது மேற் கொண்டு வருகிறது.

அதுமட்டும் அல்லாமல் பாளையம் பகுதியிலே மேலும் ஒரு 40 கோடி ரூபாய் செலவில் மேலும் ஒரு புதிய சிமெண்ட் ஆலை ஒன்றை, தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் அமைத்து, அதன் மூலம் மேலும் ஒரு 1,300 பேர்களுக்கு வேலை வாய்ப்பு தரக்கூடிய

நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது. அதைப் போலவே சர்க்கரை தொழிற்சாலையைப் பொறுத்தவரைக்கும் மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகிறபோது சில தொழிற்சாலைகளில், சர்க்கரை ஆலைகளில் நிர்வாக அதிகாரிகள் செம்மையாக செயல்படுவதில்லை என்பதனை எடுத்துச் சொன்னார்கள். கண்டிப்பாக எங்கே யார் தவறு செய்தாலும், இந்த அரசு அதை கண்டு பிடித்து கடும் நடவடிக்கைகளை எடுக்கும் என்ற உத்திரவாதத்தை உறுப்பினர்களுக்கு நான் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சர்க்கரை தொழிற்சாலையைப் பொறுத்தவரைக்கும், சர்க்கரை ஆலைகளில் தற்போது கரும்புக்கு 160 ரூபாய் என நாம் கொடுத்து வருகிறோம். மைய அரசு கொடுக்கின்ற ரூபாய் 135. அத்தோடு மாநில அரசு 25 ரூபாய் சேர்த்து 160 ரூபாயாக நிர்ணயித்து That 160 rupees is again linked to the 8.5 percent recovery என்ற முறையிலே, எந்த அளவுக்கு கரும்பிலிருந்து சாறு வருகிறதோ, அந்த சர்க்கரை கிடைக்கின்ற அளவைக் கணக்கிலே கொண்டு, அந்தப் பணம் நிர்ணயம் செய்து, உழவர்களுக்கு தரப்படுகிறது. மேலும் உழவர்களுக்கு கரும்புக்கு விலையை ஏற்றுவது குறித்து மைய அரசோடு மாநில அரசு தொடர்பு கொண்டிருக்கிறது.

அதைப் போலவே மினரல் பேஸ்டு இன்டஸ்ட்ரியல் யூனிட்ஸ் Mineral Based Industrial units-ஐயும் தமிழகத்தில் அதிகமாக துவக்கக் கூட மாநில அரசு தக்க நடவடிக்கைகளை தற்போது எடுத்து வருகிறது. இதைப் பொறுத்த வரைக்கும் தமிழகத்தில் அதிக அளவில் தற்போது ஜிப்ஸம் கிடைக்கிறது. உப்பளத்திலும் ஜிப்ஸம் கிடைக்கிறது. அதைப் போலவே உரத் தொழிற்சாலைகளில், துணைப் பொருளாக, கழிவுப் பொருளாக ஜிப்ஸம் கிடைக்கிறது. இவற்றையெல்லாம் வைத்து Plaster of paris என்னும் தொழிற்சாலையை அமைக்க அரசு தற்போது நடவடிக்கை எடுத்து வருகிறது.

அதைப் போலவே கிராஃபைட் தமிழகத்தில் அதிகமாக உள்ளது. உலகத்தில் எந்தப் பகுதிகளிலேயும் இல்லாத அளவுக்கு மிக உன்னதமான, உயர்ந்த மதிப்புள்ள கிராஃபைட் முகவை மாவட்டத்தில் தற்போது கண்டு பிடிக்கப்பட்டு அங்கே அது பெனிபிகேஷன் என்று சொல்லப்படுகிற சுத்திகரிப்பு செய்வதற்கு ஏற்கெனவே கிட்டத்தட்ட 1½ கோடி ரூபாய் செலவில் அரசு நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறது.



அதிலேயிருந்து குருசிபிள்ஸ் என்று சொல்லக் கூடிய மூசைகள் தயாரிக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. அது மட்டும் அல்லாமல் டானிங் என்று சொல்லப்படுகிற அமைப்பின் மூலமாக இந்தியாவிலேயே மிக அதிகமான அளவிற்கு, உலகிலேயே மிக தரமான கிராபைட்டு என்று சொல்லக்கூடிய, முகவை மாவட்டத்திலிருந்து கிடைக்கிற அந்த கிராபைட்டை வைத்து எலக்ட்ரோல் என்று சொல்லப்படுகிற பொருள்களும், Heavy duty batteries for Automobile Industries and Railways-க்குத் தேவையானவைகளையும், அதைப் போலவே குருசிபிள்ஸ் லிண்ட் ஆர் ஸ்டாப்பர் என்று சொல்லப்படுகிற பொருள்களை யும், அதைப் போலவே லூப்பிரிகேஷன் பர்ப்பஸஸுக்காக பயன்படுத்தப்படுகிற கார்பன் வெப்ஸ் ஆகியவைகளையும் அங்கே உற்பத்தி செய்து, அதன் மூலமாக பலருக்கு வேலை வாய்ப்பை தரக் கூடிய வசதிகளையும் ஏற்பாடு செய்து, முகவை மாவட்டத்தினுடைய தொழில் வளர்ச்சிக்கு அதைப் பெரிதும் பயன்படுத்த அரசு தக்க நடவடிக்கைகளை தற்போது எடுத்து வருகிறது.

அதைப் போலவே தமிழகத்தில் அதிகமாகக் கிடைக்கிற குவார்ட்ஸ் அண்ட் பெல்ட்ஸ்பார் என்று சொல்லக் கூடிய கனிம வளங்களைக் கொண்டு, நாம் பல தொழிற்சாலைகளை நமது பகுதியில் அமைத்து அதன் மூலமாக பலருக்கு வேலை வாய்ப்புத் தரவேண்டும் என்ற முறையில் டானிங் என்ற அமைப்பை ஏற் படுத்த அரசு தக்க நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. தனியார் துறையிலே இது போன்ற குவார்ட்ஸ் அண்ட் பெல்ட்ஸ்பார் கனிமப் பொருளை வைத்து தொழில் துவக்க முன் வருபவர் களுக்கும் அரசு தக்க ஊக்கத்தை தரும் என்று சொல்லிக் கொள் கிறேன்.

அதைப் போலவே லைம்-ஸ்டோன் என்று சொல்லக் கூடிய நீர்த்த சுண்ணாம்பைப் பொறுத்த வரையில், தமிழகத்தினுடைய தொழில் வளர்ச்சிக்கு மிக அதிகமாகத் தேவைப்படுகிறது. அதை நாம் அதிகமாக பெறக் கூடிய நடவடிக்கைகளை தமிழக அரசு எடுத்து வருகிறது. தமிழகத்தில் திருச்சி மாவட்டத்தில், சேலம் மாவட்டத்தில் உள்ள பல பகுதிகளில் இருந்து, அவற்றை எடுத்து, பர்ன்ட் லைம் என்ற நீற்றுச் சுண்ணாம்பைத் தயாரிக்கிறார்கள். அது கிட்டத்தட்ட சிறு தொழிலாக, பலர் முன் வந்து துவக்குகிறபோது, தனியார் துறையைச் சார்ந்த சிறு தொழிலதிபர்கள் அதில் ஈடுபாட்டோடு முன்வருகிற அளவிற்கு, இதற்கு உற்சாகம் தரவேண்டும் என்று அரசு முடிவு எடுத்து, அந்த அடிப்படையில் அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ள இருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போலவே தற்போது களிமண் என்று சொல்லக்கூடிய 'கிளே' நிறைய கிடைக்கிறது. நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன், இந்த லிக்னைட்டை எடுக்கிறபோது, பெருமளவில் வேஸ்ட்டாக, எந்தப் பலனும் இல்லாத அளவுக்கு இந்தக் கிளே வேஸ்ட் செய்யப்படுகிறது. அதைப் பயன்படுத்தி ஒரு கிளேஸ்ட் டைய்ல்ஸ் பேக்டரி, அதைப்போலவே மொசைக் டைய்ல்ஸ், அதைப் போலவே சானிட்டரி பைப்ஸ் போன்ற பொருட்களை உருவாக்க தொழிற்சாலைகளையெல்லாம் அமைக்க அரசு தக்க நடவடிக்கைகளை தற்போது எடுக்க இருக்கிறது என்பதை நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 2-20)

இன்னும் முக்கியமான ஒன்று 'Mini Cement Plant' என்று சொல்லக்கூடிய சிறிய சிமின்ட் தொழிற்சாலைகள் தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் அமைக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிற காரணத்தினால் 'Mini-cement plants பொறுத்த வரைக்கும் பெரிய தொழிற்சாலைகளை தனியார் முன்வந்து போடமுடியாத நிலையில் பெரிய சிமின்ட் தொழிற்சாலைகளினுடைய விரிவாக்கங்களையெல்லாம் அரசே மேற்கொண்டு அல்லது தனியார் துறையினர் விரிவாக்கம் செய்கின்ற அதே நேரத்திலே Mini-cement plants in the privat sector is being encouraged by the State Government and also by the Central Govenment.

என்ற அந்த அடிப்படையில்' தற்போது திருச்சி மாவட்டத்திலே உள்ள அரியலூர் பகுதியிலும் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள நாங்குனேரி பகுதியிலும் கோவை மாவட்டத்திலே எட்டிமடைப் பகுதியிலும் மதுரை மாவட்டத்திலே மேலூர் பகுதியிலும் மதுரை பகுதியிலும் மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த திருமால் பகுதியிலும் மினி சிமின்ட் ஆலை போடக்கூடிய வாய்ப்பு இருக்கிறது என்று அரசு கண்டறிந்து இருக்கிறது. அந்தப் பகுதியிலே மினி சிமின்ட் ஆலை போட தனியார் துறைக்கு அரசு உற்சாகத்தைத் தரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சேலம் ஸ்டீல் பிளாண்ட் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். சேலத்திலே பெரிய அளவிலே உருட்டாலையாக, இல்லாமல் உருக்காலையாக இருக்க வேண்டுமென்று அதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமென்று சொன்



னார்கள். அந்த அடிப்படையில் மைய அரசோடு மாநில அரசு தொடர்ந்து தொடர்பு கொண்டு பெரிய அளவிலே கொண்டுவரவேண்டுமென்று' வற்புறுத்திவருகிறது. ஆனால் சேலம் பகுதியில் இருக்கிற இரும்பைப் பொறுத்தவரைக்கும் 'Low grade iron'

என்ற காரணத்தினால் 'economic viability'

இல்லை என்று சொல்லி மைய அரசு அதைத் தள்ளிப்போட்டு வருவதை இந்த அவை அறியும். ஆனாலும்கூட சேலம் மாவட்டம், வட ஆற்காடு மாவட்டம், கோவை மாவட்டம் ஆகிய பகுதிகளிலே கிடைக்கிற இரும்பை வைத்துக்கொண்டு நெய்வேலியிலே லிக்னைட்டைப் பயன்படுத்திக்கொண்டு

Sponge iron technology

என்று சொல்லக்கூடிய நவீன முறை மூலமாக low grade iron— கிட்டத்தட்ட 35 சதவீதம் சக்தி கிடைக்கிறது, என்று சொல்லக்கூடிய அந்த இரும்பை' 'sponge iron technology யை' பயன்படுத்துகின்றபோது from 80 to 90 per cent high grade iron என்ற முறைக்கு உயர்த்துகின்ற டெக்னாலஜி கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. தற்போது இந்தியாவில் சில பகுதிகளில் அது மேற்கொள்ளப்பட்டு வெற்றி கண்டிருக்கிறது.

Sponge iron technology என்ற டெக்னாலஜியை வைத்து தமிழகத்திலே 6, 7 மினி இரும்பாலைகள் போடக்கூடிய வாய்ப்பு இருக்கிறது என்பதை அரசு கண்டறிந்து இருக்கிறது. அதைப் பற்றி அரசு தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

அரசினுடைய பொறுப்பிலே இருக்கிற தொழில் அமைப்புகள் மூலமாகவும் அரசு உதவுகிற நிறுவனங்கள் மூலமாகவும் இதுகாறும் 15 லட்சத்து 38 ஆயிரம் பேர்கள் வேலை வாய்ப்புப் பெற்றிருக்கிறார்கள் என்பதை இருந்த அவைக்கு அறிவிப்பது என்னுடைய கடமை.

[திரு. சி. பொன்னையன்] [1984 மார்ச் 24

அதைப்போலவே Agro-based industries என்று சொல்லக்கூடிய தொழில்களையெல்லாம் ஊக்குவிக்கின்ற முறையிலே அரசு தீவிர திட்டத்தைக் கொண்டுவர இருக்கிறது. குறிப்பாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் கூட சொன்னார்கள். விவசாயத்தில் வேலைவாய்ப்பைப் பெறக்கூடிய வாய்ப்பு இல்லாத நேரத்திலே தொழிலை விரிவாக்குகிற போது வேலைவாய்ப்பை உருவாக்கமுடியும். வேலைவாய்ப்பு உருவாக்க மக்கள் தொகை அதிகமாக இருக்கிற நம்முடைய நாட்டில், small-scale industrics தேவை 'Major and large-scale industri s தேவை.' இந்த 3 வித அமைப்புகளுக்கும் ஊக்கம் தர வேண்டியது அரசின் கடமை. ஆனால் தமிழகத்தைப் பொறுத்த வரையில் 'Agro-based industrial activities' மிகக் குறைந்த அளவே இருக்கிற காரணத்தினால் அதை ஒரு தீவிரத் திட்டத்தின் கீழ் உருவாக்கி அதன் மூலமாக கிராமப் புறங்களிலே வேலைவாய்ப்புப் பெருக்குவதற்காக அரசு தக்க நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறது. அதிலும் குறிப்பாக உதாரணமாக ஜவ்வரிசி தொழிற்சாலைகள் சேலம் வட ஆற்காடு, தர்மபுரி மாவட்டங்களில் மிக அதிகமாக இருக்கிறது.

'That is not being reserved for small scale industris by the Government of India.'

இந்த நேரத்திலே ஒரு தனி நபர் பிரைவேட் இண்டஸ்ட்ரி பல கோடி ரூபாய் மூலதனத்தில் ஒரு தொழிற்சாலை அமைத்தாலும் கிட்டத்தட்ட 1,200 சிறு ஜவ்வரிசி தொழில்கள் நசிந்துவிடக் கூடிய நிலையும் அதனால் லட்சக்கணக்கான பேர்களுக்கு வேலைவாய்ப்புக் கிட்டாமல் போய்விடும் என்ற காரணத்தினாலும் மாநில அரசு மைய அரசோடு தொடர்புகொண்டு இந்தியாவிலேயே கிட்டத்தட்ட இரண்டாவது நிலையிலே ஜவ்வரிசி தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிற தமிழகத்திற்கு

'This industry should be exclusively reserved only for small scale industries, and not for major or large-scale industries'

என்ற முறையில் மாநில அரசு மைய அரசை வற்புறுத்தி வருகிறது.



1984 மார்ச் 24] [திரு. சி. பொன்னையன்]

(This is not being reserved for smale scale industries.)

அந்த அடிப்படையில் Sago- based industries. ஒட்டி பல தொழிற்சாலைகள் தமிழகத்தில் உருவாக்குவதற்குக்கூட அரசு தக்க நடவடிக்கைகள் எடுக்க ஒரு திட்டத்தை தீட்டி வருகிறது. அதன் மூலமாக 'Liquid glucos, Dextrose, Manchyd-rate, Ethyl Alcohol, Parbidcone. Acid Lactic' ஆகியவற்றை எல்லாம் தயாரிக்க. 'Central Food Research Technological Institute of India, Mysore, அதன் மூலமாக ஆராய்ந்து அதை தமிழகத்தில் ஏற்படுவதற்கு நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. அதைப் போலவே மத்திய அரசின் அமைப்பான

Manufacture of Aromatic and Medical Institute

பல ஆய்வுகளைச் செய்து மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதைப் போல் கர்நாடக மாநிலத்தில் விவசாயத்தை ஒட்டிய தொழில் வளர்ச்சிக்கு உதவி இருக்கிற அதேநேரத்தில் அது தமிழகத்தில் கிராமத்தில் நீட்டிக்கவேண்டும் என்ற முறையில்

Manufacture of Aromoic things like

Famorasa, Citrnella, Lemon Grass, Jasmine oil

போன்ற aromatic பிளான்ட்ஸ் எல்லாம் இங்கே அதிகமாக வருவதற்கும் அதை ஒட்டி தொழில் துவங்குவதற்கு ஏற்கனவே அரசு நடவடிக்கைகள் மேற்கொண்டு இருக்கிறது. அதை விரைவில் நடைபெறுவதற்கும் கிராமத் தொழில் மூலமாக வேலைவாய்ப்புகள் பெருகுவதற்கும் அரசு நடவடிக்கைகள் எடுக்க இருக்கிறது என்பதையும் நான் சொல்ல விரும்புகிறேன். Forest based Industries அதிகம் தேவை என்ற ஒரு முறையில் அரசு நடவடிக்கைகளில் மேற்கொண்டிருக்கிறது. மத்திய அரசு பேப்பர் தொழிற்சாலையைப் பொருத்தவரைக்கும் அந்த மர பல்ப் என்று சொல்லக் கூடிய அந்த பொருட்கள் நேரடியாக வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யலாம். அதற்கு இம்போர்ட் டூட்டி கூட கிடையாது என்று அறிவிப்பைச் செய்து இருக்கிற காரணத்தால் தற்போது மரங்கள் அந்த பணிக்கு வெட்டப்பட்டு cologoial condition) மாறுகின்ற ஒரு நிலையில் இருந்து மாற்றம் பெற வாய்ப்பு இருக்கிறது. ஆனால் அதேநேரத்தில் வனங்களிலிருந்து கிடைக்கக்கூடிய பல பொருட்களை வைத்துக் கொண்டு (chemical tannings, opthalic acid, Briquetting units),

[திரு. சி. பொன்னையன்] [1984 மார்ச் 24

ஆகிய தொழிற்சாலைகளை துவக்க அரசு நடவடிக்கைகள்
எடுக்க இருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப் போலவே உப்புத் தொழிலிலிருந்து உப்பைப் பயன்
படுத்தி உப்பளங்களை விரிவாக்க நடவடிக்கைகள் எடுக்கிறோம்
என்று மாண்புமிகு உறுப்பினர்கள் அப்பாதுரை அவர்களும்
வெங்கடேசன் அவர்களும் சொன்னார்கள் அப்படி அல்ல.
உப்புத் தொழிலை மேலும் வளர்ச்சிப் பெறவேண்டும் என்றால்
வெறும் உப்பை எடுத்து அதை விற்றுக்கொண்டு இருக்கிற
காரணத்தால் நமக்கு வளர்ச்சி வராது. Salt-based industries
Using salt as raw materials few industries can be started.
துவக்கவேண்டும் என்பது தான் அரசினுடைய கொள்கை. அப்படி
துவக்கும்போது கண்டிப்பாக இதில் லாபம் வரும். வேலைவாய்ப்பு
அதிகமாக பெறக்கூடிய வாய்ப்புகள் இருக்கிறது. எனவே அந்த
அடிப்படையில் Potash alumn, Pottasium sonite, Magnesium
Carbonate Bromine போன்ற பொருட்களை எல்லாம் செய்யக்கூடிய
தொழிற்சாலைகள் நிறுவுவதற்கு அரசு விரைவில் நடவடிக்கை
களை மேற்கொள்ள இருக்கிறது என்பதை நான் இந்த அவைக்கு
கூறிக்கொள்ள விரும்புகிறேன். அதைப் போலவே (Dye stuff
industries) மிக முக்கியமானதை பெறவேண்டும் என்ற முறையில்
நூற்பாலைகளுக்கு தேவைப்படுகிறது, தோல் பதனிடும்
ஆலைகளுக்கு தேவைப்படுகிறது. அதே பொருட்கள் பிரிண்ட்
இங்க் பேப்பர் ஆகியவற்றிற்கு எல்லாம் சாயம் தேவைப்படுகிற
காரணத்தால் சாயத் தொழிலுக்கு தமிழகத்தில் அதிகமான
வாய்ப்பு இருக்கிறது. தமிழகத்திற்கு தேவையான சாயப்
பொருட்களைப் பொறுத்தவரைக்கும் 100 சதவீதத்தில் 5 சத
வீதம் தான் இங்கே உற்பத்தி ஆகிறது. மீதம் உள்ள 95
சதவீத சாயப் பொருட்கள் தமிழகத்தில் உற்பத்தி ஆகவில்லை.
மராட்டிய மாநில பகுதிகளிலிருந்து நாம் இவற்றை எல்லாம்
தற்போது இறக்குமதி செய்துக்கொண்டு இருக்கிறோம். அந்த
நிலையை போக்குவதற்கு இங்கே உற்பத்திக்குவாய்ப்பு இருக்கிற
காரணத்தால் (T xtile, le ther, printing and paper industry-க்கு
தேவைப்படுகிற அந்த டை ஸ்டப்பை தமிழகத்தில்
உற்பத்திச் செய்வதற்கு அரசைப் பொறுத்தவரைக்கும் அங்கே
விரிவான துரித நடவடிக்கையை பூர்வாங்க நடவடிக்கையை
தமிழக அரசு மேற்கொள்ள இருக்கிறது என்பதை
தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப் போலவே நமக்குத் தேவையான மருந்துகள் பொறுத்
வரைக்கும் (Drugs and pharmaceuticals) நமக்குத் தேவை
யான மருந்துகளில் கிட்டத்தட்ட 50 சதவீத்திற்கு மேல்
வெளி பகுதிகளிலிருந்து நாம் கொண்டு வரவேண்டிய நிலையில்



1984 மார்ச் 24] [திரு. சி. பொன்னையன்]

இருக்கிறோம். ஆனால் அந்த தொழிற்சாலைகளை தமிழகத்தில்
ஊக்குவிக்க உற்பத்திச் செய்ய வசதி இருக்கிற காரணத்தால்தான்
தமிழகத்தில் எந்தப் பகுதியில் (Drugs and ph rmac uticals
industry schedule drug) ஆரம்பித்தாலும் அவர்களுக்கு 10
சதவீதம் ஸ்பெசல் சப்ஸிடி என்ற முறையில் நாம் அறிவித்து
இருக்கிறோம். அந்தப் பொருட்களை அதிகப்படியாக உற்பத்திச்
செய்ய தொழிற்சாலைகளை துவக்குவதற்கு இந்த அரசு தக்க
நடவடிக்கைகளை விரைவில் எடுக்க இருக்கிறது என்பதையும்
நான் சொல்ல விரும்புகிறேன்.

அதைப் போலவே Electronic based industry வருங்
காலத்தில் அதிகப்படியான வேலைவாய்ப்பை மக்கள் பெறு
வதற்கும் மற்ற வளர்ந்து விட்ட நாடுகளோடு போட்டிப்போட்டு
நாம் எல்லா துறைகளிலும் முன்னேறுவதற்கும் (Fillip to
elec ronic industry is an imperative one) அந்த எலக்ட்ரானிக்ஸ்
இன்டஸ்டிரிஸ் முன்னேற்றத்தைப் பெற வேண்டும்.

(பிற்பகல் 2--30)

அதற்கு இந்த அரசு தக்க நடவடிக்கைகளைத் தற்போது எடுத்
திருக்கிறது. எல்காட் மூலமாக நாம் பல நடவடிக்கைகளை
மேற்கொள்ளவிருக்கிறோம். ஆனால் எல்லாத் தொழில்களையும்
எல்காட்டே துவங்க வேண்டுமென்றால், பணத் தட்டுப்பாட்டால்
முடியாது என்பதால், ஜாயின்ட் செக்டாராக, எலக்ட்
ரானிக் இன்டஸ்ட்ரியல் ஆக்டிவிட்டீஸை உயர்த்த வேண்டு
மென்ற முறையில் நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம்.
எலக்ட்ரானிக் புராடக்ட்ஸைப் பொறுத்தவரையில் தற்போது
கர்நாடகத்தில் 44 சதவீதமும், மகாராஷ்டிராவில் 24 சத
வீதமும், உத்தரப் பிரதேசத்தில் 12 சதவீதமும், ஆந்திராவில்
6 சதவீதமும் இருக்கின்றபொழுது தமிழ்நாட்டில் மட்டும்
வெறுமனே 2.5 சதவீதம்தான் இருக்கிறது. இங்கே நிறைய
வாய்ப்பிருக்கிறது, வேலைவாய்ப்பும் இருக்கிறது் என்பதால்
இந்தத் தொழிற்சாலைகள் தமிழ்நாட்டில் அதிகமாக வரவும்,
அதையொட்டிப் பல்வேறு பொருட்களைச் செய்யவும் இந்த
அரசு தக்க நடவடிக்கைகளை எடுக்கிறது என்பதை நான்
சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போலவே, Cncillarisat on-ஐப் பொறுத்த
வரையில், பெரிய தொழிற்சாலையை ஒட்டிய சிறு தொழிற்
சாலைகளின் வளர்ச்சிதேவை. ஏன் பெரிய தொழிற்சாலை, பெரிய
தொழிற்சாலை என்று நாம் சொல்கிறோம். பெரிய தொழிற்
சாலைகள் மிகவும் இன்றியமையாத ஒன்று. மேஜர் இன்டஸ்
ட்ரீஸ் வரும்பொழுது அதையொட்டி வரயிருக்கின்ற வேலை
வாய்ப்பு பெருக வாய்ப்பிருக்கிறது. ஆனால், Ancillary industries

பொறுத்தவரைக்கும் நம்முடைய தமிழ் நாட்டில் டெக்னாலஜி ஓல்டாக இருப்பதால், மற்ற மாநிலங்கள் நம்மைவிட முந்துகின்ற முறையில் இருக்கின்றன. (Ancillary industries Enterpreneurs) அவர்களுடைய தொழில் நுணுக்கத்தை (upgrady) செய்ய மாநில அரசு எல்லா ஊக்கத்தையும் தருவதற்கு நடவடிக்கையெடுக்கும் என்பதையும் நான் சொல்ல விரும்புகிறேன்.

திரு. ப. நெடுமாறன் : சிறுதொழில் அதிபர்களுக்கு எல்லா விதமான உதவிகளையும் அரசு செய்யும் என்று சொன்னார்கள் நான் அதை வரவேற்கிறேன். மத்திய அரசு போட்டிருக்கின்ற உத்தரவின்படி, முப்பது கோடி ரூபாய்க்கு மேல் போனால் தடை என்று இருக்கிறது. ஒரு மாவட்டத்திலே அப்படித் தொழில் வளர்ச்சி இருக்கும்பொழுது 30 கோடி ரூபாய் முதலீடு என்று வந்து விட்ட பிறகு, (Ancillary industries) வளர்வதற்குத் தடையாக, முட்டுக்கட்டையாக இந்த உத்தரவு இருக்குமே, அதை அப்புறப்படுத்துவதற்கு நீங்கள் முயற்சி செய்யப் போகிறீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்வது நியாயமான ஒன்று. ஒரு பெரும் தொழிற்சாலை, லார்ஜ் ஸ்கேல் இன்டஸ்ட்ரீ வந்தால் அதையொட்டி சிறு தொழிற்சாலைகள் வருவது என்பது தவிர்க்கப்பட முடியாத ஒன்று; தேவையான ஒன்றும்கூட, மைய அரசின் கொள்கையும் அதுதான். ஆனால் தற்போது மைய அரசைப் பொறுத்தவரைக்கும் இதுபோன்ற சில தடைக் கற்களைக் கொண்டு வருகின்றபொழுது, சிறு தொழில் வளர்ச்சிக்கு மிகவும் குந்தமாக அமைந்து விடும் என்ற எண்ணம் அரசுக்கு இருக்கிறது. இதைப்போக்குவதற்கு மைய அரசோடு தொடர்பு கொண்டு இது குறித்து தக்க நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போல, மாநில அரசைப் பொறுத்தவரைக்கும், நாம் உற்பத்தி செய்யும் பொருட்கள், அதாவது ரா மெட்டீரியல்ஸ் இருக்கிறதே அதை அப்படியே ஏற்றுமதி செய்கிறோம், பணம் வருகிறது, பாரின் எக்சேஞ் வருகிறது என்ற திருப்தியோடு நின்று விடுகிறோம். அது போதுமானது அல்ல.





நம்மிடத்திலே ரா மெட்டீரியல்ஸ் இருக்கிறது என்றால் காரணம். உதாரணத்திற்கு தர்மபுரி மாவட்டத்தில் இருந்து ஜவ்வரிசி எங்கே, எதற்காகச் செல்கிறது என்று தெரியாது. ஆனால் ஜவ்வரிசி வடபுலத்திற்குச் சென்று அதைக் கொண்டு அவர்கள் பொருட்களாக உற்பத்தி செய்கிறார்கள். எனவே, குச்சிக் கிழங்கு மாவிலிருந்து பல பொருட்களை உற்பத்தி செய்கின்ற வாய்ப்பைக் கண்டறிந்து, அந்த ரா மெட்டீரியல்ஸ் மூலம் என்ட் ப்ராடக்ட்ஸ் செய்ய முயன்றால்தான் நாம் தொழில் துறையில் முன்னேற முடியும். அதன் மூலம் நம்முடைய மாநிலத்தில் வருவாயையும் பெருக்க முடியும். அதே நேரத்தில் வேலை வாய்ப்பையும் பரவலாக உயர்த்த முடியும் என்ற முறையில், Valu Oriented industrial Products பொறுத்தவரைக்கும் நடவடிக்கை எடுக்கிறது.

கும்மிடிப்பூண்டி இண்டஸ்ட்ரியல் காம்ப்ளக்சில் Automobile and Engineering-Engineering concept என்பதை முன்வைத்து அதற்கு வேண்டியதற்கு உற்சாகப்படுத்துகிறோம் கடலூர்—Chemical and Processing industry உற்சாகப்படுத்துறோம். புதுக்கோட்டையில் Electronic industry உற்சாகப்படுத்துகிறோம். மானாமதுரையில் Potteries industry உற்சாகப் படுத்துகிறோம். தூத்துக்குடியில் Sal and salt basd industry உற்சாகப்படுத்துகிறோம்.

இதுபோன்ற முறையில் நாம் பிரச்சினைகளை அணுகுகின்ற பொழுதுதான் வேலை வாய்ப்பையும், மாநில வருவாயையும், பெருக்குவதற்கு வசதியிருக்கிறது என்பதால் இந்த முறையில் இந்த அரசு பிரச்சினைகளை அணுகுகிறது.

இன்னொரு முக்கியமான விஷயம் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். நம்மைப்போலவே ஒவ்வொரு மாநிலமும் தொழில் துறையில் போட்டியிடுகிறது. வளர்ந்துவிட்ட விஞ்ஞான ரீதியான தொழில் நுணுக்கத்தைப் பெற்று, மத்திய அரசினுடைய உதவியைவைத்து பல மாநிலங்கள் குறிப்பாக வடபுலத்து மாநிலங்கள் எல்லாம் முன்னுக்கு வருகின்றபோது நாம் பின்னோக்கித் தங்கி விடக்கூடாது என்ற காரணத்தினால்தான் ஏற்கெனவே இருக்கிற தொழிற்சாலைகளில் உள்ள தொழில் நுணுக்கத்தை அதாவது டெக்னாலஜியை அவர்கள் உயர்த்தவேண்டும் என்ற முறையில் Gap should be got over என்ற முறையில் நடவடிக்கை எடுத்து வருகிறோம். இந்த அரசைப் பொறுத்தவரையில் Prodution of specified components என்ற வகையில் எந்த ஒரு பொருளை உற்பத்தி செய்தாலும் அதற்கு வேண்டிய ஆலோசனைகளை நல்குவதிலிருந்து Up gradation of man power

என்ற முறையில் அந்தத் தொழில் நிறுவனத்தினுடைய திறனை உயர்த்துவதில் இருந்து க்வாலிட்டி கன்ட்ரோல் போன்றவற்றில் எல்லாம், ரிசர்ச் அன்ட் டெவலப்மெண்ட் ஃபெசிலிடிஸ் என்ற வசதிகளை எல்லாம் அளித்து மாநில அரசு உற்சாகத்தைத் தர வேண்டும் என்ற முறையில் நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பேசினார்கள். மத்திய அரசின் முதலீடு 8 சதவீதத்திலிருந்து கிட்டத்தட்ட 4 சதவீதமாகக் குறைந்துவிட்டது என்று சொன்னார்கள். அது உண்மைதான். ஆகவே அதைச் சொல்வதில் தவறில்லை என்று கருதுகிறேன். 1967-க்குப் பின்னால் இராணிப்பேட்டையிலே 32 கோடி ரூபாய் செலவில் பெல்ஸ் பாய்லர் அக்ஸிலியரிஸ் ப்ராஜக்ட் நிறுவப்பட்டது. அதைப்போலவே சேலம் இரும்பாலைக்கு 167 கோடி ரூபாயில் திட்டமிட்டு நிறுவப்பட்டது. இப்போது அண்மையிலே திருச்சியிலே யுத்த தளவாடங்கள் தயாரிக்கும் ஒரு தொழிற்சாலைக்காக 70 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே, இவை தான் சென்ட்ரல் இன்வெஸ்ட்மென்ட் இன் தமிழ்நாடு என்ற அளவில் இருக்கின்றது. இந்த நிலைமையை நாம் மாற்றவேண்டும் என்பதில் இந்த அரசு அக்கறையாக இருக்கின்றது.

இன்னும் குறிப்பாகச் சொல்லவேண்டும் என்றால், ஆட்டோமொபைல் இன்டஸ்ட்ரியில் தமிழ்நாடு தான் முன்னணியில் இருக்கின்றது. அவ்வாறு ஆட்டோமொபைல் இன்ட்ஸ்ட்ரியில் தமிழ்நாடு முன்னணியில் இருக்கின்ற காரணத்தால் அதையொட்டிய ஆன்சிலரி காம்போனன்ட்ஸ் மேனுஃபாக்சரிங் இன்டஸ்ட்ரீஸ் பல பரவலாக தமிழ்நாட்டிலிருக்கின்றன. ஆகவே வடபுலத்தில் இருந்து தமிழ்நாட்டிலுள்ள மூலை முடுக்களுக்கு எல்லாம் வந்துதான் இந்தப் பொருட்களை வாங்கவேண்டி இருக்கின்றது. இந்தச் சூழ்நிலையில் ஆன்சிலரி இன்டஸ்ட்ரீஸ் இருக்கின்றன. அதையொட்டி இலட்சக்கணக்கான பேர் வேலைவாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள். ஆனால் அண்மையிலே மத்திய அரசு எடுத்த சில கொள்கைகளின் முடிவுக்கேற்ப பல தொழிற்சாலைகள் வடபுலத்திலே தான் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

ஷிரோ—ஹோண்டாடை-அப் என்ற ஒரு மோட்டார் சைக்கிள் செய்யக்கூடிய தொழிற்சாலையை வடபுலத்திற்குத் தந்திருக்கின்றார்கள். அதைப் போலவே கினட்டிக்—ஹோண்டா ஃபார் ஸ்கூட்டர்ஸ் என்ற அமைப்பையும் அங்கே தந்துவிட்டார்கள். லோகியா—பியாஜியோ ஃபார் ஸ்கூட்டர்ஸ் என்ற அமைப்பையும் அங்கேதான் தந்துவிட்டார்கள். எஸ்கார்ட்ஸ்-யாமஹா ஃபார் மோட்டார் சைக்கிள்ஸ் என்ற அமைப்பையும் அங்கேயே தந்துவிட்டார்கள். டீ. சி. எம்.—டோயட்டா





ஃபார் எல். சி. விஸ் என்ற லைட் கமர்ஷியல் வெகிக்கிள் செய்யக்கூடிய அமைப்பையும் வடபுலத்திற்குத் தந்துவிட்டார்கள். எய்ச்சர் மிட்சுபிஷி என்ற அமைப்பின் மூலமாக ஒரு லைட் கமர்ஷியல் வெகிக்கிள் செய்யக்கூடிய அமைப்பையும் வடபுலத்திற்குத் தந்துவிட்டார்கள். ஆல்வின் மூலமாக ஒரு லைட் கமர்ஷியல் வெகிக்கிள் செய்யக்கூடிய அமைப்பையும் அங்கே வடபுலத்திற்குத் தந்துவிட்டார்கள். பஞ்சாப் ட்ராக்டர்ஸ்—மாஸ்டா ஃபார் எல். சி. விஸ் என்ற ஒரு லைட் கமர்ஷியல் வெகிக்கிள் செய்யக்கூடிய அமைப்பையும் அங்கேதான் தந்துவிட்டார்கள். நான் இதை எல்லாம் சுட்டிக்காட்டுவதற்குக் காரணம் தற்போது இந்தியாவிலே கிட்டத்தட்ட 11 ஆட்டோமொபைல் இன்ட்டஸ்ட்ரீஸ் அது ஸ்கூட்டராக இருந்தாலும், மோட்டார் பைக்காக இருந்தாலும், அல்லது மற்ற கமர்ஷியல் வெகிக்கிளாக இருந்தாலும் அண்மைக்காலத்திலே அவற்றைத் தயாரிப்பதற்கான உரிமங்களை எல்லாம் வடபுலத்திலே தந்துவிட்டார்கள். அப்படி அங்குதான் அந்தத் தொழிற்சலைகளை நிறுவவேண்டும் என்ற ஒரு முடிவை மத்திய அரசு எடுத்திருக்கின்ற காரணத்தால் தமிழகத்திலே இருக்கின்ற ஆன்சிலரி இன்ட்ஸ்ட்ரீஸ் பெரிதும் பாதிக்கப்படக்கூடிய ஒரு துரதிஷ்டவசமாக நிலைமை ஏற்பட்டு இருக்கின்றது.

எனவே மைய அரசோடு மாநில அரசு தொடர்பு கொண்டு ஆட்டோமொபைல் இன்ட்ஸ்ட்ரீஸில் தமிழகம் தொடர்ந்து முக்கியத்துவம் தரப்படவேண்டும் என்ற முறையில் இந்த அரசு தக்க நடவடிக்கைகளைத் தொடர்ந்து எடுக்கும் என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

அதைப்போலவே ஹிந்துஸ்தான் ஃபோட்டோ ஃபிலிம் பற்றி பலமுறை உறுப்பினர்கள் சொல்லி இருக்கிறார்கள். பலமுறை நாம் மத்திய அரசை வற்புறுத்தி வந்தோம். அதனை யு.பி-க்குத் தான் தரவேண்டும் என்ற முடிவை எடுத்தார்கள். தற்போது யு. பி-க்கும் இல்லை என்ற முடிவை எடுத்திக்கிறார்கள். ஆனால் தொழிற்சாலையினுடைய அனுகூலம் கருதி அது ஊட்டியிலே தான் இருக்கவேண்டும் என்று மத்திய அரசை மீண்டும் நாம் வற்புறுத்தி வருகிறோம்.

மெட்ராஸ் ரீஃபைனரிஸைப் பொறுத்தவரையில் 280 கோடி ரூபாய் செலவில் உற்பத்தித் திறனை இரட்டிப்பாக விரிவாகக் வேண்டும் என்ற திட்டத்தை அவர்கள் தற்போது மேற்கொண்டு இருக்கிறார்கள். அதைப்போலவே இந்துஸ்த்தான் டெலிபிரிண்டர்ஸ் நிறுவனம் ஆண்டு ஒன்றுக்கு 15,000 அச்சு இயந்திரங்கள் ரூபாய் 3.95 கோடி செலவில் கிண்டியில் தயாரிக்கும் விரிவாக்கத் திட்டம் ஒன்றையும் அவர்கள் நடைமுறைக்குக் கொண்டுவர இருக்கிறார்கள் என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

[திரு. சி. பொன்னையன்] [1984 மார்ச் 24

அடுத்து மெட்ராஸ் ரிஃபைனரிஸை ஒட்டி பெட்ரோ கெமிக்
கல்ஸ் காம்ப்ளக்ஸ் வரவேண்டும் என்று மத்திய அரசிடம் நாம்
வற்புறுத்திக்கொண்டு வருகிறோம்.

(பிற்பகல் 2-40)

அவர்கள் இன்னும் அதற்குச் செவி சாய்க்கவில்லை. செவி
சாய்ப்பார்கள் என்ற நம்பிக்கையோடு இந்த அரசு இருக்கிறது
என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போல மைய அரசு இன்வெஸ்ட்மென்ட் இங்கே
அதிகமாக வர வேண்டுமென்பதற்குப் பல நடவடிக்கைகளை
மைய அரசை வற்புறுத்தி மாநில அரசு மேற்கொண்டிருக்கிறது.

பெட்ரோ கெமிக்கல் காம்ப்ளெக்சைப் பொறுத்த வரையில்
மெட்ராஸ் ரிபைனரீஸை ஒட்டி ஒரு பெட்ரோ கெமிக்கல் காம்ப்
ளெக்ஸ் பெரிய அளவில் வர வேண்டுமென்று மைய அரசுக்கு
மாநில அரசு பலமுறை வற்புறுத்தி இருக்கிறது.

அதைப் போலவே, இரண்டாவது பெரிய மேஜர் ஹார்பரான
தூத்துக்குடிக்குப் பக்கத்திலே ஒரு பெட்ரோ கெமிக்கல் காம்ப்
ளெக்ஸ் வரவேண்டுமென்றும் அதற்கு மைய அரசு நடவடிக்கைகள்
எடுக்க வேண்டுமென்றும் அப்படி அதைச் செய்கிறபொழுது
பெட்ரோ கெமிக்கல் காம்ப்ளெக்ஸை ஒட்டி பல தொழிற்சாலை
களை உருவாக்கி தொழில் துறையில் தமிழகம் மிகவும் முன்னனி
நிலைக்கு வரக்கூடிய வாய்ப்பிருக்கிற காரணத்தால், -விரைவு
நடவடிக்கையாக மைய அரசு இதற்குச் செவி சாய்க்க வேண்டு
மென மைய அரசை மாநில அரசு வற்புறுத்தும் என்பதை நான்
தெரியபடுத்துகிறேன்.

எலெக்டிரிசிட்டி போர்ட் பொறுத்தவரையிலும் எந்த அள
வுக்கு Power is an imperative basic necessity for industrial development in the State.

என்று சொன்னார்கள். மாநில அரசைப் பொறுத்தவரையில்
நமக்குப் புனல் மின்சாரம் அதிகமாகக் கிட்டக்கூடிய வாய்ப்பு
இல்லாத நேரத்தில் அனல் மின்சாரத்தை எப்படிப் பெருக்குவது
என்பதில் அதிகப்படியான நடவடிக்கையை அக்கறையாக ஏற்
கனவே எடுத்து இருக்கிறார்கள். ஏற்கனவே இதுகுறித்து மின்
அமைச்சர் அவர்கள் கூட அவைக்குத் தெரிவித்து இருக்கிறார்
கள். அவர்கள் தற்போது பல்வேறு திட்டங்களை நடை
முறைக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். தற்போது கிட்டத்
தட்ட 2,000 மெகாவாட் மின்சார உற்பத்தி அளவைத் தமிழகம்
எட்டியிருக்கிறது. தொழிற்சாலைகளுடைய வளர்ச்சியைக்
குறித்து தக்க நடவடிக்கைகளை மின்துறை மேற்கொண்டு ஊக்
கத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த ஊக்கம்



1984 மார்ச் 24] [திரு. சி. பொன்னையன்]

தொடர்ந்து கிட்டக்கூடிய அளவிற்கு ஏற்கனவே மின்சார வாரி
யத்தால் மேற்கொள்ளப்பட்டிருக்கிற பல "On Going Schemes"
விரைவில் முடிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.
Mettur Thermal Exp n on Scheme என்ற ஸ்கீம் 420 மெகாவாட்,
Mettur Thermal E t n ion scheme.

420 மெகாவாட், அதே போல் Mettur Hydropower

மூலமாக 120 மெகாவாட், Servalar River Water Scheme.

மூலமாக 20 மெகாவாட், Tuticorin Thermal St t on.

மூலமாக 420 மெகாவாட், தமிழக அரசினுடைய மின் துறையி
னுடைய முயற்சியினால் இந்த உற்பத்தியினுடைய உயர்வு விரை
வில் கிட்டக்கூடிய நிலை இருக்கிறது என்பதையும் நான் எடுத்துச்
சொல்ல விரும்புகிறேன்.

நெய்வேலி லிக்னைட்டைப் பொறுத்தவரையிலும் அவர்கள்
செகன்ட் மைன் கட்டிலே கிட்டத்தட்ட 240 மெகாவாட் உற்பத்தி
செய்திருக்கிறார்கள். அதிலே 40 சதவீதம்தான் மாநில அர
சுக்கு உண்டு என்று சொல்லியிருக்கிறார்கள். அது கூடாது,
அதிகமாகத் தர வேண்டும், முழுவதும் தர வேண்டுமென்ற
கோரிக்கையை, பற்றாக்குறை மாநிலமாக தமிழகம் இருக்கிற
காரணத்தால், முழுவதும் தர வேண்டுமென்ற கோரிக்கையை
மாண்புமிகு மின் அமைச்சர் அவர்கள் மைய அரசிடம் வற்புறுத்தி
வருகிறார்கள் என்பதையும் நான் சொல்ல விரும்புகிறேன்.

அது மட்டுமல்லாமல், கல்பாக்கத்திலே இருந்து கிடைக்கிற
மின்சாரத்தைக் கூட முழுவதும் தமிழகத்திற்குத் தரவேண்டு
மென்றும் மைய அரசை மாநில அரசு தொடர்ந்து வற்புறுத்தி
வருகிறது என்பதையும் நான் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் Generating Power
through natural process. These feasibility should be attempted by the
State Government என்று சொன்னார். அதற்கு ஏற்கனவே பல
நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டிருக்கிறது. தனியாருக்கும்
மின்சாரம் உற்பத்தி செய்ய முன்வருகிறபொழுது, இந்த அரசு
எல்லாவித வசதிகளும் செய்து தரும் என மாண்புமிகு மின்
அமைச்சர் அவர்களும் அரசும் அறிவித்து இருக்கிறது. அந்த
அடிப்படையில் தனியாரும் முன் வந்திருக்கிறார்கள்.

பாம்பேஹையைப் பொறுத்தவரையிலும் அங்கே கிடைக்கிற
நாச்சுரல் கேஸ் பெர்ட்டிலைசர் காம்ப்ளெக்சுக்குப் பயன்படுத்
தப்பட வேண்டுமென வட புலத்திலே இருக்கிற சில மாநிலங்
களுக்கு அது தேவை என்ற முறையில் மைய அரசு தன்னுடைய
அணுகு முறையை ஏற்கனவே மேற்கொண்டிருக்கிறார்கள்.

[திரு. சி. பொன்னையன்] [1984 மார்ச் 24

ஆனால், தமிழகத்திற்கு அந்த பாம்பே ஹையில் இருக்கிற
நேச்சுரல் கேஸ் தரப்பட வேண்டுமென்ற கோரிக்கையை நாம்
வற்புறுத்தி இருக்கிறோம். சில தனியார்கள் முன் வந்தி
ருக்கிறார்கள். மைய அரசிடமிருந்து தாங்கள் எப்படியும் அனு
மதியைப் பெற்று, நாங்கள் தமிழகத்தில் பம்பாயில் கிடைக்கிற
நேச்சுரல் காஸைப் பயன்படுத்தி, 1000 மெகாவாட் வரைக்கும்
எலெக்ட்ரிசிட்டி ஜெனரேஷன் ஏற்பாடு செய்ய முன் வரமுடியும்
என்று சொல்லியிருக்கிறார்கள். மாநில அரசைப் பொறுத்த
வரைக்கும் மைய அரசுக்குப் பரிந்துரை செய்யும் என்றும் எல்லா
வித வசதிகளை செய்து தரும் என்றும் மின் உற்பத்தியை அதிகப்
படுத்துவதுதான் எங்களுடைய முக்கிய நோக்கமாகும் என்றும்
நாங்கள் வெளிப்படையாக அவர்களுக்குச் சொல்லியிருக்கி
றோம் என்பதையும் நான் கூறவிரும்புகிறேன்.

அது மட்டுமல்லாமல் காப்டிவ் பவர் ஜெனரேஷன் என்ற
முறையிலே இன்டஸ்ரியல் எஸ்டேட் எங்கெங்கெல்லாம் இருக்கின்
றதோ, அங்கெல்லாம், தொழில் அதிபர்கள் ஒருங்கிணைந்த
மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடிய நடவடிக்கையை மேற்
கொள்வார்களானால் அவர்களுக்கு எல்லா ஊக்கத்தையும் உற்
சாகத்தையும் தந்து, சில சலுகைகளையும் தந்து, தமிழகத்தின்
மின்சார உற்பத்தி தன்னிறைவு அடைகிற காலம் வரையில்,
அவர்களுக்கு உதவிகளைச் செய்ய வேண்டுமென்ற முறையில்
சில திட்டங்களை, தொழிற்சாலைகளுக்கு ஊக்க வாய்ப்புகளைத்
தர இருக்கிறது என்பதையும் நான் கூறிக்கொள்ள விரும்புகி
றேன். 'ப்ரீ ட்ரேட் சோனைப்' பொறுத்தவரையில் மாண்பு
மிகு உறுப்பினர் நெடுமாறன் அவர்கள் பேசுகிறபோது எல்லா
விதமான வசதிகளும் இதற்கு செய்து தரவேண்டும். மற்றதைப்
போல இது தோல்வி அடைந்துவிடக் கூடாது என்று சொன்னார்
கள். கண்டிப்பாக தோல்வி அடையாது. தமிழ் நாட்டைப்
பொறுத்தவரையில் அந்த நிலை வராது. இந்தியாவில் ஏற்
கனவே குஜராத் மாநிலத்தில் ஒன்றும், பம்பாயில் ஒன்றுமாக
இரண்டு ப்ரீ ட்ரேட் சோன்ஸ் இருக்கின்றன. தற்போது கொச்சின், வெஸ்ட்
பெங்கால், டெல்லி, தமிழ்நாடு ஆகிய இடங்களில் நான்கு ப்ரீ ட்ரேட் சோன்ஸ்



1984 மார்ச் 24] [திரு. சி. பொன்னையன்]

அமைக்க அனுமதி தந்திருக்கிறார்கள். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில்
ஏற்கனவே பாரதத்தில் இயங்குகிற ப்ரீ ட்ரேட் சோன்களில் இருக்கிற குறை
பாடுகளை கண்டறிந்து, வெளி நாடுகளில் இருக்கிற—சிலோன், சிங்கப்பூர்,
சௌத் கொரியா, அயர்லாந்து போன்ற நாடுகளில் இருக்கிற ப்ரீ ட்ரேட்
சோன்களுக்கு நமது அதிகாரிகள் சென்று பார்த்து, என்னென்ன குறைகள்
இருக்கின்றன, என்னென்ன நிறைகள் இருக்கின்றன என்பதைக் கண்டறிந்து,
குறைகளை நீக்கி, நிறைகளை ஏற்று, அந்த நிறைகளை மட்டும் நாம் நடை
முறைக்கு கொண்டு வந்து, அந்தப் பிரச்சினையில் மற்ற எந்த ப்ரீ ட்ரேட்
சோனையும் விட தமிழகத்திலே அமைகிற ப்ரீ ட்ரேட் சோன் வெற்றிகரமாக
அமையும், அமைய வேண்டும் என்ற முறையில் நாங்கள் பிரச்னைகளை
அணுகுகிறோம். விரைவான நடவடிக்கைகளை நாம் எடுத்து வருகிறோம்.
இங்கே தொழில் துவக்க முன் வருபவர்களுக்கு எல்லாவிதமான ஊக்கத்தையும்
தருகிறோம்.

100% Export Oriented Industries.

என்ற காரணத்தால் பலர் முன் வந்திருக்கிறார்கள். எத்தனை பேர்கள் முன்
வந்திருக்கிறார்கள் என்பதை ஏற்கனவே சொல்லி இருக்கிறேன். 385 அப்ளி
கேஷன்கள் வந்திருக்கின்றன. அவற்றிலே குறிப்பாக

Non-resident Indians abroad.

தமிழ்நாட்டிலேயிருந்து வெளி நாடுகளில் சென்று தங்கியிருக்கிற தமிழர்
களுக்கு, நம்முடைய நாட்டைச் சேர்ந்தவர்களுக்கெல்லாம் உற்சாகத்தைத்
தரவேண்டுமென்ற அணுகுமுறையிலே அவர்களுக்கு ஊக்கத்தை நாம் தந்து
கொண்டிருக்கிறோம் என்பதை அவைக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்பு
கிறேன். அதைப்போல அயல்நாடுகளிலே வசிக்கின்ற இந்தியர்கள், தமிழ்
நாட்டில் அவர்கள் முதலீட்டை போட்டு, வெளி நாடுகளில் அவர்கள் கற்றறிந்த
தொழில் நுணுக்கத்தை நம்முடைய முன்னேற்றத்திற்கு பயன்படுத்த வேண்டு
மென்று தமிழகத்திலே

Tamil Nadu State non-resident Indian Corporation .

என்ற அமைப்பை உருவாக்கி, அந்த அமைப்பின் மூலமாக ப்ரிட்ரேட் சோன் 100% Export oriented அந்தத் தொழிற்சாலைகளை அமைப்பதற்கும், மற்றத் தொழில்களை அவர்கள் துவக்குவதற்கும் இந்த அமைப்பு உருவாக்கப்படும் என்பதையும் நான் அவைக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல அரசினுடைய நோக்கத்தைப் பொறுத்தவரையிலும், தொழில் துறையிலே இருக்கிற இன்னல்கள், இடர்பாடுகள் எதுவாக இருந்தாலும் எந்தத் துறையில், எந்த நிர்வாகத்தில் இருந்தாலும் அவைகள் எல்லாம் களையப்பட வேண்டும்; களைந்து தொழில் முன்னேற்றம் விரைவாக வரவேண்டும் என்பது தான் அரசினுடைய நோக்கம். அந்த அடிப்படையிலே தற்போது நாம் ஒரு Industrial Potential Survey

எந்தெந்த மாவட்டத்தில், எந்தெந்த வட்டத்தில் எந்தெந்தத் தொழில்களைத் துவக்கலாம் என்று ஏற்கெனவே சர்வே செய்யப்பட்டிருக்கிறது. That Survey will be intensified

அதிலே பிராக்டிக்கலாக எந்தெந்தத் தொழிலை எந்தெந்தப் பகுதியிலே துவக்கலாம் என்று கண்டறிந்து —புராஜெக்ட் புராபைல்—எந்த ஒரு தொழிலைத் துவக்கினால் நஷ்டம் இல்லாமல் இருக்கும்;

marketability will be easier, credit facility will be easily available, raw-material for the same also is easily available.

என்ற முறையிலே ஆய்ந்து அரசே புராஜெக்ட் புராபைலை தயார் செய்து அந்தத் தொழில்களுக்கு ஊக்கம் தரவேண்டுமென்ற முறையில் அது தனியாராக இருக்கலாம்; ஜாயின்ட் செக்டாராக இருக்கலாம்; கோவாப்ரேட்டிவ் செக்ட்டாராக இருக்கலாம்; பப்ளிக் செக்ட்டாராக இருக்கலாம்; எந்த முறையில் துவக்க வேண்டுமென்று பிரத்தியேகமாக நடவடிக்கைகளை அரசு எடுக்கிறது என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இப்போது பலர் இருக்கிறார்கள்; கையிலே பணம் வைத்திருக்கிறார்கள்; படித்துவிட்டு இருக்கும் இளைஞர்கள் இருக்கிறார்கள்; டெக்னோகிரட்ஸ் இருக்கிறார்கள்; என்ன தொழில் துவக்கலாம் என்பது அவர்களுக்குப் புரிவதில்லை. என்ன தொழில் துவக்கினால் நஷ்டம் இருக்காது, இலாபம் இருக்கும் என்று கேட்கிறார்கள். ஆகவே எந்தத் தொழிலைத் துவக்கினால் அவர்களுக்கு இலாபம் இருக்கும், நஷ்டம் ஏற்படாது என்பதை-அவர்களுக்கு பண உதவி செய்கிற பினான்ஷியல் இன்ஸ்டிடியூஷனுடைய பொறுப்பு என்ற காரணத்தால்—அரசே கண்டறிந்து எந்தெந்தப் பகுதியிலே எந்தெந்தத் தொழிலைத் துவக்கினால்



நஷ்டம் வராது, இலாபம் வரும் என்ற முறையிலே அந்தத் தொழிலைக் குறித்து ஒரு விளம்பரம் செய்து, யார், யார், முன்வருகிறார்களோ அவர்களை எல்லாம் வரவழைத்து அவர்களுக்கு அந்தத் தொழிலைப் பற்றி

technical knowhow, project profile, turnkey project

எல்லாம் அரசின் மூலமாகக் கொடுக்க பிரத்தியோக நடவடிக்கைகளை அரசு எடுக்கும். அப்படி எடுக்கிறபோது அந்தத் தொழில்கள் எல்லாம் வயபிள் யூனிட்டாக இருக்கும்; சிக் யூனிட்டாகி விடாது. அந்த நிலையை உருவாக்க முடியும் என்ற வகையிலே அரசு நடவடிக்கை எடுக்கிறது.

**THIRU K. S. G. HAJA SHAREEF:** Mr. Deputy Speaker Sir, can I make a suggestion to the Hon'ble Minister? The Members are all feeling very hungry and become very restless. He can continue his marathoon speech on Monday, day after-tomorrow, after question hour.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, பசி இல்லாத நேரத்திலே மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் பேசி விட்டார்கள். பசி இருக்கிற நேரத்திலே என்னைப் பேசும்படி பணித்துவிட்டார்கள். அது என் குறையல்ல. இருந்தாலும் சொல்லி முடித்துவிடுகிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்கூட தொழில் துறையில் தமிழகம் முன்னணியில் இருக்க வேண்டும் என்பதற்குப் பல ஆக்கப்பூர்வமான ஆலோசனைகளைச் சொல்லி இருக்கிறார்கள். அவர்கள் ஆர்வத்தோடு இருக்கிறார்கள். ஆகவே சற்றுப் பொறுமையாக இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராமச்சந்திரன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, செவிக்கு உணவில்லாதபோது சிறிது வயிற்றுக்கும் ஈயப்படும் இப்போது செவிக்கு உணவு.

ஐ.டி.பி.ஐ. லோன் வரவேண்டும், அது வந்த பிறகுதான் அந்த சப்சிடி கொடுக்க வேண்டும் என்ற முறை இருந்தது. அதை மாற்றி, சிப்காட், டி.ஐ.ஐ.சி. அமைப்புகளே முன்கூட்டியே சப்சிடி கொடுத்துவிட்டு பிறகு ஐ.டி.பி.ஐ. மூலமாக வாங்கிக் கொள்ளலாம் என்று சொல்லியிருக்கிறோம். இந்தக் காலதாமதத்திற்குக் காரணம்.

The clearance by IDBI is also being very much delayed. This is for the kind information of the Hon. Leader of the opposition.

ஆனாலும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் சொல்கிறபடி அவற்றை இந்த அரசு ஒரு கால கட்டத்திற்குள் கொடுக்க வேண்டும் என்பதில் அக்கறை கொண்டு இருக்கிறது. டைம் பவுண்ட் ஆக்ஷன் என்று இந்த அவையில் தெரிவித்து, அதை 3 மாதத்திற்குள் கொடுக்க வேண்டும் என்ற முறையில், சிங்கிள் விண்டோ சிஸ்டம் இயங்க வேண்டும். மூன்று மாதத்திற்குள் அந்த சலுகைகள் வழங்கப்பட்டால்தான் அதிகமான தொழில்களைக் கொண்டுவருவதற்கு வேலைவாய்ப்பை அதிகரிப்பதற்கு முடியும் என்பதால் அதைச் செய்கிறோம் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

அதிகநேரத்தில் உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்பதற்காகக் கூட சில சலுகைகளை அரசு அறிவித்திருக்கிறது. குறிப்பாக தற்போது 100 சதவிகிதம் ப்ரொடியூசிங் கப்பாசிட்டி உள்ள ஒரு தொழிற்சாலையில் 50 சதவிகிதம், 75 சதவிகிதம், 80 சதவிகிதம், 90 சதவிகிதம் என்று உற்பத்தியைப் பெருக்குகிற போது ஒரு குறிப்பிட்ட சதவிகிதத்திற்கு மேல் செல்லும்போது சேல்ஸ் டாக்ஸ் கன்செஷன் அவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்ற திட்டத்தை அரசு நடைமுறைக்குக் கொண்டுவர இருக்கிறது. அதன் மூலமாக The rev nu (f he State will be increased. Simultaneously the production will also be increased என்ற முறையிலே இதை நடைமுறையில் அரசு கொண்டுவர இருக்கிறது.

அடுத்து இன்னும் ஒரு ஊக்கத்தை அரசு தர இருக்கிறது. வேலை வாய்ப்பை அதிகமாகப் பெருக்க வேண்டும். வேலை வாய்ப்பு கிடைக்காத மக்கள் அதிகமாக இருக்கிற காரணத்தால் Employment Generation is the major object. அந்த அடிப்படையில் Labour Intensive Technology உபயோகப்படுத்தி சில தொழிற்சாலைகளை ஆரம்பிக்க வேண்டுமென்று சொன்னார்கள். நான் "சேகோ பாக்டரி" பற்றிச் சொன்னேன். ஒரு மெகனைஸ்ட் சேகோ பாக்டரி வந்துவிடுமானால் கிட்டத்தட்ட 7 இலட்சம், 8 இலட்சம் பேர்களை வேலையிலிருந்து நீக்கிவிட்டு, ஏறத்தாழ 20 பேர்களை





வைத்துக்கொண்டு அந்தத் தொழிலை நடத்த முடியும், தொழிற்சாலை இயங்க முடியும். அதற்கு மாறாக லேபர் இன்டென்சிவ் டெக்னாலஜியை உபயோகப் படுத்தி தொழிற்சாலை தொடங்க முன்வருகிறபோது எப்படி "காப்பிட்டல் இன்சென்டிவ்" கொடுக்கிறோமோ, அதைப் பெறுவதற்கு சில சலுகைகளைத் தருகிறோமோ அதைப்போன்று லேபர் டெக்னாலஜியைப் பயன்படுத்தி தொழிற்சாலைகளைத் தொடங்க யார் முன்வந்தாலும் வேலை வாய்ப்பைப் பெருக்க வேண்டுமென்பது அரசின் முக்கிய நோக்கம் என்பதால் அவர்களுக்கு பிரத்தியேகமாக சில கன்செஷன்களைக் கொடுக்க வேண்டுமென்ற புதிய திட்டத்தை அரசு நடைமுறைக்குக் கொண்டுவர இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போன்று தற்போது தமிழ்நாட்டில் மின்சாரத் தட்டுப்பாடு அதிக மாக இருப்பதால், Incentive for service companies-க்கு கொடுக்க வேண்டுமென்ற முறையிலே சர்வீஸ் கம்பெனி எது வந்தாலும் அவைகளுக்கு உற்சாகம் தரவேண்டும் என்ற முறையை அரசு நடைமுறைக்குக் கொண்டுவர இருக்கிறது. நான் ஏற்கனவே அறிவித்ததுபோல பல தொழில்கள் நசுங்கி விடுவதற்குக் காரணம் அந்தத் தொழிற்சாலைகளுக்கு எப்படியோ பணம் வருகிறது. எப்படியோ அரசாங்கம் பணம் தருகிறது, இன்ஸ்டிடியூஷனல் ஃபைனான்ஸ் கொடுக்கிறது என்ற முறையிலே தொழில் களைத் தொடங்கி விடுகிறார்கள். சிலர் "அப்-டு-டேட் டெக்னாலஜி" இல்லாத காரணத்தால் முன்னேற முடியாமல் தடுமாறுகிறார்கள். உற்பத்தி செய்த பொருள்களை எப்படி விற்பனை செய்வது என்று தெரியாமல் தடுமாறு கிறார்கள். முதன்மையாக, Marketing facility for the end products is a prime necessity. அதற்கு We have not yet specialised wel' in the Marketing Technology

எனவே தொழிற்சாலைகளினுடைய நலிவினைச் சந்திக்காமல் இருக்க வேண்டு மென்றால் உற்பத்தி செய்கிற பொருள்கள் ஒழுங்காக விற்கப்பட வேண்டும். அதனால் ஸ்டேட் மார்க்கெட்டிங் கார்ப்பரேஷன் ஒன்றை அமைப்பது குறித்து அரசு ஆராய்ந்து, தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

அதைப்போன்று சிறு தொழில்களுக்கோ மற்ற தொழில்களுக்கோ தேவை யான மூலப் பொருள்கள்—ரா மெட்டீரியல்ஸ்—துரிதமாகக் கிடைக்காத கார ணத்தால் பல தொழில்கள் நசுங்கி விடுகின்ற நிலைமை இருப்பதால், அவை எளிதாகக் கிடைக்க இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதனைத் தெரி வித்துக்கொள்ள விரும்புகிறேன்.

[திரு. சி. பொன்னையன்] [1984 மார்ச் 24

அதைப் போலவே, சட்டங்களும் விதிகளும் தொழில்
வளர்ச்சிக்கு எங்கெங்கே முட்டுக்கட்டையாக, தடைக் கற்களாக
இருக்கின்றனவோ அவற்றை எல்லாம் தளர்த்தி, தொழில்
வளர்ச்சியில் துரிதமாக முன்னேற இந்த அரசு தக்க நடவடிக்கை
களை எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத்
தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப் போன்று தனியார் துறையிலே வல்லுநர்கள், தொழில்
நுணுக்கங்களைத் தெரிந்தவர்கள் நிறைய இருக்கிறார்கள். அது
கெமிக்கல் டெக்னாலஜியாக இருக்கலாம் அல்லது வேறு எந்த
டெக்னாலஜியாகவும் இருக்கலாம். டெக்னிக்கல் கன்சல்டென்ட்
என்று சொல்லக் கூடிய அவர்களுடைய ஆலோசனைகளை அரசு
கேட்டு, தொழில் தொடங்க முன்வருகிறவர்களுக்கு, அவர்களிட
மிருந்து தொழில் நுணுக்கங்களைப் பெற்று, அந்தத் தொழில்
நுணுக்கம் பெற்றவர்களுக்கும் ஆதாயம் கிடைக்கும் வகையிலே
தொழிலைத் தொடங்கவும், நஷ்டம் இல்லாமல் நடக்கவும்,
நல்ல தொழில்களைக் கொண்டுவரவும் Industrial Consultancy Wing
consisting of the experts, and Private Sector will also be constituted
என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

காவேரி சர்க்கரை ஆலையை மத்திய அரசு எடுக்க வேண்டு
மென்று மாநில அரசு பரிந்துரை செய்திருக்கிறது. இந்த
காவேரி சர்க்கரை ஆலையைப் பொறுத்தவரையில்

That is under the administrative control of the Government of India. If it is to be taken over by the State Government, Government of India should give clearance. We are in that direction.

மத்திய அரசினுடைய அனுமதி கிடைத்தவுடன் அதை ஏற்போம்.

(பிற்பகல் 3-00)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : விவாதம் முடி
வுற்றது ; இப்பொழுது வாக்கெடுப்பு.

கோரிக்கை எண். 24—தொழில்கள்.

திருவாளர்கள் எஸ். சிவராமன், பெ. சு. திருவேங்கடம்,
டி. மணி, எம். ஆறுமுகம் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாத
தால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின்
அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றனவாகக்
கருதப்பெற்றன.



1984 மார்ச் 24]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்
உள்ள கேள்வி :

" மானியக் கோரிக்கை எண் 24 —தொழில்கள் என்ற
தலைப்பின்கீழ் ரூ. 2,30,12,000-க்கு மேற்படாத தொகை
அரசுக்கு வழங்கப்பெற வேண்டும். "

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று,
நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசிற்கு வழங்கப்
பெற்றது.

கோரிக்கை எண். 50— தொழில் வளர்ச்சி குறித்த
மூலதனச் செலவு.

திருவாளர்கள் என். எஸ். வி. சித்தன், சு. பாலன், ஆகியவர்
கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத்
தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்
கொள்ளப் பெற்றனவாக கருதப் பெற்றன.

திரு. தி. கா. நல்லப்பன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம்,
பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப்
பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள
கேள்வி :

"மானியக் கோரிக்கை எண் 50 —தொழில் வளர்ச்சி குறித்த
மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 16,11,30,000-க்கு
மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று,
நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசிற்கு வழங்கப்
பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின்
இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 26-3-1984ஆம் தேதி
காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 3-00 மணிக்கு ஒத்திவைக்கப்
பெற்றது.

[1984 மார்ச் 24

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

145. சேரன் போக்குவரத்துக் கழகத்தின் 1982–83 ஆம் ஆண்டிற்கான பன்னிரெண்டாம் ஆண்டறிக்கை (ஆங்கிலம்). 1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம்-I 1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.

146. சோழன் போக்குவரத்துக் கழகத்தின் 1982–83 ஆம் ஆண்டிற்கான பன்னிரெண்டாம் ஆண்டறிக்கை. (ஆங்கிலம்). 1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் I-1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.

147. மருது பாண்டியர் போக்குவரத்துக் கழகத்தின் 1982–83 ஆம் ஆண்டிற்கான முதலாம் ஆண்டறிக்கை (தமிழ்). 1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் I-1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.

148. பாண்டியன் போக்குவரத்துச் கழகத்தின் 1982–83 ஆம் ஆண்டிற்கான பன்னிரெண்டாம் ஆண்டறிக்கை (ஆங்கிலம்). 1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் I 1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.

149. 1981–82ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்சார வாரியத்தின் ஆண்டுக் கணக்குகள் மற்றும் 31—3—1982ஆம் தேதி வரையிலான ஐந்தொகைக்கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கை (ஆங்கிலம்). 1948ஆம் ஆண்டு மின்சார (வழங்கல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54/1948)69 (5)(ஏ) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.

150. தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் 1982–83 ஆண்டிற்கான பதினெட்டாவது ஆண்டறிக்கை. 1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் I-1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

87. தொழில் கொள்கையும் திட்டங்களும் (பெரும் தொழில்கள்) 1984–85 (தமிழ், ஆங்கிலம்).

88. 1984–85ஆம் ஆண்டில் தொழில்கள் பற்றிய 'சாதனைத் திட்டம் (தமிழ், ஆங்கிலம்).

89. 1984–85ஆம் ஆண்டில் சர்க்கரைத் தொழில் பற்றிய செயல் முறைத் திட்டம் (தமிழ், ஆங்கிலம்).



1984 மார்ச் 24]

90. 1984–85ஆம் ஆண்டில் புவியியல் மற்றும் சுரங்கத்துறை பற்றிய செயலாக்கத் திட்டம் (தமிழ், ஆங்கிலம்).

91. 1983–84ஆம் ஆண்டு கூடுதல் செலவுக்கான துணை மானியக் கோரிக்கைகளும், விரிவான துணை மதிப்பீடுகளும் (தமிழ், ஆங்கிலம்).

92. 1983–84ஆம் ஆண்டு கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு (தமிழ், ஆங்கிலம்).

93. 1984–85ஆம் ஆண்டில் உடனடிச் செலவுக்கான மானிய அனுமதி கோரிக்கைகள் (தமிழ், ஆங்கிலம்).

94. 1984–85ஆம் ஆண்டில் உடனடிச் செலவுக்கான மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு (தமிழ், ஆங்கிலம்).

95. 1983–84ஆம் ஆண்டு இறுதித் துணை மதிப்பீடுகள் பற்றிய மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன், அவர்களின் உரை (தமிழ், ஆங்கிலம்).

## இணைப்பு I.

(318ம் பக்கத்தில் உடுக்குறியிட்ட வினா எண். 442-க்கான விடையைக் காண்க)

திருச்சிராப்பள்ளி மற்றும் தென்னாற்காடு மாவட்டங்களில் 1977 முதல் 1982 முடிய ஆய்வி லுள்ள நடுத்தர பாசனத் திட்டங்களின் பட்டியல்.

| வரிசை எண். | திட்டத்தின் விவரம். | வட்டத்தின் பெயர். | | மதிப்பீடு: |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | | (4) |
| | | | | (இலட்சத்தில்) |
| 1 | அணைப்பாடி வாரி நீர்த்தேக்கத் திட்டம் (மருதையாறு) | அரியலூர் | .. | 204.00 |
| 2 | தவுத்தைகுளம் நீர்த்தேக்கத் திட்டம் (மருதையாறு) | அரியலூர் | .. | 493.00 |
| 3 | கொட்டரை நீர்த்தேக்கத் திட்டம் (மருதையாறு) | பெரம்பலூர் | .. | 467.00 |
| 4 | அய்யாறு நீர்த்தேக்கத் திட்டம் .. .. .. | துறையூர் | .. | 773.00 |
| 5 | பாலாறு நீர்த்தேக்கத் திட்டம் .. .. .. | மணப்பாறை | .. | 326.30 |
| 6 | குளித்தலை காட்டுவாரித் திட்டம் .. .. | குளித்தலை | .. | 92.00 |
| 7 | கொரக்கவாடி கிராமத்தில் வெள்ளாற்றின் குறுக்கே ஒரு நீர்த்தேக்கம் அமைத்தல். | விருத்தாச்சலம் | .. | 421.00 |
| 8 | லக்கி நாயக்கன் பட்டி கிராமம் கோடியலூர் அருகில் முகூகொண்டா நதியின் குறுக்கே ஒரு நீர்த்தேக்கம் அமைத்தல். | கள்ளக்குறிச்சி | .. | 293.00 |



தென்னாற்காடு மாவட்டத்தில் 1977 முதல் 1982-ம் ஆண்டு வரையில் ஆய்விலிருந்த சிறப்பு சிறு பாசனத் திட்டங்களின் பட்டியல்.

| வரிசை எண். | திட்டங்களின் பெயர். | தாலூகா. | | மதிப்பீடு. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | | (4) |
| | | | | (ரூபாய் இலட்சத்தில்.) |
| 1 | நாஞ்சூர் ஓடையில் குறுக்கே தச்சுருக்கும்-ஓலத்தூருக் கும் அணைகட்டுதல் சம்பந்தமாக. | விருத்தாச்சலம் | .. | 8.00 |
| 2 | மேலத்தாரின் குறுக்கே திருவன்னூர் குட்டைக்கு படுக்கை-அணை அமைத்தல். | பண்ருட்டி | .. | 6.00 |
| 3 | மாச்சூர் கிராமத்தில் அருணாச்சலம் பிள்ளை ஏரியை புதுப்பித்தல். | விருத்தாச்சலம் | .. | 1.00 |
| 4 | பெரிய தச்சூர் கிராமத்தில் வரதா நதியின் குறுக்கே அணைகட்டுதல். | விழுப்புரம் | .. | 6.00 |
| 5 | மேலத்தாரின் குறுக்கே நாதம் குட்டைக்கு அணை கட்டுதல். | பண்ருட்டி | .. | 5.65 |
| 6 | பொய்கைநாதம் கிராமத்தில் நாக்கம்பட்டி ஏரியை நிலைப்படுத்துதல். | பண்ருட்டி | .. | 1.60 |
| 7 | உடைந்திருக்கும் தேவமருவு ஓடையின் குறுக்கே உள்ள அணையை நிலைப்படுத்துதல், வாடுப்பட்டி ஏரியையும், பால்சுர் ஏரியையும் புதுப்பித்தல். | பண்ருட்டி | .. | 6.00 |
| 8 | ஈடபாளையம் குட்டையிலிருந்து நீர்ப்பாசன வசதி களுக்கு ஏற்பாடு செய்தல். | விழுப்புரம் | .. | 1.20 |

தென்னார்க்காடு மாவட்டத்தில் 1977 முதல் 1982-ம் ஆண்டு வரையில் ஆய்விலிருந்த சிறப்பு சிறுபாசனத் திட்டங்களின் பட்டியல்—தொடர்சி.

| வரிசை எண். | திட்டங்களின் பெயர். | தாலுக்கா. | மதிப்பீடு. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | | (ரூபாய் இலட்சத்தில்.) |
| 9 | குப்பன் கிராமத்தில் பப்மை குட்டையின் குறுக்கே படுக்கை அணைகட்டுதல். | விழுப்புரம் .. | 3.50 |
| 10 | பாண்டிச்சேரி சேஷான்கூரிலிருந்து சொரப்பேட்டை குளத்திற்கு பாசன கால்வாய் திட்டம். | விழுப்புரம் .. | 4.00 |
| 11 | கிழமுங்கில் ஓடையின் குறுக்கே திருபவன்கூர் குட்டைக்கு அணை கட்டுதல். | கள்ளக்குறிச்சி .. | 16.00 |
| 12 | கிழமுங்கில்லாடி கிராமத்தில் 403 ஏக்கருக்கு பாசன வசதி செய்து தரும் திட்டம். | சிதம்பரம் .. | 1.84 |
| 13 | பாப்பன்பள்ளி குட்டையை புதுப்பித்தல் .. .. | விழுப்புரம் .. | 12.50 |
| 14 | கொசப்பாடி குட்டையின் குறுக்கே அணை கட்டுதல் | கள்ளக்குறிச்சி .. | 4.30 |
| 15 | நீலமங்கலம் அணைக்கட்டில் தலைமதகு கட்டும் திட்டம். | கள்ளக்குறிச்சி .. | 4.00 |
| 16 | அன்னபரணி கிளை ஓடையை நிலைப்படுத்தும் திட்டம். | கடலூர் .. | 4.00 |
| 17 | இடையார் ஓடையின் குறுக்கே குளம் அமைக்கும் திட்டம். | விருத்தாச்சலம் .. | 14.80 |



திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 1977 முதல் 1982 முடிய ஆய்விலிருந்த சிறப்பு சிறுபாசனத் திட்டங்களின் பட்டியல்.

| வரிசை எண். | திட்டத்தின் பெயர். | தாலுகா. | மதிப்பீடு. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | | (ரூபாய் இலட்சத்தில்). |
| 1 | புதுநடுவலூர் கிராமத்தில் புதிய குளம் அமைக்கும் திட்டம். | பெரம்பலூர் | 23.00 |
| | மேலபுளியூர் கிராமத்தில் புதிய குளம் அமைக்கும் திட்டம். | பெரம்பலூர் | 14.00 |
| 3 | வெப்பன்தட்டி கிராமத்தில் புதிய குளம் அமைக்கும் திட்டம். | பெரம்பலூர் | 9.20 |
| 4 | வரக்குப்பை கிராமத்தில் புதிய குளம் அமைக்கும் திட்டம். | லால்குடி | 10.00 |
| 5 | நட்டுவாலப்பட்டி கிராமத்தில் புதிய குளம் அமைக்கும் திட்டம். | துறையூர் | 17.50 |
| 6 | முருங்கைப்பட்டி கிராமத்தில் புதிய குளம் அமைக்கும் திட்டம். | துறையூர் | 13.20 |
| 7 | தேரக்குடி கிராமத்தில் கோரையாறின் குறுக்கே முடிகொண்டன் குளத்திற்கு அணை கட்டுதல். | திருச்சி | 8.25 |
| 8 | காற்றாரிலிருந்து கொம்பக்குடி குளம் குறுக்கே அணை கட்டும் திட்டம். | திருச்சி | 6.23 |
| 9 | எழுதுகோன்கட்டி கிராமத்தில் குளம் அமைக்கும் திட்டம். | குளித்தலை | 8.26 |
| 10 | காலயப்பட்டி கிராமத்தில் குளம் அமைக்கும் திட்டம் | குளித்தலை | 24.82 |
| 11 | பெருமாள் காவனுண்டான்பட்டி கிராமத்தில் நாயணவாயன் குளம் அமைக்கும் திட்டம். | குளித்தலை | 8.70 |

| வரிசை எண். | திட்டத்தின் பெயர். | தாலூகா. | மதிப்பீடு. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | | (இலட்சங்களில்) |
| 12 | வாலயகின்ன ஏரியிலிருந்து புன்காரின் குறுக்கே அணை கட்டும் திட்டம். | குளித்தலை | 8.83 |
| 13 | தேசிங்கமங்கலம் கிராமத்தில் சின்னயாம்பாளையம் அருகில் குளம் அமைக்கும் திட்டம். | குளித்தலை | 6.13 |
| 14 | நாடுபட்டி கிராமத்தில் கோழிசின்னம் பாறை அருகில் புதிய குளம் அமைக்கும் திட்டம். | குளித்தலை | 22.70 |
| 15 | அம்மயாபுரம் கிராமத்தில் கன்னியாரியம்மன் குளம் புதுப்பித்தல். | மணப்பாறை | 2.70 |
| 16 | ராமரெட்டிப்பட்டி குளம் அமைக்கும் திட்டம் .. | மணப்பாறை | 7.90 |
| 17 | மாம்முண்டியாரிலிருந்து மரவனூர் பெரிய குளம் குறுக்கே அணை கட்டுதல். | மணப்பாறை | 8.10 |
| 18 | கன்றுநாயக்கன்பட்டி கிராமத்தில் செட்டிவாரியில் குளம் அமைக்கும் திட்டம். | மணப்பாறை | 39.00 |
| 19 | நல்லூர் கிராமத்தின் அருகிலுள்ள நாரன் குறிச்சி கிராமத்தில் குளம் அமைக்கும் திட்டம். | மணப்பாறை | 7.99 |
| 20 | புதுக்கோட்டை கிராமத்தில் மின்னகாடுக்கு குளம் அமைக்கும் திட்டம். | மணப்பாறை | 43.68 |
| 21 | சிறுகலூர் ஓடையின் குறுக்கே புதிய குளம் அமைக்கும் திட்டம் | துரையலூர் | 17.00 |
| 22 | [illegible]உடையன்பட்டி கிராமத்தில் புதிய குளம் அமைக்கும் திட்டம். | துரையலூர் | 13.11 |



| | | | |
|---|---|---|---|
| 23 | மிலகாடு. கொம்பை கிராமத்தில் புதிய குளம் அமைக்கும் திட்டம். | அரையலூர் | 21.00 |
| 24 | பண்டகபாடி கிராமத்தில் புதிய குளம் அமைக்கும் திட்டம். | பெரம்பலூர் | 29.00 |
| 25 | பாலவிடுதி கிராமத்தில் சித்தலைக்காடுக்கு புதிய குளம் அமைக்கும் திட்டம். | குளித்தலை | 28.00 |
| 26 | மானனை கிராமத்தில் மானனை, வெப்பூர் குளத்தின் குறுக்கே அணைக்கட்டும் திட்டம். | பெரம்பலூர் | 7.28 |
| 27 | வேம்பலூர் கிராமத்தில் புதிய குளம் அமைக்கும் திட்டம். | பெரம்பலூர் | 15.00 |
| 28 | கோலகுடி கிராமத்தில் புதிய குளம் அமைக்கும் திட்டம் | லால்குடி | 25.87 |
| 29 | கடம்பூர் கிராமத்தில் காலாப்பட்டிக்கு அருகில் புதிய குளம் அமைக்கும் திட்டம். | பெரம்பலூர் | 21.57 |
| 30 | காட்டோடை குறுக்கே அணைகட்டுதல் அன்னமங்கலம் குளத்திற்குப் பாசன கால்வாய் தோண்டுதல். | பெரம்பலூர் | 1.71 |
| 31 | தென்னூர் கிராமத்தில் கண்மாயை புனரமைத்தல் | பெரம்பலூர் | 13.00 |
| 32 | போலம்பாடி கிராமத்தில் கலிங்க ஓடையின் குறுக்கே புதிய குளம் அமைக்கும் திட்டம். | பெரம்பலூர் | 21.10 |
| 33 | மேலூர் தக்கலூர் கிராமத்தில் கருப்பங் கால் ஓடையின் குறுக்கே புதிய குளம் கட்டும் திட்டம். | உடையார் பாளையம் | 16.57 |

## இணைப்பு II.

(345ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

### தொழில் கொள்கையும் திட்டங்களும்.

மாநிலம் முழுவதும் வேலைவாய்ப்பை உருவாக்குதல் என்பது மாநில அரசின் முக்கிய பணிகளுள் ஒன்றாகும். இதனால் வறுமைப் பிரச்சினையை திறம்பட சமாளிக்க இயலும். இந்நோக்கத்தை எய்துவதற்காகவே மாநில அரசின் தொழில் கொள்கை வகுக்கப்பட்டிருக்கிறது. இம்மாநிலம் முழுவதிலும் குறிப்பாக பின்தங்கிய பகுதிகளிலும் கிராமப் பகுதிகளிலும் வேலை வாய்ப்பை உருவாக்குவதற்காக சிறு தொழில்களுக்கு மாநில அரசு முக்கியத்துவம் அளிக்கையில், பெருந் தொழில்களுக்கும் இவ்வரசு ஆதரவளிக்கிறது. சிறு தொழில்களின் வளர்ச்சிக்கும், மேம்பாட்டுக்கும் பெரிய, நடுத்தர தொழில்கள் அவசியமென்பதை மாநில அரசு உணர்ந்துள்ளது. எனவே, சிறு தொழில்களுடன், நடுத்தர, பெரிய தொழில்களின் வளர்ச்சியையும் நோக்கமாக கொண்டு மாநில அரசின் கொள்கை வகுக்கப்பட்டுள்ளது. பெரும் தொழில்களுடன் சிறு தொழில்களும் வளர்ச்சியடையும் வகையில் பெரும் தொழில்கள் வளரவேண்டும். இந் நோக்கத்தைக் கருத்தில் கொண்டு இம் மாநிலம் முழுவதும் பெரும், நடுத்தர தொழில்களின் வளர்ச்சிக்காக, டிட்கோ, டான்செம், சிப்காட், டிக், எல்காட், டின்பிஎல், தமிழ்நாடு உப்புக் கழகம், டான்சி, டாமின், டான்மாக், சர்க்கரைக் கழகங்கள் போன்ற அரசு நிறுவனங்கள் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளன.

2. தமிழ்நாட்டை விரைவில் தொழில் மயமாக்கும்திட்டத்தின் கீழ் மற்றொரு முக்கியமான நடவடிக்கை, சென்னையில் தடையிலா வணிக மண்டலம் ஒன்றை ஏற்படுத்துவதாகும். மாநில அரசிடமிருந்து திரும்பத் திரும்ப வந்த வேண்டுகோளின் பேரில் மத்திய அரசு சென்னையில் தடையிலா வணிக மண்டலத்தை அமைக்க முடிவு செய்துள்ளது. மாநில அரசு தடையிலா வணிக மண்டலத்தை அமைக்கத் தாம்பரத்திற்கு அருகே ஒரு மனையைத் தெரிந்தெடுத்துள்ளது. பயன்படுத்தத்தக்க 150 ஏக்கர் நிலம் அரசின் வசம் உள்ளது. இம்மனை மத்திய அரசுக்கு அளிக்கப்பட்டது. மனை தெரிந்தெடுக்கும் மத்திய அரசின் குழு அண்மையில் இம்மனையை வந்து பார்வையிட்டு ஒப்புதலளித்தது. தெரிந்தெடுக்கப்பட்ட மனையை அடுத்து மற்றுமொரு 200 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்துவதற்கும் மாநில அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. தடையிலா வணிக மண்டலத்திற்கு அருகில் கிடைக்கும் அரசு நிலங்கள் உட்பட இறுதியில் கிடைக்கப்பெறும் நிலம் 450 ஏக்கராகும். தடையிலா வணிக மண்டலத்தில் தொழிற்சாலைகளை அமைப்பதற்கு மாநில அரசுக்கு பல விசாரணைகள் வரப்பெற்றுள்ளன. சென்னையில் அமைக்கப்படவிருக்கும் தடையிலா வணிக மண்டலம் வெற்றிகரமாக அமையும் என்று மாநில அரசு நம்புகிறது.



3. வேளாண்மைக்கு அடுத்தப்படியாக, இம்மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியில் தொழில்கள் முக்கிய இடத்தை வகிக்கிறது. 1980–81 ஆம் ஆண்டில் தயாரிப்புப் பிரிவுகள் 24 சதவீதம் வருமானத்தை அளித்துள்ளது. மாநில அரசு எடுத்த தீவிர நடவடிக்கைகளின் காரணமாக, அனைத்திந்திய அளவில் தொழில் துறையில் ஏற்பட்ட வளர்ச்சியோடு ஒப்பிடும்போது தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள தொழில் வளர்ச்சி நல்ல நிலையிலுள்ளது. இதனை, கீழே கொடுக்கப்பட்டுள்ள தொழில் வளர்ச்சிக் குறியீட்டு எண் விவரங்களிலிருந்து காணலாம்.

தொழில் வளர்ச்சி குறியீட்டு எண் :

| ஆண்டு. | இந்தியா. | | தமிழ்நாடு. | |
|---|---|---|---|---|
| | குறியீட்டு எண். | வளர்ச்சி சதவீதம். | குறியீட்டு எண். | வளர்ச்சி சதவீதம். |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1978 .. | 148 | 6.8 | 164 | 14.7 |
| 1979 .. | 150 | 1.2 | 173 | 5.2 |
| 1980 .. | 151 | 0.7 | 183 | 5.4 |
| 1981 .. | 165 | 9.3 | 202 | 9.4 |
| 1982 .. | 172 | 4.2 | 230 | 12.1 |

இந்தியா முழுவதிலும் ஏற்பட்ட தொழில் வளர்ச்சியோடு ஒப்பிடுகையில் தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சி அதிகமாக உள்ளது என்பதை மேற்சொன்ன அட்டவணை குறிப்பிடுகிறது.

4. தொழில் வளர்ச்சியில் மற்றொரு முக்கிய அம்சம், தொழில் உரிமம் வழங்கும் கொள்கையாகும். தொழில் வளர்ச்சித் துறை தலைமை இயக்ககத்தில் விண்ணப்பங்களைப் பதிவு செய்வதற்கும், மத்திய அரசு இசைவுக் கடிதங்களை வழங்குவதற்கும், மாநில அரசு பரிந்துரை செய்கின்றது. இசைவுக் கடிதத்தின் நடை முறைகளை விரைவுப் படுத்துவதற்கு மாநில அரசு தீவிர நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. 1980-ல் மாநில அரசு 108 விண்ணப்பங்களை பரிந்துரை செய்தது. அதில் 57 விண்ணப்பங்களுக்கு மத்திய அரசு இசைவுக் கடிதம் வழங்கியது. 1981-ல் மாநில அரசு 92 விண்ணப்பங்களைப் பரிந்துரை செய்தது. அதில் 44 விண்ணப்பங்களுக்கு, இசைவுக் கடிதங்கள் வழங்கப்பட்டன. 1982-ல் 184 விண்ணப்பங்களுக்கு பரிந்துரை செய்யப்பட்டது.

[1984 மார்ச் 24

அதில் 67 விண்ணப்பங்களுக்கு இசைவுக் கடிதங்கள் வழங்கப்பட்டன. இந்த மூன்று ஆண்டுகளில் மாநில அரசு பரிந்துரை செய்த 384 விண்ணப்பங்களில் 123 விண்ணப்பங்கள் இன்னும் நிலுவை நிலையில் உள்ளன. 1-1-1977 முதல் 31-10-1983 வரையான கால அளவில் தமிழ்நாட்டில் ரூ. 850 கோடி முதலீட்டில், நடுத்தர மற்றும் பெரிய 449 தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றின் மூலம் 1,10,000 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

5. அண்மையில் மத்திய அரசு, பின் தங்கிய பகுதிகளாக வகைப்படுத்தப்பட்ட பகுதிகளுக்கு திருத்த நெறிமுறை குறிப்புரைகளை வழங்கி உள்ளது. மத்திய அரசு பின் தங்கிய பகுதிகளை வகை 'A' 'B' மேலும் 'C', என்று மூன்று வகைகளாக பிரித்துள்ளது. வகை 'A' தொழிற்சாலை எதுவும் இல்லாத மாவட்டங்கள் என்பதை குறிக்கிறது. இப்பகுதிகளுக்கு மத்திய அரசு, முதலீட்டில் 25 சதவீதத்தை உதவித் தொகையாக வழங்கும். இந்த உதவித் தொகையின் உச்சவரம்பு ரூ. 25 இலட்சம் ஆகும். 'B' வகை 15 சதவீத மூலதன உதவித்தொகை பெறுகிற (உச்சவரம்பு ரூ. 15 இலட்சம்) வட்டங்களை குறிக்கின்றது. மேலும் ரூபாய் 30 கோடிக்கு மேல்முதலீடு செய்யப்பட்டுள்ள வட்டாரங்கள் பின்தங்கிய பகுதிகள் பட்டியலிலிருந்து நீக்கப்படும். 'C' வகை வட்டங்கள் பின்வரும் 9 சலுகை நிதி உதவி பெறும் மாவட்டங்களாகும். இவற்றில் 'B' வகை வட்டங்கள் அடங்காது. இவை 10 இலட்சம் என்ற உச்சவரம்பிற்கு உட்பட்டு 10 சதவீதம் மூலதன உதவியைப் பெறுவதற்கு தகுதி உடையவை ஆகும்.

(1) தருமபுரி.

(2) மதுரை.

(3) வட ஆர்க்காடு

(4) இராமநாதபுரம்.

(5) புதுக்கோட்டை.

(6) கன்னியாகுமரி.

(7) தென் ஆர்க்காடு.

(8) தஞ்சாவூர்

(9) திருச்சிராப்பள்ளி.



1984 மார்ச் 24]

6. தமிழ்நாட்டில் தொழிற்சாலை எதுவும் இல்லாத மாவட்டம் எதுவும் இல்லை. தமிழ்நாட்டில் அதிக அளவு மாவட்டங்கள் இருப்பதால், சிறிய மாவட்டங்களைக் கொண்டுள்ள ஏனைய மாநிலங்களுடன் ஒப்பிடுகையில், தமிழ்நாடு பாதிப்பிற்கு உள்ளாகிறது. எனவே தொழிற்சாலை எதுவும் இல்லாதப் பகுதிகள் என்று அறிவிப்பதற்கு, மாவட்டங்களை ஒரு அலகாக எடுத்துக் கொண்டு இருப்பதைக் காட்டிலும் வட்டம் அல்லது வட்டாரத்தின் அளவு நாடு முழுவதும் ஒரே மாதிரியாக இருப்பதால் வட்டம் அல்லது வட்டாரங்கள் அலகாக அறிவிப்பதற்கு எடுத்துக் கொள்ளப்படலாம் என்று மத்திய அரசிற்கு இது குறித்து மாநில அரசு தெரிவித்துள்ளது. இது குறித்து மத்திய அரசின் முடிவு எதிர்பார்க்கப்படுகிறது. மத்திய அரசின் திருத்த கொள்கையின்படி 30 வட்டங்கள் 15 சதவீத உதவித் தொகையையும் 62 வட்டங்கள் 10 சதவீத உதவித் தொகையையும் பெறுவதற்குத் தகுதி உடையனவாகும். இதைத் தவிர மாநில அரசு 33 வட்டங்களுக்கு தனது சொந்த நிதியிலிருந்து மூலதன நிதிஉதவியை தொடர்ந்து வழங்கி வரும். மத்திய, மாநில உதவித் தொகை திட்டம் பொருந்துகின்ற வட்டங்களில் உதவித்தொகை வழங்குவதில் சில சரிகட்டல்கள் செய்யப்படும்.

7. இத்திட்டத்தின் கீழ் மத்திய அரசிடமிருந்து தொகை (ரூ. 27.94 கோடி) திரும்பப் பெறுவதை பொறுத்தமட்டில் நாட்டிலுள்ள அனைத்து மாநிலங்களிலும், தமிழ்நாடு தொடர்ந்து முதன்மை இடத்தை வகித்து வருகிறது. இத்திட்டங்களின் கீழ் 1983 ஏப்ரல் முதல் டிசம்பர் திங்கள் வரையில் பெரிய நடுத்தர தொழில்கட்கு வழங்கப்பட்ட தொகை ரூ. 270.04 இலட்சம் ஆகும். சிறு தொழில்கட்கு 1983 நவம்பர் வரையில் வழங்கப்பட்ட தொகை ரூ. 139.44 இலட்சம் ஆகும்.

8. மாநில முதலீட்டு உதவித்தொகை திட்டத்தின் கீழ் 33 வட்டங்களை உதவித் தொகை பெறும் வட்டங்களாக அரசு அறிவித்திருக்கிறது. அதில் 22 வட்டங்கள் மத்திய அரசின் 10 சதவீத உதவித்தொகைத் திட்டத்தின் கீழ் வரும். திருநெல்வேலி மாவட்டம் தூத்துக்குடியிலும் தென் ஆர்க்காடு மாவட்டத்தில் கடலூரிலும் சிப்காட் நிறுவனம் அமைத்துள்ள தொழிற்பேட்டைகளும் நிலையான மூலதன முதலீட்டில் 15 சதவீதத்திற்குச் சமமான தொகை அல்லது ரூ. 15 இலட்சம் இவற்றில் எது குறைவோ அந்த மாநில அரசிடம் உதவித் தொகையாகப் பெறத் தகுதியுடையவை ஆகும். இதில் வழங்கப்பட்ட தொகை ரூபாய் 42.44 இலட்சம் ஆகும். 1983 டிசம்பர் திங்கள் இறுதி வரை ரூ. 110.61 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் எவ்விடத்தில் அமைந்துள்ளவையும் மத்திய-மாநில அரசுகளின் உதவித் தொகைத் திட்டத்தின் கீழ் இதுவரை வராதவையா…

கீழ்க்காணும் தொழிற்சாலைகள் இனி உருவாகும் நிலையான ஆஸ்தி இருப்பு மதிப்பில் 10 சதவீதம் அல்லது முறையாகப் பணிபுரியும் தொழிலாளர் ஒவ்வொருவருக்கும் ரூ. 20,000 வீதம் அல்லது ரூ. 10 இலட்சம், இவற்றில் எது குறைவோ அத் தொகையை உதவித் தொகையாகப் பெறத் தகுதியானதாகும்

அத்தொழிற்சாலைகளாவன: --

(a) மின்னணு சாதனச் தொழிற்சாலைகள்.

(b) அட்டவணையிட்ட மருந்துகளும் மருந்துக் கலவைகளும்.

(c) மோட்டார் வண்டி உதிரி உருப்புகள் தயாரிக்கும் தொழிற்சாலைகள்.

(d) சூரிய வெப்ப சக்தியை அடிப்படையாகக் கொண்டு இயங்கும் சாதனங்கள்.

இத்திட்டம் இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் முதல் முறையாக 3-10-1981 முதல் கொண்டு வரப்பட்ட சிறப்பான திட்டமாகும்.

9. தொழிற்சாலைகளுக்கு நன்கு ஊக்கமளிக்கும் வகையில் வட்டியில்லா விற்பனை வரிக்கடன் வழங்கும் திட்டத்தின் கீழ், மாநிலத்தின் பின் தங்கிய ஒன்பது மாவட்டங்களில் ஏதேனும் ஒன்றில் அமைக்கப்படவிருக்கும் நடுத்தர பெருந் தொழிற்சாலைகளுக்கும் மறைமலை நகர் தொழிற்பேட்டைகள், செங்கற்பட்டு மாவட்டத்தில் குன்னத்தூர் வட்டாரம் ஒரு இலட்சமும் அதற்கும் மேலும் மக்கள் தொகையுடைய நகர்கள், தவிர 8 கிலோ மீட்டர் எல்லையோரப் பகுதியுள்ள மதுரை, திருச்சி நகர்ப்புற கூட்டுப் பகுதிகளிலும் தொடங்கப்படவிருக்கும் தொழிற்சாலைகளுக்கும் வட்டியில்லா விற்பனை வரிக் கடன் வழங்கும் திட்டத்தினை மாநில அரசு செயற்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் நடப்பாண்டிலிருந்து 1984 சனவரித் திங்கள் இறுதிவரை ரூ. 3.31 கோடி வழங்கப்பட்டுள்ளது. 1984-85-ல் இந்த வகையில் 3.75 கோடி வழங்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்தின் பகுதி I, பகுதி II ஆகிய திட்டங்களின்கீழ் கடன் பெறத் தொழிற்சாலைகளின் வியாபாரத் தொகை முறையே ரூ. 15 இலட்சமும் ரூ. 50 இலட்சமும் ஆகும். இவை முறையே 50 இலட்சமாகவும் ஒரு கோடியாகவும் அரசு ஏற்கனவே உயர்த்தியுள்ளது.



10. பல்வேறு அரசுத்துறை நிறுவனங்களில் தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் இம்மாநிலத்தில் பெரியதோர் அமைப்பாக உயர்ந்துள்ளது. இந்தியாவிலுள்ள மாநிலத் தொழில் வளர்ச்சிக் கழகங்களிடையே தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம்தான் முக்கியமானதோர் இடத்தைப் பெற்றுள்ளது. அது ஏராளமான பெரிய நடுத்தர தொழிற்சாலைகளைத் தொடங்கியுள்ளது. அவை அரசுத் துறையிலுள்ளன. அது தனியார் தொழில் முனைவர்களின் ஒத்துழைப்போடு, கூட்டுத்துறையில் குறிப்பாகத் தனியார் தொழில் முனைவோர்கள் சொந்தமாகத் தொழில் தொடங்க முன்வராத பின்தங்கிய பகுதிகளில் ஏராளமான தொழிற்சாலைகளைத் தொடங்கியுள்ளது. அது நலிவடைந்த சில தொழில் பிரிவுகளுக்கும் உதவியளித்துள்ளது. 1-4-1983 முதல் 31-12-1983 வரையிலான காலத்தில் 'மெட்ராஸ் ஷெ பேபிரிக் லிமிடெட்' 'கண்ணன் கெமிக்கல்ஸ் அன்டு இன்டஸ்டிரீஸ் லிமிடெட்' ஆகிய இரு கூட்டுத்துறை நிறுவனங்கள் வர்த்தக அடிப்படையில் உற்பத்தியைத் தொடங்கியுள்ளன. மாநிலத்தின் பின் தங்கிய பகுதிகளில் 19 கூட்டுத் துறை தொழிற்சாலைகளை தொடங்கியுள்ளது. அது, இவை தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் குறிப்பாகத் தொழிற் துறையில் பின்தங்கிய பகுதிகளில் அமையுமாறு கவனித்துக்கொள்கிறது.

11. தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் கிளை நிறுவனமாக நிறுவப்பட்டது. சிமெண்ட் உற்பத்தி விற்பனை, சுண்ணாம்புப் பொருட்கள், சுண்ணாம்புக்கல், சாம்பல்கட்டி (clinker) ஆஸ்பெஸ்டாஸ் சிமிட்டி அட்டைகள், சிமெண்ட் உற்பத்திக்குத் தேவையான ஏனைய பொருட்கள் ஆகியவற்றை விற்பது இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கங்களாகும். இந்நிறுவனம் மூன்று தொழிற்சாலைகளை நிறுவி வருகிறது. அவை (1) ஆலங்குளம் சிமெண்ட் தொழிற்சாலை, (2) அரியலூர் சிமெண்ட் தொழிற்சாலை, (3) தமிழ்நாடு கல்நார் சிமிட்டி அட்டைகள் தொழிற்சாலை.

12. மத்திய அரசுக் கொள்கையின்படி தமிழ் நாட்டிலுள்ள சிமெண்ட் ஆலைகள் தங்களது மொத்த உற்பத்தியில் மூன்றில் இரண்டு பகுதியை லெவி சிமெண்டாக அரசுக்கு வழங்க வேண்டும். எஞ்சிய, மூன்றில் ஒரு பகுதி சிமெண்டை எவ்வித விற்பனை வினியோகக் கட்டுப்பாடுமின்றி வெளி சந்தையில் இந்த ஆலைகள் விற்பனை செய்யலாம். மேலும், இறக்குமதி செய்யும் சிமெண்ட் முழுவதும் லெவியல்லாத சிமெண்ட்டாகக் கொள்ளவேண்டுமென்று மத்திய அரசு ஆணையிட்டது. மத்திய அரசின் 1982-83 ஆம் ஆண்டு இறக்குமதிக் கொள்கையின்படி கொரியாவிலிருந்து சிமெண்ட் இறக்குமதி செய்ய தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனத்திற்கு

அனுமதியளிக்கப்பட்டது. மத்திய அரசின் 1983-84ஆம் ஆண்டு இறக்குமதி கொள்கையின்படி அரசு வாணிபக் கழகம் மட்டுமே சிமெண்ட் இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

13. **தமிழ்நாடு கனிம நிறுவனம் :** சிவகங்கையில் கிடைக்கும் கிராபைட்டைப் பயன்படுத்தும் தொழிற்சாலையை ரூ. 1.50 கோடி மதிப்பீட்டுச் செலவில் தொடங்க அரசு அனுமதி வழங்கியதோடு பங்கு மூலதனமாக ரூ. 20 லட்சம் கொடுத்துள்ளது. கருங்கற்களை அறுத்து, மெருகேற்றுவதற்கான மற்றொரு திட்டத்திற்கு ரூ. 2.85 கோடிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதில் அரசின் பங்கு மூலதனம் ரூ. 30 இலட்சமாகும். இத்திட்டப்பணி 1984-85 ஆம் ஆண்டில் தொடங்கப்படும்.

14. **தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனம் :** தமிழ்நாடு மேக்னசைட் நிறுவனம், மொத்தம் ரூ. 80 கோடி செலவில் நிறைவேற்றும் வகையில் ஒரு திட்டத்தை ஏற்படுத்தியுள்ளது. முதற்கண் ரூ. 7.65 கோடி செலவில் மாக்னசைட் தாதுப்பொருளை கரிந்த மாக்னசைட் தாதுப் பொருளாக மாற்றுவதற்கு சுழல் சூளை ஒன்றை நிறுவக் கருதப்பட்டுள்ளது. இத்திட்டப்பணி 1985-ஆம் ஆண்டு தொடங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இரண்டாம் கட்டப் பணியாக, வெட்டி எடுக்கப்பட்ட தாதுப் பொருளிலிருந்து அதிக அளவில் மாக்னசைட் எடுப்பதற்கு வகை செய்யும் பொருட்டு, மேக்னசைட் தாதுப் பொருளைச் சுத்திகரிக்கும் தொழிற்சாலை ஒன்றை ரூ. 26.5 கோடி செலவில் 1987-ல் தொடங்கக் கருதப்பட்டுள்ளது. மேற்சொன்ன திட்டப் பணிகளுக்குத் தேவைப்படும் பங்கு மூலதனத்திற்கு அனுமதி வழங்கப்படும். மூன்றாம் கட்டப்பணியாக நவீன உருக்கு ஆலைகளில் பயன்படுத்துவதற்காக ரூ. 45 கோடி மதிப்பீட்டுச் செலவில், உயர்ந்தரக வெப்பந்தாங்கிக் கற்களை தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை நிறுவக் கருதப்பட்டுள்ளது.

15. **தமிழ்நாடு மின்னணுத் தொழில் நிறுவனம் :** இம்மாநிலத்தில் மின்னணுவியல் தொழிலுக்கு நல்ல எதிர்காலம் இருப்பதைக் கருத்தில் கொண்டு மின்னணுவியல் தொழிலை தமிழ்நாட்டில் மேன்மேலும் வளர்ச்சி அடையச் செய்வதற்காக, தமிழ்நாடு மாநில அரசு தீவிர நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளது. மின்னணுக் கழகத்தின் நிருவாக அமைப்பு முறை புத்துயிரளிக்கப்பட்டுள்ளது. இக் கழகம் ஏற்கெனவே இரு பொதுத் துறை திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளது. மேலும், இந் நிறுவனத்திடம், இந்திய அரசின் முன்னனுமதிக் கடிதங்கள் பல உள்ளன. கூட்டுத் துறையில் பல திட்டப் பணிகளைச் செயல்படுத்த அவர்கள் நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றனர். கூட்டுத் துறையில் தொழிற்சாலைகளை ஏற்படுத்துவது தொடர்பாக மின்னணுவியல் கழகத்தின் இரு செயற்குறிப்புக்களுக்கு அரசு, அண்மையில் ஒப்புதல் அளித்துள்ளது.



16. **தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம் :** தற்போது சர்க்கரை ஆலைகளில் எரித்துவிடப்படும் கரும்புச் சக்கைகளை முக்கிய மூலப் பொருளாகப் பயன்படுத்தி செய்தித்தாள், அச்சுத்தாள், எழுதும் தாள் ஆகியவற்றை தயாரிக்கும் நோக்கத்தோடு, தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம் நிறுவப்பட்டது. வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு வரும் செய்தித்தாள் காகிதத்திற்கு கொடுக்கப்படும் அந்நியச் செலாவணித் தொகையில் ஆண்டுதோறும் ரூ.40 கோடி அளவிற்கு இந்நிறுவனத்தில் செய்தித்தாள் காகிதம் தயாரிக்கப்படுவதால் மிச்சம் ஏற்படும். தற்போதுள்ள தேவை சரிக்கட்டப்படுவது தவிர, செய்தித்தாள் காகிதத்தின் தேவை ஆண்டுதோறும் 8 சதவீதம் அதிகரித்து வருகிறது. இக்காகித ஆலை, 1984 ஆம் ஆண்டு மே-ஜூன் திங்களில் சோதனை முறையில் காகித உற்பத்தியைத் தொடங்கிவிடும் என்றும், 1984 ஆம் ஆண்டு செப்டம்பர்-அக்டோபர் திங்களில் முழு அளவில் செயல்படத் தொடங்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

17. **தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் :** தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம், மாநில அளவில் உள்ள நிதி நிறுவனங்களில் முதன்மையானதொன்றாகும். வளர்ச்சியைத் தீவிரமாக அதிகரிக்கும் நோக்கத்துடன் நிதியுதவி வழங்குவதே இந்நிறுவனத்தின் முக்கியக் குறிக்கோளாகும். காலந் தாழ்த்தி தொகை வழங்குவதற்கான உத்தரவாதம் பங்கு மூலதன நிதி உதவி அளிப்பதுடன் கட்டிடங்கள், தளவாடங்கள், இயந்திரங்கள், சாதனங்கள் போன்ற நிலையான சொத்துக்களை வாங்குவதற்கும் இந்நிறுவனம் கடன் உதவி வழங்குகிறது. இதுவரை, தகுதி வாய்ந்த தொழில் முனைவர்களுக்கு, மாநில, மத்திய அரசுகள் உதவித் தொகை வழங்கிய பிறகுதான், அவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்பட்டு வந்தது. இதனால் கால தாமதம் ஏற்பட்டு வந்தது. இதற்கிடைப்பட்ட காலத்தில் தொழில் முனைவர்களுக்கு இணைப்புக் கடன் வழங்கப்பட்டது. இத்தொகைக்கு அவர்கள் வட்டி செலுத்தும்படி இருந்தது. மாநில அளவு முழு உதவித் தொகை வழங்குவதற்கு அனுமதி அளித்தவுடன் இந்நிறுவனம் தன்னுடைய சொந்த நிதியிலிருந்து தொழில் முனைவர்களுக்கு நேரடியாகத் தொகை வழங்குவதற்கான புதிய முறையை அண்மையில் பின்பற்றத் தொடங்கியுள்ளது. இந்த உதவித் தொகைக்கு வட்டியில்லை; இதற்கான செலவினை நிறுவனமே ஏற்கிறது. சிறு முதலீட்டுடன் தொழில்கள் ஆரம்பிக்கும் முனைவர்கள், சிறுதொழில் முனைவர்கள் ஆகியோருக்கு மூலதனம் பெறுவதில் கடன் பெறுவதில் ஏற்படும் விலைமதிப்பீடு மேலும் காலதாமதம் ஆகிய இடர்ப்பாடுகள் ஏற்படாமல் தடுக்கப்படுகிறது.

[1984 மார்ச் 24

18. தொழில் நுட்பம் அறிந்தவர்கள் கல்வி, அறிவுள்ளவர்கள் அல்லது ஏனைய தகுதி உள்ளவர்கள் அல்லது போதிய முன்னனுபவம் உடையவர்கள் ஆகியோர் முதல் முறையாகத் தொழில் தொடங்கினால் அவர்களுக்குக் குறைந்த வட்டியுடன் கடன் வழங்கும் திட்டத்தின் விதிகள் தளர்த்தப்பட்டுள்ளன. அவ்வாறு அவர்கள் தொடங்கும் தொழில்கள், பின்தங்கிய பகுதியில்லாத இடத்தில் இருந்தால் அவர்களுக்கு வழங்கும் கடன் தொகையின் உயர் வரம்பு மீதான 10சதவீதக் கட்டுப்பாடும், பின்தங்கிய பகுதியில் அமைந்திருந்தால் 15 சதவீதக் கட்டுப் பாடும் விலக்கப்படுகிறது.

19. மத்திய அரசின் முதலீடு : கடந்த 10 ஆண்டுகளாகத் தமிழ் நாட்டிற்கு வழங்கப்பட்டு வரும் மத்தியத் துறையின் முதலீட்டுத் தொகை மிகவும் குறைவாக உள்ளது. கடந்த 10 ஆண்டுகளில் மத்தியத் துறை தமிழ்நாடு மாநிலத்தின் முதலீடு செய்துள்ள தொகையின் அளவு 8 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாகக் குறைந்துள்ளது. முதலீட்டுத் தொகை வழங்குவதில் ஏற்றத்தாழ்வுகாண்பிக்கப்படக்கூடாது என்றும் தமிழ்நாட்டிற்கும் உரிய தொகையை வழங்கவேண்டுமென்றும் மாநில அரசு மத்திய அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது. திரைப்படத் தயாரிப்பு வண்ணப் படச் சுருள் திட்டம் தவிர உதகமண்டலத்திலேயே இரு திட்டப் பணிகளை இந்துஸ்தான் போட்டோ பில்ம்ஸ் மேனுபேக்சரிங் கம்பெனி லிமிடெட் மூலம் ஏற்படுத்த வேண்டுமென்று அதாவது எக்ஸ்ரே-கதிர் படச் சுருள் மேலும் மின் காந்த நாடா தயாரிப்புப் (Magnctic Tape Project) பிரிவுகளை ஏற்படுத்த வேண்டுமென்று இந்திய அரசை, தமிழ்நாடு அரசு வலியுறுத்தி வருகிறது. மேலும், ஆவடியிலுள்ள கனரக வண்டிகள் தயாரிப்புத் தொழிற்சாலையில் (Heavy Vehicles Factory) நவீன யுத்த டாங்கிகள் தயாரிக்கும் வகையில் ஏற்படுத்தக்கருதியுள்ள விரிவாக்கத் திட்டத்தைத் திருவள்ளூர் வட்டத்திலேயே நிறுவவேண்டும் என்று இந்திய அரசை, மாநில அரசு வற்புறுத்தி வருகிறது. ரூ. 600 கோடி மூலதனத்துடன் சென்னை இரசாயன உர நிறுவனத்தின் விரிவாக்கத்தை உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்று மாநில அரசு வற்புறுத்தி வருகிறது.



1984 மார்ச் 24]

## தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம்

தமிழக அரசுக்குச் சொந்தமான தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ) பொதுத்துறையில் ஆலங்குளத்தில் சிமிண்டு ஆலையையும், அரக்கோணத்தில் உருக்குத் தொழிற் சாலையையும் செயலாக்கும் நோக்கத்துடன் 1965-ல் நிறுவப் பட்டது. மைய அரசின் கூட்டுறவுத்துறை கொள்கை காரணமாக தனியார் தொழில் முனைவர்களின் ஒத்துழைப்புடன் குறிப்பாக தனியார் தொழில் முனைவர்கள் சொந்தமாக தொழில் தொடங்க முன்வராத பின்தங்கிய பகுதிகளில் பெருந் தொழில்களை கூட்டுத் துறையில் நிறுவ இதன் பணி விரிவாக்கப்பட்டது. மூலதனத்தில் பங்கேற்பதன் மூலம் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் கூட்டுத்துறைத் திட்டங்களுக்கு கீழ்க்கண்டவாறு நிதி உதவி அளிக்கிறது.

| விவரம். | டிட்கோவின் மூலதனப் பங்கேற்பு. |
|---|---|
| ரூ. 100 இலட்சத்திற்கு மேல் செலவாகும் திட்டங்கள். | மூலதனப் பங்குகளில் 26 விழுக்காடு. |
| ரூ. 50 இலட்சமும் அதற்கு மேலும், ஆனால் ரூ. 100 இலட்சத்திற்குக் குறைந்த திட்டச் செலவு கொண்ட திட்டங்கள். | மூலதனப் பங்குகளில் 15 விழுக்காடு. |

தனியார் தொழில் முனைவர்களிடமிருந்து மூலதனப் பங்கில் 25 விழுக்காடும், எஞ்சிய மூலதனப் பங்கு பொது மக்களிடம் இருந்தும் பெறப்படுகிறது. நிதி நிறுவனங்களிடமிருந்தும், வங்கிகளிடமிருந்தும் தவணைக் கடன்கள் பெறப்படுகின்றன.

2. கடந்த 19 ஆண்டுகளில் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் பலதிறப்பட்ட தொழில்களை மேற்கொண்டுள்ளது. பொதுத்துறையில் புதுத் திட்டங்களை ஏற்படுத்தியுள்ளது. தனியார் தொழில் முனைவர்களின் ஒத்துழைப்புடன் கூட்டுத் துறைத் திட்டங்களையும் நிறுவியுள்ளது. மேலும் இடர்பாட்டில் உள்ள சில நலிந்த தொழிற் பிரிவுகளுக்கும் உதவியுள்ளது.

3. 31-3-1983 அன்றுள்ளபடி (a) உற்பத்தியில் உள்ள (b) நிறைவேற்றப்பட்டு வருகின்ற தொழில் திட்டங்கள் குறித்த விவரம் பின்வரும் விவர அறிக்கையில் காணலாம்.—

| விவரம். | திட்டங்களின் எண்ணிக்கை. | திட்டச் செலவு. | வேலை வாய்ப்பு. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | (ரூபாய் கோடியில்.) | |
| **பொதுத்துறை :** | | | |
| உற்பத்தியில் உள்ள திட்டங்கள். | 5 | 57.12 | 3,702 |
| நிறைவேற்றப்பட்டு வருகின்ற திட்டங்கள். | 4 | 43.30 | 1,090 |
| **கூட்டுத்துறை :** | | | |
| உற்பத்தியில் உள்ள திட்டங்கள். | 20 | 224.57 | 6,089 |
| நிறைவேற்றப்பட்டு வருகின்ற திட்டங்கள். | 8 | 57.66 | 2,773 |
| மொத்தம் .. | 37 | 382.65 | 13,654 |

4. 1—4—1983 முதல் 31-12-1983 வரையில் கீழ்க்கண்ட இரண்டு கூட்டுத் துறை திட்டங்கள் உற்பத்தியைத் தொடங்கியுள்ளன :—

(அ) மெட்ராஸ் ஷு [illegible] லிமிடெட் :

இத்திட்டம் அமெரிக்கா நாட்டு திருவாளர்கள் எச்., எச். பிரௌன் ஷு நிறுவனத்தின் உடன்துழைப்புடன் 100 விழுக்காடு ஏற்றுமதிக்காக தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படும் ஷுக்களை (Industrial Shoes) தயாரிப்பதற்கானதாகும். இது ஆண்டிற்கு ஆறு இலட்சம் ஜோடி ஷுக்களை தயாரிப்பதற்கான நிறுவு திறன் கொண்டது. இத்திட்டத்திற்கான செலவு ரூ. 106





இலட்சமாகும். இத்திட்டம் 300 பேருக்கு வேலை வாய்ப்பு அளித்துள்ளது. இத் தொழிற்சாலை 1983-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் உற்பத்தியைத் தொடங்கியது. கணிசமான அளவு ஷுக்களை ஏற்கனவே ஏற்றுமதி செய்துள்ளது.

(ஆ) [illegible] கெமிக்கல்ஸ் அண்டு இன்டஸ்ட்ரீஸ் லிமிடெட் :

இந்தத் தொழிற்சாலை கந்தக அமிலத்தையும் ஒலியத்தையும் தயாரிக்கிறது. இதன் நிறுவுத் திறன் ஆண்டொன்றுக்கு 33,000 டன் கந்தக அமிலமும், 6,600 டன் ஒலியமும் ஆகும். இத்திட்டத்திற்கான செலவு ரூ. 216 இலட்சம். இத்திட்டத்தினால் 61 பேர் வேலை வாய்ப்புப் பெற்றுள்ளனர். இத்திட்டம் கடந்த அக்டோபர் திங்களில் அதன் வணிக அளவிலான உற்பத்தியைத் தொடங்கியது.

5. மேற்சொன்ன இரண்டு நிறுவனங்களைத் தவிர ஃபைபர் பைப்ஸ் (இந்தியா) லிமிடெட் நிறுவனம் அதன் வணிக அளவிலான உற்பத்தியை 1984 மார்ச் திங்களில் தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இது பிட்ச் ஃபைபர் குழாய்கள் (Pitch Fibre Pipes) தயாரிப்பதற்கான திட்டமாகும். இதன் நிறுவுத் திறன் ஆண்டொன்றுக்கு 6,220 டன்கள் ஆகும். இதன் திட்டச் செலவு ரூ. 180 இலட்சமாகும். இதன் மூலம் 300 பேருக்கு வேலை வாய்ப்பு கிட்டும்.

6. 1984–85-ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட தொழிற் பிரிவுகள் வணிக அளவில் உற்பத்தியைத் தொடங்கத் திட்டமிட்டுள்ளன:—

| விவரம். | மூலதனச் செலவு. | வேலை வாய்ப்பு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (ரூபாய் கோடியில்.) | |
| பொதுத்துறை : | | |
| (அ) ரீரோலிங் மில் திட்டம் .. | 7.82 | 131 |
| (ஆ) தமிழ்நாடு தொழிலியல் வெடிமருந்து நிறுவனம். | 20.85 | 542 |
| (இ) மக்னீசியம் மெட்டல் திட்டம் | 5.18 | 110 |
| (ஈ) அஸ்பெஸ்டாஸ் அழுத்தக் குழாய் திட்டம் (தமிழ்நாடு சிமெண்டு நிறுவனத்தினுடையது). | 9.45 | 307 |

[1984 மார்ச் 24

| விபரம். | மூலதனச் செலவு. | வேலை வாய்ப்பு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (ரூபாய் கோடியில்.) | |
| கூட்டுத் துறை : | | |
| (அ) ஃபேப்லின் லிமிடெட் .. | 1.34 | 410 |
| (ஆ) கோட் ஸ்கின் திட்டம் (Goat Skin) | 1·60 | 150 |
| (இ) தமிழ்நாடு ப்ளோரின் அண்டு அலைடு கெமிக்கல்ஸ் லிமிடெட். | 16·95 | 307 |
| மொத்தம் .. | 63.19 | 1,957 |

7. உற்பத்தி செய்யும் நிலையிலும் செயற்படுத்தப்படும் நிலையிலும் உள்ள 37 திட்டங்களில் 19 திட்டங்கள் இம்மாநிலத்தின் பின்தங்கிய பகுதிகளில் தொடங்கப்பட்டுள்ளன. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் அதிலும் குறிப்பாக பின்தங்கிய பகுதிகளில் தொழிற்சாலைகள் தொடங்கப்பட வேண்டும் என்பதில் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் கவனம் செலுத்துகிறது. இவைகளைத் தவிர 17 திட்டங்கள் ஆய்வில் உள்ளன. இத்திட்டங்கள் திட்டமிடுதல், சாத்தியக் கூறு அறிக்கை தயாரித்தல், உரிமம் பெறுதல் அல்லது டி.ஜி.டி.டி. பதிவு பெறுதல் போன்ற பல்வேறு நிலைகளில் உள்ளன. இவ்வாறாக தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் இம்மாநிலத்தில் நடுத்தர, பெருந்தொழில் முன்னேற்றத்தில் முக்கிய பங்காற்றி இந்நாட்டிலுள்ள மாநில அளவிலான தொழில் வளர்ச்சி நிறுவனங்களிடையே சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது.

8. தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் உற்பத்தியில் உள்ள தொழில் திட்டங்கள் வாயிலாக இதுவரை சுமார் 10,000 பேருக்கு வேலை வாய்ப்பு அளித்துள்ளது. செயற்படுத்தும் நிலையிலும் பரிசீலனையிலுள்ள திட்டங்கள் உற்பத்தியைத் தொடங்கும்போது மேலும் 9,000 பேருக்கு வேலை வாய்ப்பினை அளிக்கும். அவ்வாறாக தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் இம்மாநிலத்தின் தொழில் வளர்ச்சியில் முன்னணியில் நிற்பதுடன் தமிழ்நாட்டில் நிலவும் வேலை இல்லாத திண்டாட்டத்தை ஓரளவுக்குக் குறைக்கவும் உதவுகிறது.



1984 மார்ச் 24]

தமிழ் நாடு சிமெண்டு நிறுவனம்.

1. பொது—

1. 1976 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 11 ஆம் தேதி தமிழ் நாடு சிமிண்டு நிறுவனம் (டான்செம்) தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் (டிட்கோ) கிளை நிறுவனமாக பதிவு செய்யப்பட்டது.

1.2. அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனமாக ரூ. 10 கோடியுடன் துவங்கப்பட்ட இந்நிறுவனத்தின் பங்கு மூலதனம் 1977 ஆம் ஆண்டு ஜூன் திங்களில் ரூ. 11 கோடிக்கு உயர்த்தப்பட்டது. மேலும் இது 1980 ஆம் ஆண்டு ஜனவரி திங்களில் ரூ. 12.5 கோடிக்கு உயர்த்தப்பட்டது. இதுவரை இந்த பங்கு மூலதனத்தில் ரூ. 11.81 கோடி மூலதனமாக செலுத்தப்பட்டுவிட்டது.

1.3. தமிழ் நாடு சிமிண்டு நிறுவனம் அதன் வாணிபத்தை, 1—4—1976 முதல் செயல்படுத்தத் தொடங்கியது. இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கம் சிமிண்டைத் தயாரித்தல், அதனை, விற்பனை செய்தல் மற்றும் சுண்ணாம்பு, சுண்ணாம்புக்கல் கிளிங்கர், சிமிண்டு ஆஸ்பெஸ்டாஸ் மற்றும் சிமிண்டு தயாரிப்புக்குத் தேவையான மற்ற அது சம்பந்தப்பட்ட பொருள்களில் ஈடுபட்டு வருதலுமாகும். இந்நிறுவனம் அதன் கீழ்க்கண்ட திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

2. தற்போது பின்வரும் மூன்று ஆலைகள் தமிழ்நாடு சிமிண்டு நிறுவனத்தால் நடத்தப்பட்டு வருகின்றன :—

| சிமெண்டு ஆலைகள். | உற்பத்திப் பொருள். | ஆண்டொன்றுக்கு நிறுவிய திறன். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | (இலட்சம் மெட்ரிக் டன்.) |
| (அ) ஆலங்குளம் சிமிண்டு தொழிற்சாலை. | சிமிண்டு | 4 |
| (ஆ) அரியலூர் சிமிண்டு தொழிற்சாலை. | சிமிண்டு | .. |
| (இ) ஆஸ்பெஸ்டாஸ் ஆலை : | | |
| தமிழ் நாடு ஆஸ்பெஸ்டாஸ் | ஆஸ்பெஸ்டாஸ் தகடுகள் மற்றும் துணைப் பொருட்கள். | 30,000 |

[1984 மார்ச் 24

2.1. ஆண்டொன்றுக்கு 36,000 டன் உற்பத்தித் திறன் கொண்ட ஆஸ்பெஸ்டாஸ் அழுத்தக் குழாய் திட்டத்தை திருச்சி மாவட்டம், மாயனூரில் தமிழ்நாடு சிமிண்டு நிறுவனம் நிறுவி வருகிறது.

2.2. தமிழ்நாடு சிமிண்டு நிறுவனம் ஆண்டுக்கு 5 இலட்சம் டன் உற்பத்தித்திறனிலிருந்து ஆண்டுக்கு 10 இலட்சம் டன் உற்பத்தித்திறனுக்கு அரியலூர் சிமிண்டு ஆலையை விரிவாக்கம் செய்யும் திட்டத்தை மேற்கொள்ள உத்தேசித்துள்ளது.

3. ஆலங்குளம் சிமெண்ட் தொழிற்சாலை :

3.1. ஆலங்குளம் சிமிண்டு தொழிற்சாலை 1964 ஆம் ஆண் டில் தொடங்கப்பட்டது. இத்தொழிற் பிரிவு 1970 ஆம் ஆண்டு வணிக அளவில் உற்பத்தியைத் தொடங்கியது. இதன் நிறுவு திறன் ஆண்டொன்றுக்கு 4 இலட்சம் டன். தமிழ்நாடு சிமிண்டு நிறுவனம் இந்த ஆலையை தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்திடமிருந்து 1-4-1976 அன்று ரூ. 666 இலட்சம் நிகர கணக்கு மதிப்புக்கு எடுத்துக் கொண்டது. இப்போது இந்த ஆலை தனது 14 ஆண்டுப் பணியை நிறைவு செய்துள்ளது.

3.2. நடைமுறையில் செயல்படுத்தப்பட்டதிலிருந்து பல் வேறு காரணங்களால் ஆலங்குளம் சிமிண்டு ஆலை திட்டமிட்ட படி அதன் உற்பத்தித் திறனை எய்த முடியவில்லை. 27—2—82 வரை மைய அரசால் நிர்ணயிக்கப்பட்ட இருத்தி வைப்பு விலை யும் போதுமானதாக இல்லை. இதன் விளைவாக ஆரம்ப இரண்டு ஆண்டுகளில் ஈட்டிய சொற்ப இலாபத்தைத் தவிர இத் தொழிற்சாலை தொடர்ந்து 1981-82 வரை நட்டத்தில் இயங்கி வந்துள்ளது.

3.3. இந்த ஆலையின் உற்பத்தி மற்றும் விற்பனை பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| ஆண்டு. | ஆண்டின் போது உற்பத்தி. | ஆண்டின் போது விற்பனை. |
|---|---|---|
| | (மெட்ரிக் டன்களில்.) | |
| 1976-77 .. .. .. | 3,38,445 | 3,33,294 |
| 1977-78 .. .. .. | 3,09,105 | 3,07,607 |
| 1978-79 .. .. .. | 3,19,277 | 3,20,379 |
| 1979-80 .. .. .. | 2,74,400 | 2,77,655 |
| 1980-81 .. .. .. | 3,01,148 | 3,06,614 |
| 1981-82 .. .. .. | 2,93,515 | 2,93,399 |
| 1982-83 .. .. .. | 2,80,760 | 2,83,508 |



1984 மார்ச் 24]

3.4. தேசிய அளவிலான நிலக்கரிப் பற்றாக்குறை. மின் சக்தியின் மீதான உயர்ந்தபட்சத் தேவையிலான தடை, உயர் மின்சக்தி நுகர்வோர்களின் மீது கொண்டு வரப்பட்ட மின்வெட்டு இரயில் பெட்டிகள் பற்றாக்குறை ஆகியவையே இத் தொழிற் சாலையின் குறைந்த உற்பத்திக்குப் பெரும் புறக்கட்டுப்பாடு களாக இருந்தன.

3.5. நட்டத்தையே எய்தி வந்த ஆலங்குளம் சிமிண்டு ஆலை, அதை மாற்றி 1982-83 ஆம் ஆண்டில் இலாபத்தை ஈட்டத் தொடங்கிவிட்டது. அண்மையில் ஆலையின் மேம்பாட்டு மற் றும் நவீனப்படுத்தும் திட்டம் ரூபாய் 425 இலட்சம் செலவில் செய்து முடிக்கப்பட்டுள்ளது. இது ஆலையின் உற்பத்தியை அதி கரிக்கவும் ஆலைப் பகுதியில் காற்று அசுத்தமாவதைக் குறைக்க வும் உதவும்.

3.6. இந்தத் தொழிற்பிரிவு பின் தங்கிய பகுதியில் சுமார் 1,600 பேருக்கு நேரடி வேலை வாய்ப்பிற்கு வகை செய்வதுடன் கச்சாப் பொருள்கள் உற்பத்தி செய்யப்பட்ட சரக்குகள் முதலிய வற்றை ஏற்றிச் செல்வதற்கான சார்பு வேலை வாய்ப்பிற்கும் கணிசமான அளவில் வகை செய்து கொண்டிருக்கிறது.

4. அரியலூர் சிமெண்ட் தொழிற்சாலை :

4.1. அரியலூர் சிமிண்டு ஆலை உலர்முறை தயாரிப்பு ஆலை யாகும். இதன் நிறுவுத்திறன் ஆண்டுக்கு 5 இலட்சம் டன். இத்திட்டம் ஆரம்பத்தில் ரூபாய் 2,876 இலட்சம் செலவில் தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தால் துவங்கப்பட்டது. இத்திட்டத்திற்கு தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்திடம் இருந்து பங்கு மூலதனமாக ரூபாய் 575 இலட்சமும் அனைத்து இந்திய நிதி நிறுவனங்களிடமிருந்து நிதி உதவியாக ரூபாய் 1,800 இலட்சமும் மற்றும் வணிக வங்கிகளிடமிருந்து ரூபாய் 501 இலட்ச மும் பெறப்பட்டுள்ளது.

4.2. திட்டப்பணிகள் அரியலூரில் 1977 ஆம் ஆண்டு சனவரி யில் துவங்கப்பட்டது. சிமிண்டு உற்பத்தி 1—8—1979-ல் தொடங்கப்பட்டது. அரியலூர் சிமிண்டு ஆலை கால்கோள் செய்யப்பட்ட குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்கப்பட்டது மட்டுமல்லாமல் உற்பத்தியை 30 மாதங்களுக்குள் தொடங்கியது.

4.3. இந்த ஆலையின் உற்பத்தி மற்றும் விற்பனை பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

| ஆண்டு. | ஆண்டின் போது உற்பத்தி. | ஆண்டின் போது விற்பனை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (மெட்ரிக் டன்களில்.) | |
| 1979-80 (8 மாதங்களுக்கு) | 1,15,919 | 1,15,525 |
| 1980-81 .. .. .. | 2,46,733 | 2,41,949 |
| 1981-82 .. .. .. | 2,84,350 | 2,87,474 |
| 1982-83 .. .. .. | 2,47,300 | 2,47,836 |

4.4. ஆரம்ப காலத்தில் இந்த ஆலை இயங்கத் தொடங்கியபோது, நிலக்கரி பற்றாக்குறை, மின்சக்தியைப் பயன்படுத்துவதிலான தடைகள், இரயில் பெட்டிகள் பற்றாக்குறை ஆகிய புறக்கட்டுப்பாடுகளுடன் இயந்திரக் கோளாறுகளையும் சமாளிக்க வேண்டியதாயிற்று. இயந்திரங்களிலுள்ள கோளாறுகள் ஏறத்தாழ சரி செய்யப்பட்டுவிட்டன. ஆலைக்கு ஏற்பட்டுள்ள இடர்பாடுகளைத் தவிர்ப்பதற்கு தொடர் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

4.5. மேற்சொன்ன காரணங்களின் நிமித்தம் குறைந்த உற்பத்தித்திறன் பயன்பாட்டால் இந்தத் தொழிற் பிரிவு நட்டத்தை அடைந்து வருகிறது. 1984-85 ஆம் ஆண்டில் 4.5 இலட்சம் டன் சிமிண்டு உற்பத்தி செய்ய திட்டமிட்டுள்ளது.

4.6. இந்த ஆலை சுமார் 900 பேருக்கு நேரடி வேலை வாய்ப்பிற்கு வகை செய்வதுடன் கச்சாப் பொருள்கள், உற்பத்தி செய்யப்பட்ட சரக்குகள் முதலியவற்றை ஏற்றிச் செல்வதற்கான சார்பு வேலை வாய்ப்பிற்கும் கணிசமான அளவில் வகை செய்து உள்ளது.





5. தமிழ்நாடு ஆஸ்பெஸ்டாஸ் :

5.1. பல்வகைப்படுத்தும் திட்டத்தின் முதற்படியாக தமிழ்நாடு சிமிண்டு நிறுவனம் ஆண்டொன்றுக்கு 36,000 டன் ஆஸ்பெஸ்டாஸ் சிமிண்டு தகடுகளை உற்பத்தி செய்யும் திறன் கொண்ட திட்டத்தை ஆலங்குளத்தில், அனைத்திந்திய நிதி நிறுவனங்களிடமிருந்து பெற்ற நிதி உதவியுடன் ரூபாய் 250 இலட்சச் செலவில் நிறுவியுள்ளது. இந்த தொழிற் பிரிவு அதன் வணிக அளவிலான உற்பத்தியை 1-10-1981-ல் தொடங்கியது.

5.2. இந்த ஆலையின் உற்பத்தி மற்றும் விற்பனை பற்றிய விவரங்ள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| ஆண்டு. | ஆண்டின் போது உற்பத்தி. | ஆண்டின் போது விற்பனை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (மெட்ரிக் டன்னில்.) | |
| 1981-82 (6 மாதங்களுக்கு) | 8,251 | 5,067 |
| 1982-83 .. .. .. | 19,091 | 19,867 |

5.3. மின்வெட்டால் இந்த ஆலையின் உற்பத்தியும் பாதிக்கப்பட்டது. இத்தொழிற்பிரிவு 1983-84 ஆம் ஆண்டில் 18,760 மெட்ரிக் டன் மற்றும் 1984-85 ஆம் ஆண்டில் 27,000 மெட்ரிக் டன் ஆஸ்பெஸ்டாஸ் தகடுகளையும் துணைப் பொருள்களையும் உற்பத்தி செய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது. செயல்படத் தொடங்கிய இரண்டாம் ஆண்டிலிருந்து இந்த ஆலை இலாபத்தை ஈட்டத் தொடங்கியுள்ளது.

5.4. இந்தத் தொழிற் பிரிவு சுமார் 250 பேருக்கு நேரடி வேலை வாய்ப்பிற்கு வகை செய்வதுடன் கச்சாப் பொருள்கள் உற்பத்தி செய்யப்பட்ட சரக்குகள் முதலியவற்றை ஏற்றிச் செல்வதற்கான சார்பு வேலை வாய்ப்பிற்கும் கணிசமான அளவில் வகை செய்துள்ளது.

6. தமிழ்நாடு ஆஸ்பெஸ்டாஸ் அழுத்தக் குழாய்த் திட்டம் :

6.1. ஆஸ்பெஸ்டாஸ் சிமிண்டு ஷிட் திட்டத்தினை வெற்றிகரமாக செயல்படுத்தியதன் மூலம் ஊக்கம் அளிக்கப்பட்டு ஆண்டொன்றுக்கு 36,000 டன் உற்பத்தித் திறனுள்ள ஆஸ்பெஸ்டாஸ்

அழுத்தக் குழாய் திட்டத்தை தமிழ்நாடு சிமிண்டு நிறுவனம் நிறுவி வருகிறது. இதன் திட்டச் செலவு ரூ. 945 இலட்சமாகுமென எதிர்பார்க்கப்படுகிறது. தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனமும் அனைத்திந்திய நிதி நிறுவனங்களும் இத்திட்டத்திற்கு நிதி உதவி அளித்துள்ளன.

6.2. திட்டப் பணிகள் முன்னேற்றமடைந்து 1984 செப்டம்பர் திங்களில் முடிவுறும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத் தொழிற் பிரிவு வணிக அளவிலான உற்பத்தியை 1984 அக்டோபர் திங்களில் தொடங்கும். இத்திட்டம் செயல்படுத்தப்படும் போது சுமார் 300 பேருக்கு நேரடி வேலை வாய்ப்பிற்கு வகை செய்வதுடன் கணிசமான அளவு சார்பு வேலை வாய்ப்பிற்கும் வகை செய்யும்.

7. இறக்குமதி செய்யப்பட்ட சிமெண்டைக் கையாளுதல் :

7.1. கடந்த 31-3-1983 உடன் முடிவடைந்த நிதி ஆண்டின் போது தமிழ்நாடு சிமிண்டு நிறுவனம் சென்னை துறைமுகத்தில் இறக்குமதி செய்யப்பட்ட 2,65,520 மெட்ரிக் டன் சிமிண்டையும் தூத்துக்குடியில் இறக்குமதி செய்யப்பட்ட 89,873 மெட்ரிக் டன் சிமிண்டையும் பாண்டிச்சேரி துறைமுகத்தில் இறக்குமதி செய்யப்பட்ட 21,026 மெட்ரிக் டன் சிமிண்டையும் கையாண்டுள்ளது.

7.2. நடப்பு ஆண்டில், சென்னை துறைமுகத்தில் இறக்குமதி செய்யப்பட்ட 2,91,888 மெட்ரிக் டன் சிமிண்டையும் தூத்துக்குடி துறைமுகத்தில் இறக்குமதி செய்யப்பட்ட 33,910 மெட்ரிக் டன் சிமிண்டையும் பாண்டிச்சேரி துறைமுகத்தில் இறக்குமதி செய்யப்பட்ட 10,502 மெட்ரிக் டன் சிமிண்டையும் தமிழ்நாடு சிமிண்டு நிறுவனம் கையாண்டு வருகிறது. இதில் டி.பி.ஆர். கொரியாவிலிருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட 1,93,594 மெட்ரிக் டன் சிமிண்டும் தென் கொரியாவிலிருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட 3,14,300 மெட்ரிக் டன் சிமிண்டும் அடங்கும்.

8. அரியலூர் சிமெண்டு தொழிற்சாலை விரிவாக்கம் :

8.1. அரியலூர் சிமிண்டு ஆலையின் உறிபத்தித் திறனான ஆண்டுக்கு 5 இலட்சம் மெட்ரிக் டன்னிலிருந்து ஆண்டுக்கு 10 இலட்சம் மெட்ரிக் டன்னாக உயர்த்துவதற்கான செயற்குறிப்பை தமிழ்நாடு சிமிண்டு நிறுவனம் கொண்டுள்ளது. இசைவுக் கடிதத்தைப் பெற மைய அரசுக்கு விண்ணப்பித்துள்ளது. தமிழக அரசும் தமிழ்நாடு சிமிண்டு நிறுவனத்தின் கோரிக்கையை மைய அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளது. மைய அரசிடமிருந்து இசைவுக் கடிதம் எதிர்பார்க்கப்படுகிறது.



8.2. மைய அரசிடமிருந்து இசைவுக் கடிதத்தைப் பெறுவதற்குட்பட்டு இத்திட்டம் 1985-86-ல் மேற்கொள்ளப்பட்டு நான்கு ஆண்டுகளில் முடிவுறுமென எதிர்பார்க்கப்படுகிறது. இதன் திட்டச் செலவு ரூ. 40 கோடியாகுமென எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டம் செயல்படுத்தப்படும் போது சுமார் 1,000 பேருக்கு நேரடி வேலை வாய்ப்பிற்கு வகைசெய்வதுடன் கணிசமான அளவு சார்பு வேலை வாய்ப்பிற்கும் வகை செய்யும்.

9. பாளையம் சிமெண்டு தொழிற்சாலைத் திட்டம் :

9.1. மதுரை மாவட்டம், பாளையம் பகுதியில் ஆண்டொன்றிற்கு 4 இலட்சம் டன் சிமெண்டு உற்பத்தி செய்யும் திறன் கொண்ட திட்டத்தை அமைக்க தமிழக அரசு ஒப்புதல் அளித்துள்ளது. தமிழ்நாடு சிமெண்டு நிறுவனம் இசைவுக் கடிதம் பெற மைய அரசுக்கு விண்ணப்பம் அனுப்பியுள்ளது. மைய அரசிடமிருந்து இசைவுக் கடிதம் எதிர்பார்க்கப்படுகிறது. மைய அரசிடமிருந்து இசைக் கடிதத்தைப் பெற தமிழக அரசு தொடர் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

9.2. மைய அரசிடமிருந்து இசைவுக் கடிதத்தை பெறுவதற்குட்பட்டு இத்திட்டம் 1985-86-ல் மேற்கொள்ளப்பட்டு, நான்கு ஆண்டுகளில் முடிவுறுமென எதிர்பார்க்கப்படுகிறது. இதன் திட்டச் செலவு ரூ. 40 கோடியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டம் செயல்படுத்தப்படும்போது சுமார் 1,000 பேருக்கு நேரடி வேலை வாய்ப்பிற்கு வகை செய்வதுடன் கணிசமான அளவு சார்பு வேலை வாய்ப்பிற்கும் வகை செய்யும்.

10. முன்னோடி சிமெண்டு ஆலை :

திருச்சி மாவட்டம் முதுவத்தூரிலுள்ள முன்னோடி சிமெண்டு ஆலையை அண்மையில் தமிழ்நாடு சிமிண்டு நிறுவனம் இந்திய சிமெண்டு ஆராய்ச்சி நிறுவனத்திடம் இருந்து எடுத்துக் கொண்டது. இந்த ஆலை 1984-85 ஆம் ஆண்டில் உற்பத்தியைத் தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இதன் மூலம் சுமார் 65 பேருக்குவேலை வாய்ப்பு கிட்டும்.

## தமிழ்நாட்டில் சிமெண்ட் விநியோகம்.

1—3—1982-க்கு முன்பு தமிழ்நாட்டில் சிமெண்ட் விநியோகம் அரசின் முழுக் கட்டுப்பாட்டில் இருந்து வந்தது. 28—2—1982 அன்று மத்திய அரசு சிமெண்ட்டின் மீதான கட்டுப்பாட்டை ஓரளவு தளர்த்தியது.

2. தமிழ்நாட்டில் சராசரியாக ஒரு காலாண்டுக்கு 6 இலட்சம் டன் சிமெண்ட் தேவையாயுள்ளது. சிமெண்ட்டின் மீதான கட்டுப்பாடு தளர்த்தப்படுவதற்கு முன்பு சராசரியாக ஒரு காலாண்டுக்கு 3.90 லட்சம் டன் சிமெண்டை மத்திய அரசு ஒதுக்கி வந்தது. ஆனால் கட்டுப்பாடு தளர்த்தப்பட்ட பின்பு 1.42 லட்சம் டன் லெவி சிமெண்ட் மட்டுமே ஒரு காலாண்டுக்கு ஒதுக்கப்பட்டது. 1983-ல் இரண்டாம் காலாண்டுக்குப் பிறகு இது 1.52 லட்சம் டன்னாக கூட்டப்பட்டது.

3. மத்திய அரசின் கொள்கையின்படி, தமிழ்நாட்டிலுள்ள சிமெண்ட் ஆலைகள் தமது உற்பத்தித் திறனில் மூன்றில் இரண்டு பங்கை அரசுக்கு லெவி சிமெண்ட்டாக அளிக்க வேண்டும். மீதமுள்ள மூன்றில் ஒரு பங்கு சிமெண்டை தொழிற்சாலைகள் விலை அல்லது விநியோக கட்டுப்பாடில்லாமல் வெளிச் சந்தையில் விற்கலாம். அத்துடன் மத்திய அரசு, தமிழ்நாட்டில் இறக்குமதியாகும் எல்லா சிமெண்ட்டும் நான்-லெவி சிமெண்ட்டாக கருதப்படும் என்றும் அறிவித்தது.

4. 1983-84-ஆம் ஆண்டிற்கான இறக்குமதி கொள்கையின் அடிப்படையில் இவ்வரசு 'டான்செம்' நிறுவனத்தை கொரியாவிலிருந்து சிமெண்ட் இறக்குமதி செய்ய அனுமதித்தது. அதன்படி 'டான்செம்' நிறுவனம் கொரியாவிலிருந்து 1,93,594 டன்களும், தென் கொரியாவிலிருந்து 3,14,500 டன்னும் இறக்குமதி செய்தது.

5. 1983-84-ஆம் ஆண்டிற்கான இறக்குமதி கொள்கையின்படி, மத்திய அரசு ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் நிறுவனத்தை சிமெண்ட் இறக்குமதி செய்யும்படி அனுமதிக்கப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம்.

தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்) மார்ச் 1971 முதல் தமிழக அரசிற்கே முழுவதும் சொந்தமாக வரையறுக்கப்பட்ட பொது நிறுவனமாகத் துவங்கப்பட்டு, ஜனவரி 1972 முதல் செயல்பட்டு வருகிறது. அது முதல் இந்நிறுவனம் பெரிய மற்றும் நடுத்தரத் தொழில்களின்



வளர்ச்சிக்கும் விரிவாக்கத்திற்கும் ஒரு தூண்டுகோலாகவும் இம்மாநிலத்தில் பின் தங்கிய மற்றும் தொழில் வளர்ச்சியடையாத பகுதிகளை விரைந்து தொழில் மயமாக்கும் நிறுவனமாகவும் செயல்பட்டு வருகிறது. பல்வேறு திட்டங்களின்கீழ் இந்நிறுவனம் 31—12—1983-ஆம் தேதி வரை 152.70 கோடி ரூபாய்க்கு ஒப்புதல் அளித்துள்ளது. இதன் மூலம் 70,000 நபர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. சிப்காட் நிறுவனம் தொழில் வளர்ச்சிக்கும் அதற்குரிய திட்ட உதவிக்கும் கீழ்க்கண்ட திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

(i) தொழில் முனைவோர்கள் பயனடையும் வகையில் ஊக்கச் சலுகைத் திட்டங்களை செயல்படுத்துதல்.

(ii) இம்மாநிலத்தில் தொழில் வளர்ச்சியில் பின் தங்கிய மாவட்டங்களில் தொழில் வளர்ச்சிக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் உள்ள தொழில் பகுதிகளை மேம்படுத்தி நிலங்களை வழங்குதல்.

(iii) இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியின் மறுநிதி வழங்கும் திட்டத்தின்கீழ் நடுத்தர மற்றும் பெரிய தொழில்களுக்கு நிதி உதவி அளிப்பது.

(iv) தொழில் முனைவோர்களுக்கு பல்வேறு துணையுதவிப் பணிகள் செய்தல்.

2. கடந்த 12 ஆண்டுகளில் தமிழகத்தில் தொழில் வளர்ச்சியினை துரிதப்படுத்த சிப்காட், தமிழக அரசு உதவியுடனும், இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியின் உதவியுடனும், பல்வேறு புதிய முறைகளை உருவாக்கிக் கையாண்டது. சிப்காட், இந்தியத் தொழில் வளர்ச்சி நிறுவனத்தினரால் மறுநிதி உதவித் திட்டத்தின்கீழ் 1976-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் அங்கீகரிக்கப்பட்டதால் இந்நிறுவனத்தின் தவணைக்கடன் திட்டம் மாபெரும் வளர்ச்சியைக் கண்டது. கடந்த குறுகிய காலத்தில் தவணைக் கடன் திட்டம் செயலாக்குதல் வெகுவாக உயர்ந்துள்ளது.

3. மத்திய மற்றும் மாநில அரசுகளால் அறிவிக்கப்பட்ட ஊக்கத் திட்டங்களான மத்திய மானியம் மற்றும் வட்டியில்லா விற்பனை வரிக்கடன், இந்திய தொழில் வளர்ச்சி வங்கியின் மறுமுதலீட்டுத் திட்டத்தின்கீழ் அறிவிக்கப்பட்ட பின் தங்கிய பகுதிகளுக்கான சலுகைகளும் சிப்காட் நிறுவனத்தினரால் பின் தங்கிய பகுதிகளின் தொழில் வளர்ச்சிக்காக முழுவதுமாக பயன்

படுத்தப்பட்டுள்ளது. உண்மையிலேயே சிப்காட் நிறுவனம் தொடங்கிய நாள் முதல் ஒப்புதல் அளித்து வழங்கிய உதவித் தொகைகளில் 85 விழுக்காட்டிற்கு மேலாக பின்தங்கிய மாவட்டங்களில் தொடங்கப் பெற்ற தொழில் நிறுவனங்களுக்கே வழங்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் நிலையான முதலீட்டின் மீது வழங்கப்படுகின்ற மானியத்தைப் பெறுவதில் மற்ற மாநிலங்களைவிட தமிழ் நாடே தொடர்ந்து முன்னிலை வகித்து வருகின்றது. சிப்காட் நிறுவனம் மத்திய அரசிடமிருந்து மாநில அரசிற்கு இம்மானியத்தைப் பெற்று தரும் அதிகாரபூர்வமான பொறுப்பைத் திறம்பட செயல்படுத்துவதே இந்நிலைக்கு முக்கிய காரணமாகும்.

4. இராணிப்பேட்டை மற்றும் ஒசூர் தொழில் இணையங்களில் கிடைத்த வெற்றியின் ஊக்கத்தில் சிப்காட் புதிய 5 தொழில் இணையங்களை கும்மிடிப்பூண்டி, தூத்துக்குடி, கடலூர், புதுக்கோட்டை மற்றும் மானாமதுரையில் நிறுவுவதற்கு இப்போது முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. தொழில் முனைவோரை இவ்விணையங்களுக்கு அழைத்துச் செல்ல முதல் தடவையாக சிப்காட் ஏற்பாடு செய்த தொழில் முனைவோரின் கூடுகை அவர்களிடையே ஊக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. புதுக்கோட்டை, மானாமதுரை, கும்மிடிப்பூண்டி மற்றும் கடலூர் தொழில் இணையங்களில் ஏற்கனவே நிலம் ஒதுக்கும் பணிகள் ஆரம்பமாகிவிட்டன. 1981-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 3-ஆம் நாள் தமிழக அரசால் அறிவிக்கப்பட்ட தளர்த்தப்பட்ட ஊக்கச்சலுகை முறைப்பத் திட்டங்கள், அறிமுகப்படுத்தப்பட்ட கவரக்கூடிய உதவித் தொகைத் திட்டங்களினால் சிப்காட் வருகிற ஆண்டுகளில் தன்னுடைய திட்டங்களை பலமடங்காக அதிகரிக்கமுடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

5. அயல் நாடுகளில் உள்ள இந்தியர்கள் தங்களது சேமிப்பைத் தமிழகத்தில் உள்ள தொழில் முதலீடுகளில் முதலீடு செய்ய ஊக்கப்படுத்துவதற்காக சிப்காட்டில் ஒரு பிரிவு அமைக்கப்பட்டுள்ளது. அயல் நாடுகளில் உள்ள தனி நபர்களுடனும், நிறுவனங்களோடும் தொடர்பு கொள்ளப்பட்டது. இதுவரை, அமெரிக்க, அரபுநாடுகள், மலேசியா மற்றும் பல்வேறு நாடுகளிலுள்ள இந்தியர்களிடமிருந்து 368 விசாரணைகள் சிப்காட் நிறுவனத்தில் பெறப்பட்டுள்ளன. தொடர்ச்சியாக அயல் நாடுகளிலுள்ள இந்தியர்களுடன் தொடர்பு வைக்கப்பட்டுள்ளது.



ஊக்கச் சலுகை முறைப்படுத் திட்டம்.

தொழில் தொடங்கும் ஆய்வுக்கு உதவித் தொகை.

தொழில் தொடங்கும் ஆய்வு அறிக்கைகள் தொழில் முனைவோர்க்கு சலுகை விலையில் கிடைப்பதற்காக இத்திட்டம் ஜூன் 1981-ஆம் ஆண்டு மாற்றியமைக்கப்பட்டது. தொழில் முனைவோர்கள் ஆரம்பத்தில் இவ்வறிக்கைச் செலவில் 10 சதவீதம் செலுத்தி இவ்வறிக்கைளை பெற்றுக் கொள்ளலாம். மீதியுள்ள 90 சதவீதததில், 40 சதவீதம் தொழில் தொடங்கிய பிறகு கடனாகவும், 50 சதவீதம் சிப்காட் நிறுவனத்தால் உதவித் தொகையாகவும் வழங்கப்படுகின்றது.

இத்திட்டத்தின்கீழ் இதுவரை 27 ஆய்வுகள் மேற்கொள்ளப் பட்டு 18 அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. 5 ஆய்வுகள் மேற்கொள்வதற்காக நடவடிக்கைகள் பரிசீலனையில் உள்ளது. இத்திட்டத்தின் கீழ் 13 தொழில் முனைவோர்கள் தொழில் ஆய்வு அறிக்கையின் மூலம் பயன் பெற்றுள்ளனர்.

வட்டியில்லா விற்பனை வரிக்கடன் :

ஊக்கச் சலுகை தீவிரத் திட்டத்தின் முக்கிய அங்கமான வட்டியில்லா விற்பனை வரிக்கடனை மாநில அரசின் சார்பில் சிப்காட் நிறுவனம் வழங்கி வருகின்றது. இம்மாநிலத்தின் பின்தங்கிய 9 மாவட்டங்களில் ஏதாவது ஒன்றிலும் செங்கற்பட்டு மாவட்டத்தில் மறைமலைநகர் தொழில் இணையத்திலும், மற்றும் குன்னத்தூர் வட்டாரத்திலும் (ஒரு இலட்சமும் அதற்கு மேலேயும் மக்கள் தொகை உள்ள நகரங்கள் மற்றும் மதுரை, திருச்சிராப்பள்ளி நகர்புறங்களைத் தவிர) தொடங்க இருக்கும் நடுத்தர, மற்றும் பெரிய தொழில் நிறுவனங்களுக்கு இத்திட்டத்தின்கீழ் கடன்கள் வழங்கப்படும்.

இத்திட்டம் 3—10—1981 முதல் சுலபமாக்கப்பட்டு இரு பகுதிகளாக பிரிக்கப்பட்டு இயங்கி வருகிறது. முதல் பகுதி திருத்தியமைக்கப்பட்ட திட்டத்தின்கீழ் தற்போது செயல்படும் நடுத்தர, பெரிய தொழில் நிறுவனம் மற்றும் சிறு தொழில் நிறுவனங்களை நடுத்தர தொழிலாக விரிவுப்படுத்தும்போதோ அல்லது வேறு பிரிவுகளாக பெருக்கும்போதோ இச்சலுகை கிடைக்கும். அத்தொழிற்சாலைகள் கடன்கோரி விண்ணப்பம் செய்துகொள்ளும் ஆண்டுக்கு முந்திய மூன்றாண்டுகளுக்குச் செலுத்திய விற்பனை வரித் தொகை அளவிற்கோ அல்லது விரிவுபடுத்தப்பட்ட திட்டத்தின் நிலையான இருப்புகளில் 52 சதவீதத்துக்கோ அல்லது ரூபாய் 50 இலட்சத்துக்கோ நடுத்தர மற்றும் பெரிய தொழில்களுக்கும் சிறிய தொழிலி

[1984 மார்ச் 24

லிருந்து நடுத்தர தொழிலாக விரிவுப்படுத்தும்போது ரூபாய் 7.50 இலட்சத்துக்கோ (எந்தத் தொகை குறைவோ அந்த தொகைக்கு மேற்படாமல்) விற்பனை வரிக் கடன் தொகை உதவி அளிக்கப் படுகிறது. கடன் தொகை வழங்கப்பட்ட தேதியிலிருந்து 6 ஆண்டுகள் முடிந்த பிறகு 3 ஆண்டுத்தவணைகளில் சமதொகைகளாக வட்டி இன்றி இந்தக் கடன் தொகைகளை திருப்பியடைக்கவேண்டும்.

ஏதேனும் பின்தங்கிய மாவட்டங்கள் மற்றும் மறைமலை நகர், செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள குன்னத்தூர் இணையத்தில் நிறுவப்படும் புதிய தொழில்கள் இரண்டாம் பகுதித் திட்டத்தின்கீழ் வரும், இப்பகுதியின்கீழ் புதிய தொழில் நிறுவனங்கள் முதல் ஆறு ஆண்டுகளில், அதாவது உற்பத்தி செய்யும் காலத்தின் முதல் 24 காலாண்டுகளில் ஆண்டுதோறும் வட்டியில்லா விற்பனை வரிக் கடன் அவர்கள் செலுத்திய அந்தந்த ஆண்டு விற்பனை வரிக்குச் சமமான அளவுக்கோ அல்லது நிலையான இருப்புகளில் 20 சதவீத அளவுக்ோ அல்லது வருடத்திற்கு ரூபாய் 20 இலட்சமோ, எந்தத் தொகை குறைவோ அந்த தொகைக்கு அதிகப்படாமல் அளிக்கப் படும். மொத்தத்தில் 24 காலாண்டு காலத்தில் ஒப்புதல் அளிக்கப் பட்ட தொகை ரூபாய் 100 இலட்சத்திற்கு மேற்படாமல் இருக்கவேண்டும். இந்தக் கடன் காலாண்டுக்கொருமுறை வழங்கப்படும். முதல் கடன் வழங்கப்பட்ட நாளிலிருந்து ஒன்பதாண்டுகள் கழித்து இக்கடன் தொகை ஆறு ஆண்டு தவணைகளில் வட்டியின்றி செலுத்தப்பட வேண்டும்.

ஊக்கச் சலுகை திட்டமான, வட்டியில்லா விற்பனை வரிக் கடன் வழங்கும் திட்டத்தின்கீழ் இந்நிறுவனம் துவங்கியதிலிருந்து 31—12—1983 முடிய ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகையும், வழங்கப்பட்ட தொகையும் முறையே 1,863.72 இலட்சமும், ரூபாய் 1,687.90 இலட்சமுமாகும்.



1984 மார்ச் 24]

கடந்த 12 ஆண்டுகளில் ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகையும் வழங்கப்பட்ட தொகையும் பின்வருமாறு :—

ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகை.

| ஆண்டு. | முதல் பிரிவு. | இரண்டாம் பிரிவு. | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| 1972-73 .. | 79.19 | .. | 79.19 |
| 1973-74 .. | 57.72 | .. | 57.72 |
| 1974-75 .. | 73.63 | .. | 73.63 |
| 1975-76 .. | 2.10 | 0.72 | 2.82 |
| 1976-77 .. | 49.13 | 29.72 | 78.85 |
| 1977-78 .. | 52.60 | 58.88 | 111.48 |
| 1978-79 .. | 59.19 | 94.00 | 153.19 |
| 1979-80 .. | 105.52 | 140.26 | 245.78 |
| 1980-81 .. | 88.79 | 143.55 | 232.34 |
| 1981-82 .. | 29.07 | 133.50 | 162.57 |
| 1982-83 .. | 217.48 | 146.88 | 364.36 |
| 1983-84 .. டிசம்பர் 1983 வரை. | 180.98 | 120.81 | 301.79 |
| | 995.40 | 868.32 | 1,863.72 |

வழங்கப்பட்ட தொகை

| ஆண்டு. | | முதல் பிரிவு. | இரண்டாம் பிரிவு. | மொத்தம். |
|---|---|---|---|---|
| (1) | | (2) | (3) | (4) |
| | | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| 1972-73 | .. | 12.19 | .. | 12.19 |
| 1973-74 | .. | 31.56 | .. | 31.56 |
| 1974-75 | .. | 91.48 | .. | 91.48 |
| 1975-76 | .. | 57.60 | .. | 57.60 |
| 1976-77 | .. | 48.32 | 30.26 | 78.58 |
| 1977-78 | .. | 35.19 | 56.04 | 91.23 |
| 1978-79 | .. | 56.80 | 96.24 | 153.04 |
| 1979-80 | .. | 47.26 | 137.74 | 185.00 |
| 1980-81 | .. | 85.53 | 144.91 | 230.44 |
| 1981-82 | .. | 67.84 | 132.44 | 200.28 |
| 1982-83 | .. | 113.72 | 149.58 | 263.30 |
| 1983-84 டிசம்பர் 1983 வரை | .. | 172.39 | 120.81 | 293.20 |
| | | 819.88 | 868.02 | 1,687.90 |





**1984-85** ஆம் ஆண்டிற்கான ஒப்புதலும் வழங்குவதற்கான குறியீடும் 375 இலட்சமாக வரையறுக்கப்பட்டுள்ளது.

மாநில அரசிடமிருந்து பெறப்பட்ட ஆண்டுவாரியான நிதியின் விவரம் :—

| ஆண்டு. | | | தொகை. |
|---|---|---|---|
| (1) | | | (2) |
| | | | (ரூபாய் இலட்சத்தில்.) |
| 1972-73 | .. | .. | 23.18 |
| 1973-74 | .. | .. | 40.00 |
| 1974-75 | .. | .. | 74.66 |
| 1975-76 | .. | .. | 75.00 |
| 1976-77 | .. | .. | 75.00 |
| 1977-78 | .. | .. | 100.00 |
| 1978-79 | .. | .. | 150.00 |
| 1979-80 | .. | .. | 180.00 |
| 1980-81 | .. | .. | 250.00 |
| 1981-82 | .. | .. | 300.00 |
| 1982-83 | .. | .. | 300.00 |
| 1983-84 | .. | .. | 300.00 |

மத்திய அரசின் மூலதன மானியம்.

**1972** ஆம் ஆண்டு தமிழக அரசினால் மேற்கண்ட திட்டம் செயல்படுத்தப்படுவதற்காக சிப்காட் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டது இத்திட்டத்தின் கீழ், இம்மாநிலத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 30 பின்தங்கிய வட்டங்களில் (பி பிரிவு) நிறுவப்படும் எந்த ஒரு தொழில் பிரிவும் அதன் நிலையான முதலீட்டின் (நிலம், கட்டிடங்கள் மற்றும் இயந்திரங்கள்) 15 சதவீதத்தை நேரடி மானியமாகப் பெறத் தகுதியுள்ளதாகும். ஏற்கெனவே 15 சதவீத மானியத் தொகை பெற்றுள்ள வட்டங்கள் (பி பிரிவு) மற்றும் 1983 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதி கணக்கின்படி தொழிற்சாலைகளின் மொத்த மூலதனத் தொகை ரூபாய் 30 கோடிக்கு மேல் உள்ள வட்டங்களையும் தவிர நிதி உதவி சலுகை பெற்ற பின்தங்கிய ஒன்பது மாவட்டங்களின்

மற்ற பகுதிகள் 1983 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் தேதியிலிருந்து " சி " பிரிவின் கீழ் வரும். இப்பகுதிகளில் துவங்கப்படும் தொழிற்சாலைகள் 10 சதவீத மானியத் தொகை ரூபாய் 10 இலட்சத்திற்கு மேற்படாமல் பெற தகுதி பெற்றுள்ளன. தொழில் முன்னேற்றம் அடைந்த பகுதியிலிருந்து முன்னேற்றம் காணாத முன்பு கூறப்பட்ட பகுதிகளுக்கு கருவிகள், தளவாடங்கள் மாற்றப்பட்ட போதிலும் அந்தத் தொழில் பிரிவுகள் கூட 15 சதவீத உதவித் தொகைப் பெற தகுதியுடையவையாகும். ஒவ்வொரு தொழில் பிரிவு பெறத்தக்க மானியத்தில் உச்ச வரம்பு ரூபாய் 15 இலட்சம் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. உற்பத்தி தொடங்குவதற்கு முன்பாக மானியத்தில் 85 சதவீதத் தொகையும் உற்பத்தி துவங்கிய பின்பு மீதித் தொகையும் வழங்கப்படும்.

மத்திய அரசின் நேரடி மானியம் அல்லது உதவித் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் மத்திய அரசிடமிருந்து ஈட்டுத் தொகை (ரூபாய் 27.94 கோடி) பெறுவதில் மற்ற மாநிலங்களை விட தமிழ்நாடு தொடர்ந்து முன்னிலை வகிக்கிறது.

ஒப்புதல் அளிக்கப்பட்ட தொகை, வழங்கப்பட்ட தொகை மற்றும் மத்திய அரசிடமிருந்து பெறப்பட்ட ஈட்டுத் தொகை பற்றிய விவரங்கள் இணைப்பு ஒன்றில் கொடுக்கப்பட்டுள்ளன. 1984-85 ஆம் ஆண்டிற்காக ஒப்புதல் அளிக்க, வழங்கப்பட பெறப்படவிருக்கும் ஈட்டுத் தொகைக்காக குறியீடு ஒவ்வொன்றிற்கும் ரூபாய் 350 இலட்சமாக வரையறுக்கப்பட்டுள்ளது.

### மாநில அரசின் நேரடி மானியம் அல்லது உதவித் தொகை வழங்கும் திட்டம்.

இத் திட்டத்தின் கீழ் மத்திய அரசின் மானியத் திட்டங்களின் கீழ் வராத 33 வட்டங்களிலும் புதிய தொழில் இணையங்கள் அமைக்கப்படவிருக்கும் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள தூத்துக்குடியிலும், தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள கடலூரிலும் நிறுவப்படும் எந்தத் தொழில் பிரிவும் அதன் நிலையான முதலீட்டில் 15 சதவீதம் மானியத்தின் இணையான தொகையோ அல்லது 15 இலட்சம் உதவித் தொகையோ இரண்டில் எது குறைவோ அதைப் பெறுவதற்கு வகை செய்யப்பட்டுள்ளது. 3-10-1981 முதல் அமுலாக்கப்பட்டுள்ள இத் திட்டத்தின் கீழ் சிறிய, நடுத்தர மற்றும் பெரிய தொழில்கள் பயன் பெறும். 1983-84 ஆம் ஆண்டு டிசம்பர் 1983 வரை ரூபாய் 110.61 இலட்சத்திற்கு ஒப்புதலும் ரூபாய் 42.44 இலட்சமும் வழங்கப்பட்டன. 1984-85 ஆம் ஆண்டிற்கா வழங்கப்பட இருக்கும் மானியத் தொகை ரூபாய் 100 இலட்சமாக வரையறுக்கப்பட்டு உள்ளது.



### குறிப்பிட்ட தொழில்களுக்கு மானியத் திட்டம் :

சில குறிப்பிட்ட தொழில்களை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் தமிழக அரசு இம்மானிய திட்டத்தை ஏற்படுத்தியுள்ளது. இத் திட்டத்தின் கீழ் மின் அணு, மருந்துகள் தயாரிப்பு, மோட்டார் வாகன உபரி தொழில்கள் மற்றும் சூரிய சக்தியை அடிப்படையாகக் கொண்ட கருவிகள் அடங்கும். மேலே குறிப்பிட்ட தொழில்கள் மத்திய மற்றும் மாநில திட்டத்தின் கீழ் வராத தமிழகத்தின் எந்தப் பகுதியில் நிறுவப்படும் எந்த ஒரு நிறுவனமும் அதன் நிலையான முதலீட்டின் 10 சதவீதம் மானியமாகவோ அல்லது ஒரு நிரந்தர ஊழியருக்கு ரூ. 20,000 அல்லது 10 இலட்சம் என்ற இந்த மூன்று வகையான திட்டத்தில் எது குறைவோ அதைப் பெறலாம். இத் திட்டம் பாரதத்தில் எந்த பகுதியிலும் இதுவரை செயல்படுத்தப்படாத ஈடு இணையற்ற தமிழக அரசின் திட்டமாகும். இத் திட்டம் 1981 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 3 ஆம் நாள் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டது.

### 2. நேரடி நிதி உதவி :

தவணைக் கடன் :

கடந்த பன்னிரெண்டு ஆண்டில் சிப்காட் ஒப்புதல் அளித்த தவணைக் கடன் மற்றும் வழங்கிய தவணைக் கடன் உதவி கீழ்க்கண்ட அட்டவணையில் காணலாம் :—

| வருடம். | ஒப்புதல் அளிக்கப் பட்டது. | ரத்து செய்யப் பட்டது. | நிகர செல்லுபடியாகத் தக்கது. | வழங்கப் பட்டது. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | | |
| 1972-73 ... | 108.50 | — | 108.50 | 26.11 |
| 1973-74 .. | 197.89 | 7.55 | 190.34 | 33.90 |
| 1974-75 .. | 191.28 | 7.99 | 183.29 | 117.61 |
| 1975-76 .. | 27.08 | 7.25 | 19.83 | 162.87 |

[1984 மார்ச் 24

| வருடம். | ஒப்புதல் அளிக்கப் பட்டது. | ரத்து செய்யப் பட்டது. | நிகர செல்லுபடி யாகத் தக்கது. | வழங்கப் பட்டது. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | | |
| 1976-77 .. | 140.75 | 47.25 | 93.50 | 82.15 |
| 1977-78 .. | 340.55 | 69.48 | 271.07 | 123.82 |
| 1978-79 .. | 233.96 | 10.00 | 223.96 | 141.85 |
| 1979-80 .. | 580.50 | 12.74 | 567.76 | 296.61 |
| 1980-81 .. | 1,958.10 | 27.86 | 1,930.24 | 786.52 |
| 1981-82 .. | 1,899.05 | 225.01 | 1,674.04 | 1,405.36 |
| 1982-83 .. | 3,036.91 | 476.20 | 2,560.71 | 1,575.93 |
| 1983-84 .. (டிசம்பர் ,1983 வரை.) | 2,228.03 | 145.24 | 2,082.79 | 1,248.10 |
| | 10,942.60 | 1,036.57 | 9,906.03 | 6,001.33 |

1979-80 ஆம் ஆண்டுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் 1980-81 ஆம் ஆண்டு முதல் அளிக்கப்பட்ட நிகர ஒப்புதல் கணிசமான முன்னேற்றம் அடைந்துள்ளது என மேலே உள்ள அட்டவணையி விருந்து வெளிப்படையாகத் தெரிய வருகிறது. ஒப்பளிப்பு மற் றும் வழங்குதல் ஆகியவற்றில் 1984-85 ஆம் ஆண்டிற்கான குறியீடு முறையே ரூ. 38 கோடி மற்றும் ரூ. 28 கோடி என திட்ட மிடப்பட்டுள்ளது.

நீண்டகால நிலுவைத் தொகையை பெறுதல் என்ற நிலை 1983-84 இல் படிப்படியாக அதிகரித்து 1983 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் நாள் நிலைவரப்படி 77.76 சதவீதமாக உயர்ந் துள்ளது. சிப்காட் நிர்வாகக் குழுவின் துணைக் குழு அவ்வப் போது கூடி நிலுவை பார்வை கூட்டங்களில் நிலுவைக்கான பரிசீலனை செய்து நடவடிக்கை எடுத்ததாலும் மற்றும் தொழில் நிறுவனங்களின் ஒத்துழைப்பினாலும், கணிசமான முன்னேற்றம் அடைந்துள்ளது.



1984 மார்ச் 24]

2. உத்தரவாதமளித்தல்/நேரடி சந்தா :

பொறுப்புக் கணக்கு நேரடி சந்தாவிற்கு உத்தரவாதம் அளித்ததின் விளைவாக கடந்த 12 ஆண்டுகளில் அனுமதியளிக்கப் பட்ட உத்தரவாத பகுதிகள், ரத்து செய்யப்பட்டவை. பொது மக்களுக்கு வழங்கப்பட்டவை, எடுத்துக் கொள்ளப்பட்ட பங்கு களின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| ஆண்டு. | ஒப்புதல் அளிக்கப் பட்டது. | ரத்து செய்யப் பட்டது. | பொது மக்களுக்கு வழங்கப் பட்டவை/ நேரடி சந்தாவுக்கு சோரிக்கை பங்குகள். | எடுத்துக் கொள்ளப் பட்ட பங்குகள். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | | |
| 1972-73 .. | 23.20 | .. | .. | .. |
| 1973-74 .. | 24.30 | .. | 26.70 | .. |
| 1974-75 .. | 5.00 | .. | 2.50 | 0.55 |
| 1975-76 .. | 16.50 | .. | 3.00 | 1.29 |
| 1976-77 .. | 11.00 | 18.50 | 2.00 | 2.00 |
| 1977-78 .. | 16.00 | 13.30 | 1.50 | 1.13 |
| 1978-79 .. | 5.00 | 3.50 | 5.00 | 0.37 |
| 1979-80 .. | 6.20 | 2.50 | 13.00 | 1.53 |
| 1980-81 .. | 24.40 | .. | 21.20 | 12.29 |
| 1981-82 .. | 13.75 | .. | 19.65 | 8.03 |
| 1982-83 .. | 18.25 | .. | .. | 1.52 |
| 1983-84 .. டிசம்பர் 1983 வரை.) | 19.00 | .. | 24.25 | 14.08 |
| | 182.60 | 37.80 | 118.80 | 42.79 |

[1984 மார்ச் 24

1984–85ஆம் ஆண்டிற்கான ஒப்புதல் குறியீடு ரூ. 25.0 இலட்சமாகும்.

3. இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியின் ஆரம்ப மூலதன நிதியுதவித் திட்டம்.

ஆரம்ப மூலதன நிதியுதவித் திட்டத்தின் கீழ் இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி முதல் நடுத்தர தொழில் நிறுவ தொழில் நுட்ப, தொழில் அனுபவ தொழில் முனைவோர்களுக்கு திட்டச் செலவில் 10 சதவீதம் வரையில் நிதியுதவி அளிக்கிறது. சிப்காட் நிறுவனம் இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியின் பிரதிநிதி என்ற முறையில் 1983 ஆம் ஆண்டு டிசம்பர் வரை ரூ. 45.20 இலட்சம் அளவுள்ள தொகையை தொழில் நிறுவனங் களுக்கு இத் திட்டத்தின் கீழ் ஒப்புதல் அளித்துள்ளது. 1984–85 ஆம் ஆண்டில் ரூ. 150 இலட்சம் ஒப்புதல் அளிக்கவும், ரூ. 150 இலட்சம் வழங்கவும் குறியீடாக வரையறுக்கப்பட்டுள்ளது.

இத் திட்டத்தின்கீழ் ஒப்புதல் அளித்தலிலும் வழங்குதலிலும் அடைந்த முன்னேற்றம் கீழ்க்கண்ட அட்டவணையின் மூலம் அறியலாம்.

| ஆண்டு. | ஒப்புதல் அளிக்கப்பட்டது. | வழங்கப்பட்டது. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 1977–78 .. | 4.00 | – |
| 1978–79 .. | 9.15 | .. |
| 1979–80 .. | 12.90 | 4.00 |
| 1980–81 .. | 26.50 | 21.47 |
| 1981–82 .. | 38.58 | 16.28 |
| 1982–83 .. | 69.07 | 20.10 |
| 1983–84 .. (31–12–1983 வரை.) | 45.20 | 29.70 |
| | | 63.88 |
| | 205.40 | 155.43 |



1984 மார்ச் 24]

4. தாழ்த்தப்பட்ட மற்றும் மலைச்சாதி வகுப்பைச் சேர்ந்த தொழில் முனைவோருக்கு அளிக்கப்படும் சலுகைகள் :

தாழ்த்தப்பட்ட மற்றும் மலைச்சாதி வகுப்பைச் சேர்ந்த தொழில் முனைவோருக்கு 1979 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 29 ஆம் நாள் முதல் கீழ்க்கண்ட சலுகைகள் வழங்கி ஊக்கு விக்க சிப்காட் நிறுவனம் முடிவு செய்துள்ளது :—

(அ) மாநிலத்தில் எந்த இடத்தில் தொழில் ஆரம்பித்தாலும் தொழில் முனைவோர் தொழிற்சாலை ஆரம்பிக்க ஆகும் மொத்த செலவில் 15 சதவீதத்தை தங்களது மூலதனமாக கொண்டு வந்தால் போதுமானதாகும். (இதுவே முன்பு பின் தங்கிய பகுதிகளில் 17.5 சதவீதமாகவும் முன்னேறிய இடங்களில் 20 சதவீதமாகவும் இருந்தது.)

(ஆ) உத்தரவாதமளித்தல், நேரடி சந்தா ஆகிய நிதியுதவிகளையும் மேற்படி தொழில் முனைவோர்களின் திட்டங்களுக்கு முடிந்த அளவு அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(இ) பின்தங்கிய பகுதிகளில் ஆரம்பிக்கப்படும் தொழிற் சாலைகளுக்கு வழங்கப்படும் தவணைக் கடன் தொகைக்கு ஆண்டொன்றுக்கு 11 சதவீதம் வட்டியும் வளர்ச்சியடைந்த பகுதிகளுக்கு 12.5 சதவீத வட்டியும் வசூலிக்கப்படும். இவ் வட்டிச் சலுகை ஆண்டொன்றுக்கு சுமார் 1½ சதவீதமாகும்.

(ஈ) தாழ்த்தப்பட்ட மற்றும் மலைசாதி வகுப்பை சேர்ந்த தொழில் முனைவோர்கள் தங்கள் தொழில் பற்றிய முன் முதலீட்டு ஆய்வு அறிக்கை பெற 25 சதவீதம் மட்டுமே முன் பணமாக செலுத்தினால் போதுமானது. இதுவே மற்ற தொழில் முனைவோர்களுக்கு 50 சதவீதமாகும்.

3. வளர்ச்சி மையங்கள் :

| வளர்ச்சி மையங்கள். | 1983 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் தேதி வரை முன்னேற்றம். மேம்படுத்தப் பட்ட பரப்பு. (ஏக்கர்) | 1983 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் தேதி வரை முன்னேற்றம். மூலதன செலவு. (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| இராணிப்பேட்டை .. .. | 729.78 | 111.86 |
| ஓசூர் .. ... .. | 1,235.86 | 214.94 |
| மானாமதுரை .. .. .. | 492.08 | 59.44 |
| புதுக்கோட்டை .. .. | 423.00 | 27.96 |
| கும்மிடிப்பூண்டி .. .. | 301.00 | 47.64 |
| கடலூர் .. .. .. | 463.00 | 40.84 |
| தூத்துக்குடி .. .. .. | .. | 0.20 |

| வளர்ச்சி மையங்கள். | ஆறாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் எதிர்பார்க்கப் படும் முன்னேற்றம். மேம்படுத்தப் பட்ட பரப்பு ஏக்கர். | ஆறாவது ஐந்தாண்டு திட்ட காலத்தில் எதிர்பார்க்கப் படும் முன்னேற்றம். மூலதன செலவு மொத்தம் (ரூபாய் இலட்சத்தில்.) | நிகர். |
|---|---|---|---|
| (1) | (4) | (5) | (6) |
| இராணிப்பேட்டை .. .. | 143.96* | 105.00 | 55.00 |
| ஓசூர் .. .. .. | 508.33* | 290.00 | 210.00 |
| மானாமதுரை .. .. | 492.08 | 140.00 | 110.00 |
| புதுக்கோட்டை .. .. | 544.45 | 120.00 | 75.00 |
| கும்மிடிப்பூண்டி .. .. | 804.98 | 165.00 | 80.00 |
| கடலூர் .. .. .. | 463.41 | 165.00 | 70.00 |
| தூத்துக்குடி .. .. .. | 1,318.53 | 51.00 | 45.00 |

பின் குறிப்பு : *இரண்டாவது இணையங்கள்.





இராணிப்பேட்டை :

அரசு 729.78 ஏக்கர் நிலத்தினை கையகப்படுத்தி அதை சிப்காட் நிறுவனத்திற்கு கொடுத்து ஒதுக்கப்படுவதற்காக இருந்த நிலப்பகுதி 480.68 ஏக்கர் ஆகும். அதில் 93 மனைகள் இருந்தன. அதில 474.0 ஏக்கர் பரப்பளவு கொண்ட 85 மனைகள், 69 தொழில் முனைவோர்களுக்கு ஏற்கெனவே ஒதுக்கப்பட்டுள்ளன. ஒதுக்கப்பட்டதில் 45 தொழில் நிறுவனங்கள் தங்கள் கட்டுமான வேலைகளை முடித்து உற்பத்தியை தொடங்கி விட்டன. எஞ்சிய 17 தொழில் நிறுவனங்கள் பல்வேறு கட்டுமான நிலைகளில் உள்ளன. இப் பகுதியில் உள்ள கடுமையான நிலத் தேவையை கருதி மேலும் 144 ஏக்கர்கள் கையகப்படுத்தி இரண்டாவது தொழில் இணையம் அமைக்கப்பட்டிருக்கிறது.

ஓசூர்:

தே. 7 நெடுஞ்சாலையின் இருபுறமும் ஒதுக்கப்படுவதற்காக இருந்த மேம்படுத்தப்பட்ட 1,235 ஏக்கர் நிலப்பரப்பளவில், விற்பனைக்குக் கிடைக்கக்கூடிய 828 ஏக்கரில், 740 ஏக்கர் தொழில் முனைவோர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. தொழில் முனைவோரின் நிலந் தேவையைப் பூர்த்தி செய்யவும் மற்றும் சமூக தேவை கருதியும் தற்போது அமைந்திருக்கும் மையத்திலிருந்து 10 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள ஓசூர் கிருஷ்ணகிரி தேசிய நெடுஞ் சாலையில் 508 ஏக்கர் நிலத்தை கையகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மானாமதுரை :

மதுரையிலிருந்து 45 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள மானாமதுரையில் உள்ள இந்த இணையம் தண்ணீர் அதிகம் தேவையில்லாத தொழிற்சாலைகளுக்காக ஏற்படுத்தப்பட்டுள்ளது. பாதை வசதி, தொலைபேசி, டெலக்ஸ் வசதி, கழிவு நீரகற்றும் வசதி, பள்ளிக்கூடம், முதல் உதவி, உணவு விடுதி, வீட்டு வசதி, கடைகள், திரையரங்கம் முதலிய வசதிகள் உள்ள மேம்படுத்தப்பட்ட 492 ஏக்கர் நிலம் முனைப்பு உள்ள தொழில் முனைவோர்களுக்காக இப்பகுதியில் உள்ளது. விற்பனைக்குரிய 363 ஏக்கர் நிலப்பரப்பில், 63 ஏக்கர் பரப்பளவுக்கு 26 மனைகள் இதுவரை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

புதுக்கோட்டை :

பின் தங்கிய பகுதிகளின் முன்னேற்றத்தை துரிதப்படுத்துவதற்காக புதுக்கோட்டையில் உள்ள தொழில் இணையம் ஒரு மத்திய மையமாக (Nucl us Complex) தேர்ந்தெடுக்கப் படுவதற்காக இந்திய அரசின் பரிசீலனையில் உள்ளது. இந்த

மையம் புதுக்கோட்டை நகரத்திலிருந்து 6 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. திருச்சி விமான நிலையத்தில் இருந்து ஒரு மணி நேரத்தில் கார் மூலமாக இவ்விடத்தை அடையலாம். இந்த மையம் மின் அணு மற்றும் பொறியியல் தொழில்களுக்கு ஏற்றது.

சிப்காட் ஏற்கெனவே கையிருப்பில் உள்ள 423 ஏக்கர் பரப்பளவு நிலத்தை தவிர மேலும் 164 ஏக்கர் பரப்பளவு உள்ள நிலத்தை கையகப்படுத்துவதற்கு ஏற்பாடுகள் செய்து வருகிறது. இந்த இணையத்தின் திட்டங்கள் தொடங்குவதற்கு ஐந்து நிறுவனங்கள் மொத்தமாக 102 ஏக்கர் பரப்பு நிலத்திற்கு விண்ணப்பித்துள்ளன.

கடலூர் :

மிகுதியான தண்ணீரும், மின்சாரமும் தேவைப்படுகிற பெரிய இரசாயனத் தொழிற்சாலைகள் மற்றும் அது சம்பந்தமான தொழிற்சாலைகளுக்காக கடலூரில் ஒரு தொழில் இணையம் அபிவிருத்தி செய்யப்படுகிறது. நில கையெடுப்பு சட்டத்தின் அவசர விதிகளை மேற்கோள்காட்டி, கையகப்படுத்துவதற்காக அறிவிக்கப்பட்ட 463 ஏக்கர் பரப்பளவு உள்ள நிலம் எடுத்துக் கொள்ளப்பட்டு இருக்கிறது. இந்த இணையம் கடலூர்-சிதம்பரம் பாதையில் கடலூரிலிருந்து 7 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. பாண்டிச்சேரியில் இருந்து அரைமணியில் கார் மூலம் இவ்விடத்தை சென்று அடையலாம். இந்த இணையத்தில் 100 ஏக்கர் நிலப்பரப்பில் தொழிற்சாலைகள் தொடங்க ஏற்கெனவே 9 நிறுவனங்கள் சம்மதம் அளித்துள்ளன. மேலும் பல நிறுவனங்களிடமிருந்து நிலத்தை ஒதுக்கீடு செய்வதற்கு விசாரணைகள் பெறப்பட்டுள்ளன.

கும்மிடிப்பூண்டி :

(சென்னை—கல்கத்தா அகன்ற இரயில் பாதையில் இணையாக உள்ள) சென்னை — நெல்லூர் நெடுஞ்சாலையில் சென்னையிலிருந்து 45 கிலோ மீட்டர் தொலைவில் கும்மிடிப்பூண்டி சிப்காட் தொழில் இணையம் உள்ளது.

பொறியியல் மற்றும் வாகன உபகரணங்கள் தொழில்களை துரிதமாய் வளர்ச்சியடைய செய்வதற்காக மிகவும் தகுந்த அமைப்பை இத்தொழில் இணையம் வழங்குகிறது. நிலம் கையிருப்புச் சட்டத்தின்கீழ் உள்ள அவசர விதிகளைக் கையாண்டு அறிவிக்கப்பட்ட 504 ஏக்கர்களில் 315 ஏக்கர் எடுத்துக்கொள்ளப்பட்டன. 128 ஏக்கர் பரப்பளவில் 42 நிறுவனங்கள் தங்களுடைய திட்டங்களை அமைக்க ஒத்துக்கொண்டு உள்ளன. மேலும் நில ஒதுக்கீட்டிற்காக விசாரணைகள் வந்த வண்ணம் உள்ளன.





தூத்துக்குடி :

தூத்துக்குடியில் தொழில் மையத்திற்கான இடம் அரசினால் ஏற்கெனவே அங்கீகரிக்கப்பட்டுள்ளது. நில ஆர்ஜித நடவடிக்கைகள் தொடர்ந்து செய்யப்பட்டு வருகிறது.

பொது

ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் கீழ்க்கண்டுள்ள, மாவட்டங்களில் தொழில் இணையங்கள் அமைக்கும் திட்டத்தினை அரசு பிப்ரவரி 1984-இல் அறிவித்துள்ளது.

1. மதுரை மாவட்டம்.
2. தஞ்சாவூர் மாவட்டம்.
3. மேற்கு இராமநாதபுரம் மாவட்டம்.
4. திருச்சிராப்பள்ளி மாவட்டம்.
5. பெரியார் மாவட்டம்.
6. சேலம் மாவட்டம்.
7. கோயம்புத்தூர் மாவட்டம்.
8. கன்னியாகுமரி மாவட்டம்.
9. நீலகிரி மாவட்டம்.
10. தர்மபுரி மாவட்டம்.
11. வட ஆற்காடு மாவட்டம்.

பணியின் முடிவுகள்.

1983–84 ஆம் நிதி ஆண்டில் எல்லா செலவினங்களும் தேய்மானமும் போக நிகர இலாபம் ரூ. 122.19 இலட்சத்தை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. 1982-83 ஆம் ஆண்டு இந்தத் தொகை ரூ. 104.39 இலட்சத்தை மட்டுமே வந்து எட்டியுள்ளது.

இணைப்பு 2 இல் திட்டவாரியான நிதி உதவிகள் பற்றிய விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

1. 1983-84 ஆம் ஆண்டில் ஒப்புதல் அளித்தல் மற்றும் வழங்குதலில் கண்ட முன்னேற்றம்.

2. 1984-85-ம் ஆண்டில் ஒப்புதல் அளித்தல் மற்றும் வழங்குதல் பற்றிய திட்டக் குறியீடுகள்.

**வேலை வாய்ப்பு :**

1983-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் தேதி முடிய சுமார் 70,000 பேர்கள் சிப்காட்டில் நிதியுதவி பெற்ற நிறுவனங்களில் வேலை வாய்ப்பு பெற்றுள்ளார்கள் என கணக்கிடப் பட்டுள்ளது. இதுவரை ஏற்படுத்திய வேலை வாய்ப்புகளும் இனி ஏற்படுத்தவிருக்கும் வேலை வாய்ப்புகளும் ஆண்டு வாரியாக:—

| ஆண்டு. | வேலை பெற்றவர்களின் எண்ணிக்கை. |
|---|---|
| (1) | (2) |
| 1981-82 .. .. .. .. .. | 5,700 |
| 1982-83 .. .. .. .. .. | 9,000 |
| 1983-84 (டிசம்பர் 1983 வரை) .. .. | 6,000 |



## இணைப்பு—1.

### மத்திய மூலதன மானியத் திட்டம் 1971.

அ. ஒப்புதல்.

| ஆண்டு. | பெரிய மற்றும் நடுத்தர தொழில்கள். | |
|---|---|---|
| | எண். | தொகை. |
| (1) | (2) | (3) |
| | | (ரூபாய் இலட்சத்தில்). |
| 1978 மார்ச் 31 வரையில் .. | 154 | 975.89 |
| ஏப்ரல் 1978 முதல் மார்ச் 1979 வரை | 46 | 284.04 |
| ஏப்ரல் 1979 முதல் மார்ச் 1980 வரை | 52 | 333.72 |
| ஏப்ரல் 1980 முதல் மார்ச் 1981 வரை | 69 | 528.42 |
| ஏப்ரல் 1981 முதல் மார்ச் 1982 வரை | 46 | 289.98 |
| ஏப்ரல் 1982 முதல் மார்ச் 1983 வரை | 103 | 740.69 |
| ஏப்ரல் 1983 முதல் டிசம்பர் 1983 வரை | 32 | 254.46 |
| மொத்தம் 31—12—1983 வரை | 502 | 3,407.20 |

| ஆண்டு. | சிறு தொழில் நிறுவனங்கள். | |
|---|---|---|
| | எண். | தொகை. |
| (1) | (2) | (3) |
| 1978 மார்ச் 31 வரையில் ... | 749 | 179.47 |
| ஏப்ரல் 1978 முதல் மார்ச் 1979 வரை | 181 | 62.85 |
| ஏப்ரல் 1979 முதல் மார்ச் 1980 வரை | 406 | 78.86 |
| ஏப்ரல் 1980 முதல் மார்ச் 1981 வரை | 637 | 218.26 |
| ஏப்ரல் 1981 முதல் மார்ச் 1982 வரை | 544 | 213.38 |
| ஏப்ரல் 1982 முதல் மார்ச் 1983 வரை | 2,369 | 895.76 |
| ஏப்ரல் 1983 முதல் நவம்பர் 1983 வரை | 473* | 196.03 |
| மொத்தம் 30—11—1983 வரை | 5,359 | 1,845.21 |

*(நவம்பர் 1983 வரை).

| ஆண்டு. | மொத்தம். | |
|---|---|---|
| | எண். | தொகை. |
| (1) | (2) | (3) |
| 1978 மார்ச் 31 வரையில் .. .. | 903 | 1,155.36 |
| ஏப்ரல் 1978 முதல் மார்ச் 1979 வரை | 227 | 346.89 |
| ஏப்ரல் 1979 முதல் மார்ச் 1980 வரை | 458 | 412.58 |
| ஏப்ரல் 1980 முதல் மார்ச் 1981 வரை | 706 | 746.65 |
| ஏப்ரல் 1981 முதல் மார்ச் 1982 வரை | 590 | 503.36 |
| ஏப்ரல் 1982 முதல் மார்ச் 1983 வரை | 2,472 | 1,636.48 |
| ஏப்ரல் 1983 முதல் டிசம்பர் 1983 வரை | 505 | 451.09 |
| மொத்தம் 30—12—1983 வரை | 5,861 | 5,252.41 |

ஆ. வழங்குதல்

| ஆண்டு. | நடுத்தர மற்றும் பெரிய தொழில்கள். | சிறு தொழில்கள். | மொத்தம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| 1978 மார்ச் 31 வரை .. | 618.43 | 151.62 | 770.05 |
| ஏப்ரல் 1978 முதல் மார்ச் 1979 வரை. | 176.03<br>2.24 | 30·09 | 206.12<br>2.24 |
| ஏப்ரல் 1979 முதல் மார்ச் 1980 வரை. | 232.26 | 41.78 | 271.04 |
| ஏப்ரல் 1980 முதல் மார்ச் 1981 வரை. | 319.09 | 109.33 | 428.42 |
| ஏப்ரல் 1981 முதல் மார்ச் 1982 வரை. | 307.50 | 155.64 | 463.14 |
| ஏப்ரல் 1982 முதல் மார்ச் 1983 வரை. | 360.77 | 108.13 | 468.90 |
| ஏப்ரல் 1983 முதல் டிசம்பர் 1983 வரை. | 270.04* | 139.44** | 409.48 |
| | 2,286.36 | 736.03 | 3,022.39 |

* சிப்காட் மட்டும்.

** நவம்பர் 1983 வரை சிட்கோ மட்டும்.



இ. மத்திய அரசிடம் திரும்பப் பெற்றது.

| ஆண்டு. | சிப்காட். | ஏனையன. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 1978 மார்ச் 31 வரை . .. .. | 501.82 | 613.59 |
| ஏப்ரல் 1978 முதல் மார்ச் 1979 வரை | 161.51 | 229.63 |
| ஏப்ரல் 1979 முதல் மார்ச் 1980 வரை | 125.54 | 165.57 |
| ஏப்ரல் 1980 முதல் மார்ச் 1981 வரை | 301.91 | 425.35 |
| ஏப்ரல் 1981 முதல் மார்ச் 1982 வரை | 215.52 | 376.99 |
| ஏப்ரல் 1982 முதல் மார்ச் 1983 வரை | 192.23 | 289.94 |
| ஏப்ரல் 1983 முதல் டிசம்பர் 1983 வரை | 414.96 | 693.20 |
| | 1,913.49 | 2,794.27 |

இணைப்பு—2.

1993-94 ஆம் ஆண்டிற்கான ஒப்புதல் மற்றும் வழங்குதல் பற்றிய விவரங்கள்.

1984-85 ஆம் ஆண்டிற்கான திட்ட இலக்குகள்.

| | 1983-84 ஆண்டில் ஏற்பட்ட முன்னேற்றம். (ஏப்ரல் முதல் டிசம்பர் வரை). | 1983-84 ஆண்டிற்காக பட்டியல் தொகுப்பு. | 1984-85 ஆண்டிற்கான செயல் படுமுறை குறியளவு. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| பருதிக் கடன். | | | |
| ஒப்புதல் .. | 2,228.03 | 3,500.00 | 3,800.00 |
| வழங்குதல் .. | 1,248.10 | 2.200.00 | 2,800.00 |

| | | | |
|---|---|---|---|
| **ஆரம்ப மூலதனம் :** | | | |
| ஒப்புதல் .. | 45.20 | 120.00 | 150.00 |
| வழங்குதல் .. | 63.88 | 100.00 | 150.00 |
| **வட்டியில்லா விற்பனை வரிக்கடன் :** | | | |
| ஒப்புதல் .. | 301.79 | 300.00 | 375.00 |
| வழங்குதல் .. | 293.20 | 300.00 | 375.00 |
| **மத்திய உதவி (சிப்காட் மட்டும்) :** | | | |
| ஒப்புதல் .. | 240.85 | 250.00 | 350.00 |
| வழங்குதல் .. | 270.04 | 250.00 | 350.00 |
| திரும்பப் பெற்றது | 414.96 | 250.00 | 350.00 |
| **சமபங்கு மூலதனம் :** | | | |
| ஒப்புதல் .. | 19.00 | 25.00 | 25.00 |
| வழங்குதல் .. | 14.08 | 25.00 | 25.00 |
| **மூலதன நிதியுதவி மானியம் :** | | | |
| ஒப்புதல் .. | 110.61 | 100.00 | 100.00 |
| வழங்குதல் .. | 42.44 | 100.00 | 100.00 |

### தடையற்ற வாணிப மண்டலம்

சென்னையில் தடையற்ற வாணிப மண்டலம் ஒன்று அமைக்குமாறு மாநில அரசு சில காலமாக மைய அரசைக் கேட்டு வந்தது. ஜூலை 1983-இல் சென்னையில் தடையற்ற வாணிப மண்டலம் அமைப்பதான முடிவை மைய அரசு தெரிவித்தது. இத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு :—

(அ) இம்மண்டலம் முழுவதும் ஏற்றுமதி சார்ந்தது. இம்மண்டலத்தில் அனுமதிக்கப்படும் தொழில்கள் தமது 100 சதவீத உற்பத்தியையும் ஏற்றுமதி செய்ய வேண்டிவரும்.

(ஆ) இம்மண்டலத்தில் துவங்கப்படும் தொழில்களுக்கு மூலப் பொருட்கள், துணைப் பொருட்கள் மூலதன இயந்திரங்கள் போன்றவற்றை இறக்குமதி செய்துகொள்ள சலுகைகள்/வசதிகள் செய்து கொடுக்கப்படும். இதற்கான அறிவிக்கை தனியே வெளியிடப்படும் என மைய அரசு தெரிவித்துள்ளது.





2. ஆகஸ்டு 1983-ல் தமிழ்நாடு அரசு தலைமைச் செயலாளரது தலைமையில் இம்மண்டலத்திற்குத் தேவையான வசதிகளை உடனுக்குடன் செய்து கொடுக்கும் பொருட்டும், அவ்வப்போது எழுகின்ற பிரச்சினைகளைத் தீர்த்துவைக்கும் பொருட்டும் சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்கள் உள்ளிட்ட உயர் மட்டக் குழு ஒன்றினை அமைத்துள்ளது.

3. அரசு, டி.பி. சானடோரியம் அருகில் உள்ள இடத்தைத் தேர்ந்தெடுத்துள்ளது. இந்த இடத்தில் 228.84 ஏக்கர் நிலம் உள்ளது. இதில் 150 ஏக்கர் நிலம் பயன்படுத்த கிடைக்கும். மேலும் இம்மண்டலத்திற்கு அருகில் உள்ள 200 ஏக்கர் நிலங்களை கையகப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. சென்னை தடையற்ற வாணிப மண்டலத்திற்காக மைய அரசு அமைத்துள்ள இடத்தேர்வுக்குழு 14-2-1984 அன்று பார்வையிட்ட பின்னர் மாநில அரசு தேர்ந்தெடுத்துள்ள இடத்தை ஒருமனதாக ஏற்றுக்கொண்டுள்ளது.

4. இம்மண்டலத்திற்கான நிலத்தை மேம்படுத்த தமிழ்நாடு அரசு தனது பிரதிநிதியாக தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தை நியமித்துள்ளது. இதுவரை தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்திடம் இம்மண்டலத்தில் நிலம் ஒதுக்கீடு கோரி 250 விசாரணைகள் வந்துள்ளன. இதில் 40 விண்ணப்பங்கள் வெளிநாடுகளில் வசிக்கும் இந்தியர்களிடமிருந்து வந்தவை. மண்டலத்திற்கான தரைப்படம் (Lay out) தயார் செய்யப்பட்டு வருகிறது.

5. தமிழ்நாடு அரசு இம்மண்டலத்திற்கு தேவையான தண்ணீர் வழங்குதல், மின்சாரம், சாலை வசதி இதில் பணியாற்றும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்குத் தேவையான வீட்டு வசதி போன்றவைகளை செய்துகொடுக்கும் பொருட்டு பல்வேறு நிறுவனங்களைக் கேட்டுக் கொண்டுள்ளது. சென்னை துறைமுக பொறுப்புக் கழகத்திற்கு பெட்டக டிப்போ நிறுவுவதற்கான இடம், தபால் தந்தி துறை, தீயணைப்புப் பணி, மின்சார வாரியம், தொழிலாளர் காப்பீட்டுக் கழகம், வங்கி, விருந்தினர் இல்லம், சிற்றுண்டிசாலை போன்றவைகளுக்கு இம்மண்டலத்தில் இடம் ஒதுக்கீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம்

1. தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் மாநில அளவில் நிதியுதவி அளிக்கும் நிறுவனங்களில் முதல் நிறுவனமாக தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சியை மேம்படுத்துவதையும், விரைவுப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டு நிறுவனம் சட்டத்தின்படி 1949 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. மத்திய வங்கியும் இந்திய தொழில் வளர்ச்சி வங்கியும் அவ்வப்போது கலந்தாலோசித்த பின்னர் இந்திய அரசால் வெளியிடப்பட்ட அறிக்கைகளின்

வாயிலாக 1951 ஆம் ஆண்டு மாநில நிதியுதவி நிறுவனச் சட்டத்தின் சில முக்கியமான விதித்துறைகள் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழக நிறுவனத்திற்குப் பொருந்தும்படியாகச் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்நிறுவனம் நிலம், கட்டிடம், தளவாடங்கள், இயந்திரங்கள் போன்ற நிலையான சொத்துக்களை வாங்குவதற்காகத் தொழில் நிறுவனங்களுக்கு நீண்டகால, நடுத்தரகால கடனுதவிகளை, வழங்குவதுடன் இயந்திரங்களை வாங்குவதற்காகத் தொழில் நிறுவனங்கள் செய்துகொள்ளும் காலம் தாழ்த்தி தொகையினை திருப்பிச் செலுத்துவதற்கான ஒப்பந்தங்களுக்கு உத்திரவாதமும் மேல் உத்திரவாதமும் அளிக்கிறது. மேலும் தொழில் நிறுவனங்கள் வெளியிடும் பங்குகள், கடனீட்டு உறுதிப் பத்திரங்கள் ஆகியவற்றை வாங்குவதும் அவற்றிற்கு உத்திரவாதம் அளிப்பதும் இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும்.

தொழில் வளர்ச்சியில் பின் தங்கிய பகுதிகளிலுள்ள தொழில் நிறுவனங்களுக்கு, அதிலும் குறிப்பாக கிராமப் பகுதியிலுள்ள தொழில் நிறுவனங்களுக்கு பெரும் அளவில் உதவி புரியும் நோக்கத்துடன் குறைந்த வட்டி, கடனைத் திருப்பித் தர நீண்டகால கெடு, அடிப்படை நிதி உதவி முதலிய பல சலுகைகள் அளிக்கப்பட்டுள்ளன.

சிறு தொழில்கள் குறுந்தொழில் துறைகளில் தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதை ஊக்குவிப்பதற்கும் பெருமளவில் வேலை வாய்ப்பினை உருவாக்குவதற்கும் இந்நிறுவனம் சிறப்புத் திட்டங்களைத் தீட்டியுள்ளது. குறைந்த வட்டி வீதம், கடனைத் திரும்பச் செலுத்த துவங்குவதற்கு நீண்டகால அவகாசம், கடனைத் திரும்பச் செலுத்த நீண்டகால கெடு, குறைந்த பிணைத் தொகை போன்ற தாராளமான எளிய நிபந்தனைகளில் இந்நிறுவனம் கடனுதவி அளிக்கிறது.

நிதி வாயில்கள்.

தமிழ்நாடு அரசு, இந்திய அரசு, இந்திய தொழில் வளர்ச்சி வங்கி அளிக்கும் பங்கு மூலதனங்கள் இந்திய தொழில் வளர்ச்சி வங்கியின் மறு நிதியுதவி கடனீட்டு உறுதிப்பத்திரங்கள், வைப்புத் தொகைகள் முதலியன இந்நிறுவனத்தின் நிதி வாயில்களாகும். 1983 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் உள்ளவாறு இந்நிறுவனத்தின் நிதி வாயில்களின் விவரம் பின்வருமாறு :—

| | (ரூபாய் கோடியில்.) |
|---|---|
| பங்கு மூலதனம் .. .. .. | 28.49 |
| கடன் பத்திரங்கள் .. .. .. .. | 39.31 |
| இந்திய தொழில் வளர்ச்சி வங்கியிடமிருந்து மறுநிதியுதவி. | 84.06 |
| | 151.86 |



செயல் முறைகளின் மேம்பாடுகள்

தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம், கடந்த 1949-ல் இருந்து 1978 வரையான 30 ஆண்டு காலத்தில் அளித்த உதவியினைக் காட்டிலும் 1978-83 வரையான காலகட்டத்தில் சிறு தொழில், குறுந்தொழில் நிறுவனங்களில் போற்றத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளதனைக் கீழ்க்காணும் விவரம் தெளிவு படுத்துகிறது :—

| காலம். | அனுமதிக்கப்பட்ட மொத்தத் தொகை. | சிறு தொழில்களுக்கு அனுமதிக்கப்பட்ட தொகை. | அனுமதிக்கப்பட்ட தொகையில் சிறு தொழில்களுக்கு அனுமதிக்கப்பட்ட உதவித் தொகையின் சதவீதம். | வழங்கப்பட்டது. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | | | (ரூபாய் கோடியில்.) |
| 1949–78 .. | 118.77 | 33.85 | 28.5 | 74.51 |
| 1978–79 .. | 12.06 | 5.80 | 48 | 9.05 |
| 1979–80 .. | 17.19 | 8.86 | 52 | 10.67 |
| 1980–81 .. | 36.90 | 22.68 | 61 | 22.59 |
| 1981–82 .. | 52.13 | 44.44 | 85 | 35.07 |
| 1982–83 .. | 55.87 | 48.59 | 87 | 39.56 |
| | 174.15 | 130.37 | 74.8 | 116.94 |

[1984 மார்ச் 24

முக்கிய செயல்பாடுகளும், சாதனைகளும் (1978-84).

(அ) தொழில் முனைவோர்களின் தேவைகள் மாவட்ட அள
விலேயே நிறைவு செய்யப்பட வேண்டி, மண்டல, கிளை அலு
வலர்களுக்கு அதிகாரங்கள் பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ளன.
இதன்படி 1980–81 ஆம் ஆண்டு மாவட்ட அளவிலான கிளை
அலுவலர்கள் ரூ. 25,000 வரை கடனுதவி அளிக்க அனுமதிக்கப்
பட்டிருந்த அதிகாரம், 1982-83 ஆம் ஆண்டு சுமார் ஒரு
லட்சம் ஆக அதிகரிக்கப்பட்டுள்ளன. இதைத் தவிர, ஆவணங்கள்
வைத்துவருதல், ரூபாய் ஐந்து லட்சம் வரை கடன் தொகைகளை
அளித்தல் முதலிய பணிகள் பிரித்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

மேலும் 1983–84 ஆம் ஆண்டு 4 மண்டல அலுவலகங்கள்
சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சி ஆகிய இடங்களில்
துவங்கப்பட்டு கடனுதவித் தொகை ரூபாய் ஒரு லட்சத்திலிருந்து
ரூபாய் 2.5 லட்சம் வரை அளிக்க அதிகாரம் பிரித்து அளிக்கப்
பட்டுள்ளது. இதைத் தவிர, ஆவணங்கள் வைத்து வருதல்,
மற்றும் கடன் தொகைகளை அளித்தல் சுமார் ரூபாய் 7.5
லட்சமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இராமநாதபுர மாவட்டத்
திற்கென மானாமதுரையில் ஒரு கிளை அலுவலகம் திறக்கவும்
அரசு அண்மையில் ஒப்புதல் அளித்துள்ளது. இதன்மூலம், சிறு
தொழில் நிறுவனங்கள் கடனுதவியினை எளிதில் பெறவும்,
மாவட்ட அளவிலேயே தனியாக கடனுதவி பெறவும் வழிவகை
செய்யப்பட்டுள்ளது.

(ஆ) தொழில் முனைவோருக்கு ஆலோசனை அளிக்கும்
பிரிவு சென்னையிலுள்ள தலைமையகத்தில் துவக்கப்பட்டுள்ளது.
இதன் வாயிலாகப் பல்வேறு தொழில் துறைகளுக்கு அளிக்கப்
படும் உதவித் தொகைகள், ஊக்குவிப்புத் தொகைகள், மானி
யங்கள், மற்றும் பல்வேறு வகைப்பட்ட உதவிகள், சலுகைகள்,
முதலியவற்றை அறிய வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதன்
மூலம், தொழில் முனைவோர், குறிப்பாக சிறு தொழில் முனை
வோர், தொழில் துவங்குவதற்குரிய ஊக்கத்தையும் உற்சாகத்
தையும் பெற்று வருகிறார்கள் என்பது வெள்ளிடைமலை.

(இ) மத்திய மாநில அரசுகள் தகுதி வாய்ந்த தொழில்
வினைஞர்களுக்கு மானியம் அளிக்கின்றன. இத்தொகையினை
தொழில் முனைவோர் மேற்கூறிய அரசுகள் ஒப்புதல் அளித்த
பிறகே பெற இயலும். ஒப்புதல் அளிக்க காலதாமதம் ஏற்படின்
இடைக்கால கடன் அளிக்கப்பட்டு அதற்கான வட்டித் தொகை
யினையும் செலுத்த வேண்டி இருந்துள்ளது. இதன் காரணமாக
தொழில் முனைவோர் பெருந்துன்பத்திற்கு ஆளாக வேண்டியுள்
ளது. இந்நிறுவனம் தொழில் முனைவோரின் இத்தகைய துன்
பத்தினை நீக்க வேண்டி தன்னுடைய சொந்த தொகையிலிருந்து
நேரடியாக ஒரு பகுதித் தொகையை இடைக்காலக் கடனாக
அளிக்கின்றது. இந்த இடைக்காலக் கடன் தொகைக்கான வட்டி



1984 மார்ச் 24]

வீதம், மற்றும் இதர செலவுகளை இந்நிறுவனமே மேற்கொள்ளு
கிறது. இதனால் தொழில் முனைவோர் குறிப்பாக சிறுதொழில்,
குறுந்தொழில் முனைவோருக்கும் நேரமும், பணமும் விரையமா
காமல் தடுக்கப்பட்டுள்ளதால் தங்களுடைய முழுக் கவனத்தையும்
தொழில் வளர்ச்சியில் செலுத்த முடிகிறது.

(ஈ) முதலாவதாகத் தொழில் துவங்கும் தொழில் முனைப்
பாளர், தொழில் நுணுக்க வல்லுநர்கள் தொழில் நுணுக்க இயல்
பட்டம் சான்றிதழ்கள் பெற்றோர் பல்வேறு தொழில் இயல்பு
களில் முன் அனுபவம் திறன் கொண்டவர்கள் தாங்களாகவே
தொழில் நிலையங்களை அமைத்து ஊக்குவிப்பதற்காகச் சுலபக்
கடன் திட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இச்சுலபக் கடன்
தொகையைப் பெறுவதற்கு தொழில் வளர்ச்சியில் பின் தங்கிய
பகுதியிலுள்ளவர்களுக்கு 15 சதவீதமும், ஏனைய பகுதியிலுள்ள
வர்களுக்கு 10 சதவீதமுமாக கொடுத்து வந்த நிலை மாறி
தற்போது அனைவரும் இச்சலுகையினைப் பெற வழி வகை
செய்யப்பட்டுள்ளது.

வேலைவாய்ப்புத் திட்டம் :

இந்நிறுவனத்தால் உதவிபெற்ற தொழில் நிறுவனங்கள் மூலம்
வேலை வாய்ப்பு பெற்றோர்களின் எண்ணிக்கை பின்வருமாறு :—

| வருடம். (1) | | | எண்ணிக்கை. (2) |
|---|---|---|---|
| 1978–79 | .. | .. | 13,670 |
| 1979–80 | .. | .. | 19,626 |
| 1980–81 | .. | .. | 42,000 |
| 1981–82 | .. | .. | 52,000 |
| 1982–83 | .. | .. | 37,000 |

பல்வேறு திட்டங்களின் கீழ் அளிக்கப்பட்ட உதவித்
தொகை பின்வருமாறு :—

(ரூபாய் கோடியில்.)

| | |
|---|---|
| சிறு தொழில்கள் .. .. .. | 24.19 |
| நடுத்தர தொழில்கள் .. .. | 3.66 |
| தொழில் நுட்ப வல்லுநர்கள் .. | 0.58 |
| போக்குவரத்து உரிமையாளர்கள் .. | 5.14 |
| மின் உற்பத்திப் பொறிகள் .. .. | 0.76 |
| பதிவு பெற்ற மருத்துவர்கள் .. .. | 0.07 |
| மின்னஞ்சிறிய மற்றும் கூட்டுக் கடனுதவி .. | 0.15 |

[1984 மார்ச் 24

முன்னேறத் துடிக்கும் தொழில் முனைவோர்களுக்கு நிறைவேற்றக் கூடிய திட்டங்களை செயலாக்கும் பொருட்டு இந்நிறுவனம் விரைவாக உதவி அளிப்பதில் தொடர்ந்து முயன்று வருகிறது.

தமிழ்நாடு மின்னணுத் தொழில் நிறுவனம் :

தமிழ்நாட்டில் மின் அணுத் தொழில் வளர்ச்சியை துரிதமாக செயல்படுத்திட, தமிழக அரசு ''எல்காட்'' என்னும் அரசுக்குச் சொந்தமான தமிழ்நாடு மின்னணுத் தொழில் நிறுவனத்தை ஏற்படுத்தியது. இந்நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூ. 2 கோடி ஆகும். இதில் இதுவரை ரூ. 139.35 இலட்சத்தை அரசு முதலீடு செய்துள்ளது. எல்காட் நிறுவனம் தானே பல தொழிற்சாலைகளைத் தொடங்கி நடத்தி வருவதுடன் தனியாருடன் சேர்ந்து கூட்டு முயற்சியில் சில தொழிற்சாலைகளைத் தொடங்கியும், தொடங்க திட்டமிட்டும் உள்ளது. எல்காட்டிற்கு சொந்தமான இரண்டு தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டுள்ளன. இவைகளில் ஒன்று தர்மபுரி மாவட்டத்திலுள்ள ஓசூரிலும் மற்றொன்று சென்னையிலும் உள்ளது. ஓசூர் தொழிற்சாலையில் அலுமினியம் எலக்டிராலிட்டித் கபாசிட்டர்கள் தயாரிக்கப்படுகின்றன. இத் தொழிற்சாலையில் ஆண்டுக்கு 5 கோடி கபாசிட்டர்கள் வரை தயாரிக்க முடியும். இந்த தொழிற் சாலையை ஒரே வருடத்தில் நிர்மாணித்து உற்பத்தி தொடங்கப் பட்டுள்ளது. சென்னையில் ஆண்டுக்கு இரண்டு இலட்சம் டிஜிட்டல் மின்னணுக் கைக்கடிகாரங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை செயல்படுகிறது.

உலோகம் மற்றும் கார்பன் பட ரெசிஸ்டர்கள் தயாரிக்கும் தொழிற்சாலை தனியாருடன் இணைந்து கூட்டு முயற்சியாக இராமநாதபுரம் மாவட்டத்தில் பொட்டப்பாளையம் என்ற ஊரில் தொடங்கப்பட்டுள்ளது. இத்தொழிற்சாலையில் ஆண்டுக்கு 5 கோடி உலோகப்பட ரெசிஸ்டர்களும் 25 கோடி கார்பன் பட ரெசிஸ்டர்களும் உற்பத்தி ஆகும்.

கம்பியில்லா இருவழி தொடர்புக் கருவிகளைத் தயாரிக்கும் தொழிற்சாலை 1984-85 ஆம் ஆண்டில் உற்பத்தியைத் தொடங்கும். இங்கிலாந்திலுள்ள மார்கோனி நிறுவனத்துடன் எல்காட் நிறுவனம் செய்துக் கொண்ட தொழில் நுட்ப ஒப்பந்தம் மத்திய அரசால் ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

தொழிற்சாலைகள், ராணுவம், தபால் தந்தி போன்ற நிறுவனங்களுக்கு தேவையான மின்னணுக் கருவிகளை உற்பத்தி செய்யும் பொருட்டு காண்டிராக்ட்ஸ் டிவிஷன் என்னும் பெயரில் எல்காட்டிற்குச் சொந்தமான ஒரு உற்பத்திப் பிரிவு செயல்பட்டு வருகிறது. இந்த உற்பத்திப் பிரிவின் மூலம் சிறு தொழிற்சாலைகளுக்கு மின்னணுப் பொருட்களை உற்பத்தி



1984 மார்ச் 24]

செய்ய உதவி கிடைக்கிறது. மேலும் எல்காட்டில் விற்பனைப் பிரிவின் மூலமாக சிறு தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் மின்னணுச் சுவர் கடிகாரங்கள் விற்பனை செய்யப்படுகின்றன. எல்காட்டின் விற்பனைப் பிரிவு சிறு கணக்கீட்டுப் பொறிகள் விற்பனையை தொடங்க உள்ளது.

இந்நிறுவனத்தில் 1980 முதல் கீழ்க்கண்டவாறு வேலை வாய்ப்பு அதிகரித்துள்ளது :—

| வருடம். | வேலை வாய்ப்பு பெற்றோர் எண்ணிக்கை. |
|---|---|
| 1980-81 .. .. .. .. | 13 |
| 1981-82 .. .. .. .. | 29 |
| 1982-83 .. .. .. .. | 122 |
| 1983-84 .. .. .. .. | 177 |

1984-85 ஆம் ஆண்டு தனியாருடன் கூட்டு முயற்சியில் செயல்படுத்தப்பட இருக்கும் திட்டங்களைப் பின்வரும் அட்டவணையில் காணலாம் :—

| எண். | திட்டத்தின் பெயர். | மொத்த மூலதனம். | எல்காட்டின் மூலதனம். |
|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 1. | தொலைக்காட்சிப் பெட்டிகள் தயாரிப்பு. .. | 32 | 16 |
| 2. | கருப்பு-வெள்ளை தொலைக்காட்சிப் பட குழல்கள் தயாரிப்பு. | 1,200 | 100 |
| 3. | எக்ஸ்ரே கருவிகள் தயாரிப்பு .. | 150 | 25 |
| 4. | கணக்கீட்டுப் பொறிகள் மற்றும் சாப்ட்வேர் செயல் திட்டம். | 23 | 1 |
| 5. | அளவை மற்றும் கட்டுப்பாட்டுக் கருவிகள் தயாரிப்பு. | 90 | 6 |
| 6. | ஊடுருவி வெப்பமேற்றுக் கருவிகள் தயாரிப்பு. | 79 | 6 |
| 7. | ஒலிபெருக்கி பாகங்கள் .. | 150 | 1 |
| | மொத்தம் .. | 1,724 | 165 |

[1984 மார்ச் 24

மேற்கண்ட திட்டங்களில் கணக்கிட்டுப் பொறிகள் மற்றும் சாப்ட்வேர் செயற்பாட்டு திட்டங்கள் தயாரிக்கும் தொழிற் சாலையை நிறுவ அரசின் அனுமதி ஏற்கனவே பெறப்பட்டுள்ளது.

தொலைபேசிக் கருவிகள் தயாரிப்பு பொதுத் துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ளதால், இச்சாதனம் தயாரிப்பு சம்பந்தமாக மத்திய அரசு கொள்கை முடிவு எடுத்த பின்னர், இத்திட்டத்தை மேற்கொள்ளலாமா என பரிசிலிக்கப்படும். 1983-84 மற்றும் 1984-85 ஆம் ஆண்டுகளில் எல்காட் நிறுவனத்தில் முதலீடு பற்றிய விளக்கம் பின்வருமாறு :—

| | | 1983-84. | 1984-85. |
|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 1. | அரசு முதலீடு .. .. .. | 139.35 | 247.10 |
| 2. | நீண்டகாலக் கடனுதவி — | | |
| | தமிழ்நாடு சிறுதொழில் முன்னேற்ற நிறுவனம். | 60.00 | 150.00 |
| | தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம். | 30.00 | 40.00 |
| 3. | அரசின் உதவித் தொகை .. | 15.00 | 15.00 |
| 4. | வழிமுறை முன்பணம் .. .. | 20.00 | 20.00 |
| 5. | குறுகிய கால வங்கிக் கடனுதவி | 20.00 | 80.00 |
| | மொத்தம் .. | 279.35 | 547.10 |

**தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம்:**

தமிழ்நாடு அரசு சர்க்கரை ஆலைகளிலிருந்து கிடைக்கும் கரும்புச் சக்கையை மூலப் பொருளாகக் கொண்டு செய்தித்தாள் காகிதம், எழுதும் காகிதம் ஆகியவற்றை உற்பத்தி செய்ய ஒரு சிறப்பான திட்டத்தை செயல்படுத்த தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தை அமைத்துள்ளது. திருச்சி மாவட்டம் கரூர் தாலூக்காவில் தொழிலில் பின்தங்கியபகுதியான புகலூரில் இந்த காகித ஆலை அதி தீவிரமாக நிறுவப்பட்டு வருகிறது. 1981ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் துவங்கப்பட்ட இத் திட்டம் 1984 ஆம் ஆண்டு நான்காம் காலாண்டில் தனது வர்த்தக ரீதியான உற்பத்தியை துவங்க திட்டமிடப்பட்டுள்ளது.



1984 மார்ச் 24]

இந்த ஆலை தனது முழு திறனில் செயல்பட்டால் ஆண்டொன்றுக்கு 50,000 டன்கள் செய்தித்தாள் காகிதமும், 40,000 டன்கள் அச்சிடும் மற்றும் எழுதுதாள் காகிதமும் உற்பத்தி செய்யும். அத்துடன் இவ்விரண்டுக்கும் இடையில் தேவைப்பட்டால், சில மாற்றங்களுடன் சந்தையின் தேவைகளை பூர்த்தி செய்யும் மற்ற வகை காகிதங்களை உற்பத்தி செய்யவும் இத்திட்டத்தில் வழி வகை உள்ளது.

இத்திட்டத்தினால் 1,200 பேருக்கு நேரடியான வேலை வாய்ப்பும், 5,000 பேருக்கு மறைமுகமான வேலை வாய்ப்பும் கிடைக்கும்.

ஆண்டொன்றுக்கு 8 சதவிகிதமாகப் பெருகிவரும் செய்தித்தாள் காகிதத்தின் இறக்குமதியைத் தவிர்ப்பதன் மூலமாக டி.என். பி.எல். ஆண்டொன்றுக்கு ரூ. 40 கோடி வீதம் அந்நிய செலாவணியை மிச்சப்படுத்துவதுடன், செய்தித்தாள் காகிதத்தில் உற்பத்திக்கும் தேவைக்கும் இடையிலுள்ள இடைவெளியை குறைக்கும்.

இந்தக் காகித ஆலை முடிவடையும் தறுவாயிலுள்ளது. இயந்திரங்களை தருவிப்பது பெருமளவுக்கு முடிந்துவிட்டது. இந்த திட்டம் நிறைவேற்றப்படுவதில் நல்ல முன்னேற்றம் கண்டுள்ளது. இயந்திரங்கள் மற்றும் தளவாடங்கள் எல்லாம் வாங்கப்பட்டு விட்டன. ஆலைக் கட்டிடம் மற்றும் உபயோக உபகரணங்கள் மற்றும் குடியிருப்புகள் கட்டுதல் ஆகியவை பெருமளவு முடியும் தருவாயிலுள்ளன. காகிதம் உற்பத்தி செய்யும் இயந்திரங்களை பூட்டுவது முடியும் நிலையிலுள்ளது. மற்ற இயந்திரங்களை நிறுவும் வேலையும் அதே சமயத்தில் நடைபெற்று வருகிறது. சர்க்கரை ஆலைகளில் பாய்லர்கள் நிறுவுவது, நிலக்கரி பெறுவதற்குத் தேவையான ரயில்பாதை அமைப்பது ஆகியவை திட்டமிட்டபடி நடைபெற்று வருகின்றன. இவ்வாறாக ஏற்கெனவே திட்டமிட்ட படி ஆலை கட்டிடம் மற்றும் இயந்திரங்கள் நிறுவும் வேலை தீவிரமாக நடைபெற்று வருகிறது. 1984 மே-ஜூன் மாதங்களில் இத்திட்டம் மாதிரி உற்பத்தியை துவங்கும். 1984 செப்டம்பர்-அக்டோபரில் ஆலை முழு அளவில் செயல்பட திட்டமிடப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு உப்பு நிறுவனம் லிமிடெட்:**

தமிழ்நாடு உப்பு நிறுவனம் 1974 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் நிறுவப்பட்டு 1975 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 22 ஆம் நாள் முதல் இயங்கத் தொடங்கியது. அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் மற்றும் செலுத்தப்பட்ட மூலதனம் முறையே ரூ. 200 இலட்சம், ரூ. 107 இலட்சமாகும். இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கம் உப்பு, உப்பைச் சார்ந்த இரசாயனப் பொருட்கள் மற்றும் உப பொருட்களைத் தயாரிப்பது ஆகும்.

மாரியூர்—வாலிநோக்கம் உப்புத் திட்டம் :

இத்திட்டம் 1975 ஆம் ஆண்டு திட்டப்பணிகள் தொடங்கப்பட்டு 1976 ஆம் ஆண்டு முதல் மேம்பாட்டுப் பணிகளோடு உப்பு உற்பத்தியும் தொடங்கியது. வேறு எந்த தொழிலும் ஆரம்பிக்க இயலாத மிகவும் பின்தங்கிய இடத்தில் அமைந்துள்ளதுமான இத்திட்டம், உள்ளூர் மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதுடன் பின்தங்கிய பகுதியை மேம்படுத்தும் நோக்கத்தோடு ஆரம்பிக்கப்பட்டது.

இத்திட்டம் 1983 ஆம் ஆண்டு இரசாயன தொழிற்சாலைக்குகந்த தரமான 10,250 டன் உப்பு உற்பத்தி செய்தது. தமிழக அரசு ரூ. 75 இலட்சம் செலவில் வாலி நோக்கத்தில் சிறு துறைமுகம் அமைக்க அனுமதி வழங்கியுள்ளது. இதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இத் துறைமுகம் மாரியூர்-வாலிநோக்கத்தில் தயாரிக்கப்படும் உப்பை மேற்கு வங்காளம் அஸ்ஸாம் மற்றும் அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து உப்பு, விற்பனையைப் பெருக்க வாய்ப்பு உள்ளது.

1984 ஆம் ஆண்டில் இத்திட்டம் இரசாயன தொழிற்சாலைக்குத் தகுந்த சுமார் 60,000 டன் உப்பு உற்பத்தி செய்யப்படும். இவ்வாண்டு ரூ. 15 இலட்சம் செலவில் அலுவலர் குடியிருப்பு கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும் மத்திய உப்புத்துறையின் மூலம் கிடைக்க விருக்கும் நிதி உதவியுடன் (50 சதவீதம்) உப்பளத்தில் தெற்கு கரையை மேம்படுத்துதல் உப்பளத்திற்குள் வாகனங்கள் செல்லுவதற்காக சாலையை மேம்படுத்துதல், தொழிலாளர்களுக்குக் குடிநீர் வசதியை விரிவு படுத்துதல் மற்றும் குறைந்த அழுத்த மின் வசதியை உப்பளத்தில் உள்ள மின்சார பல்புகளுக்குப் பெற்றுத் தருதல் போன்ற வேலைகள் நடைபெறத் திட்டமிடப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் மூலமாக சுமார் 100 நபர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பும் 800 நபர்களுக்குப் பருவகால வேலைவாய்ப்பும் அளிக்கப்படுவதுடன் உப்பைக் கொண்டு செல்லுவதற்கான பணிகள் மூலம் சார்புவேலை வாய்ப்பும் ஏற்பட வாய்ப்பு அளிக்கப்படுகிறது.

சர்தார் வேதரத்தினம் உப்புத் திட்டம்:

1979 ஆம் ஆண்டில் திட்டப் பணிகள் தொடங்கப்பட்டு 1982 ஆம் ஆண்டு மே மாதம் முதல் உப்பு உற்பத்தி தொடங்கியது. 1983 ஆம் ஆண்டு சுமார் 5,226 டன் உப்பு உற்பத்தி செய்தது. இத்திட்டத்திற்காக இதுவரை ரூ. 32.36 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. கடந்த 1983 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஏற்பட்ட வெள்ளத்தினால் இத்திட்டம் மிகவும்





பாதிக்கப்பட்டுள்ளது. இத் தொழிற்சாலையின் மேம்பாட்டிற்காக 1984 ஆம் ஆண்டில் ரூ. 13.39 இலட்சம் செலவிடப்படும். 1983 ஆம் ஆண்டு இத்திட்டம் சுமார் 20,000 டன் உப்பை உற்பத்தி செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டம் சுமார் 400—500 நபர்களுக்குப் பருவ கால வேலை வாய்ப்பு அளிப்பதுடன் 50 நபர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பும் அளிக்கிறது.

புதிய திட்டங்கள் :

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ) ரூ. 5 கோடி செலவில் வாலிநோக்கத்தில் மெக்னீசியம் உலோகம் தயாரிக்கும் திட்டத்தைச் செயல்படுத்தவிருக்கிறது. இதுதான் இந்தியாவிலேயே முதல் திட்டமாகும். இதில் தயாரிக்கப்பட இருக்கும் உலோகம் விமான தயாரிப்பு தொழிற்சாலைக்கும், நாணயம் தயாரித்தல் போன்ற தொழில்களுக்கும் பயன்படும். சுமார் 16,000 டன் அளவுள்ள 36 பிஇ. உப்புக் கழிவு நீர் (பிட்டர்ன்ஸ்) இத்திட்டத்திற்கு மாரியூர்-வாலிநோக்கம் உப்புத் திட்டம் அளிக்கும். இந்நிறுவனம் 1984 ஆம் ஆண்டு ரூ. 6.35 இலட்சம் செலவில் உப்புக் கழிவுநீரை (பிட்டர்ன்ஸ்) பக்குவப் படுத்துவதற்கு (process) தேவையான வசதிகளை ஏற்படுத்தும்.

மெக்னீசியம் தயாரிக்கும் திட்டத்திற்காக உப்புக் கழிவு நீர் (பிட்டர்ன்ஸ்) அளிக்கும்பொழுது உப்பைச் சார்ந்த மெக்னீசியம் சல்பேட், பொட்டாசியம் குளோரைட், பொட்டாசியம் சோனைட், சோடியம் சல்பேட் போன்ற இரசாயனப் பொருள்கள் தயாரிக்கும் சாத்தியக் கூறுகள் உள்ளன.

இந்நிறுவனம் பவநகரில் அமைந்துள்ள உப்பு மற்றும் கடல் சார்ந்த இரசாயன பொருட்கள் ஆராய்ச்சி (Central Salt and Marine chemicals Research Institute) நிறுவனத்துடன் நெருங்கிய தொடர்பு வைத்துள்ளது. இத்திட்டங்கள் நன்றாக செயல்படுமா என்பதை விரிவாக ஆராய்ந்து இத்திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

ஊட்டச் சத்துள்ள உப்பை தயாரிக்கும் திட்டத்தை மத்திய அரசு தமிழ்நாடு உப்பு நிறுவனத்திடம் ஒப்படைக்க கருதியுள்ளது. உப்பு நிறுவனம், மாரியூர்-வாலிநோக்கத்திலுள்ள உப்புத் தொழிற்சாலையில் ஊட்டச் சத்துள்ள உப்பு தயாரிக்க விருப்பம் தெரிவித்துள்ளது. இது சம்பந்தமான முடிவு மைய அரசிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.

பவநகரில் அமைந்துள்ள உப்பு மற்றும் கடல் சார்ந்த **இரசாயனப் பொருட்கள் ஆராய்ச்சி** நிறுவனம் (Central Salt and Marine Chemiclas Research Institute)

[1984 மார்ச் 24

மத்திய அரசு உப்புத்துறை மற்றும் தமிழக அரசின் கூட்டு முயற்சியுடன் வாலி நோக்கத்தில் மாதிரி உப்புப் பண்ணை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்நிறுவனம் அதனால் நல்ல முறையில் உப்பு உற்பத்தி செய்யவும் மற்றும் தொழிலாளர்களுக்கும் அலுவலர்களுக்கு பயிற்சி அளித்தல் போன்றவையிலும் பயன் அடையும்.

1984 ஆம் ஆண்டில் அதிக அளவு உற்பத்தி விற்பனை எதிர்பார்க்கப்படுவதினால் இந்நிறுவனம் 1985 ஆம் ஆண்டு பண இழப்பைத் தவிர்த்துப் பின்வரும் ஆண்டுகளில் நன்றாகச் செயல்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### கனிம நிறுவனங்கள்.

### தமிழ்நாடு கனிம நிறுவனம்.

தொழில்களுக்குப் பயன்படும் முக்கிய கனிமங்களை வெட்டியெடுத்து விற்பனை செய்யவும், கரும்பாறை மற்றும் இதர நிறப் பாறைகளை வெட்டியெடுத்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவும் ரூ. 100 இலட்சம் அனுமதிக்கப்பட்ட மூலதனத்துடன் முற்றிலும் அரசுக்குச் சொந்தமான நிறுவனமாக 1978 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் தமிழ்நாடு கனிம நிறுவனம் (டாமின்) நிறுவப்பட்டது. கூடுதலாக குவாரிகள் மற்றும் சுரங்கங்களை ஏற்று நடத்துவதற்கும், புதிய திட்டங்களை செயலாக்கவும் இயலும் வகையில் அனுமதிக்கப்பட்ட மூலதனத்தின் அளவை ரூ. 300 இலட்சத்திற்கு அரசு உயர்த்தியுள்ளது. இதில் செலுத்தப்பட்ட மூலதனப் பங்கு ரூ. 122.5 இலட்சமாகும்.

2. 1983-84 ஆம் ஆண்டில் (சனவரி மாதம் வரையில்) 'டாமின்' நிறுவனத்தின் உற்பத்தி மற்றும் விற்பனைத் தகவல்கள் 1982-83 ஆம் ஆண்டு தகவல்களுடன் ஒப்பிட்டுக் கீழே தரப்பட்டுள்ளன.



1984 மார்ச் 24]

(1) கனிம உற்பத்தி—

| | 1982-83. | | 1983-84 (சனவரி 1984 வரையில்). | |
|---|---|---|---|---|
| | அளவு. | மதிப்பு. (ரூபாய் லட்சத்தில்.) | அளவு. | மதிப்பு. (ரூபாய் லட்சத்தில்.) |
| | க.மீ. | | க.மீ. | |
| கரும்பாறை .. .. | 1,351 | 41.95 | 2,141 | 66.19 |
| சாம்பல் நிறப்பாறை. | 2,905. | 26.91 | 1,493 | 13.83 |
| உயர்வகை கனிமங்கள். | 32,129 டன். | 29.60 | 26,394 டன். | 24.32 |

(2) கனிம விற்பனை—

| | | | | |
|---|---|---|---|---|
| | க.மீ. | | க.மீ. | |
| கரும்பாறை .. .. | 1,722 | 101.37 | 1,998 | 122.18 |
| சாம்பல் நிறப்பாறை. | 1,692 | 45.30 | 1,447 | 40.97 |
| உயர்வகை கனிமங்கள் | 16,738 | 20.16 | 19,545 | 19.56 |

சனவரி 1984 இறுதி வாக்கிலேயே இந்நிறுவனம்(டாமின் சென்ற ஆண்டின் விற்பனை வருவாயை எட்டியுள்ளது) சென்ற 1982-83 ஆம் ஆண்டின் விற்பனை வருவாய் ரூ. 167.50 இலட்சமாகும். 1983-84 ஆம் ஆண்டு முடிவில் ரூ. 256.36 இலட்சம் விற்பனை வருவாயாகக் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. சென்ற 1982-83 ஆம் ஆண்டின் செயல் முறை ஆதாயம் ரூ. 100 இலட்சமாகும். 1983-84 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்படும் செயல் முறை ஆதாயம் ரூ. 100 இலட்சமாகும். 1984-85 ஆம் ஆண்டில் ரூ. 350 இலட்சம் விற்பனை வருவாய் கிடைக்கும் என்றும் செயல் முறை ஆதாயம் ரூ. 115 இலட்சம் கிடைக்கும் என்றும் திட்டமிடப்பட்டுள்ளது. இந்நிறுவனம் கிராமப் புறங்களில் வேலை வாய்ப்புகளை வேகமாக கூடுதலாக்கி வருகிறது. தற்போது சுமார் 200 பேர்களுக்கு வேலை வாய்ப்பளித்துள்ளது. இது 1984-85 ஆம் ஆண்டில் 2,500-க்கு உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**அறுத்து மெருகேற்றும் தொழிற்கூடம் :**

3. தமிழ்நாடு கனிம நிறுவனம் சென்னைக்கருகில் மணலியில் பாறை அறுத்து மெருகிடும் தொழிற்சாலை ஒன்றை ரூ. 385 இலட்சம் மூலதனத்தில் 1984-85 ஆம் ஆண்டு அமைக்க உள்ளது. இத்திட்டத்திற்கு அரசின் மூலதனப் பங்குத் தொகை ரூ. 79 இலட்சமாகும். இதில் ரூ. 30 இலட்சம் ஏற்கனவே அளிக்கப்பட்டுள்ளது. இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி (IDBI) அதன் உறுப்பு நிறுவனங்களான இந்திய தொழில் முதலீட்டுக் கழகம் (IFCI) ஆயுள் காப்பீட்டுக் கழகம் (LIC) ஆகியவை முறையே ரூ. 170 இலட்சம், ரூ. 55 இலட்சம் மற்றும் ரூ. 50 இலட்சம் நிதி உதவி அளிக்க முன்வந்துள்ளன. மீதி மூலதனத் தொகையை இந் நிறுவனம் தனது சொந்த வழிவகையிலிருந்து தேடிக் கொள்ள இருக்கிறது. இந்தத் தொழிற்சாலை நூறு விழுக்காடு ஏற்றுமதி நோக்குடையது. ஆகவே, இதற்கான இயந்திரங்கள் யாவும் மத்திய அரசு அளிக்கும் வரி விலக்கு சலுகையைப் பயன்படுத்திக் கொண்டு விரைவில் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படவிருக்கின்றன. தொழிற்சாலைக்கான கட்டிடங்கள் கட்டும் பணிகள் யாவும் தமிழ்நாடு கட்டுமான நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவ்வாண்டின் இறுதியில் இத் தொழிற்சாலைக்கான கட்டிடங்கள் கட்டும் பணிகள் யாவும் தமிழ்நாடு கட்டுமான நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவ்வாண்டின் இறுதியில் இத்தொழிற்சாலையில் உற்பத்தி தொடங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆண்டொன்றுக்கு 50,000 சதுர மீட்டர் மெருகிடப்பட்ட கற்பலகைகளும், 10,000 சதுர மீட்டர் மெருகிடப்பட்ட நினைவுக் கற்களும் உலக நாடுகளின் நியமம் மற்றும் தரத்தில் தயாரிக்கும் திறனுடையதாக இருக்கும்.

**சிவகங்கையில் கிராபைட் வெட்டியெடுக்கும் தொழிற்சாலை :**

4. 1984-85-ஆம் ஆண்டில் தமிழ்நாடு கனிம நிறுவனம் இராமநாதபுரம் மாவட்டம் சிவகங்கையில் கிராபைட் கனிமம் சுத்திகரிக்கும் தொழிற்சாலை ஒன்றையும் ரூ. 150 இலட்சம் மூலதனத்தில் அமைக்கத் திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்திற்காக சுமார் 425 ஏக்கர் பட்டா நிலத்தை மேற்கொள்ளும் பணிகள் நடைபெற்று வருகின்றன. அவற்றில் 173 ஏக்கர் நிலம் இதுவரை தமிழ்நாடு கனிம நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சுமார் 375 ஏக்கர் அரசு புறம்போக்கு நிலமும் தமிழ்நாடு கனிம நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சுத்திகரிப்புத் தொழிற்சாலை நாளொன்றுக்கு 100 டன் கிராபைட் கனிமத்திலிருந்து 14 டன் சுத்திகரிக்கப்பட்ட கிராபைட் தயாரிக்கும் திறன் கொண்டதாக இருக்கும். தொழிற்சாலை அமைப்பதற்காகக் கடனுதவி பெற இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கியிடம் விண்ணப்பித்துக் கொள்ளப்பட்டுள்ளது. தொழிற்சாலை அமைப்பதற்காக அரசு ரூ. 30 இலட்சம் மூலதனப் பங்குத் தொகையாக அளிக்க ஒப்புதல் அளித்துள்ளது. அவற்றில் ரூ. 20 இலட்சம் இதுவரை அளித்துள்ளது. சுத்திகரிக்கப்பட்ட கிராபைட்டிற்கு வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் மிகுந்த கிராக்கியுள்ளது. இத் தொழிற்சாலை 1984-85 ஆம் ஆண்டின் இறுதியில் உற்பத்தி தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தமிழ் நாடு கனிம நிறுவனம் சுத்திகரிக்கப்பட்ட கிராபைட்டைக் கொண்டு சிலிகான் கார்பைடு மூசை (Crycible) தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றையும் அமைக்கத் திட்டமிட்டுள்ளது. இதற்கு வெளி நாட்டிலிருந்து தேவையான தொழில் நுட்பத்தைப் பெற வேண்டுமாதலால் தமிழ்நாடு கனிம நிறுவனம் அதற்கான முயற்சிகளைத் தீவிரமாக மேற்கொண்டுள்ளது.



5. தமிழ்நாடு கனிம நிறுவனம் தொடர்ந்து ஆதாயம் ஈட்டி வரும் ஒரு நிறுவனமாக இருப்பதால், 'தாரா' நிறுவனம் மூலம் தனது குவாரிகள் மற்றும் சுரங்கங்கள் அமைந்திருக்கும் கிராமப் புறங்களில் அடிப்படை வசதிகளை செய்து கொடுப்பதற்காக நிதி உதவி அளித்து வருகிறது. அத்துடன் முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கும் நிதி உதவி அளிக்கிறது.

**தமிழ்நாடு மாக்னசைட் நிறுவனம் :**

தமிழ்நாடு மாக்னசைட் வரை நிலையை 17-1-1979 ஆம் நாள் தமிழ்நாடு அரசு ஒரு அரசு நிறுவனமாக, கச்சா மாக்னஸைட் கல்லை வெட்டி எடுக்கும் நோக்குடன் ஏற்படுத்தியது. தமிழ்நாடு அரசு இதுவரை 200 லட்சம் ரூபாயை தனது பங்குத் தொகை மூலதனமாக செலுத்தியுள்ளது. 'இந்நிறுவனம் ரூ. 6.05 லட்சத்தை தனது துணை நிறுவனமான தமிழ்நாடு மாக்னசைட் புராடக்ட்ஸ் வரை நிலையில் முதலீடு செய்துள்ளது. மேற்படி துணை நிறுவனம் 8-2-1982 வரை கூட்டுத்துறை நிறுவனமாக இருந்துவந்தது. தமிழ்நாடு அரசு 8-2-1982 ஆம் தேதியில் கூட்டுத்துறை ஒப்பந்தத்தை ரத்து செய்ததினால் மேற்கூறிய துணை நிறுவனம் இந்நிறுவனத்திற்கு முழுவதும் சொந்தமாகியுள்ளது. ஒரு உருக்காலை, செங்கற்கள், உரங்கள், இரசாயனப் பொருட்கள் முதலியன தயாரிக்கத் தேவைப்படும் கச்சாப் பொருள்களான மிதமாக எரிக்கப்பட்ட மாக்னசைட், முழுமையாக எரிக்கப்பட்ட மாக்னசைட் என்ற நடுத்தரப் பொருட்களைத் தயாரித்து, விற்பனை செய்வதே தமிழ்நாடு மாக்னசைட் பிராடெக்ஸ் வரை நிலையின் முக்கியப் பணியாகும்.

[1984 மார்ச் 24

முன்னாள் தனியார் நிறுவனமான திருவாளர்கள் சேலம் மாக்னசைட் பிரைவேட் வரைநிலை அவர்களின் முறையற்ற செயல்பாடுகளினால் சுரங்கப் பாதுகாப்பு இயக்குநரகத்தால் அபாயகரமான பகுதி என்று அறிவிக்கப்பட்ட சுரங்கப்பகுதி முழுவதும் தற்பொழுது பாதுகாப்பு விதிகளின்படி செம்மைப் படுத்தப்பட்டுவிட்டது. மேலும் அக்டோபர், 1983-ல் சுரங்கப் பாதுகாப்பு இயக்குநரகத்தால் தடையுத்தரவு நீக்கப்பட்டு விட்டது. தற்பொழுது சுரங்க மேம்பாட்டு பணிகள் முடிவடைந்து சுரங்கப் பகுதி முழுவதும் நல்ல நிலைமையில் உள்ளது.

உலகச் சந்தையில் உருக்காலைப் பொருட்களுக்கு ஏற்பட்டுள்ள மிக அதிக அளவாவிலான போட்டிகளாலும், இந்திய அரசின் இறக்குமதி கொள்கையினாலும், இந்தியாவில் உள்ள மாக்னசைட் தொழிற்சாலைகள் அதிக அளவில் பாதிக்கப்பட்டு, உலகச் சந்தையில் உள்நாட்டுத் தொழிற்சாலைகள் தரத்திலும் மற்றும் விலையிலும் போட்டியிட இயலாத நிலையில் உள்ளன. நிறுவனத்தின் இயக்கங்கள் கடந்த வருடத்தை விட நன்றாக இருந்த போதிலும், நிர்மாணிக்கப்பட்ட குறியளவுகளை அடைய முடியவில்லை. நிர்ணயிக்கப்பட்ட விற்பனைக் குறியீடான 1,20,000 டன்களுக்கு எதிராக 1983-84 ஆம் ஆண்டில் விற்பனை அளவு 1,07,000 டன்களைத்தான் அடைமுடியும், 1982-83 ஆம் ஆண்டில் தோராய மதிப்பீடு இலாபமாகிய ரூ. 60.78 லட்சத்திற்கு எதிராக நிறுவனம் ரூ. 90.17 லட்சத்தை எட்டியுள்ளது. 1983-84-ஆம் ஆண்டின் தோராய மதிப்பீடு இலாபமாகிய ரூ. 164.06 லட்சத்திற்கு எதிராக டான்மாக் நிறுவனம் ரூ.110.20 லட்சம் இலாபமே அடைய முடியும். 1983-84 ஆம் ஆண்டிற்கான ' டான்மாக் ' நிறுவனத்தின் செயல்பாடுகள் பற்றிய விபரங்கள் ஜனவரி 1984 முடியவும் மற்றும் 1982-83-ஆம் ஆண்டிற்கு அதே காலகட்டத்திற்கான விபரங்களும் கீழே ஒப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளன ;—

| காலம். | கச்சா மாக்னசைட் உற்பத்தி. | விற்பனை. | விற்பனை வரவு. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | (டன்கள்.) | ரூ. |
| ஏப்ரல் 1983 முதல் ஜனவரி 1984 முடிய. | 1,04,232 | 91,067 | 3,91,43,642 |
| ஏப்ரல் 1982 முதல் ஜனவரி 1983 முடிய. | 95,790 | 87,510 | 3,61,51,723 |



1984 மார்ச் 24]

எதிர்காலத் திட்டங்கள்—

சுழலும் சூளை ஒன்றினை நிறுவுவதற்கான திட்டம் தமிழ் நாடு அரசினரால் ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்டுவிட்டது. இத் திட்டத்திற்கான திருத்தியமைக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 765.00 லட்சங்களாகும். இத்திட்டத்தினை நிறுவுவதற்கான தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, மேலும் இத்திட்டம் மார்ச் 1985-ல் செயல்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மேற்கூறிய சுழலும் சூளையில் 6 சதவிகித சிலிகாவைத் தன்னகத்தே கொண்ட முழுமையாக எரிக்கப்பட்ட மாக்னசைட்டைத் தயாரிக்க இயலும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது சர்வதேச தரமான 1-லிருந்து 2 சதவிகிதம் வரை சிலிகன்-டை ஆக்ஸைடை விட மிகவும் அதிகமாகும். எனவே முழுமையாக எரிக்கப்பட்ட மாக்னசைட்டின் தரத்தை மேம்படுத்தவும் தரமான மாக்னசைட் கற்களை உற்பத்தி செய்யவும் கச்சா மாக்னசைட்களை சுத்தம் செய்து மேம்படுத்தும் ஆலை ஒன்றினை நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது. மேற்கூறிய திட்டத்திற்கான அனுமதி இந்திய அரசாங்கத்திடம் ஏற்கனவே பெறப்பட்டு, ஸ்விட்சர்லாந்திலுள்ள திருவாளர்கள் ஸுல்ஸர் பிரதர்ஸ் அவர்களுடன், 57·00 லட்சம் ஸ்விஸ் பிராங்குகள் (ரூபாய் 276.30 லட்சங்கள்) மொத்தச் செலவில், தொழில் நுட்பத் திறன் அளிப்பதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திடப்பட்டுள்ளது. தமிழக அரசின் உதவியோடு, மேற்கூறிய திட்டம் 1987 ஆம் ஆண்டின் மத்தியில் செயல்படுத்தப்படும் என்று நம்பிக்கைக் கொண்டுள்ளோம்.

உயர்ரக மாக்னசைட் கற்களைத் தயாரிப்பதற்கான ஆலை ஒன்றினை நிறுவி நிறுவனத்தின் இயக்கங்களை மேலும் விரிவுபடுத்த உத்தேசமிடப்பட்டுள்ளது. மேற்கூறிய திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கையைத் தயாரிக்கும் பொறுப்பினைத் திருவாளர்கள் மெட்டலஜிக்கல் அண்ட் இன்ஜினியரிங் கன்சல்டன்ட்ஸ், ராஞ்சி (ஒரு இந்திய அரசாங்க நிறுவனம்) அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டு அவர்களின் ஆலோசனைப்படி மேற்கூறிய திட்டத்திற்கு தொழில் நுட்பத்திறன் பெறுவதற்கு திருவாளர்கள் ரிப்ராக்டரின்கன்ஸல்டன்சி அன்ட் இன்ஜினியரிங். ஆஸ்திரியா அவர்கள் ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்டு, மேற்கூறிய தேர்வு இந்திய அரசாங்கத்தின் ஒப்புதலுக்காக உள்ளது. இந்திய அரசாங்கத்தின் ஒப்புதல் பெறப்பட்டபின் மேற்கூறிய திட்டத்தினைச் செயல்படுத்தத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

மேற்கூறிய திட்டங்களுக்கான மொத்த செலவு சுமார் ரூ. 80 கோடியாகும்.

## புவியியல் மற்றும் சுரங்கத் துறை

தொழில் வணிகத்துறையின் புவியியல் பிரிவு கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக இம்மாநிலத்தில் கனிம ஆய்வுகள் நடத்தி வந்ததின் காரணமாக தனியார் மற்றும் அரசுத்துறையில் கனிமம் சார்ந்த தொழிற்சாலைகள் நிறுவப்பட்டன. சென்னை தவிர மற்ற மாவட்டங்களில் இப்பிரிவின் பிராந்திய அலுவலகங்கள் ஏற்படுத்தப்பட்டதால் ஏனைய வகைகள் மட்டுமல்லாது மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாவட்ட அளவிலும் கூட கனிமம் நிர்வாகப் பணிகள் துரிதப்படுத்தப்பட்டன. மாவட்ட அளவில் கனிம நிர்வாகத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு புவியியல் தொழில்களுக்கு அலுவலர்கள் உதவி செய்து வந்தனர். இவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் சுரங்கக் குத்தகை விண்ணப்பங்களை பரிசீலனைப் செய்வதிலும் அரசுக்குப் பரிந்துறை விரைவில் அனுப்புவதிலும் உதவி புரிந்தனர். மேலும் கனிம நிர்வாகப் பணியின் மாவட்ட அளவிலான கொள்கைபற்றிய விரைவான முடிவு எடுக்கவும் உதவி புரிந்தனர்.

அரசு ஆணை எண். 387, தொழில் துறை, நாள் 24-3-1983-ன் படி 14-4-1983 முதல் புவியியல் மற்றும் சுரங்கத்துறை இயக்ககம் என்ற புதிய துறை ஏற்படுத்தப்பட்டது. இப்புதிய இயக்ககம் ஏற்படுத்தப்பட்டதின் விளைவாக சென்னையைத் தவிர ஏனைய ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட அலுவலகங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதுவரையில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பணிபுரிந்து வந்த சிறப்புக் கனிம அலுவலர்கள் இப்புதிய இயக்ககத்திற்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இப்புதிய இயக்ககத்தின் முதன்மையான பணிகள் (1) கனிம ஆய்வுப் பணி, (2) கனிம நிர்வாகப்பணி ஆகியவைகளாகும்.

கனிம ஆய்வு.

1983-84-ஆம் ஆண்டில் இத்துறையால் மேற்கொள்ளப்பட்ட கனிம ஆய்வுப் பணிகள் கீழே தரப்பட்டுள்ளன.

1. தர்மபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி வட்டம் மகாராஜகடைப் பகுதியில் தங்கம் பற்றிய ஆய்வு.

2. வட ஆற்காடு மாவட்டம் திருவண்ணாமலை, சேலம் மாவட்டம் கஞ்சமலை ஆகிய இடங்களில் உள்ள இரும்புக் கனிமங்களை மேம்படுத்துதலுக்கான ஆய்வு, இக்கனிமங்களை மேம்படுத்துவதற்கான ஆய்வு மற்றும் இக்கனிமங்களை ஆந்திர மாநிலம் பன்லோன்சா என்னுமிடத்திலுள்ள ஸ்பான்ஜ் இந்தியா லிமிடெட்டில் மென்மையான இரும்பு உற்பத்திக்கான ஆய்வு.



3. தஞ்சை மாவட்டத்தில், வேதாரணியம் வட்டம் காரியப்பட்டினம் எனும் இடத்தில் சிலிகா மணல் பற்றிய ஆய்வு.

4. புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டம் எரிச்சி பகுதியில் காணப்படும் களிமண் பற்றிய ஆய்வு.

5. இராமநாதபுரம் மாவட்டம், தேவிப்பட்டினம் மற்றும், கிழக்கரைப் பகுதிகளில் கடல் நீரின் உப்புத் தன்மை பற்றிய ஆய்வு.

6. இராமநாதபுரம் மாவட்டம் துலுக்கப்பட்டி, மற்றும் சுற்றியுள்ள இடங்களில் திருவாளர்கள் மதராஸ் சிமென்ட்ஸ் நிறுவனத்தின் சுரங்கக் குத்தகை இடங்களில் உள்ள சுண்ணாம்புக் கல் இருப்பு பற்றிய மறு மதிப்பீட்டிற்கான ஆய்வு.

மேற்கூறிய அனைத்து ஆய்வுகளும் அவை முடிவு பெறாத காரணத்தால் 1984-85 ஆம் ஆண்டிலும் அவைகள் தொடர்ந்து நடத்தப்படும். 1984-85 ஆம் ஆண்டில் மேற்குறித்த ஆய்வுகள் தவிர கீழ்க்கண்ட சிறப்பு ஆய்வுகளையும் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(1) தென்னாற்காடு மாவட்டம், மாமண்டூர் பகுதியில் காணப்படும் பல்வகை உலோக சல்பைடு படிவங்கள் பற்றிய மறு மதிப்பீட்டு ஆய்வு.

(2) தென்னாற்காடு மாவட்டத்தில் நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தினரிடம் குத்தகைக்கு விடப்பட்டுள்ள பகுதிகள் தவிர இதர இடங்களில் உள்ள பழுப்பு நிலக்கரிக்கான சுரங்க துறப்பணப் பணியுடன் கூடிய விரிவான ஆய்வு.

(3) தமிழகத்திலுள்ள ஆபரணக் கற்கள் மேம்பாட்டுத் தொழிலை விரிவு படுத்த மதிப்பு வாய்ந்த ஆபரணக் கற்கள், மற்றும் குறை மதிப்புடைய ஆபரணக் கற்கள் பற்றிய ஆய்வு, இந்தத் திட்டத்திற்கு ஐக்கிய நாடுகள் வளர்ச்சிப் பணித் திட்டத்தின்கீழ் உதவியைப் பெறுவதென உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(4) பெரியார் மாவட்டத்தின் சில பகுதிகளில் வெங்கக்கல் மற்றும் பெல்ஸ்பார் ஆகியவற்றுக்கான ஆய்வு.

(5) இராமநாதபுரம், மதுரை, திருச்சி மாவட்டங்களின் சில பகுதிகளில் சுண்ணாம்புக் கற்களுக்கான விரிவான ஆய்வு.

(6) சேலம் மாவட்டம், சங்கரிக்கு அருகில் கந்தகம் சேர்ந்த கனிமப் பொருட்கள் இரசாயன ஆய்வுக்குச் சேகரித்தல் மற்றும் அவை பற்றிய விரிவான ஆய்வு.

[1984 மார்ச் 24.

(7) நீலகிரி மாவட்டத்தில் நிலச்சரிவு பற்றிய ஆய்வுகளைத் தொடர்ந்து மேற்கொள்ளல் (பொறியியல் சார்-புவியியல் ஆய்வுகள்).

(8) மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதிகளில் உள்ள கனிம இருப்பு, சுற்றுப்புறச் சூழ்நிலை மற்றும் அம்மலைப் பகுதியில் மேம்பாடு ஆகியவற்றுக்கான ஆய்வுகளை நடத்துவதற்கான திட்டம் இத்திட்டத்திற்கு மத்திய அரசின் சுற்றுப்புறச் சூழ்நிலைத் துறையின் சிறப்பு நிதி உதவித் திட்டத்தின்கீழ் அனுமதி வழங்கப்பட வேண்டும்.

கனிம மேம்பாடு [illegible], சேலம் [illegible]

மாக்னசைட், சிலிகா மணல், [illegible] கல் ஆகிய [illegible] கனிமங்களின் தரங்களை மேம்படுத்துவது குறித்து ஆய்வு, இந்த ஆய்வுக் கூடத்தில் ஸ்பான்ஜ் இரும்புத் [illegible] நடைமுறைப்படுத்துவதற்கான கனிம மேம்பாட்டுப் பணியைச் செய்யவும் தனி முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. [illegible] இக்கூடத்தில் கனிம மேம்பாடு தொடர்பான இயந்திரங்கள் மற்றும் கருவிகள் நிறுவப்பட்டன. மின்சார மாற்றுக் கருவி (Transformer) பொருத்துவதற்கான வேலையும் முன்னேற்றம் அடைந்துள்ளது. அரசுத்துறையைச் சேர்ந்த இந்த ஆய்வுக் கூடத்தில் தமிழ்நாடு மாக்னசைட் நிறுவனம் [illegible] நிறுவனங்கள் மற்றும் தனியார் துறையைச் சார்ந்த நிறுவனங்களால் ([illegible]preneurs) அனுப்பப்பட்ட கனிம மாதிரிகள் இரசாயனப் பரிசோதனைகள் செய்யப்பட்டு உரிய கட்டணம் பெறப்பட்டபின் ஆய்வு அறிக்கைகள் அவர்களுக்குத் தரப்பட்டு வருகின்றன.

கனிம நிர்வ[illegible]

(1) மாநில அளவில் கனிம மற்றும் சுரங்க நிர்வாகத் தொடர்பின் [illegible] மற்றும் மத்திய அரசினால் வகுக்கப்பட்ட நெறிமுறைகளும் [illegible] அவ்வப்போது வழங்கப்பட்ட அறிவுரைகளும் [illegible] மன்றங்களினால் அவ்வப்போது வழங்கப்பட்ட [illegible] மற்றும் சுரங்கங்கள் தொடர்புடைய தீர்ப்புகளின் தன்மை ஆகிய பல்வேறு வகைகளாலும் இத்துறையினர் பெற்ற அனுபவத்தால் பெருங்கனிமங்கள் மற்றும் சிறு கனிமங்களுக்கான குத்தகை [illegible] குறித்து சட்டம் மற்றும் விதிகளைத் தக்க முறையில் அறிந்து செயல்படுவதில் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு இத்துறையினால் உதவி செய்ய முடிந்தது. [illegible] நடந்த கருத்துப் பரிமாற்றுக் கூட்டங்கள், [illegible] குறிப்புகள் [illegible] தங்கட்கு பிறகு மேற்கொள்ளப்பட்ட முடிவுகள் மற்றும் வழிமுறைகள் [illegible] கனிம நிர்வாகம் தொடர்பின



1984 மார்ச் 24]

[illegible] மற்றும் [illegible] அனுமதி [illegible] பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு [illegible] பிரச்சினைகளில் [illegible] முடிவுகள் [illegible] தவிர்க்க, இவ்வகைக் [illegible]

(2) சிறு கனிம நிர்வாகத்தில் குவாரிக்[illegible] மற்றும் கனிம இருப்பு [illegible] தொடர்பான மதிப்பீடு செய்வதில் சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டது. பெருவாரியான குவாரி குத்தகைகள் தொடர்பாகக் கனிமங்களின் சந்தை விலையை நிர்ணயி[illegible] அதிலிருந்து குத்தகை விற்பனைக்கான அரசு மதிப்பீட்டு [illegible] நிர்ணயிக்கல் ஆகியவை இத்துறையினரால் [illegible] மாவட்ட ஆட்சியர்களுக்கு தக்க அறிவுரைகள் [illegible].

(3) குத்தகை விடப்படாத கனிமங்கள் [illegible] புதிய இடங்கள் கண்டு பிடிக்கப்பட்டு [illegible] ஏலம் மூலம் விற்பனை செய்ய ஆவன செய்வதில் மாவட்ட ஆட்சியர்களுக்கு இத்துறையினர் உதவி வருகின்றனர். சட்டத்திற்குப் புறம்பாக குவாரி குத்தகை இன்றி கனிமங்களை வெட்டியெடுப்பது கண்டு பிடிக்கப்படும் உள்ளூராட்களால் [illegible] குறுகியகால அனுமதிச் சீட்டு பெறப்பட்டு குவாரி செய்வதை அறிந்து ஆய்வு செய்வதும் இம்மாதிரி இடங்கள் அனைத்தும் ஏலத்தில் விடக்கூடிய நிர்ந்தர குவாரிகள் பட்டியல் கொண்டு வரப்பட்டு அதிக நிரந்தர வருவாய் ஈட்டும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

(4) சிறு வகைக் கனிமங்களான ஆற்றுமணல், செங்கல், களிமண், கட்டிடக் கற்கள் மற்றும் சுக்கான் கற்கள் சட்ட விதிகட்கு புறம்பாக எடுத்துச் செல்லுதல் மற்றும் அனுமதிப் பூர்வமற்ற முறையில் தோண்டுதல் ஆகியவை கண்டுபிடிக்கப்படுவதில் [illegible] கவனம் செலுத்தப்பட்டு சட்ட விதிகளின்படி அபராதமும் விதிக்கப்பட்டன.

(5) கனிம அனுமதிச்சீட்டுகள் தவறான முறையில் பயன்படுத்தப்படுவதைத் தடுக்க அனுமதிச்சீட்டுகளின் அளவுகள் நிர்ணயிக்கப்பட்டு குறைபாடுகள் சரி செய்யப்பட்டன.

(6) சுரங்கங்களைப் பார்வையிட்டு கனிம உற்பத்தியைக் குறை மதிப்பீடு செய்தலைத் தடுத்தல் மற்றும் வெளிப்படுத்தாத கனிம உற்பத்தி அளவினைக் கண்டு[illegible] ஆகியவற்றில் புதிய முயற்சிகள் செய்யப்பட்டன.

(7) கட்டிட வேலைகளுக்கான பொருட்களின் விலை யேற்றத்தைக் கட்டுப்படுத்தவும் கூடுதல் அளவில் கனிமங்கள் கிடைக்கவும் சென்னை நகரை ஒட்டிய பகுதிகளிலும், செங்கற் பட்டு மாவட்டத்தில் சில பகுதிகளிலும், மணல், கட்டிடக் கற் கள் முதலியன இருக்கும் புதிய இடங்கள் கண்டு பிடிக்கப்பட்டன. இப்பணி அரசுத்துறை நிறுவனங்களாகிய தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் தமிழ்நாடு குடிசை மாற்றுவாரியம் போன்றவற்றிற்கு பெரிதும் நன்மை பயக்கக்கூடியதாக அமையும்.

இந்த ஆண்டில் 229 கனிமம் தொடர்பான ஒப்புதல் சான்றிதழ் கள் வழங்கப்பட்டன. மேலும் கனிம குத்தகைக்கான சுமார் நூறு விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டன. இத்துடன் பெரு வகைச் கனிமம் மற்றும் சிறுவகை கனிமங்களின் குத்தகை வழங்கு தல் அனுமதிச்சீட்டு வழங்குதல் ஆகியவை தொடர்பான சுமார் நூறு மேல் முறையீட்டு மனுக்கள் மற்றும் ரிட் மனுக்கள் பரிசீலிக்கப்பட்டு தேவையான பரிந்துரைகள் இத்துறையினால் வழங்கப்பட்டன.

கனிம வருவாய்.

| ஆண்டு. | மொத்த கனிம வருவாய் | *மாக்னசைட் விற்பனை மூலம் கிடைத்த நனி வருவாய் |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (ரூபாய் இலட்சங்களில்) | |
| 1979-80 .. .. .. | 359.51 | 247.10 |
| 1980-81 .. .. .. | 411.48 | 238.58 |
| 1981-82 .. .. .. | 433.08 | 260.00 |
| 1982-83 .. .. .. | 574.82 | 308.20 |
| 1983-84 .. .. .. (செப்டம்பர் 1983 வரை). | 112.47 | 0.51 |

* பகுதி 2-ல் குறிப்பிட்டுள்ள வருவாயில் அடங்கியது.



பரிசீலிக்கப்பட்ட கனிம குத்தகை விண்ணப்பங்களின் எண்ணிக்கை

| | |
|---|---|
| 1981-82 .. .. .. | 81 |
| 1982-83 .. .. .. | 98 |
| 1983-84 (ஜனவரி 84 வரை) .. | 100 |

[illegible] கனிம ஒப்புதல் சான்றிதழ்களின் எண்ணிக்கையும் [illegible]

| ஆண்டு. | புதியது. | | புதுப்பித்தல். | |
|---|---|---|---|---|
| | எண்ணிக்கை. | ரூபாய். | எண்ணிக்கை. | ரூபாய் |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1980-81 .. | 88 | 44,000 | 160 | 40,000 |
| 1981-82 .. | 107 | 53,500 | 204 | 53,500 |
| 1982-83 .. | 175 | 87,500 | 219 | 54,750 |
| 1983-84 .. (டிசம்பர் 83 வரை). | 111 | 55,500 | 118 | 39,500 |

சர்க்கரைத் தொழில்.

1. 1 நெசவுத் தொழிலுக்கு அடுத்து சர்க்கரைத் தொழில் தான் பதனிடும் தொழில்களில் மிகப் பெரிய தொழிலாக விளங்கு கிறது. வேளாண் பெருமக்களின் பொருளாதார வளர்ச்சி யில், சர்க்கரைத் தொழில் தலையாய அங்கம் வகிக்கிறது. சர்க்கரைத் தொழிலின் குறிப்பாக கூட்டுறவு சர்க்கரை ஆலை களின் வளர்ச்சியையும் அதன் இதரப் பணிகளையும் திறம்பட செயல்படுத்திட சர்க்கரைத் துறை இயக்ககம் தனியானதோர் துறையாக 1969-ம் ஆண்டு அக்டோபர் திங்களில் தொடங்கப் பட்டது.

2. தமிழ்நாட்டில் கூட்டுறவுத் துறையில் 10 சர்க்கரை ஆலைகளும், 1984 ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் தொடங்கப்பட்ட ஒரு சர்க்கரை ஆலையையும் சேர்த்து தனியார் துறையில் 8 ஆலைகளும் பொதுத்துறையில் 2 ஆலைகளும், மைய அரசின் நிர்வாகத்தின் கீழ் ஒரு ஆலையும் இயங்கி வருகின்றன. இதுகாறும் தனியார் துறையில் இயங்கி வந்த மதுரா சர்க்கரை ஆலையை 1983 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் மாநில அரசு பொதுத் துறை நிர்வாகத்தின் கீழ் எடுத்துக் கொண்டது. கூட்டுறவுத் துறையிலோ அல்லது பொதுத் துறையிலோ போதிய நிதி ஆதாரம் இல்லை என்பது உள்பட வேறு பல காரணங்களால் புதிய சர்க்கரை ஆலைகள் அமைக்க இத்துறைகள் முன்வர இயலாத நிலையில் தனியார் துறையில் சர்க்கரை ஆலைகள் அமைக்க அனுமதிக்கலாம் என அரசு கொள்கை முடிவு எடுத்துள்ளதன் பேரில், தனியார் துறையிடமிருந்து வரப்பெற்ற ஏழு விண்ணப்பங்கள் மாநில அரசால் மத்திய அரசுக்கு பரிந்துரைக்கப்பட்டன. அவற்றில், தனியார் துறையில் சர்க்கரை ஆலைகள் அமைக்க மூன்று முன் உரிமங்கள் மத்திய அரசால் வழங்கப்பட்டுள்ளன. பிற 4 விண்ணப்பங்கள் மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளன. நாளொன்றுக்கு 1,250 டன் அரவைத் திறன் கொண்ட ஒரு கூட்டுறவுச் சர்க்கரை ஆலை [illegible] பகுதியில் நிறுவ அனுப்பப்பட்டுள்ள விண்ணப்பமும் மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது.

1.3. பென்னி [illegible] லிமிடெட் என்ற தனியார் சர்க்கரை ஆலை 1984 ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் அரவையைத் துவங்கியது. கூட்டுறவுத் துறை சர்க்கரை ஆலையான திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலை இந்தச் சர்க்கரைப் பருவத்தில் அரவையைத் துவங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2. தமிழ்நாடு சர்க்கரை ஆலைகளின் செயல்பாடுகள்.

2. 1. தமிழக சர்க்கரை ஆலைகளின் 1981-82 மற்றும் 1982-83 ஆம் ஆண்டுகளின் பொதுவான செயல்பாட்டு விவரம் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

2. 2. கடந்த மூன்றாண்டுகளில் தமிழக சர்க்கரை ஆலைகளில் பிழியப்பட்ட கரும்பின் அளவு, உற்பத்தி செய்யப்பட்ட சர்க்கரையின் அளவு மற்றும் சர்க்கரை கட்டுமானம் போன்ற விபரங்களும் 1983-84 ஆம் ஆண்டுக்கான மதிப்பீடும் தொன்று விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.



| வரிசை எண்ணும் சர்க்கரை ஆண்டும் | பிழியப்பட்ட கரும்பின் அளவு. | உற்பத்தி செய்யப்பட்ட சர்க்கரையின் அளவு. | சர்க்கரை கட்டுமானம் | இயங்கிய பிழிதிறனை நாட்கள் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | (இலட்சம் டன்களில்). | | | |
| 1. 1980-81 .. | 49.54 | [illegible] | 8.67 | 69 |
| 2. 1981-82 .. | 85.93 | 7.55 | 8.78 | 120 |
| 3. 1982-83 .. | 72.02 | 6.57 | 9.04 | 101 |
| 4. 1983-84* | 47.73 | 4.38 | 9.18 | 63 |

2.3. 1981-82 ஆம் ஆண்டில் கரும்பு உற்பத்தி மிகவும் அதிகமாக இருந்ததால், தமிழக ஆலைகள் மொத்தம் 85.93 இலட்சம் டன்கள் கரும்பு பிழியும் சாதனை அளவை அடைய முடிந்தது. ஆயினும் 1982-83-ஆம் ஆண்டில் ஏற்பட்ட கடும் வறட்சியின் காரணமாக 1983-84 ஆம் சர்க்கரை ஆண்டில் 47.73 இலட்சம் டன்கள் கரும்பு மட்டுமே பிழிய இயலும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2.4. 1982-83 ஆம் ஆண்டில் சர்க்கரை உற்பத்தி 6.51 இலட்சம் டன்களாக இருந்தது. ஆனால் 1983-84 ஆம் ஆண்டில் சர்க்கரை உற்பத்தி 4·38 இலட்சம் டன்கள் மட்டுமே எதிர்பார்க்கப்படுகிறது. 1982-83 ஆம் ஆண்டில் ஏற்பட்ட கடும் வறட்சியினால் கரும்பு கிடைக்கும் அளவு குறைந்தபடியால் சர்க்கரை உற்பத்தியும் குறைந்துள்ளது.

3. கரும்பின் விலை.

3.1. 1982-83 ஆம் ஆண்டு அரவைப் பருவத்திற்கு 8.5 சதவீதம் அல்லது அதற்குக் குறைவான சதவிகிதச் சர்க்கரை சத்துடைய கரும்பின் விலை டன் ஒன்றுக்கு ரூ. 130 என மத்திய அரசு நிர்ணயம் செய்தது. இவ்விலை அதற்கு முன் ஆண்டு ...

* மதிப்பீடுகள்.

நிர்ணயிக்கப்பட்ட விலைக்குச் சமமான தொகையாகும். கரும்பு விவசாயிகளின் கோரிக்கைகள், வேளாண்மை இடு பொருள் விலை, மற்றும் கூலி உயர்வு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு 8.5 சதவீதம் அல்லது அதற்குக் குறைந்த சர்க்கரைக் கட்டுமானம் கொண்ட கரும்புக்கு டன் ஒன்றுக்கு ரூ. 155 என 1982-83-ஆம் ஆண்டுக்கு தமிழக அரசு விலை நிர்ணயித்தது. சர்க்கரைக் கட்டுமானம் 8.5 சதவீதத்திற்குக் கூடுதலாக இருப்பின் 0.1 விழுக்காடுக்கு 18.2353 பைசா வீதம் பிரிமியமாக வழங்கவும் சர்க்கரை ஆலைகளுக்கு அறிவுறுத்தப் பட்டது. கரும்பு உற்பத்தியாளருக்கு கடந்த ஆண்டு கொடுக் கப்பட்ட விலை அல்லது 1982-83-ஆம் ஆண்டிற்கு அரசு அளித்த விலையான டன்னுக்கு ரூ. 155 இதில் எது அதிகமோ அதனை வழங்கவேண்டுமென 1983-ஆம் ஆண்டு மார்ச் திங்களில் ஆணையிடப்பட்டுள்ளது. அவ்விதம் 1982-83-ஆம் ஆண்டில் கரும்பு விவசாயிகளுக்கு வழங்கப்படும் விலை அதற்கு முந்தைய ஆண்டில் வழங்கப்பட்ட விலையைக் காட்டிலும் குறைவாயிருந்தால், அவ்விதம் குறைவுபடும் தொகையை மாநில அரசு உதவித் தொகையாக வழங்கியது.

3.2. மத்திய அரசு 1983-84-ஆம் ஆண்டுக்கு 8.5 சதவீதம் அல்லது அதற்குக் குறைவான சர்க்கரைக் கட்டுமானம் உடைய கரும்புக்கு டன் ஒன்றுக்கு ரூ. 135 என்று விலை நிர்ணயித் துள்ளது. கரும்பு சாகுபடிச் செலவு அதிகரிப்பின் காரண மாக எழுந்த விவசாயிகளின் கோரிக்கைகளைக் கருத்திற் கொண்டு தமிழ்நாடு அரசு 8.5 சதவீதம் அல்லது அதற்குக் குறைவான சர்க்கரைச் சத்துடைய கரும்பிற்குக் குறைந்த அளவு விலை, டன் ஒன்றுக்கு ரூ. 160 எனவும். சர்க்கரைச் சத்து 8.5 சதவீதத்திற்கு மேற்படும் பொழுது ஒவ்வொரு 0.1 சதவீதத்திற்குக் குவிண்டால் ஒன்றுக்கு 18.8235 பைசா வீதம் வழங்க சர்க்கரை ஆலைகளுக்கு அறிவுறுத்தியுள்ளது.

4. கரும்புச் சாலை அபிவிருத்தித் திட்டம் :

ஒவ்வொரு சர்க்கரை ஆலையும் தாம் அரவை செய்யும் கரும்பிற்கு டன் ஒன்றுக்கு ரூ. 5 வீதம் கரும்பு மீதான மேல் வரி (செஸ்) அரசுக்குச் செலுத்துகின்றது. மேற்படி தொகை கரும்பு வளர்ச்சிக்கான ஆராய்ச்சி, சர்க்கரை ஆலைகள் அமைந்துள்ள பகுதிகளில் புதிய சாலைகள் அமைத்தல், மற்றும் தற்போதுள்ள சாலைகளைப் பராமரித்தல் போன்ற இனங் களுக்குச் செலவிடப்படுகின்றது. 1983-84-ஆம் ஆண்டில் கரும்புச் சாலை மேம்பாட்டுத் திட்டப் பணிகளுக்குச் செலவிட ரூ. 250 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



5. சர்க்கரை ஆராய்ச்சி நிறுவனம் :

தமிழகத்தில் உள்ள சர்க்கரை ஆலைகளில் பணிபுரியும் தொழில்நுட்பப் பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கவும், ஆலோசனை மற்றும் விரிவாக்கப் பணிகளுக்காகவும், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளும் பொருட்டும் தமிழ்நாடு அரசு 1979-ஆம் ஆண்டில் சர்க்கரை ஆராய்ச்சி நிறுவனத்தை நிறுவியது. இந் நிறுவனம் சர்க்கரை ஆலை களில் பணி புரியும் தொழில் நுட்ப பணியாளர்களுக்கு சர்க்கரை உற்பத்தி பற்றி பயிற்சி அளித்து வருகிறது.

6. தமிழ்நாடு சர்க்கரை நிறுவனம் (டாஸ்கோ).

6.1. புதிய சர்க்கரை ஆலைகள் பொதுத் துறையிலேயே நிறுவப்பட வேண்டும் என 1974-ஆம் ஆண்டில் அரசு எடுத்த கொள்கை முடிவிற்கேற்ப, தமிழ்நாடு சர்க்கரை நிறுவனம் 1974-ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.

6.2. தமிழ்நாடு சர்க்கரை நிறுவனத்தின் கீழ் பொதுத்துறை யில் கீழ்க்கண்ட சர்க்கரை ஆலைகள் இயங்கி வருகின்றன.

1. அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை, குருங்குளம், தஞ்சாவூர் மாவட்டம்.

2. ஜவஹர்லால் நேரு சர்க்கரை ஆலை, எரையூர், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

6.3. ஜவஹர்லால் நேரு சர்க்கரை ஆலையும், அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலையும் 198283-ஆம் ஆண்டில் தமது நிறுவிய பிழிதிறனில் முறையே 94.81 சதவீதம் மற்றும் 106.35 சதவீத அளவுக்கு உற்பத்தித் திறனைப் பயன்படுத்தியுள்ளன.

7. சர்க்கரை உற்பத்தியுடன் இணைந்த மின்சாரம் தயாரிக்கும் திட்டம் (கோ ஜெனரேஷன் பிளாண்ட்).

கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் உயர் அழுத்த கொதிகலன் களைப் பயன்படுத்தி, மின்சாரம் தயாரித்து அதன் மூலம் கிடைக்கும் உபரி மின்சாரத்தை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இது போன்ற இரண்டு திட்டங்களில் ஒன்று தர்மபுரி கூட்டுறவுச் சர்க்கரை ஆலையிலும் மற்றொன்று கள்ளக்குறிச்சி கூட்டுறவுச் சர்க்கரை ஆலையிலும் ஒவ்வொன்றும் ரூபாய் 900 இலட்சம் செலவில் நிறுவப்பட உள்ளது. மின்சாரம் தயாரிக்கும் வழக்கமான முறையிலிருந்து மாறுபட்ட முறையில் மின்சாரம் தயாரிப் பதற்கான வகையில் இத்திட்டம் அமைந்துள்ளதால் மத்திய அரசு இத்திட்டத்திற்கு நிதியுதவி அளிக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.

8. வேலை வாய்ப்பு.

சர்க்கரைத் தொழில் பெருமளவில் நேரடி வேலைவாய்ப்பு அளிப்பதோடு சர்க்கரை ஆலைகளைச் சுற்றியுள்ள பகுதிகளில் வாழும் பல்லாயிரக் கணக்கானமக்களுக்கு மறைமுக வேலை வாய்ப்பு வழங்கி வருகின்றது. தமிழகத்தில் தற்போது இயங்கி வரும் சக்கரை ஆலைகளில் சுமார் 18 ஆயிரம் பேர் நேரடிப் பணியில் ஈடுபட்டுள்ளார்கள்.

## இணைப்பு.

தமிழகத்திலுள்ள சர்க்கரை ஆலைகளின் அரவைத்திறன் அளவு, பிழிந்த கரும்பின் அளவு உற்பத்தி செய்த சர்க்கரையின் அளவு மற்றும் சராசரி சர்க்கரைக் கட்டுமானம் பற்றிய விவரம்.

| வரிசை எண்ணும் சர்க்கரை ஆலைகளின் பெயரும். | 1982-83 பருவத்தில் நாள் ஒன்றுக்கு பிழிதிறன். | 1981-82 | | |
|---|---|---|---|---|
| | | பிழியப்பட்ட கரும்பின் அளவு. | உற்பத்தி செய்த சர்க்கரையின் அளவு. | சராசரி சர்க்கரை. கட்டுமானம். (விழுக்காடுகளில்). |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| (அ) கூட்டுறவுத் துறை— | (டன்களில்) | | (டன்களில்) | |
| 1. ஆம்பூர் .. .. .. | 2,200 | 3,03,935 | 29,271 | 9.63 |
| 2. மதுராந்தகம் .. .... | 1,750 | 3,62,345 | 31,390 | 8.66 |
| 3. அமராவதி .. .. .. | 2,000 | 3,80,068 | 35,535 | 9.35 |
| 4. சேலம் .. .. .. | 2,500 | 5,28,367 | 46,968 | 8.89 |
| 5. கள்ளக்குறிச்சி .. .. | 2,000 | 3,64,669 | 32,026 | 8.78 |
| 6. நேஷனல் .. .. | 1,500 | 3,08,295 | 28,996 | 9.41 |
| 7. தருமபுரி .. .. .. | 1,250 | 2,64,287 | 25,581 | 9.68 |
| 8. வேலூர் .. .. .. | 1,250 | 3,14,128 | 27,395 | 8.72 |
| 9. திருப்பத்தூர் .. .. .. | 1,250 | 2,30,380 | 21,936 | 9.52 |
| 10. செங்கல்வராயன் (உளுந்தூர் பேட்டை). | 1,250 | 3,12,116 | 25,628 | 8.22 |
| கூட்டுறவு—மொத்தம் .. | 16,950 | 33,68,590 | 3,04,726 | 9.04 |

இணைப்பு—தொடர்ச்சி.

தமிழகத்திலுள்ள சர்க்கரை ஆலைகளின் அரவைத் திறன் அளவு, பிழிந்த கரும்பின் அளவு, உற்பத்தி செய்த சர்க்கரையின் அளவு மற்றும் சராசரி சர்க்கரை கட்டுமானம் பற்றிய விவரம்—தொடர்ச்சி.

| வரிசை எண்ணும் சர்க்கரை ஆலைகளின் பெயரும். | 1982-83 | | |
|---|---|---|---|
| | பிழியப்பட்ட கரும்பின் அளவு. | உற்பத்தி செய்த சர்க்கரையின் அளவு. | சராசரி சர்க்கரை கட்டுமானம். (விழுக்காடுகளில்). |
| | (6) | (7) | (8) |
| (அ) கூட்டுறவுத் துறை : | (டன்களில்) | (டன்களில்) | |
| 1. ஆம்பூர் .. .. .. | 3,08,728 | 30,765 | 9.97 |
| 2. மதுராந்தகம் .. .. .. | 3,33,199 | 30,274 | 9.09 |
| 3. அமராவதி .. .. .. | 3,31,813 | 29,401 | 8.86 |
| 4. சேலம் .. .. .. | 5,87,299 | 52,237 | 8,89 |
| 5. கள்ளக்குறிச்சி .. .. | 3,14,455 | 28,172 | 8.96 |
| 6. நேஷனல் .. .. .. | 3,02,565 | 27,791 | 9.19 |
| 7. தருமபுரி ... ... .. | 2,57,267 | 25,249 | 9.81 |
| 8. வேலூர் .. .. .. | 2,68,299 | 22,598 | 8.42 |
| 9. திருப்பத்தூர் .. .. ... | 2,01,813 | 18,352 | 9.09 |
| 10. செங்கல்வராயன் (உளுந்தூர்பேட்டை) | 2,11,986 | 19,007 | 8,97 |
| கூட்டுறவு மொத்தம் | 31,17,424 | 2,83,846 | 9.11 |

| வரிசை எண்ணும் சர்க்கரை ஆலைகளின் பெயரும். | 1982-83 பருவத்தில் நாள் ஒன்றுக்கு பிழிதிறன். | 1981-82 பிழியப்பட்ட கரும்பின் அளவு. | 1981-82 உற்பத்தி செய்த சர்க்கரை அளவு. | 1981-82 சராசரி சர்க்கரை கட்டுமானம் விழுக்காடுகளில். |
|---|---|---|---|---|
| | | (டன்களில்) | (டன்களில்) | |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| **(ஆ) தனியார் துறை :** | | | | |
| 11. ஈ.ஐ.டி. பாரி .. .. .. | 4,000 | 7,57,226 | 61,080 | 8.07 |
| 12. டெக்கான் .. .. .. | 1,850 | 4,05,344 | 34,347 | 8.53 |
| 13. சவுத் இந்தியா .. .. .. | 2,700 | 4,04,145 | 32,368 | 8.01 |
| 14. அருணா .. .. .. | 4,000 | 6,96,353 | 60,831 | 8.74 |
| 15. சக்தி .. .. .. .. | 4,000 | 11,21,964 | 1,04,305 | 9.30 |
| 16. மதுரா* .. .. .. .. | 800 | 2,03,101 | 15,402 | 7.58 |
| 17. கோத்தாரி .. .. .. | 2,000 | 3,99,363 | 34,808 | 8.72 |
| 18. திருஆரூரான் .. .. .. | 2,000 | 3,21,029 | 27,518 | 8.57 |
| **தனியார் துறை மொத்தம்** | 21,350 | 43,08,525 | 3,70,659 | 8.60 |



| வரிசை எண்ணும் சர்க்கரை ஆலைகளின் பெயரும். | 1982-83 பிழியப்பட்ட கரும்பின் அளவு. (டன்களில்) | 1982-83 உற்பத்தி செய்த சர்க்கரையின் அளவு. (டன்களில்) | 1982-83 சராசரி சர்க்கரை கட்டுமானம். (விழுக்காடுகளில்) |
|---|---|---|---|
| (1) | (6) | (7) | (8) |
| (ஆ) தனியார் துறை : | | | |
| 11. ஈ. ஐ. டி. பாரி .. .. | 5,56,020 | 46,635 | 8.39 |
| 12. டெக்கான் .. .. .. | 4,24,633 | 34,677 | 8.17 |
| 13. சவுத் இந்தியா .. .. .. | 3,59,570 | 30,187 | 8.40 |
| 14. அருணா .. .. .. | 5,83,381 | 55,164 | 9.46 |
| 15. சக்தி .. .. .. .. | 8,03,716 | 79,295 | 9.87 |
| 16. மதுரா* .. .. .. .. | 1,09,778 | 7,679 | 7,00 |
| 17. கோத்தாரி .. .. .. | 3,00,464 | 27,098 | 9.02 |
| 18. திரு ஆரூரான் .. .. | 3,05,994 | 27,856 | 9.10 |
| தனியார் துறை மொத்தம் | 34,43,556 | 3,08,591 | 8.96 |

| வரிசை எண்ணும் சர்க்கரை ஆலைகளின் பெயரும். | 1982-83 பருவத்தில் நாள் ஒன்றுக்கு பிழிதிறன். | 1981-82 பிழியப்பட்ட கரும்பின் அளவு. (டன்களில்) | 1981-82 உற்பத்தி செய்த சர்க்கரை அளவு. (டன்களில்) | 1981-82 சராசரி சர்க்கரை கட்டுமானம் விழுக்காடுகளில். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| **(இ) பொதுத் துறை :** | | | | |
| 19. தஞ்சாவூர் .. .. .. | 1,250 | 3,24,780 | 27,007 | 8.32 |
| 20. பெரம்பலூர் .. .. .. | 1,250 | 3,03,133 | 27,345 | 9.02 |
| பொதுத் துறை மொத்தம் .. | 2,500 | 6,27,913 | 54,352 | 8.60 |
| **(ஈ) மைய அரசின் நிர்வாகத்தில் உள்ளது :** | | | | |
| 21. காவேரி .. .. | 1,250 | 2,87,998 | 25,333 | 8.79 |
| மொத்தம் .. | 1,250 | 2,87,998 | 25,333 | 8.79 |
| தமிழ் நாடு மொத்தம் .. | 42,050 | 85,93,026 | 7,55,070 | 8.78 |

*இந்த ஆலை 1983-ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் இவ்வரசால் கையகப்படுத்தப்பட்டுள்ளது.



| வரிசை எண்ணும் சர்க்கரை ஆலைகளின் பெயரும். | 1982-83 பிழியப்பட்ட கரும்பின் அளவு. (டன்களில்) | 1982-83 உற்பத்தி செய்த சர்க்கரையின் அளவு. (டன்களில்) | 1982-83 சராசரி சர்க்கரை கட்டுமானம். (விழுக்காடுகளில்) |
|---|---|---|---|
| (1) | (6) | (7) | (8) |
| **(இ) பொதுத்துறை:—** | | | |
| 19. தஞ்சாவூர் .. .. .. | 2,03,837 | 18,624 | 9.14 |
| 20. பெரம்பலூர் .. .. .. | 2,28,644 | 22,106 | 9.67 |
| பொதுத் துறை மொத்தம் .. | 4,32,481 | 40,730 | 9.42 |
| **(ஈ) மைய அரசின் நிர்வாகத்தில் உள்ளது :** | | | |
| 21. காவேரி .. .. .. | 2,08,997 | 17,834 | 8.53 |
| மொத்தம் .. | 2,08,997 | 17,834 | 8.53 |
| தமிழ்நாடு மொத்தம் .. | 72,02,458 | 6,51,001 | 9.04 |

[1984 மார்ச் 24

## தமிழ்நாடு பீங்கான் நிறுவனம்.

இம் மாநிலத்தில், பீங்கான் தொழிலின் ஒருமித்த வளர்ச்சிக்காக, பீங்கான் சம்பந்தப்பட்ட 8 தொழில் பிரிவுகளைக் கொண்டு தமிழ்நாடு பீங்கான் நிறுவனம் ஏற்படுத்தப்பட்டது. இத் தொழில் பிரிவுகள் பெரும்பாலும் தென் ஆற்காடு மாவட்டத்திலுள்ள விருத்தாசலத்தில் அமைந்துள்ளன. இந்நிறுவனத்தின் தொழிற் பிரிவுகளில் உற்பத்தி செய்யப்படும் பல்வேறு பொருட்கள் பற்றிய விவரம் வருமாறு :—

| தொழிற் பிரிவுகள். | உற்பத்தி செய்யப் படும் பொருட்கள். |
|---|---|
| அ. வர்த்தகப் பிரிவுகள்— | |
| 1. டாசல் பீங்கான் தொழிலகம், விருத்தாசலம். | துப்புரவு சாதனங்கள், பீங்கான் கோப்பை, தட்டுவகை மற்றும் பீங்கானிலான மின் காப்புப் பொருட்கள். |
| 2. டாசல் கற்குழாய் தொழிலகம், விருத்தாசலம். | கற்குழாய் மற்றும் அதன் சிறப்பு வகைகள். |
| 3. டாசல் இயந்திரச் செங்கற் சூளை, திருமழிசை. | கம்பி அறுவை வகை செங் கற்கள் (Wire cut bricks) |
| ஆ. பீங்கான் தொழில் வளர்ச்சி நோக்குடைய பிரிவுகள்— | |
| 4. பீங்கான் தொழிற்பேட்டை, விருத்தாசலம் (முகவர் அடிப் படையில் நடத்தப்படுவது) | ..... |
| 5. டாசல் பீங்கான் பணிவசதி நிலையம், விருத்தாசலம். | .... |
| இ. பயிற்சி மற்றும் வேலை வாய்ப்பு நோக்கில் நடத்தப்படும் பிரிவுகள், | |
| 6. டாசல் கலைப் பொருள் நிலையம், விருத்தாசலம். | கலை வண்ணமுள்ள மட் பாண்டங்கள். |
| 7. டாசல் பீங்கான் மையம், ஓமலூர். | பல்வகை வடிவமைப்புள்ள ஊறுகாய் ஜாடிகள் மற்றும் வெப்பந் தாங்கிச் செங்கற்கள். |



1984 மார்ச் 24]

விருத்தாசலத்தில் உள்ள பீங்கான் தொழிற்பேட்டை பீங்கான் சிறு தொழில் முனைவோர்களுக்கு குறைந்த வாடகையில் தொழிற் கூடங்களை அளிக்கிறது. இத் தொழில் முனைவோர்களுக்கு பதப்படுத்தப்பட்ட மூலப் பொருட்களை வழங்குவது மூலமாகவும் அவர்களது உற்பத்திப் பொருட்கள் நவீன சுரங்கச் சூளையில் சுட்டுக் கொடுப்பது மூலமாகவும் அந்தப் பகுதியில் பீங்கான் தொழில் வளர்ச்சி பெற பீங்கான் பணி வசதி நிலையம் பேருதவி புரிகிறது.

டாசல் நிறுவனத்தால் பயிற்சி நோக்கில் நடத்தப்படும் இரு தொழில் பிரிவுகள் குறைந்த படிப்பறிவுடைய கிராமப்புற இளைஞர்களுக்கு, பீங்கான் பொருட்களின் மாதிரி வடிவமைப்பு மற்றும் உற்பத்தி பற்றிய தொழில் நுணுக்க உத்திகளில் பயிற்சி அளித்து வருகிறது. ஓமலூரில் உள்ள பீங்கான் மையத்தில் உற்பத்தி செய்யப்படும் ஊறுகாய் ஜாடிகளும், திருமழிசை இயந்திரச் செங்கற் சூளையில் உற்பத்தியாகும் கம்பி அறுவை வகை செங்கற்களும் தரத்தில் சிறந்தவையாக பெயர் பெற்றுள்ளன.

அண்டை மாநிலங்களில் விற்பனையை விரிவாக்கும் நோக்கத்துடன் டாசல் நிறுவனம் பெங்களூரிலும், எர்ணாகுளத்திலும் விற்பனை நிலையங்களை நடத்தி வருகிறது.

டாசல் நிறுவனத்தின் உற்பத்திப் பொருட்கள் நியாயமான விலையுடன் தரத்தில் சிறந்தவையாகவும் இருப்பதால் இம் மாநிலத்திலும் வெளி மாநிலங்களிலும் அங்காடியில் பெரும் மதிப்பைப் பெற்றிருக்கின்றன. இந்நிறுவனம் சுமார் 1,000 நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கிறது.

1982–83ஆம் ஆண்டில் டாசல் நிறுவனத்தின் அனைத்து தொழிற் பிரிவுகள், மொத்தம் ரூ. 221.71 இலட்சம் மதிப்புடைய பொருள்களை உற்பத்தி செய்தன. நடப்பு ஆண்டான 1983–84ல் அவற்றின் மொத்த உற்பத்தி மதிப்பு ரூ. 225.79 இலட்சமாகும். இந்த ஆண்டில் மின்வெட்டு, நிலக்கரி விநியோகத்தில் பற்றாக் குறை போன்ற பிரச்சினைகள் ஏற்பட்ட போதிலும், இந்நிறுவனம் தன் உற்பத்தியளவை நிலை நிறுத்தியுள்ளது.

1982–83 ஆம் ஆண்டில் டாசல் நிறுவனத்தின் நிகர இழப்பு ரூ. 20.61 இலட்சம் ஆகும். 1983-84ஆம் ஆண்டிலும் இந் நிறுவனத்திற்கு சுமார் ரூ. 20 இலட்சம் நிகர இழப்பு ஏற்படும் என திட்டமிடப்பட்டுள்ளது.

டாசல் நிறுவனத்தின் நிதி நிலைமையை சீர்படுத்தி ஆதாயத்துடன் இயக்கும் பொருட்டு, இந்நிறுவனத்தை புனரமைப்பதற்காகவும் பரிந்துரைக்கப்பட்ட சில நடவடிக்கைகள் **அரசின் பரிசீலனையில் உள்ளன.**

[1984 மார்ச் 24

1984-85 ஆம் ஆண்டில் ரூ. 30 இலட்சம் செலவில் திருமழிசை இயந்திரச் செங்கற் சூளையை புதுப்பிக்கவும், விருத்தாசலம் பீங்கான் தொழிலகம், ஓமலூர் பீங்கான் மையம், மற்றும் விருத்தாசலம் பீங்கான் கலை நிலையம் ஆகிய தொழிற் பிரிவுகளில் கூடுதல் வசதிகளை ஏற்படுத்தவும் டாசல் நிறுவனம் திட்டமிட்டுள்ளது. இத்திட்டம் டாசல் நிறுவனத்தின் இழப்புகளை பெருமளவில் குறைக்கும் நோக்குடையது.

நலிவுற்ற தொழில் நிறுவனங்களுக்கு உதவி அளித்தல்.

நலிவுற்ற தொழில் நிறுவனங்கள் புத்துயிர் பெற்று மீண்டும் இயங்குவதற்கு உதவும் வகையிலும், அவைகளை கலைப்பதற்கான நடவடிக்கைகளை தவிர்க்கும் பொருட்டும், தொழிலாளர்களுக்கு தொடர்ச்சியாக வேலை வாய்ப்பு அளிப்பதற்காகவும், 1969 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிவாரணம் தேவைப்படுகின்ற நிறுவனங்கள் சிறப்பு விதிகள் சட்டத்தின் விதிகளின் கீழ் இந்நிறுவனங்களை விடுப்பு நிறுவனங்களாக அரசு அறிவிக்கின்றது. விடுப்பு நிறுவனங்கள் நிதி நிறுவனங்கள் மற்றும் வங்கிகளின் உதவியுடன் மீண்டும் புத்துயிர் பெற்று இயங்குவதற்கு இச்சட்டம் வழி செய்கிறது. இச்சட்டத்தின் கீழ் விடுப்பு நிறுவனங்களுக்கு கடன் கொடுத்தவர்களின் பிடியிலிருந்து சிறிது காலத்திற்குப் பாதுகாப்பு அளிக்கப்படுகிறது. மற்றும் தொழிலாளர்களுக்குத் தொடர்ச்சியாக வேலை வாய்ப்பும் அளிக்கப்படுகிறது. மேலும் விடுப்பு நிறுவனங்களாக அறிவிக்கப்பட்டவை பின்வருமாறு:—

திருவாளர்கள் :—

1. ஒமேகா கேபிள்ஸ் லிமிடெட், சென்னை.
2. தர்மபுரி ஸ்டீல் காஸ்டிங்ஸ் லிமிடெட் (முன்னாள் லாஸ்—ர்—கோ ஸ்டீல்ஸ் லிமிடெட்), தர்மபுரி.
3. சதர்ன் ஸ்விட்ச்கியர்ஸ் லிமிடெட், சென்னை.
4. சௌத் இந்தியா கிளாஸ் அண்டு இனாமல் தொழிற்சாலை, சேலம்.
5. தமிழ்நாடு எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட், ஓசூர்.
6. மதராஸ் மெஷின் டூல்ஸ் லிமிடெட், கோயம்புத்தூர்.
7. அருணா லெதர்ஸ் அண்டு எக்ஸ்போர்ட் லிமிடெட், சென்னை.
8. காவேரி ஸ்பின்னிங் அண்டு வீவிங் மில்ஸ் லிமிடெட், புதுக்கோட்டை.
9. மீனாட்சி மில்ஸ் லிமிடெட், மதுரை.



1984 மார்ச் 24]

10. பிளாஸ்டிக் ரெஸின்ஸ் அண்டு கெமிக்கல்ஸ் லிமிடெட்' சாகுபுரம், திருநெல்வேலி.
11. சோமசுந்தரம் சூப்பர் ஸ்பின்னிங் மில்ஸ், இராமநாதபுரம்.
12. மாருதி கிரிஸ்ட்டல் சால்ட் கம்பெனி, லிமிடெட், சென்னை.
13. சதர்ன் ஹைட்ரோ கார்பன் லிமிடெட், உடுமலைபேட்டை.
14. ஜெயலட்சுமி மில்ஸ் பிரைவேட் லிமிடெட், சிங்காநல்லூர்
15. மகாலட்சுமி டெக்ஸ்டைல்ஸ் மில்ஸ் லிமிடெட், மதுரை.
16. ஸ்ரீஹரி மில்ஸ் பிரைவேட் லிமிடெட், கோயம்புத்தூர்.

பின்வரும் நிறுவனங்களுக்கு அவற்றின் நடைமுறை மூலதனத்திற்காக வங்கிகள் வழங்கிய கடன்களுக்கு மாநில அரசு உத்திரவாதம் அளித்துள்ளது.

| | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 1. சௌத் இந்தியா கிளாஸ் அண்டு இனாமல் ஓர்க்ஸ் லிமிடெட், சேலம். | 14.35 |
| 2. மது ஸ்பின்னிங்ஸ் அண்டு வீவிங்ஸ் மில்ஸ், கோயம்புத்தூர். | 30.00 |
| 3. மீனாட்சி மில்ஸ், மதுரை .. .. .. | 56.00 |
| 4. பின்னி லிமிடெட், சென்னை .. .. | 100.00 |
| 5. இந்தியா மீட்டர்ஸ் லிமிடெட், சென்னை .. | 47.00 |
| 6. ஜெயலட்சுமி மில்ஸ் பிரைவேட் லிமிடெட், சிங்காநல்லூர். | 30.00 |
| 7. ஜோதி மில்ஸ், கோயம்புத்தூர் .. .. | 50.00 |

நலிவுற்ற தொழிற் பிரிவுகள் விற்பனை வரி பாக்கிகளையும், சுலபத் தவணைகளில் கட்டவும் அரசு அனுமதி வழங்குகிறது. இத்தொழிற் பிரிவுகள் உற்பத்தி செய்யும் பொருட்களை மத்திய, மாநில அரசு நிறுவனங்கள் முதலியவற்றிற்கு விற்பனை செய்ய அரசு சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு உதவி செய்கிறது. மேலும், இதற்கான விற்பனை விலைச் சலுகைகளையும் அளிக்கின்றது.

பயன்படுத்திய மின்சாரத்திற்கான கட்டணங்களையும்

மேற்கு வங்காளம் மற்றும் மஹாராஷ்டிரா மாநிலங்களில் செய்துள்ளது போல் இம்மாநிலத்திலும் தமிழ்நாடு நிவாரண உதவி பெறுகின்ற நிறுவனங்கள் (சிறப்பு விதிகள்) சட்டத்தின், பிரிவு 3-ல் நிவாரணம் தேவைப்படும் நிறுவனமாக அறிவிக்கும் கால வரம்பு 10 ஆண்டுகளிலிருந்து 15 ஆண்டுகளாக மாற்ற ஒரு வரைவு மசோதாவை இச்சட்டப் பேரவைக் கூட்டத்தில் வைப் பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

பின்வரும் நிறுவனங்கள் எந்த அளவில் பயனடைந்துள்ளன என்று கீழே கொடுக்கப்பட்டுள்ளன :

1. செளத் இந்தியா கிளாஸ் அண்டு எனாமல் ஒர்க்ஸ் லிமிடெட், சேலம்.

கண்ணாடி குவளைகள், கூஜாக்கள், விளக்கு பாகங்கள் போன்றவற்றை உற்பத்தி செய்து வந்த இந்நிறுவனம் 10-12-1976 முதல் நிதி இடர்பாடுகள் காரணமாக மூடப் பட்டது. இதனால் 500 தொழிலாளர்கள் வேலையை இழந் தனர். 1973 ஆம் ஆண்டு இந்நிறுவனம் ரூ. 3.78 இலட்சங்கள் நட்டமடைந்து, 1974 ஆம் ஆண்டில் இந்நிறுவனம் இலாபத் தில் இயங்கியது. ஆனால் மீண்டும் 1975 இல் நட்டத்தில் இயங்கி யது. இந்நிறுவனத்தை திறப்பதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய்வதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டு, இதனை ஆராய்ந்து கடைசியாக 13-10-1977 முதல் இந்நிறுவனம் ஒரு விடுப்பு நிறுவ வனமாக அறிவிக்கப்பட்டது. மேலும் புத்துயிர் பெறுவதற்காக இந்நிறுவனம் வங்கியிடம் கடனாகப் பெற்றுள்ள ரூ. 14.35 இலட்சங்களுக்கு உத்திரவாதம் அளித்துள்ளது. இதன் காலவரை தற்போது மேலும் ஆறு மாதங்களுக்கு நீட்டிக்கப்பட் டுள்ளது. மேலும் இந்நிறுவனம் தமிழ்நாடு மின் வாரியத்திற்கு கொடுக்க வேண்டிய பாக்கித் தொகைகளுக்கு குறிப்பிட்ட கால வரையறையை மேலும் ஒத்திப்போடுமாறு கேட்டுக் கொண்டுள் ளது. இத் தொழிற்சாலை 26-10-1980 இல் மீண்டும் திறக்கப் பட்டு 5-3-1981 இல் திரும்பவும் மூடப்பட்டு விட்டது. இந் நிறுவனத்தை விடுப்பு நிறுவனமாக அறிவிக்கப்பட்ட காலவரம்பு மேலும் நீட்டிக்கப்பட்டு கடைசியாக 14-4-1984 வரை நீட்டிக் கப்பட்டுள்ளது. இத் தொழிற்சாலையை எடுத்து நல்ல முறையில் நடத்துவதற்காக இதனை ஒரு தொழிலதிபரிடம் ஒப்படைப்பதற் கான சாத்தியக் கூறுகளை தமிழ்நாடு தொழில் முதலீட்டு நி- வனம் (டி.ஐ.ஐ.சி.) ஆராய்ந்து வருகிறது.





2. தமிழ்நாடு எலக்ட்ரானிக்ஸ் நிறுவனம், ஓசூர்.

இந்நிறுவனம் முதன் முறையாக 25-11-1980 முதல் ஓர் ஆண்டிற்கு நிவாரணம் தேவைப்படும் நிறுவனமாக அறிவிக்கப் பட்டது. மேலும் இந்த கால வரம்பு நீட்டிக்கப்பட்டு கடைசி யாக 24-11-1984 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனத் தின் செயலாக்கம் 31-3-1981 வரையிலான காலவரையில் நடந்த தைவிட 31-3-1982 முடிய முன்னேற்றம் அடைந்துள்ளது. இந் நிறுவனத்தில் உற்பத்தியான பொருட்கள் 1981 இல் ரூ. 2.99 இலட்சங்களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. ஆனால் 1982 இல் ரூ. 10.57 இலட்சங்களாக உயர்ந்துள்ளது. மேலும் 1981இல் ரூ. 10.22 இலட்சங்களாக இருந்த நட்டம், 1982 இல் ரூ. 9.44 இலட்சங்களாக குறைக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனம் இந்தியத் தொழில் புனரமைப்பு நிறுவனத்தின் நிதி உதவியுடன் பராமரிக் கப்பட்டு வருகிறது. இத் தொழிற்சாலையின் செயலாக்கம் சீரான முறையில் முன்னேறி வருகிறது.

3. மதராஸ் மெஷின் டூல்ஸ் மானுபாக்சுரர்ஸ் லிமிடெட், கோயம்புத்தூர்.

இந்நிறுவனம் முதன் முறையாக 20-8-1981 இல் ஒரு நிவார ணம் தேவைப்படும் நிறுவனமாக அறிவிக்கப்பட்டு இதன் கால வரை 19-8-1984 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

இதனால் இந்நிறுவனத்தின் தொழிற்சாலை 27-10-1981 இல் திறக்கப்பட்டு, தொழிலாளர்கள் படிப்படியாக வேலைக்குத் திரும்பினர். இத் தொழிற்சாலையில் புனரமைப்புத் திட்டத்தின் மூலம் கீழ்க்கண்டவாறு முன்னேற்றமடைந்துள்ளது :—

| உற்பத்தி. | 1979-80. | 1980-81. | அக்டோபர் 1982 முதல் 31-3-1983 வரை. |
|---|---|---|---|
| லேத்துக்கள் .. .. | 188 | 109 | 153 |
| வார்ப்புகள் .. .. | .. | .. | 39 மெ.டன். |
| டேனிடம்கார்ட் .. | .. | .. | 1 |

இம் முன்னேற்றம் சீராக பராமரிக்கப்பட்டது. இந்நிறுவனம் வணிக வரி பாக்கியான ரூ. 2.30 இலட்சங்கள் மற்றும் தண்டத் தீர்வையாக ரூ. 0.50 இலட்சங்களை திரும்ப செலுத்தியுள்ளது. மேலும் தொழிலாளர்களின் வருங்கால சேமிப்பு நிதிக்கான

ரூ. 1.33 இலட்சங்களும், மாநிலத் தொழிலாளர்கள் இன்சூரன்ஸ்
தொகையாக ரூ. 2.94 இலட்சங்களும் செலுத்தியுள்ளது. இதில்
மீதி செலுத்த வேண்டிய தொகைகள் முறையே ரூ. 0.6 மற்றும்
ரூ. 3.70 இலட்சங்களாகும். இந்நிறுவனம் தனது உற்பத்தியிலும்
மேலும் முன்னேற்றமடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

4. திருவாளர்கள் அருணா லெதர்ஸ் அண்டு எக்ஸ்போர்ட்டு
லிமிடெட், சென்னை.

இந்நிறுவனம் இராணிப்பேட்டையில் 1974 ஆம் ஆண்டு
நிறுவப்பட்டு இதன் உற்பத்தி 1975-ல் துவங்கப்பட்டது. வெளி
நாட்டுச் சந்தையில் தோலின் விலை இறக்கம் காரணமாகவும்,
பிற காரணங்களினாலும், இந்நிறுவனம் ரூ. 49.80 இலட்
சங்கள் நட்டமடைந்தது. இதனுடைய கடன்
தொகையும் ரூ. 150.10 இலட்சங்களாக உயர்ந்தது. இந் நிறு
வனத்தின் மூலதனத்தைப் பாதுகாக்கவும், மேலும் இந்நிறுவனம்
முன்னேற்றமடைவதற்கும் 8—12—1982 நாளிட்ட அரசுஆணை
நிலை எண் 144-இல் முதல் முறையாக அரசு இதனை ஒரு
நிவாரணம் தேவைப்படும் நிறுவனமாக ஆறு மாதங்களுக்கு அறி
வித்தது. இதன் காலவரம்பு கடைசியாக மேலும் 30—4—1984
வரை நீடிக்கப்பட்டுள்ளது. கல்கத்தாவிலுள்ள போதார் நிறு
வனம் இந்நிறுவனத்தை ஆரம்பக் கட்டமாக ரூ. 30 இலட்சங்கள்
செலுத்தி வாங்கியுள்ளது. இத்தொகையைக் கொண்டு இந்திய
வங்கி, இந்நிறுவனம் தமிழ்நாடு தொழில் மேம்பாட்டு நிறுவனம்
மற்றும் தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனத்திடம் வாங்கி
யிருந்த கடன் பாக்கியைத் திரும்ப அளித்துள்ளது. இந்நிறுவனம்
தற்பொழுது தொடர்ச்சியாக வேலை செய்து வருகிறது.

5. திருவாளர்கள் பிளாஸ்டிக் ரெசின்ஸ் அண்டு கெமிக்கல்ஸ் லிமிடெட்,
திருநெல்வேலி.

திருவாளர்கள் பிளாஸ்டிக் ரெசின்ஸ் அண்டு கெமிக்கல்ஸ்
நிறுவனம் தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனத்தின் உதவி
யுடன் துவங்கப்பட்டது. இதனுடைய தொழிற்சாலை திருநெல்
வேலி மாவட்டத்திலுள்ள சாகுபுரத்தில் அமைந்துள்ளது. இது
நாப்தா என்ற கூட்டுப்பொருளும், பி. வி. சி., ரெசினும்
உற்பத்தி செய்கிறது. பல்வேறு காரணங்களினால் இந்நிறுவனம
30—9—1978 வரை நட்டமடைந்துள்ளது. இத
னுடைய மொத்த நஷ்டம் ரூ. 932 இலட்சங்களாகும். இந்
நிறுவனம் சிக்கன முறையில் இயங்காததால் 1978-ஆம் ஆண்டில்
பிப்ரவரியில் மூடப்பட்டது. இந்நிறுவனத்தின் துணை நிறுவன
மான திருவாளர்கள் தாரங்கதாரா கெமிக்கல்ஸ் வெளிநாட்டி



லிருந்து இறக்குமதி செய்யப்படும் வி.சி.எம். மைய மூலப்பொரு
ளாகக் கொண்டு பி.வி.சி. ரெசின்ஸ் தயாரிக்கும் ஒரு செய்
யதக்கமைக்கான அறிக்கை (Feasibility) ஒன்றை மத்திய
அரசிற்கு அனுப்பியது. மத்திய அரசும் அதற்கான ஒப்புதலை
அளித்துள்ளது.

இந்நிறுவனத்தின் பொருளாதார நெருக்கடி காரணமாக இந்
நிறுவனத்தை ஓர் நிவாரணம் தேவைப்படும் நிறுவனமாக அரசு
சட்டத்துறையின் ஆலோசனையுடன் 20—8—1983 முதல் ஓர்
ஆண்டிற்கு நிவாரணம் தேவைப்படும் நிறுவனமாக அறிவித்துள்
ளது. இந்நிறுவனம் புத்துயிர் பெறுவதற்காக எல்லா நடவடிக்
கைகளையும் எடுத்து தொழிற்சாலையை மீண்டும் துவக்கி நடத்தி
வருகிறது.

மைய அரசு செய்த முதலீடுகள்.

கடந்த 10 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் மைய அரசு செய்த
முதலீடுகள் 8 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாகக் குறைந்துள்ளது.
இங்கு ஏற்பட்டுள்ள சமமின்மையை விரைவில் சரி செய்யுமாறு
மத்திய மாநில அரசை வற்புறுத்தி வருகிறது.

2. புதிய திட்டங்கள் உருவாகும் போதெல்லாம், புதிய திட்
டங்களை இம்மாநிலத்தில் அமைக்குமாறு மாநில அரசு மத்திய
அரசினை கேட்டுக் கொள்கிறது. எனினும், இம்மாநிலத்தில்,
மத்திய அரசு தொழிற்சாலைகள் 11 மட்டுமே உள்ளன. இவை
யனைத்தும் 1967-ஆம் ஆண்டிற்கு முன்னரே நிறுவப்பட்டவை.
1967-ஆம் ஆண்டிற்குப் பின்னர், மத்திய அரசின் நடுத்தர அளவி
லான இரு திட்டங்கள் மட்டுமே இமமாநிலத்தில் நிறுவப்பட்
டுள்ளன. இவற்றில் ஒன்று தொழில் வளர்ச்சியில் பிற்பட்ட
பகுதியாகிய இராணிப்பேட்டையில் ரூ. 32 கோடி முதலீட்டில்
1980—81-ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட பாரத் ஹெவி எலக்
டிரிக்கல்ஸ் லிமிடெட்டின் துணைச் சாதனங்கள் தயாரிக்கும் நிறு
வனமாகும். மற்றொன்று சேலத்தில் ரூ. 167 கோடி முதலீட்
டில் தொடங்கப்பட்ட துருப்பிடிக்காத உருக்குப் பொருள்களைத்
தயாரிக்கும் தொழிற்சாலையாகும். இந்நிலையை மாற்றி
யமைக்க மத்திய அரசு தமிழ்நாட்டில் அதிக அளவு முதலீடு
செய்து திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்பது தெளிவா
கிறது.

3. சினி கலர் பாசிடிவ் பிலிம் திட்டத்தைத்தவிர, இந்துஸ்
தான் புகைப்படச் சுருள் தயாரிப்பு நிறுவனத்தால் உதகமண்
டலத்திலேயே எக்ஸ்-கதிர்த்தொழில் பிரிவுத் திட்டமும், காந்த
காடா தொழிற்சாலைத் திட்டமும், ஆகிய இவ்விரு திட்டங்
களையும் அமைப்பதற்கு மத்திய அரசை நாம் வலியுறுத்தி

[1984 மார்ச் 24

வருகிறோம். நவீன யுத்த டாங்கிகள் தயாரிப்பதற்காக ஆவடி கனரக டாங்கிகள் தயாரிக்கும் தொழிற் சாலையின் விரிவாக்கத் திட்டத்தை திருவள்ளூர் வட்டத்தில் அமைக்குமாறு மத்திய அரசை நாம் வலியுறுத்தி வருகிறோம்.

மத்திய தொழில் துறைத் திட்டங்களின் சிறப்புக் கூறுகள் வருமாறு ;—

இரயில்பெட்டித் தொழிற்சாலை, பெரம்பூர்.

இத்தொழிற்சாலை 1955-ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. 1982-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் வரை இத்தொழிற்சாலை மொத்தம் 13,974 இரயில் பெட்டிகளைத் தயாரித்துள்ளது. 1982—83-ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட மொத்த இரயில் பெட் களின் மதிப்பு ரூ. 70 கோடியாகும். 1983—84-ஆம் ஆண்டில் தயாரிக்கப்படும் மொத்த இரயில் பெட்டிகளின் மதிப்பு ரூ. 74 கோடியாகும். இத்தொழிற்சாலை 1967-ஆம் ஆண்டில் 2 மீட்டர் கேஜ் இரயில் பெட்டிகளைத் தாய்லாந்து நாட்டிற்கு ஏற்று மதி செய்து தனது ஏற்றுமதி வியாபாரத்தைச் சிறிய அளவில் தொடங்கியது. உயர்ந்த வேலைப்பாடு அமைந்த 359 இரயில் பெட்டிகளையும், வெவ்வேறு அளவுகளிலும், வடிவமைப்புகளி லும் வசதியான இருக்கைகளும் ஏனைய வசதிகளும் அடங்கிய 298 இரயில் பெட்டிகளையும் பர்மா, தைவான், தாய்லாந்து, ஜாம்பியா, தான்சானியா, பிலப்பைன்ஸ், உகண்டா, வியட்நாம், நைஜீரியா ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து இந்நிறுவனம் எல்லா நாடுகளிலும் நற்பெயர் பெற்று தன் புகழை நிலை நாட்டியுள்ளது. இந்நிறுவனம் மொத்தம் சுமார் ரூ. 25.57 கோடி மதிப்புள்ள இரயில் பெட்டிகளை இதுவரை ஏற்றுமதி செய்துள்ளது.

நெய்வேலி, பழுப்பு நிலக்கரி நிறுவனம்.

இந்நிறுவனம், 14—11—1956-ஆம் நாளன்று அமைக்கப்பட் டது. இக்கழகத்தில் பின்வரும் தொழிற்சாலைகள் அடங்கியுள் ளன :—

(1) திறந்தவெளி பழுப்பு நிலக்கரிச் சுரங்கம்.

(2) அனல் மின் நிலையம்.

(3) இரசாயன உரத்தொழிற்சாலை.

(4) நிலக்கரி கட்டி தயாரிப்பு கரிம ஆலை.

(5) களிமண் சுத்திகரிப்பு ஆலை.



1984 மார்ச் 24]

1. உற்பத்தி செய்யப்படும் இனங்கள் :

சுரங்கங்களிலிருந்து வெட்டியெடுக்கப்படும் பழுப்பு நிலக்கரி, அனல் மின் நிலையத்திற்கும், நிலக்கரிக்கட்டி தயாரிப்பு கரிம ஆலைக்கும், இரசாயன தொழிற்சாலைகளில் பயன்படுத்துவதற்கு தேவைப்படும் நீராவியை உற்பத்தி செய்வதற்கும், மூலம் பொரு ளாகப் பயன்படுத்தப்படுகிறது. அயன் மின் நிலையத்தில் உற் பத்தி செய்யப்படும் மின் சக்தி, நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கழகத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்த பின்னர், தமிழ்நாடு மின் வாரியத்தின் மின் இணைப்பிற்கு அனுப்பப்படுகிறது. பழுப்பு நிலக்கரிச் சுரங்கத்திலிருந்து வெட்டியெடுக்கப்படும் கச்சா வெள் ளைக் களிமண், களிமண் சுத்திகரிப்பு ஆலையில் செய்முறைப் படுத்தப்பட்டு, இதில் ஒரு பகுதி தூளாக்கப்பட்டு, தொழிற் சாலைப் பயனுக்காக விற்பனை செய்யப்படுகிறது. லீக்கோகரி யும், நிலக்கரியும் தொழில் எரிபொருளாக விற்பனை செய்யப் படுகின்றன.

2. தொழிற்சாலைகளின் நிறுவுதிறன் :

| | |
|---|---|
| (1) சுரங்கம் .. .. | ஆண்டொன்றிற்கு 6.5 மில்லியன் டன். |
| (2) அனல் மின் நிலையம் .. | 600 மெ. வா. |
| (3) உரத் தொழிற்சாலை .. | ஆண்டொன்றிற்கு 1,52,000 டன் யூரியா. |
| (4) நிலக்கரிக்கட்டி தயாரிப்பு கரிம ஆலை. | 4,36,000 டன் நிலக்கரி (லிகோ நிலக்கரி). |
| (5) களிமண் சுத்திகரிப்பு ஆலை. | 6,000 டன் சுத்திகரிக்கப்பட்ட களிமண். |

நிலக்கரிக்கட்டி தயாரிப்பு கரிம ஆலையின் தார் உற்பத்திப் பொருள் பிரிவிலிருந்து பின்வரும் துணைப் பொருள்களும் பெறப் படுகின்றன:

(1) தார்.

(2) நியூட்ரல் எண்ணெய்.

(3) கார்போலிக் அமிலம்.

(4) ஆர்தோ க்ரீசல்.

(5) எம். வி. க்ரீசல்.

(6) எக்ஸ்லினோல்.

(7) எம். வி. பினாயில்.

[1984 மார்ச் 24

3. 31—3—1983-ஆம் நாள் நிலவரப்படி மூலீடு செய்யப்பட்ட தொகை பற்றிய விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

| | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| பங்கு மூலதனம் .. .. .. | 49,882 |
| மத்திய அரசிடமிருந்து பெற்ற கடன் .. | 5,296 |
| தமிழ்நாடு அரசிடமிருந்து பெற்ற கடன் .. | 79 |

4. உடனுழைப்பு மற்றும் ஏற்றுமதி—இல்லை.

5. 1982-83-ஆம் ஆண்டில் எய்திய சாதனைகள்—

| | |
|---|---|
| (1) பழுப்பு நீலக்கரி (எல்.டி) .. .. .. | 64.01 |
| (2) மின்சக்தி (மில்லியன் யூனிட்டுகளில்) .. | 3,833 |

மின் நிலையம் சம்பந்தப்பட்ட கூறு—73 சதவிகிதம்.

| | |
|---|---|
| (3) யூரியா (டன்கள்) .. .. .. | 1,01,211 |
| (4) லீகோ—நிலக்கரி (டி) .. .. .. | 1,72,11 |
| (5) சுத்திகரித்த களிமண் (டி) .. .. .. | 3,040 |

1983-ஆம் ஆண்டின் சிறந்த உற்பத்தித் திறனுக்காக பரிசு நெய்வேலி அனல் மின் நிலையத்திற்கு என்.பி.சி. ஆல் வழங்கப்பட்டது.

பின்வரும் திட்டங்கள் குறித்த பணிகள் நடந்தேறி வருகின்றன :—

இரண்டாம் சுரங்கம் வெட்டுதல், 630 மெ. வா. திறனுள்ள இரண்டாம் அனல் மின் நிலையத்தை ஏற்படுத்துதல் ஆகியவை குறித்த பணிகள் நடைபெற்று வருகின்றன. இவற்றால், 5,000 பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும்.

1982-83-ஆம் ஆண்டில் ரூ. 47.44 கோடி ஆதாயத்தை இக்கழகம் ஈட்டியது.

## இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் லிமிடெட் :—

டெலிபிரிண்டர்களையும், துணைக் கருவிகளையும் உற்பத்தி செய்வதற்காக, இத்தாலியிலுள்ள திருவாளர்கள் இங்க் சி. ஒலிவெட்டி (M/G MG. C. olivetti) நிறுவனத்தின் உடனுழைப்புடன் 1960-ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் நிறுவனம் அமைக்கப்பட்டது. 1964-ஆம் ஆண்டிற்குள்,



1984 மார்ச் 24]

ஆண்டொன்றிற்கு 1,500 டெலிபிரிண்டர் யூனிட்டுகளை உற்
பத்தி செய்யும் உற்பத்தித் திறனை இந்நிறுவனம் தொடக்கத்தில்
எட்டியது. இதன் உற்பத்தித்திறன் படிப்படியாக அதிகரித்தது.
தற்போது இந்நிறுவனத்தின் நிறுவுத் திறன் ஆண்டொன்றிற்கு
8,500 யூனிட்டுகள் ஆகும். இத்திட்டத்திற்கான மொத்தச்
செலவு ரூ. 244 இலட்சமாகும். தபால் தந்தித் துறை, பாது
காப்புப் பணிகள், இரயில்வே, விமானப்பணிகள் (ஏர்லைன்ஸ்)
பத்திரிகைத் துறை, மற்றும் ஏனையோரது தேவைகள் முழு
வதையும் இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் நிறுவனம் நிறைவு
செய்கிறது.

8,500 டெலிபிரிண்டர் யூனிட்டுகளை உற்பத்தி செய்ய,
இலக்கிடப்பட்டது. ஆனால், இந்நிறுவனம் 1982-83-ஆம் ஆண்
டில் 8,996 டெலிபிரிண்டர் யூனிட்டுகளை உற்பத்தி செய்தது.
1982-83 ஆம் ஆண்டில் ரூ. 98.6 இலட்சம் மதிப்புள்ள உதிரிப்
பாகங்களையும் இந்நிறுவனம் உற்பத்தி செய்தது. 1983-84
ஆம் ஆண்டில், 6,264 முதன்மை இயந்திரங்களையும், ரூ. 57.9
இலட்சம் மதிப்புள்ள உதிரிப்பாகங்களையும் இந்நிறுவனம் உற்
பத்தி செய்தது.

திட்டங்களில் ஒரு பகுதியாக, மின்
பல்திறப்படுத்தும் திட்டங்களில் ஒரு பகுதியாக, டெலிபிரிண்டர்ஸ்
தட்டச்சுப் பொறிகளையும், எலெக்ட்ரானிக் டெலிபிரிண்டர்ஸ்
களையும் கணக்கீட்டுப் பொறி அமைப்புகளையும் தயாரிக்கும்
பணியையும் மேற்கொள்ள இந்நிறுவனம் கருதியுள்ளது.

கிண்டியில் தற்போதுள்ள தொழிற்சாலையில் ஆண்டொன்
றிற்கு 15,000 மின் தட்டச்சுப்பொறி உற்பத்தி செய்வதற்காக
இந்நிறுவனத்திற்கு தொழில் உரிமம் வழங்கப்பட்டுள்ளது. இத்
திட்டம், இத்தாலியிலுள்ள திருவாளர்கள் ஒலிவெட்டி நிறுவனத்
தின் உடனுழைப்புடன் அமைக்கப்பட்டு வருகிறது. இந்நிறு
வனம் 400 எஸ்.கே.டி. மின் தட்டச்சுப் பொறிகளின் பாகங்
களை இறக்குமதி செய்து, அவற்றை ஒன்று சேர்த்து, அங்காடி
களில் விற்பனை செய்கிறது. தற்போது, சென்னை-32, கிண்டி
யிலுள்ள தொழிற்சாலையில் உற்பத்தி செய்து வருகிறது.

இந்நிறுவனம், ஒசூரிலுள்ள தனது புதிய தொழிற் பிரிவில்
தற்போது உற்பத்தி செய்யப்படும் எலக்ரோ மெக்கானிக்கல்
டெலிபிரிண்டர்களுக்குப் பதிலாக, எலெக்ரானிக் டெலிபிரிண்
டர்களை உற்பத்தி செய்ய கருதியுள்ளது. இத்திட்டத்திற்கு
உலக வங்கி நிதியுதவி அளிக்கக் கருதியுள்ளது.

500 எண்ணிக்கை கொண்ட புள்ளி வரை மோடம் (Data Modams) என்ற சாதனத்தை உற்பத்தி செய்வதற்கான உரிமம் இந்நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. இப்பொருளைத் தயாரிப்பதற்கான தொழில் நுட்பம் இந்நிறுவனத்தால் வகுக்கப்பட்டுள்ளது.

இந்துஸ்தான் புகைப்படச்சுருள் தயாரிப்பு நிறுவனம், உதகமண்டலம்.

இந்துஸ்தான் புகைப் படச் சுருள் தயாரிப்பு நிறுவனம் 1960 ஆம் ஆண்டில் மத்திய அரசால் அமைக்கப்பட்டது. இந் நிறுவனம் 1967 ஆம் ஆண்டில் உற்பத்தியைத் தொடங்கியது.

இந்நிறுவனம் முதலில் 6.15 மில்லியன் சதுர மீட்டர் புகைப் படச் சுருள்களையும், காகிதத்தையும் தயாரிக்கும் திறனைப்பெற்றிருந்தது. இந்நிறுவனம் 1967 ஆம் ஆண்டில் வணிக முறையில் உற்பத்தியைத் தொடங்கியதிலிருந்து இந்நிறுவனத்தில் செய்யப்பட்டுள்ள நவீன மாற்றங்களையும் அளிக்கப்பட்டுள்ள வசதிகளையும் கருத்தில் கொண்டு, இந்நிறுவனம் 1981–82 ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த நிறுவு திறனை 7.7 மில்லியன் சதுர மீட்டராக திருத்தியமைத்தது. நிறுவு திறனைத் திருத்தியமைத்த பின்னர், இந்நிறுவனத்தின் மொத்தத் திறன், உதகமண்டலத்திலும், சென்னை அம்பத்தூரிலுள்ள தொழிற்சாலைகளின் ஒருங்கிணைந்த உற்பத்தியும் பெரிய படச் சுருள்களையும் சிறிய சுருள்களாக மாற்றும் உற்பத்தியும் 15.324 மி.மி. என்று கணக்கிடப்பட்டுள்ளது.

இந்நிறுவனம் நுட்பமான புகைப்படச் சுருள்களையும், காகிதத்தையும் தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளது. இந்நிறுவனத்தில் இரு தயாரிப்புப் பிரிவுகள் உள்ளன. ஒரு தயாரிப்புப் பிரிவு உதகமண்டலத்தில் உள்ளது. இங்கு எல்லா நிலைகளிலும் புகைப் படச் சுருள்கள்/காகிதம் தயாரிக்கும் பணி நடைபெறுகிறது. மற்றொன்று சென்னைக்கு அருகில் அம்பத்தூர் தொழிற்பேட்டையில் அமைந்துள்ள பணி நிறைவு செய்யும் தொழிற் பிரிவாகும். இங்கு இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களைக் கொண்டு எக்ஸ் கதிர் படச் சுருள்களையும், கிராபிக் ஆர்ட் படச் சுருள்களையும் பணி நிறைவு செய்யும் பணி மேற்கொள்ளப்படுகிறது.

இந்நிறுவனத்தின் உற்பத்தியை இரு விரிவான வகைகளாகப் பிரிக்கலாம், அவை யாவன :

(அ) ஒருங்கிணைந்த உற்பத்தி —மூலப் பொருள்களிலிருந்து பணிநிறைவு பெற்ற பொருட்களை உற்பத்தி செய்யும் நிலை வரை.



(ஆ) பெரிய படச் சுருள்களை, சிறிய படச் சுருள்களாக மாற்றுதல், பெரிய படச் சுருள் வடிவில் இறக்குமதி செய்யப்பட்ட ஓரளவு பணி நிறைவு பெற்ற பொருள்களை முழுவதும் பணி நிறைவு செய்தல், ஒருங்கிணைந்த முறை மூலம் தயாரிக்கப் படுபவை ;

(இ) சினி கலர் பாசிடிவ் படச்சுருள்—கருப்பு மற்றும் வெள்ளை.

சினி படச் சுருள் ஒலி நெகடிவ் படச்சுருள் மருத்துவ எக்ஸ் கதிர் படச் சுருள் புகைப்பட காகிதம்.

பெரிய படச்சுருள்களை சிறிதாக மாற்றி தயாரிக்கப்படுவன வற்றில் பின் வருபவை அடங்கும்.

சினி கலர் பாசிடிவ் படச் சுருள் கருப்பு மற்றும் வெள்ளை.

அமெச்சூர் ரோல் திரைப்படச் சுருள் தொழில் எக்ஸ் கதிர் படச் சுருள் கிராபிக் ஆர்ட் படச்சுருள் வர்ணக் காகிதம்.

இது தவிர, எக்ஸ் கதிர் படச்சுருள்/கிராபிக் ஆர்ட் படச்சுருள் களுக்கான டெவலப்பர் கெமிகல்ஸ் தயாரிப்பதும் தயாரிப்புப் பணியில் ஒரு பகுதியாகும்.

இந்நிறுவனத்தின் சாதனைகள் பின்வருமாறு :—

| | 1982–83ஆம் ஆண்டில் உள்ளபடி நிலவரம். | 1983–84ஆம் ஆண்டில் உற்பத்தி. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (இலட்சம்.) | |
| உற்பத்தி அளவு (மி.மீ. 2) .. | 11.332 | 9.430 |
| மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்) .. | 8,206 | 7,170 |
| விற்பனை .. .. .. | 8,351 | 5,960 |
| ஆதாயம் .. .. .. | 425 | 475 |

இந்நிறுவனத்தின் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 16,32 இலட்சமாகும். இது தவிர 31—3—1983 ஆம் நாள் நிலவரப்படி இந்திய அரசிடமிருந்து வெளிப்பட்ட நீண்டகாலக் கடன் ரூ. 15.32 இலட்சமாகும்.

இந்நிறுவனத்தில் 31—1—1984 ஆம் நாள் நிலவரப்படி 3,118
பேர் பணி புரிகின்றனர். இவர்களில் 518 பேர் ஆதிதிராவிடர்/
பழங்குடியினர் ஆவர். இது தவிர சிற்பம் செய்வதற்குரிய
பொருட்கள், நேர்த்தி ரக இரசாயன பொருட்கள், உதிரிப்பாகங்
கள் ஆகியவற்றை வழங்குவதற்காக இந்நிறுவனம் ஏற்படுத்திய
27 துணைத் தொழில் பிரிவுகள் மூலமாக 1,000 பேர்களுக்கு
மேலாக வேறுவகையில் வேலை வாய்ப்பை உருவாக்கியுள்ளது.
அரசு ஒப்புதலளித்த ரூ. 200 இலட்சம் மதிப்பிட்ட செலவில்
உள்நாட்டுப் படச்சுருள்களுக்கு மேற்பூச்சு செய்யும் தொழில்
பிரிவில் சாதனங்களை நிறுவும் பணி நடைபெற்று வருகிறது.
இத்தொழிற்சாலை 1984ஆம் ஆண்டு மார்ச்சுக்குள் முடிக்கப்படும்
என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத்தொழிற்சாலை செயல்படத்
தொடங்கியவுடன், படச் சுருள்களை ஒருங்கிணைந்த முறையில்
உற்பத்தி செய்வதைத் தவிர கூடுதலாக 1.8 மில்லியன் சதுர
மீட்டர் எக்ஸ் கதிர் படச் சுருள்களையும் தயாரிக்கும். இது
மேலும் 102 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும்.

விரிவாக்கத் திட்டங்கள்.

ரூ. 197 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் முழு ஆராய்ச்சி
மேம்பாட்டு நிலையம் அமைப்பதற்கான திட்டம் குறித்து பணி
நடைபெற்று வருகிறது. இத்திட்டம் 1984 ஆம் ஆண்டு மார்ச்
சுக்குள் முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத் திட்
டத்தின் மூலம் கூடுதலாக 115 பேர்களுக்கு வேலைவாய்ப்பு
அளிக்கப்படும்.

பரிசீலிக்கப்பட்டு வரும் புதிய திட்டங்கள்.

சினி பாசிடிவ் படச்சுருள் தொழிற் பிரிவை அமைப்பது தவிர
இந்நிறுவனத்திடம் இரு விரிவாக்கத் திட்டங்கள் உள்ளன. அதா
வது எக்ஸ்-கதிர் படச் சுருள்களுக்கு மேற்பூச்சு செய்யும் தொழிற்
பிரிவையும், காந்த நாடா தொழிற் பிரிவையும் அமைக்கும் திட்
டங்கள். இவற்றை உதகமண்டலத்தில் அமைப்பதால் செலவு
குறைவாக இருக்குமாதலால் அவற்றை அங்கு அமைக்க மைய
அரசு வற்புறுத்தப்பட்டு வருகிறது.

பாரத் கனரக மின் நிறுவனம், திருச்சிராப்பள்ளி.

இந்நிறுவனம் ரூ. 152.27 இலட்சம் செலவில் 1960 ஆம்
ஆண்டில் அமைக்கப்பட்டது. 1965 ஆம் ஆண்டில் உற்பத்தி
தொடங்கப்பட்டது. ஆண்டொன்றுக்கு 750 மெகாவாட் திறன்
கொண்ட கொதிகலன்களைத் தயாரிக்கும் வகையில் இந்நிறுவனம்
வடிவமைக்கப்பட்டது. இந்நிறுவனம், மலேசியாவிற்கு 11 கொதி
கலங்களையும், லிபியாவிற்கு 4 கொதிகலங்களையும் ஏற்றுமதி
செய்தது. 6,317 பேர்களுக்கு இந்நிறுவனம் வேலைவாய்ப்பு
அளிக்கிறது. இந்நிறுவனம் 1982-83 ஆம் ஆண்டில் ரூ. 6.38





கோடி ஆதாயம் ஈட்டியுள்ளது. 1982-83 ஆம் ஆண்டில் ரூ. 380
கோடி மதிப்புள்ள பொருள்களை இந்நிறுவனம் உற்பத்தி
செய்தது இது 1,27,000 மெட்ரிக் டன் கொதிகலன் துணைப்
பாகங்களை அனுப்பியுள்ளது. அனல் மின்நிலையங்கள் செயல்
படத் தொடங்கும் கால அளவை 90 மாதங்களிலிருந்து 48 மாதங்
களாகக் குறைத்துள்ளது. இதனை 42 மாதங்களாகக் குறைக்க
முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இந்தியன் டிரக்ஸ் மற்றும் பார்மா சூட்டிகல்ஸ் லிமிடெட், சென்னை.

இந்நிறுவனத்தின் சென்னைப் பிரிவு 1965 ஆம் ஆண்டு
செப்டம்பரில் ரஷ்யா நாட்டு உடனுழைப்புடன் செயல்பட
தொடங்கியது. இந்நிறுவனம் ரூ. 477 இலட்சம் மொத்தச்
செலவில் ஆண்டொன்றுக்கு 2.5 மில்லியன் அறுவைச் சிகிச்சை
கருவிகளைத் தயாரிக்கும் நிறுவுதிறன் கொண்டதாகும். தற்
பொழுது இந்நிறுவனத்தில் 2,272 பணியாளர்கள் பணி புரி
கின்றனர்.

1975-76 ஆம் ஆண்டிலிருந்து பின்வரும் பலதிறப்படுத்து
திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன.

(அ) டிட்டாச்சபிள் ஸ்கால்பெல் பிளேடுகள் 1975-76.

(ஆ) பிராஸைஸ் கண்ட்ரோல் வால்வுகள் 1975-76.

(இ) வேதியல் கருவிகளைத் தயாரித்தல் ஒன்றுச் சேர்தல்
1976-77.

(ஈ) வேதியல் கருவிகளைத் தயாரித்தல்.

மருந்துப் பொருள் நிறுவனத்தை வலுப்படுத்தும் நோக்குடன்
பின்வரும் ஆண்டு நிறுவு திறனுடன் ஆண்டொன்றுக்கு ரூ. 500
இலட்சம் மொத்த வியாபாரத் தொகையுடன் சென்னையில்
இந்தியன் டிரக்ஸ் மற்றும் பார்மாசூட்டிகல்ஸ் லிமிடெட்டின்
தயாரிப்பு பிரிவை அமைப்பதற்காக மத்திய அரசு 1977 ஆம்
ஆண்டில் ரூ. 104.45 இலட்சத்திற்கு ஒப்புதல் அளித்தது.

| | | |
|---|---|---|
| 1. மாத்திரைகள் | .. | 305 மில்லியன். |
| 2. உறை மாத்திரைகள் | | 10 மில்லியன். |
| 3. தூள் மருந்துக்குப்பிகள். | | 20 மில்லியன். |
| 4. ஊசி மருந்துகள் | .. | 90 மில்லியன். |
| 5. திரவ மருந்துகள் | .. | 210 கிலோ லிட்டர். |

[1984 மார்ச் 24

மாத்திரை, உறை மாத்திரைகள் ஆகியவற்றைத் தயாரிக்கும்
பிரிவுகள் 1979 ஏப்ரலில் செயல்படத் தொடங்கியுள்ளன. திரவ
மருந்து தயாரிக்கும் பிரிவு 1980 மார்ச்சில் செயல்படத் தொடங்
கியது. ஊசிமருந்துகள், தூள் மருந்துக் குப்பிகள் ஆகியவற்றைத்
தயாரிக்கும் பிரிவுகள் 1981 செப்டம்பரில் செயல்படத் தொடங்
கின.

சென்னையில் இந்தியன் டிரக்ஸ் மற்றும் பார்மாசூட்டிகல்ஸ்
லிமிடெட்டின் தயாரிப்புப் பிரிவைத் தொடங்கியதன் முக்கிய
நோக்கம் குறிப்பாக இம்மாநிலத்தில் அமைந்துள்ள அரசினர்
மருத்துவ மனைகளின் மருந்துத் தேவைகளை நிறைவு செய்வ
தாகும்.

பலநிறப்படுத்தல் திட்டத்தைச் செயல்படுத்தியதன் மூலம்
1975–76 ஆம் ஆண்டில் ரூ. 42.18 இலட்சம் என்றிருந்த உற்பத்தி
அளவு சுமார் 15 மடங்கு அதிகரிக்கப்பட்டு, 1982-83 ஆம்
ஆண்டில் ரூ. 639.18 இலட்சம் அளவுக்கு உயர்ந்தது.
இது போலவே 1975–76 ஆம் ஆண்டில் ரூ. 58.02 என்ற
அளவில் இருந்த விற்பனை 1982–83 ஆம் ஆண்டில் ரூ. 629.83
என்ற அளவிற்கு அதிகரிக்கப்பட்டது. இது 10 மடங்குக்கு
மேல் அதிகமாகும்.

சென்னை எண்ணெய் தூய்மைப் படுத்தும் ஆலை.

இது 1965 இல் அமைக்கப்பட்டது. இந்த ஆலை 1969-ல்
உற்பத்தியை தொடங்கியது. இதன் நிறுவு திறன் ஆண்டொன்
றுக்கு 2.5 மில்லியன் டன் எண்ணெயை தூய்மைபடுத்து
வதாகும். இது மோட்டார் ஸ்பிரிட், மண்ணெண்ணெய் அதிக
வேக டீசல், குறைவழுத்த டீசல் எண்ணெய், உலை எண்ணெய்,
மசகெண்ணெய், எரிவாயு, நாப்தா முதலிய பெட்ரோலிய
பொருட்களை சுத்தப்படுத்துகிறது. இந்த தொழிற்சாலை உரம்,
டிரம் தொழிற்சாலை, பெட்ரோ இரசாயனத் தொழிற்சாலை
முதலிய துணை தொழிற்சாலைகளின் வளர்ச்சிக்கு தூண்டு
கோலாகக் கருதப்படுகிறது. இதன் மூலம் 1,500 பேருக்கு நேரடி
யாகவும், சுமார் 3,000 பேருக்கு மறைமுகமாகவும் வேலை
வாய்ப்பு கிடைக்கிறது. சென்னை எண்ணெய் தூய்மைப்படுத்தும்
ஆலை விரிவாக்கத் திட்டத்தை மேற்கொண்டுள்ளது.

சென்னை, எண்ணெய் தூய்மைப்படுத்தும் ஆலை ரூ. 158.8
கோடி மதிப்பிடப்பட்ட மூலதனச் செலவில் தனது தற்போதைய
உற்பத்தித் திறனான ஆண்டொன்றுக்கு 2.8 மில்லியன் டன்னை
ஆண்டொன்றுக்கு 5.6 மில்லியன் டன்னாக இரட்டிப்பதற்கு
திட்டம் வகுத்திருக்கிறது. விரிவாக்கம் திட்டம் இரண்டு கட்டங்
களாக முடிக்கப்படவுள்ளது. முதல் கட்டம் 1984 ஆம் ஆண்டு
ஜுலைத் திங்களுக்குள்ளும், இரண்டாவது கட்டம் 1985 ஆம்
ஆண்டு ஜனவரித் திங்களுக்குள்ளும் முடிக்கப்படும்.



1984 மார்ச் 24]

சுற்றுப்புறச் சூழ்நிலை தூய்மை கெடுவதை தவிர்க்கும்
பொருட்டு போதுமான உற்பத்தித் திறனுடன் கூடிய கழிவு
நீரைத் தூய்மைப் படுத்தும் தொழிற்சாலை ஒன்று அமைக்கப்
பட்டு வருகிறது. இத் தொழிற்சாலை எண்ணெய் தூய்மைப்
படுத்தும் ஆலையிலிருந்து வெளியேறும் கழிவுநீரைத் தூய்மைப்
படுத்தி தூய்மைப்படுத்தப்பட்ட நீரை மட்டும் வெளியேற்றும்.

விரிவாக்கத் திட்டம் ஆண்டொன்றுக்கு 90,000 டன் திரவ
மாக்கப்பட்ட பெட்ரோலியம் வாயு, 6,45,000 டன் மண்ணெண்
ணெய் 10,01,000 டன் டீசல் எண்ணெய் 1,14,000 டன் எரி
எண்ணெய் ஆகியவற்றை அதிக அளவில் உற்பத்தி செய்யும் வகை
யில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

சென்னை எண்ணெய் தூய்மைப்படுத்தும் ஆலை, ஆண்டொன்
றுக்கு 20,000 டன் மெழுகை உற்பத்தி செய்வதற்காக திட்டம்
ஒன்றையும் மேற்கொண்டுள்ளது. இத்திட்டம் முடியுந்தறுவா
யில் உள்ளது. இது விரைவில் உற்பத்தியைத் தொடங்கும் என்று
எதிர்பார்க்கப்படுகிறது.

தார் ( Asphalt ) உற்பத்தியை ஆண்டொன்றுக்கு 2,40,000
டன்னிலிருந்து 4,50,000 டன்னாக உயர்த்த உத்தேசிக்கப்பட்
டுள்ளது. இந்த திட்டத்திற்கான மொத்த செலவு சுமார் ரூ.
15.91 கோடி அளவில் இருக்கக்கூடும். இதற்கு மத்திய அரசின்
அனுமதி எதிர்பார்க்கப்படுகிறது.

மசகெண்ணெய் விரிவாக்கத் திட்டம், மசகெண்ணெய் உற்பத்
தித் திறனை ஆண்டொன்றுக்கு 2,70,000 டன்னாக அதிகரிக்கப்
பதன் அடிப்படையில் அமைந்துள்ளது. சுமார் 50,000 டன்
உயரளவு இருப்பு இதில் அடங்கும். மத்திய அரசின் இசைவு
எதிர்பார்க்கப்படுகிறது.

ரூ. 12.60 கோடி மதிப்பீட்டுச் செலவில் ஆண்டொன்றுக்கு
15,000 டன்னிலிருந்து 16,000 டன் வரை பிரோபைலின்
உற்பத்தி செய்வதற்காக சாத்தியக்கூறு அறிக்கை மத்திய
அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

சென்னை இரசாயன உரத் தொழிற்சாலை, மணலி.

சென்னை இரசாயன உரத் தொழிற்சாலை 1966 ஆம் ஆண்டு
டிசம்பர் திங்களில் சட்டப்படி இணைக்கப்பட்டது. அதன்
மூலதனப் பங்கில் மத்திய அரசு 51 சதவீதமும், அமெரிக்காவின்
அமேகோ எண்ணெய் கம்பெனி 24.5 சதவீதமும், இரான் நாட்
டின் நேஷனல் இரானியன் எண்ணெய் கம்பெனி மூலதனப்
பங்கில் 24.5 சதவீதமும் பங்கு முதலீடு செய்துள்ளனர். இத்

[1984 மார்ச் 24

தொழிற்சாலை நாள் ஒன்றுக்கு 750 மெட்ரிக் டன் அமோனியா, 885 மெட்ரிக் டன் யூரியா 1,800 மெட்ரிக் டன் கலப்பு உரங்களை உற்பத்தி செய்யும் நிறுவு திறன் உடையது. வணிக உற்பத்தி 1971 ஆம் ஆண்டிலிருந்து தொடங்கப்பட்டது. கடந்த 2 ஆண்டுகளில் சென்னை இரசாயன உரத் தொழிற்சாலையின் முக்கியமான கூறுகள் பின்வருமாறு :—

| (1) | 1981-82. (2) | 1982-83. (3) | 1983-84 (1983 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் டிசம்பர் வரை). (4) |
|---|---|---|---|
| (உற்பத்திச் சாதனை அளவு மெட்ரிக் டன்னில்.) | | | |
| அமோனியா .. .. | 214.762 | 202.422 | 70.395 |
| யூரியா .. .. | 269.057 | 241.850 | 81.727 |
| என்.பி.கே. (கலப்பு உரங்கள்) .. .. | 581.180 | 603.560 | 330.560 |
| சாதனை அளவு (சதவீதத்தில்) .. .. | 101 | 99 | 68 |
| விற்பனை அளவு (000 மெட்ரிக் டன்னில்) .. | 630.9 | 641.4 | 487.80 |
| வியாபாரத் தொகை (ரூபாய் கோடியில்) | 156.13 | 171.95 | 128.01 |
| ஆதாயப் பங்கு தொகை (சதவீதத்தில்) .. | 25 | 25 | .. |
| தேசிய கருவூலத்திற்கு பங்குத் தொகை (ரூபாய் கோடியில்) .. | 36.3 | 28.4 | தகவல் இல்லை. |
| வரி விதிக்கப்படுவதற்கு முன் ஆதாயம் (ரூபாய் கோடியில்) .. | 8.29 | 16.5 | 1.58 |



1984 மார்ச் 24]

அனைத்து நாட்டு போட்டிக்கிடையில் சென்னை இரசாயன உரத் தொழிற்சாலை ஸ்ரீலங்கா பணியாளரை இயக்குவதற்கும், பராமரிப்பதற்கும் பயிற்சி அளித்து ஆலையின் வணிக உற்பத்தியை தொடங்கவும், 1980 ஆம் ஆண்டில் ஸ்ரீலங்கா இரசாயன உரத் தயாரிப்பு நிறுவனத்திடமிருந்து நிருவாக ஒப்பந்தத்தைப் பெற்றது.

சென்னை இரசாயன உரத் தொழிற்சாலை முதல் முறையாக 1982 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களிலிருந்து தமிழ்நாட்டிலும், பாண்டிச்சேரியிலும் நேரடி விற்பனை முறையைச் செயல்படுத்தியது. தற்போது சென்னை இரசாயன உரத் தொழிற்சாலையில் 1,275 பணியாளர்கள் பணிபுரிகிறார்கள். மின்சாரத்திற்காக மாநில மின்சார வாரியத்தின் மீது சார்ந்திருப்பதைக் குறைப்பதற்காக சென்னை இரசாயன உரத் தொழிற்சாலை ஒவ்வொன்றும் 2.5 மெ. வா. திறனுடைய 2 டர்பைன் மின் உற்பத்தி இயந்திரங்களை நிறுவியது.

படைக்கலக் கருவிகள் தயாரிப்புத் தொழிற்சாலை, திருச்சிராப்பள்ளி.

இத்தொழிற்சாலை 1966-ல் ஆண்டொன்றுக்கு 5,000 சிறு படைக்கலன்களை உற்பத்தி செய்வதற்காக அமைக்கப்பட்டது. 31—3—1983 அன்றுள்ளபடி உற்பத்தி இலக்கு 102 சதவீதத்தை எய்தியுள்ளது. இது 2,753 பேருக்கு வேலை வாய்ப்பு அளித்துள்ளது.

சேலம் உருக்காலை, சேலம்.

சேலம் உருக்காலை திட்டத்திற்கு 1977-ல் இந்திய அரசு ஒப்புதல் அளித்தது. இத்தொழிற்சாலையின் முதல்கட்டப்பணி 13—9—1981 அன்று தொடங்கப்பட்டது. இவ்வுருக்காலை ஆண்டொன்றுக்கு 32,000 டன் எவர்சில்வர் உருக்கு சுருள்கள், தகடுகள் ஆகியவற்றை உற்பத்தி செய்யும் திறனைக் கொண்டிருந்தது.

மதிப்பிடப்பட்ட மூலதனச் செலவு ரூ. 181.19 கோடியில் 1984 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் வரையில் ரூ. 167.70 கோடி செலவிடப்பட்டது. இதில் பணி நடைபெறும் இடங்கள்

[1984 மார்ச் 24

பராமரிப்பு பொது நிருவாகப் பணிகள் கட்டுமானப் பணிகள் ஆகியவற்றில் பயிற்சியாளர்கள் உட்பட 1,229 பேர்கள் பணி புரிகிறார்கள்.

கட்டிட கட்டுமானப் பணி மும்மு மாக நடைபெற்ற சமயத் தில் 4,000 முதல் 6,000 வரை பணியாளர்கள் அமர்த்தப்பட் டனர். இவர்களைத் தவிர தற்போது கட்டிடப் பணிகள், அமைப்பு சாதனங்களை நிறுவும் பணிகளில் சுமார் 400 பணி யாளர்கள் அமர்த்தப்பட்டுள்ளனர்.

சேலம் உருக்காலை 1981 ஆம் ஆண்டு செப்டம்பரில் உற் பத்தியை தொடங்கியது. அந்நாள் முதற்கொண்டு இந்த உருக் காலை 15,000 டன் எவர்சில்வர் உருக்கு சுருள்கள், தகடுகள் ஆகியவற்றை உற்பத்திச் செய்தன. அவற்றில் 4,000 டன் தொழிற் துறைப் பிரிவிற்காக உற்பத்தி செய்யப்பட்டது.

உற்பத்தித் திறனை உரிய அளவு பயன்படுத்துவதற்காக 50.71 கோடி ரூபாய் செலவில், இரண்டாவது சென்ட்ஸி (Send Zi Mill) மில்லை நிறுவுவதன் மூலம் உற்பத்தித்திறனை இரட்டிப்பாக்கும், செயற் குறிப்பு மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது.

இந்த ஆலையை அடுத்து 785 குடியிருப்புக்களைக் கொண்ட நவீன வசதிகளைக் கொண்ட நகரியம் ஒன்று அமைக்கப்பட்டுள் ளது. இந்தக் குடியிருப்புப் பகுதிகளில், 18 படுக்கைகளைக் கொண்ட மருத்துவமனை, தொடக்கப்பள்ளி நல்வாழ்வு நிலை யம், கடைகள் ஆகியவை போன்ற குடியிருப்பு அல்லாத கட்டிடங் கள் கட்டப்பட்டுள்ளன.

சேலம் உருக்காலையை அனைத்து வசதிகளுடன் கூடிய ஒரு முழு திட்டமாகச் செயல்படுத்துவது குறித்து இந்திய உருக்கு அதிகார மன்றம் ஆய்வு செய்து வருவதாக தெரிவிக்கப்பட்டது. சேலம் உருக்காலையை ஒருங்கிணைந்த திட்டமாகச் செயல்படுத் துவதற்காக மத்திய அரசை நாம் வற்புறுத்தி கேட்டு வருகிறோம்.



1984 மார்ச் 24]

பாரத கனரக மின் நிறுவனம், இராணிப்பேட்டை.

(கொதிகலன் துணைப் பாகங்கள் தயாரிப்புத் தொழிற்சாலை).

பாரத கனரக மின் தொழிற்சாலையின் இராணிப்பேட்டையில் உள்ள கொதிகலன் துணைப் பாகங்கள் தயாரிப்புத் தொழிற் சாலைக்கு 1980 ஆம் ஆண்டில் அனுமதி வழங்கப்பட்டது. இத் தொழிற்சாலை ரூ. 32.80 கோடி மதிப்பீட்டுச் செலவில் அமைக் கப்பட்டது. இத் தொழிற்சாலை 1982 ஆம் ஆண்டு ஜூலையில் உற்பத்தியைத் தொடங்கியது. மூன்றில் இரு பெரிய உற்பத்திப் பிரிவுகள் 1984 ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப்படும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. இறுதி உற்பத்தித் திறன் அளவு 57,000 மெட்ரிக் டன் 1984-85 ஆம் ஆண்டில் எய்தப்படும்.

இதுவரை இத்தொழிற்சாலையில் 1,770 பேர்கள் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். 1985 ஆம் ஆண்டு 1,955 பேர்களாக உயர்த்தப்படுவர். முழு உற்பத்தி திறனை அடைந்தவுடன் இத்தொழிற்சாலை 4,000 பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும்.

தமிழ்நாடு